
திருமுறை மலர்கள்

2



கி.வா.ஜ.

1/2

திருமுறை மலர்கள்

(இரண்டாம் பாகம்)

'வாகீச கலாநிதி'

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு : 2003
இரண்டாம் பதிப்பு : 2008
மூன்றாம் பதிப்பு : 2016

விலை ரூ.380.00

அல்லயன்ஸ் கம்பெனி
ப.எண். 244, பு.எண். 64,
ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 044-24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : books@alliancebook.com

Typesetting : Amaravathi, Chennai - 33
Printed at : Bala Offset, Chennai-42

1/2

முன்னுரை

திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பெற்றிருக்கின்றன. இறைவனுடைய திருவருளைப் பெற அவன்பால் அன்பு செய்த நால்வரையும் நான்கு நெறி பற்றி வழிபட்டதாகச் சொல்வர். திருஞான சம்பந்தர் இறைவனைத் தந்தையாக அணுகிப் பிள்ளைபோல அன்பு செய்தார் என்றும், அந்நெறி சற்புத்திர மார்க்கமென்றும் கூறுவர். ஆண்டானை அடிமை வழிபடும் நெறியில் அப்பர் ஒழுகினார்; அது தாச மார்க்கம் ஆகும். தோழமை வழிபற்றியவர் சுந்தரர்; அது சகமார்க்கம். தலைவனை நாடும் தலைவி போன்ற நிலையுடையவர் மாணிக்கவாசகர்; அதனைச் சன்மார்க்கம் என்பர்.

உழவாரத் திருப்பணி செய்து வாழ்ந்த அப்பர் சுவாமிகள், திருநாவுக்கரசர் என்று இறைவன் அருளிய சிறப்புப் பெயருக்கு ஏற்ப அற்புதமான தேவாரப் பதிகங்களைப் பாடினார். உள்ளத்தே இறைவன் திருவடியை யன்றிப் பிறிது ஒன்றை எண்ணாமல் வாழ்ந்தார். இப்படி முக்கரணங்களாலும் வழிபாடு இயற்றிய பெருமையையுடைய வாகீசர் 4900 திருப்பதிகங்கள் பாடியதாகக் கூறுவர் சுந்தரமூர்த்தி நாயனார்;

"இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்"

என்று திருநின்றியூர்த் தேவாரத்தில் குறிப்பிடுகிறார். திருமுறை கண்ட புராணத்தில், பதிகம் ஒன்றுக்குப் பத்துப் பாட்டென்ற கணக்கு வைத்து, நாற்பத்தொன்பதினாயிரம் பாடல்களை யுடைய பதிகங்கள் பாடியதாக அதன் ஆசிரியர் கூறுகிறார்.

"திருநாவுக் கரையரெனும் செம்மை யாளர்
தீஅமணர் சிறைநீங்க அதிகை மேவும்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலைக்
'கொடுங்கூற்றா யின'என்ன எடுத்துக் கோதில்

ஒருமானைத் தரிக்கும் 'ஒரு தனை' யுங் காறும்
ஒருநாற்பத் தொன்பதினாயிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனார் அடியிணைகள் பெற்று ளாரே." (15)

இப்போது கிடைப்பவை 312 பதிகங்களே; அவற்றில் உள்ள பாடல்கள் 3066. இவற்றில் முதல் திருமுறையில் உள்ளவை 113 பதிகங்கள். முதல் 21 பதிகங்கள் பலவேறு பண்களில் அமைந்தவை. அப்பண்கள் கொல்லி (பதிகம்.1), காந்தாரம் (2-7), பியந்தைக் காந்தாரம் (8), சாதாரி(9), காந்தாரபஞ்சமம் (10-11), பழந்தக்க ராகம் (12-13), பழம் பஞ்சுரம் (14-15), இந்தளம் (16-18), சீகாமரம் (19-20), குறிஞ்சி (21) என்ற பத்து மாகும். இவற்றிற்குப்பின் ஐம்பத்தெட்டுப் பதிகங்கள் திருநேரிசைகள். திருநேரிசை என்பது பண்ணின் பெயர் அன்று; யாப்பின் பெயர். அவற்றிற்கு உரிய பண் கொல்லி. திருநேரிசை எனக் குறித்த செய்யுட்கள் பிற்காலத்தில் அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தமென்ற பெயரோடு வழங்கும் பாவினமாக அமைந்துள்ளன. திருநேரிசைக்குப் பின் திருவிருத்தத்தாலான 34 பதிகங்கள் இருக்கின்றன. திருவிருத்த மென்பது கட்டளைக் கலித்துறையென்று வழங்கும் யாப்பு: அவை ஐஞ்சீர்களால் அமைந்தவை.

தேவாரத்தில் திருநாவுக்கரசர் வாக்குக்குத் தனியே ஒரு தன்மை உண்டு. கவி கவிஞனுடைய இயல்பையும் புலப் படுத்தும் இயல்புடையது. உலக வாழ்வில் பலவகை அல்லல் களுக்கு உட்பட்டவராதலின் இவருடைய பாட்டில் மனத்தை நெகிழவைக்கும் பகுதி மிகுதி. இவர் பாட்டைப் படித்தால் நால்வரில் மற்ற மூவருடைய பாட்டைவிட அவை தெளிவாக விளங்குவதைக் காணலாம். அதற்குக் காரணம் மற்றவர்களை விட இவர் சிறந்த கவிஞர் என்பது அல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே சிறந்தோரே. ஆயினும் திருநாவுக்கரசர் நம்மைச் சேர்ந்த ஒருவரைப் போல நமக்குத் தோன்றுகிறார். நாம் படும் துன்பங்களை இவரும் அடைந்தாரென்று தெரிகிறது. நம்மைப் போலவே ஆசையும் துடிப்பும் மயக்கமும் தெளிவும் உடையவராக நின்று பேசுகிறார். இவருடைய பேச்சு நமக்கு நன்றாக விளங்குகிறது; இவருடைய உணர்ச்சிகள் நாம்

உணரும் உணர்ச்சிகளாகவே பல இடங்களில் இருக்கின்றன. சில சமயங்களில் நாம் சொல்ல வேண்டியதைத்தான் இவர் சொல்லுகிறாரென்று கூறிவிடலாம் போல் இருக்கிறது, இவர் பாட்டு. நாமும் உழன்று துன்புறுகிறோம்; இவரும் துன்புற்றார். ஆனால் அந்தத் துன்பத்தினின்றும் விடுபட்டு இன்புற்றார். நாமோ-?

மிகவும் அல்லற்பட்டுத் தேடிய பொருளிடம் நமக்கு உண்டாகும் ஆர்வமும் பற்றும் மிகுதியாக இருக்கும். பல காலம் துன்பக்கடலில் ஆழ்ந்து கரையேறிய அப்பருக்கு இறைவன் கனியாய், அமுதமாய், பண்ணாய், பாட்டாய் இனிக்கிறான். மெய் வருந்த நெடுநேரம் உழைத்துவிட்டு, அவ்வுழைப்பினால் உடம்பிலே களைப்பும் வயிற்றிலே பசியும் உடைய உழைப்பாளி ஒருவனுக்கு இன்சுவை உணவு கிடைத்தால் எத்தனை ஆர்வத் தோடு உண்டு சுவைப்பானோ, அப்படி இவர் இறைவனுடைய குண நலங்களை அநுபவிக் கிறார். தம்மைப் பற்றித் தனியே சுட்டிப் பெயர் கூறுவது இவர் வழக்கம் அன்று. நால்வரில் அப்பரும் மணிவாசகரும் இந்த வகையில் ஒப்புடையவர்கள்.

ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் இறைவன் இராவணனுக்கு அருள் செய்த வரலாற்றைச் சொல்வது நாவுக்கரசர் வழக்கம். சமண சமயத்திலே புகுந்து பலகாலம் இருந்து பின்பு இறைவன் அருளால் சூலைநோய் தோன்றச் சிவபிரானைத் தஞ்சம் அடைந்து மீண்டும் சைவரானவர் இவர். தாம் செய்த அபராதங் களைப் பெரியனவாக நினையாமல் தம்மை ஆட்கொண்டது சிவபிரானுடைய பெருங்கருணைத் திறம் என்று நினைந்து உருகுகிறார். 'மலையெடுத்துத் தீச்செயல் புரிந்த இராவணனுக்கும் அருள் செய்த கருணையை ஒத்தது இது' என்ற எண்ணம் வந்தது. அதனால் அத்திருவிளையாட்டை எடுத்துச் சொல்லும் வழக்கத்தை மேற்கொண்டார். இதைச் சேக்கிழார்,

''இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக்கு
இறையாகிய அன்பரும், 'இந்நெடுநாள்
சித்தந்திகழ் தீவினை யேன் அடையும்
திருவோஇது!' என்று தெருண்டறியா

அத்தன்மைய னாய இராவணனுக்கு
அருளும் கருணைத்திற மானஅதன்
மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே
மேற்கொண்டு வணங்கினர் மெய்யுறவே''*

என்பதில் குறிப்பாகத் தெரிவிக்கிறார்.

அப்பர், இந்த உடம்பு ஐம்பொறிகளால் அலைக்கப் பெறுவதைப் பல இடங்களில் சொல்கிறார். பல காலம் உடம்பைப் பேணி அடையும் இன்பங்களைவிடச் சில காலம் சூலைநோயால் பட்ட துன்பம் மிகமிகக் கொடுமையாக இருந்தமையால் உடம்பை வெறுக்கும் நிலை இவருக்கு எளிதில் வந்துவிட்டது. தாம் சமணர்களைச் சார்ந்து காலத்தை வீண் போக்கியதையும், உலகியல் வாழ்வில் பட்டு அலைந்ததையும் எடுத்துச் சொல்லி இரங்குகிறார். இறைவனுடைய அருட் செயல்களையும் பழைய வரலாறுகளையும் சொல்லிச் சொல்லி வியக்கிறார். அடிக்கடி தமக்கு அருள் செய்ய வேண்டுமென்றும், தமக்கு யமபயத்தைப் போக்க வேண்டுமென்றும், தமக்குத் திருவடியை வழங்க வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொள்கிறார்.

இவர் கற்பனையால் புனைந்துரைக்கும் காட்சிகள் பல உண்டு. இந்தப் புத்தகத்தில் இரண்டு காட்சிகளைக் (4,6) காணலாம். பல நூல்களைக் கற்றறிந்தவராதலின் பல பல கருத்துக்களையும் சொற்களையும் அவற்றிலிருந்து எடுத்தாளுகிறார். திருக்குறளின் சொல்லும் பொருளும் இவர் வாக்கில் இடையிடையே வந்துள்ளன. நான்காம் திருமுறையில் அப்படி வரும் இடங்களிற் சில வருமாறு:

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

என்ற திருக்குறளின் பின்னடி,

"பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்'' (4:10)

என்பதில் ஒலிக்கிறது.

---

* பெரிய புராணம், திருநாவுக்கரசர் புராணம். 75.

"பொறிவாயில் ஐந்தவித்தான்"

என்றும் திருக்குறட் கருத்தை,

"அறுத்தார் புலன்ஐந்தும்" (16:10)
"குணமிலா ஐவர் செய்யும்
பாவமே தீர நின்றார்" (36:2)

என்பவற்றிற் காணலாம்.

"பொள்ளலிக் காயந் தன்னுள்
புண்டரீ கத்திருந்த
வள்ளலை" (42:6)

என்னும் பகுதி,

"மலர்மிசை ஏகினான்"

என்ற திருக்குறட் பகுதிக்கு உரைபோல இருக்கிறது.

★

இந்தப் புத்தகத்தில் பதின்மூன்று பாடல்களுக்குரிய விளக்கத்தைக் காணலாம். முதற் பாட்டும் இறுதிப் பாட்டும் அப்பர் சுவாமிகளுடைய வரலாற்றோடு தொடர்புடையவை. சூலை நோயைத் தவிர்த்தருள வேண்டுமென்று பாடியது, "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் திருப்பதிகம். தமக்குத் திருவடி தீட்சை செய்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பாடியது, திருச்சத்தி முற்றத் திருப்பதிகம். திருவதிகையைப் பற்றிய பாடல்கள் மூன்றும், திருவையாற்றுப் பாடல்கள் மூன்றும், திருவாரூரைப் பற்றிய பாடல்கள் இரண்டும், திருக்கடவூர், திருமறைக்காடு, திருவீழிமிழலை, திருச்சத்தி முற்றம் என்னும் தலங்களைப் பற்றிய பாடல் ஒவ்வொன்றும், பொது ஒன்றுமாகப் பதின்மூன்று பாடல்களை எடுத்து விளக்கம் செய்திருக்கிறேன்.

இறைவன் திருநாவுக்கரசரை ஆட்கொண்டதற்கு மூல காரணம், அவர் சமணரானாலும் பரம்பரை வாசனையினால் தம்மையும் அறியாமல் அவருள்ளத்தே சிவபிரானுடைய நினைவு இருந்ததுதான் என்பதை முதற் கட்டுரையில் அவர் வாக்கைக் கொண்டே காட்டியிருக்கிறேன்.

இந்தக் கட்டுரைகளை எழுதும்போதெல்லாம் என்னுடைய குறைபாடு எனக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது. தமிழ் அறிவு மாத்திரம் இருந்தால் போதாது, இத்தகைய பாடல்களின் சுவையை உணர; சமயநூல்களிற் புலமை இருந்தாலும் போதாது; இறைவனுடைய திருவடியிலே அன்பும் அதனால் பெற்ற அநுபவமும் இருந்தாலன்றி இத்தகைய அருளுணர்ச்சி ததும்பும் திருவாக்குகளிற் புதைந்து கிடைக்கும் நலங்களைத் தெளிவாக உணர்தல் அரிது. ஆயினும் அன்பர்கள் பலர் இந்தக் குறை நிரம்பிய விளக்கங்களையும் தம்முடைய பெருந்தன்மையினாற் பாராட்டுகிறார்கள் என்பதை உணரும் போது, மேலும் எழுதலாம் என்ற ஊக்கம் உண்டாகிறது. தமிழ் நாட்டில் உள்ள அன்பர்களும் பத்திரிகைகளும் இந்த நூல் வரிசையைப் பாராட்டி எழுதுவது கண்டு ஆக்கம் பெறுகிறேன். அணிமையில் இலங்கைக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள அன்பர்கள் இவ்விளக்கங்களை நன்றாகப் படித்துப் பாராட்டி என்பாலுள்ள பேரன்பைப் புலப்படுத்தினார்கள். எல்லாம் முருகன் திருவருள் என்று எண்ணி அப் பெருமானை வாழ்த்துகிறேன்.

பல வகையில் எனக்கு ஊக்கம் அளிக்கும் அன்பர்கள் அனைவர் திறத்திலும் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

கி.வா.ஜகந்நாதன்

*

பொருளடக்கம்

III பேசாத நாள்

IV அருளாளன்

இரவும் பகலும்

இரவும் பகலும்

நள்ளிருள். திருப்பாதிரிப்புலியூரில் ஒரு சைனமடத்தில் இருந்த தருமசேனர் துடியாய்த் துடிக்கிறார். வயிற்றிலே தோன்றிய சூலை நோய் அவரால் பொறுக்க முடியவில்லை. குடலையே புரட்டி முடங்கச் செய்தது அந்த நோய். எவ்வளவோ மருத்துவம் செய்து பார்த்து விட்டார்கள். மந்திரமும் பார்த்தார்கள். தண்ணீரை மந்திரித்துக் குடிக்கச் செய்தார்கள்; தீரவில்லை. மயிற் பீலியினால் உடம்பெல்லாம் தடவி மந்திரித்தார்கள்: அப்போதும் தணியவில்லை. ''இனி என்ன செய்வோம்!'' என்று ஒன்றும் தெரியாமல் சைனர்கள் ஏங்கினார்கள்.

அப்போது தருமசேனருக்குத் தம்முடைய தமக்கையின் நினைவு வந்தது. திருவதிகைத் திருக்கோயிலில் சிவத்தொண்டு புரிவதையே தம் வாழ்க்கைப் பெரும்பணியாக வரையறுத்துக் கொண்டு அந்த அம்மையார் ஒரு திருமடத்தில் வாழ்ந்துவந்தார். தருமசேனர் தம்முடைய சமையற்காரனைத் தம் தமக்கையிடம் தம் உடல் நிலையை எடுத்துரைத்து வரச் சொல்லி அனுப்பினார். அவன் அப் பெருமாட்டியிடம் சென்று சொல்லவே, ''நான் அங்கே வரமாட்டேன்'' என்று அவர் சொல்லியனுப்பிவிட்டார். அது கேட்ட தருமசேனர் தாமே தம் தமக்கையாரிடம் செல்லத் துணிந்தார்.

எல்லோரும் நன்றாகத் தூங்குகிறார்கள். தருமசேனர் மாத்திரம் தூங்கவில்லை. சூலை நோய் அவரைத் தூங்கவிடவில்லை. புழுவாய்த் துடித்துக்கொண்டிருந்தார். இன்னது செய்வதென்று தெரியாமல் அவர் மனம் சுழன்றது.

பிறப்பினால் சைவர் அவர். மருள்நீக்கியார் என்ற பெயர் உடையவர். சிறந்த சைவவேளாளர் குலத்தில் உதித்தவர். இப்போது சைனர்களிடையே பெரிய ஆசிரியராக எழுந்தருளி

யிருக்கிறார். ஆயினும் அவருக்கு உடம்போடு வந்த சைவ உணர்ச்சி முற்றும் நீங்கவில்லை. வழி வழியே சிவ பூசையும் சிவ வழிபாடும் செய்யும் குடியிற் பிறந்தமையால் அவர் உள்ளத்துக்குள்ளே சிவபெருமானுடைய நினைவு இருந்து கொண்டே இருந்தது. தம்முடைய புதிய சூழ்நிலையில் சைனசமய முறைப்படியே செய்ய வேண்டியவற்றை அவர் செய்து கொண்டிருப்பார்; அவர் மனமோ பழமையிலே பதிந்து சிவபெருமானுடைய நினைவாகவே இருக்கும். உள்ளத்துக் குள்ளே தோற்றும் அந்த நினைவை மாற்ற முயல்வார்; முடியாது. 'நம்முடைய் தந்தையார் இந்த நேரத்துக்குச் சிவபூசை செய்வார். நீரால் இறைவனை ஆட்டிப் பூவால் அருச்சனை செய்து தூபதீபம் காட்டுவார். இப்போது அந்த வழக்கத்தை நான் கைவிட்டேன்' என்ற நினைவு அவர் மனத்தை உறுத்தும். அவர் சிவ பூசை செய்யாவிட்டாலும் சலமும் பூவும் தூபமும் அவர் நினைவிலிருந்து போகவில்லை.

இத்தகைய போராட்டத்திலிருந்து அவரை மீட்கத் திருவருள் பாலித்தான் சிவபெருமான். அவருடைய தமக்கையாகிய திலகவதியாரும் தினந்தோறும் இறைவனிடம், ''அடியேன்பின் வந்தவனை ஆட்கொண்டருள வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டு வந்தார். எல்லாச் சமயத்திலும் இருப்பவன் ஒரே இறைவன்தான். சைனசமயத்தார் தம் மரபுப்படியே ஒழுகிப் பிறருக்குத் தீங்கு இயற்றாமல் வாழ்ந்தால் அவர்களுடைய வழிபாட்டையும் ஏற்றுக் கொள்வான் இறைவன்.

தருமசேனர் சைனசமய நூலறிவிலே சிறந்தவராக நின்றாலும், அந்தச் சமயத்தார் அவரை ஆசிரியராகக் கொண்டு வழிபட்டுப் போற்றினாலும் பழைய வாசனையும் குடிப் பிறப்பின் ஆற்றலும் அவருடைய உள்ளத்திலே சிவபிரா னுடைய நினைவை மறவாமல் இருக்கச் செய்தன. அந்த நினைவை மறக்க முயன்றும் அவரால் முடியவில்லை.

இந்த நள்ளிருளில் மந்திரமும் மருந்தும் சைனரும் தம்மைக் கைவிட்டு நிற்கத் தம் மனத்தில் என்ன முயன்றும் சிவபெருமா னுடைய நினைவு நீங்காதிருத்தலை எண்ணிப் பார்த்தார். தம்முடன் பிறந்த திலகவதியாரிடம் போனால் தம் நோய் நீங்கும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று.

ஆகவே யாரும் அறியாமல் எழுந்தார். வெள்ளை ஆடையால் உடம்பெல்லாம் போர்த்துக்கொண்டார். திருப்பாதிரிப் புலியூரிலிருந்து புறப்பட்டுத் திருவதிகையை நோக்கி நடக்கலானார்.

சைனசமயப் பற்று அப்போதே அவரிடமிருந்து அகன்றது. உயிருக்கு மோசம் வரும் என்ற அச்சம் அவருக்கு உண்டாகி விட்டது. வழி வழி வந்த பெரும் பற்றாகிய சிவபெருமானைப் பற்றினால் உய்யலாம் என்ற எண்ணம் வலிமை பெற்றது.

மெல்ல மெல்ல நடந்து திருவதிகை வந்தார். திலகவதியார் இருந்த மடத்தை விசாரித்துக்கொண்டு சென்று உள்ளே புகுந்தார்.. திலகவதியார் காலில் வீழ்ந்து, ''ஐயோ! என்னால் இந்தச் சூலை நோயைப் பொறுக்க முடிய வில்லையே! நான் கரையேறும் நெறியைக் காட்டவேண்டும்'' என்று சொல்லி அழுதார். திலகவதியார் அவரை எழுப்பி, ''இறைவன் திருவருளால்தான் இது நீங்க வேண்டும். அவனுக்குத் தொண்டு செய்வாயாக'' என்று கூறித் திருவதிகை வீரட்டப்பெருமான் சந்நிதிக்கு அவரை அழைத்துச் செல்ல எண்ணினார். இறைவனுடைய திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றைத் தம் தம்பியாருக்குக் கொடுக்க, அவர் அதனைப் பணிந்து ஏற்று அணிந்துகொண்டார்.

அப்போதுதான் விடிந்துகொண்டிருந்தது. திருப்பள்ளி எழுச்சிக்குரிய காலம் அது. அகத்தே உள்ள இருளும் புறத்தே உள்ள இருளும் ஒருங்கே கரைய, இறைவன் திருமுன் திலகவதியார் செல்ல, மருள்நீக்கியாரும் சென்றார். திருவாளன் திருநீறு தரித்தபோதே அவர் தருமசேனராக இருந்தது மாறி மருள்நீக்கியார் ஆகிவிட்டார் அல்லவா?

தம் தமக்கையாரைக் கண்ட அளவிலே அவருக்கு ஓரளவு ஊக்கம் உண்டாயிற்று. திருநீறு அணிந்தவுடன் ஏதோ புத்துணர்ச்சி உடம்பில் மூண்டது. திருக்கோயிலுக்குள் அடி யெடுத்து வைத்தபோது அவர் பழைய உடம்பு மாறி வருவது போன்ற அநுபவம் உண்டாயிற்று. தம்மைப் படாத பாடு படுத்திய சூலை நோய்க்கு மருந்து அங்கே உறுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது.

திலகவதியாரைத் தொடர்ந்து சென்றார். திருக்கோயிலை வலம் வந்தார். அப்போது வீசிய காற்று அவர் உயிருக்கே தண்மையைத் தந்தது. உள்ளே புகுந்தார். சந்நிதியை அடைந்தார். பல காலமாக மறந்து பிரிந்திருந்த தாயை மீட்டும் வந்தடைந்த குழந்தை போல் ஆனார். செய்யத் தகாத காரியம் செய்து தம் சொந்த வீட்டைப் பிரிந்து பலகாலம் வேறிடத்தில் வாழ்ந்து மறுபடியும் தம் வீட்டை அடைந்தால் எப்படி உணர்ச்சி பொங்கி எழுமோ அப்படி எழுந்தது அவருக்கு. தம்முடைய உணர்ச்சியை யெல்லாம் கொட்டி ஓவென்று கதறவேண்டும் போல இருந்தது.

இறைவன் திருமுன் விழுந்தார். அவருடைய உள்ளத்தில் பழைய நினைவுகள் கொந்தளித்தன. தம்முடைய உயிருக்கு இறுதியாக வந்த நோய்க்கு ஏற்ற மருந்து கிடைக்கும் இடத்தை அணுகிவிட்டோம் என்று துணிவு உண்டாயிற்று. உணர்ச்சிக்குக் கரைபோட அவரால் முடியவில்லை. இறைவன் அருளும் அவருடைய இயற்கைச் செப்பமும் சேர்ந்து அவரைக் கத்திக் கூவிக் கதறுவதினின்றும் தடுத்தன. அவர் உள்ளம் இப்போது கனிந்திருந்தது. இறைவனுடைய அருள் நீரால் நனைந்திருந்தது. உணர்ச்சி வசப்பட்டு மலர்ந்திருந்தது. அங்கிருந்து நல்ல உருவத்தோடு கவிதை பிறந்தது.

கூற்றாயின வாறு விலக்ககலீர்!
கொடுமைபல செய்தன நான் அறியேன்;
ஏற்றாய்,அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்;
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேன் அடி யேன்;அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

இப்படிப் பத்துப் பாடல்களை அவர் பாடிவிட்டார். உணர்ச்சி விஞ்சும்போது தமிழ் அறிந்த அவருக்கு அவ்வுணர்ச்சி பாட்டாக வந்தது. அந்தப் பாட்டு அவருடைய வேதனையைக் காட்டியது. அவர் உள்ளத்தே சிவபெருமான் இருந்து, ''வா, வா'' என்று அழைத்ததைக் காட்டியது. ''நான் சைனனாக உடலளவில் வாழ்ந்தாலும் நெஞ்சத்தை உமக்கே இடமாக

வைத்தேன். ஆண்டவனே! உம்மை ஒருபோதும் நினையாது இருந்தறியேனே!'' என்று பாடினார். 'சலமும் பூவும் தூபமும் நான் எடுத்துப் பூசை செய்யவில்லையே யன்றி, அவற்றை நான் மறந்தறியேன். தமிழோடு இசை பாடுதலையும், உன் நாமத்தை நாவிலே உரைத்தலையும் நான் மறக்க வில்லை. அவை என் நினைவிலே என்றும் இருந்துகொண்டே இருந்தன'' என்று பாடினார்.

சூலை நோய் தம்மைப் படுத்தும் பாட்டையெல்லாம் பாடினார். ''என் குடலைய்யே சுருட்டிப் பிடிக்கிறதே! நஞ்சாகி வந்து நலிகின்றதே! சுடுகின்றதே! என் வயிற்றைக் கலக்கிப் பறித்துப் புரட்டி அறுத்துக் கவர்ந்து தின்னுகிறதே!'' என்று தம்முடைய வேதனையை எடுத்துச் சொன்னார்.

இறைவன் திருவருளால் அவர் வயிற்று வலி நின்றது. அவருக்குப் புதிய உயிர் வந்தது போல இருந்தது. ஒரு கணமேனும் தம்மை விடாமல் நலிந்து கொண்டிருந்த' அந்த நோய் எவ்வாறு போயிற்று? அவர் வியந்தார்; மயங்கினார்: இறைவன் திருவருளென்று எண்ணித் தெளிந்தார். அங்க முழுவதும் புளகம் போர்த்தது, கண்ணில் நீர் தாரை தாரையாக வழிந்தது. ஆனந்தம் தாங்காமல் மீட்டும் மண்மேல் புரண்டு அயர்ந்தார். ''அடியேன் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து ஆட்கொண்ட கருணை வெள்ளத்துக்கு நான் தகுதியானவனா?'' என்று உருகினார். சிவபிரானைத் தாம் விட்டாலும் அப்பெருமான் தம்மை விடவில்லை என்ற உண்மையை அவர் உணர்ந்தார்.

அப்போது அசரீரியாக, ''திருப்பதிகம் பாடிய பான்மை யினரல் திருநாவுக்கரசு என்ற நாமம் உனக்கு அமைவதாகுக!'' என்று ஒரொலி எழுந்தது. அதுமுதல் மருள் நீக்கியார் திருநாவுக்கரசர் ஆனார்.

★

இனி அவர் பாடிய பதிகத்தின் முதற் பாட்டைப் பார்க்கலாம்.

இறைவனிடம் மருள் நீக்கியார் வந்ததற்குக் காரணம் அவனுடைய திருவருளாக இருந்தாலும், அந்தத் திருவருள்

அவரிடம் சூலையை உண்டாக்கி இழுத்தது. ஆதலின் சூலையே காரணம் என்று சொல்ல வேண்டும். அந்தச் சூலையினால் மருள் நீக்கியார் பட்ட துயர் சொல்லுக்கு அடங்காதது. சிறிது வேதனை தந்துவிட்டு மறைந்து விடும் நோயாக அது இருக்கவில்லை. உயிரையே கொண்டுபோகும் அளவுக்கு அதன் வலிமை இருந்தது. உயிரைக் கொண்டு போகிறவன் கூற்றவன் என்று சொல்வார்கள். அந்தக் கூற்றுவனே சூலை நோயுருவத்தோடு வந்துவிட்டானோ! ஆம்! சூலை வெறும் நோயாக இருக்கவில்லை; அது கூற்றேயாக இருந்தது. அதை விலக்க யாரும் இல்லையென்றுதான் மருள் நீக்கியார் எண்ணியிருந்தார். ஆனால், கூற்றுவனையே தன் காலால் உதைத்து விலக்கிய சிவபிரானிடம் இப்போது வந்துவிட்டார். கூற்றுவனையே விலக்கினவனுக்குக் கூற்றைப்போன்ற நோயை விலக்குவது அரிதா? அவன் இதுகாறும் விலக்காமல் இருந்தான்.

''எம்பெருமானே! இந்த நோய் நோயாகவா வந்திருக் கிறது? கூற்றாக அல்லவோ வந்திருக்கிறது? இதைத் தேவரீர் விலக்காமல் இருக்கிறீரே!'' என்று தொடங்குகிறார் மருள் நீக்கியார்.

கூற்றாயின வாறு விலக்ககலீர்.

முதலில் கடவுளைத் துதிக்கவில்லை; கடவுளே என்று விளிக்கவில்லை. எடுத்த எடுப்பிலே, ''ஐயோ! யமனைப் போல் வந்திருக்கிறதே; இதை நீர் போக்கவில்லையே!'' என்று முறையிட்டுக் கொள்கிறார். ''ஐயோ! பசி பசி!'' என்று பசியிலே உழந்தவன் அலறுவதைப் போலக் கதறுகிறார். அவருக்கு ஒவ்வொரு கணமும் அந்த நோய் வேதனை தாங்க முடியாமல் கொக்கி போட்டு இழுக்கிறது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதறுகிறார். முதலில் தம் வேதனையைச் சொல்லி அழுகிறார்.

மருத்துவரிடம் சென்ற ஒருவன் வாய்விட்டு, ''ஐயோ! வயிற்றை வலிக்கிறதே!'' என்று முதலில் கதறுவதுதான் இயல்பு. அப்படிக் கதறினார் இவரும். மருத்துவர் நோயாளியைப் பார்த்து, ''வயிற்றை வலிக்கிறதா? நீ என்ன தின்றாய்?'' என்று கேட்பார். அதற்கு அவன் விடையிறுப்பான்.

இங்கே மருள்நீக்கியாரை மருத்துவனாகிய இறைவன் கேள்வி கேட்கவில்லை. அவன் கேட்க வேண்டிய கேள்வி மருள் நீக்கியாருடைய மனத்தில் தானே தோன்றியது.

''ஏன் அப்பா இந்தக் கூற்றுப் போன்ற நோய் வந்தது? நீ என்ன பிழை செய்தாய்?''

இந்தக் கேள்வி இறைவன் கேட்காமலே கேட்டது. அதற்கு அவர் விடையளிக்கிறார்.

''நான் எத்தனையோ கொடுமைகளைச் செய்திருக்கிறேன். அவற்றை நான் செய்யும்போது அவை இப்படி வந்து விளையுமென்று அறியவில்லை'' என்கிறார்.

கொடுமைபல செய்தன; நான் அறியேன்.

''ஏன் அப்பா, நீ தின்னக் கூடாததைத் தின்றாயோ?'' என்று மருத்துவர் கேட்கிறார்.

''ஆம்; என்ன என்னவோ தின்றேன் ஐயா; அப்போ தெல்லாம் இப்படி வருமென்று எனக்குத் தெரியவில்லை. அறியாமல் செய்துவிட்டேன். இப்போது படுகிறேன்'' என்று நோயாளி சொல்கிறான்.

இதே நிலையில்தான் மருள்நீக்கியாரும் பேசுகிறார்.

''நான் பண்ணின கொடுமைகள் பல. அறியாமல் அவற்றைச் செய்துவிட்டேன். நீ இப்போது என்னை உன்னுடைய திருவடித் தொண்டனாக ஏற்றுக் கொண்டு விட்டாய். உன் திருவடியையே நான் பற்றிக் கொண்டேன். இனிமேல் இரவு பகல் உன்னைப் பிரியமாட்டேன். எப்போதும் உன்னையே வணங்குவேன்'' என்று பாடுகிறார் மருள்நீக்கியார்.

ஏற்றாய்அடிக் கே;இர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்.

நோயாளி சொல்கிறான்; 'சுவாமி, இதுவரைக்கும் நான் செய்ததை மறந்துவிடுங்கள். எப்படியோ உங்களிடம் வந்துவிட்டேன். இனிமேல் நீங்கள் சொல்கிற படியே நடக் கிறேன். இரவும் பகலும் உங்கள் உத்தரவுப்படியே மருந்து களைச் சாப்பிடுகிறேன்'' என்கிறான். அதைப் போலவே

மருள்நீக்கியார் சொல்கிறார். நான் பிழைகள் செய்யவில்லை யென்று சொல்லவில்லை; எவ்வளவோ செய்திருக்கிறேன். ஆனால் அறியாமற் செய்துவிட்டேன். இப்போது தேவரீரை அடைந்தேன். தேவரீரும் ஏற்றுக் கொண்டுவிட்டீர். இனி இரவானாலும் பகலானாலும் தேவரீரைப் பிரியமாட்டேன். தேவரீரின் அடிகளில் விழுந்து கிடப்பேன்'' என்று சொல்கிறார்.

முதலில், ''விலக்ககலீர்'' என்று பன்மையில் தொடங் கினார்; ''ஏற்றாய்'' என்று ஒருமையாக இப்போது சொல்கிறார். இறைவனிடம் அவருக்கு நெருக்கம் உண்டாகிவிட்டது. மரியாதையாக விலகி நின்று பன்மையிலே பேசத் தொடங்கினவர், தம்முடைய நோயின் வேதனையினாலும் இறைவனுக்கும் தமக்கும் உண்டாகிய நெருக்கத்தாலும், 'ஏற்றாய்' என்று சொல்லலானார்.

இனித் தாம் படும் வேதனையை விரிவாகச் சொல்கிறார்.

'இந்த நோய் கண்ணுக்குத் தோற்றவில்லை. மற்றவர் களுக்குத் தெரியாது. வயிற்றிலே வீக்கமோ புண்ணோ வெளிப் படையாக இல்லை. ஆனால் வயிற்றுக்குள்ளே புகுந்து கொண்டு அது படுத்துகிறபாடு சொல்லி முடியாது. என் குடலோடு பிணைந்து சுருட்டுகிறது; என்னை முடங்கும்படி செய்கிறது. அது அப்படிச் செய்யச் செய்ய என்னால் ஆற்ற முடியவில்லை அப்பனே!'' என்று கூவுகிறார்.

தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருவதிகை என்னும் தலம் கெடில நதிக்கரையில் அமைந்திருக்கிறது. அதியமான் என்பது சேர மன்னர் குலத்தைச் சார்ந்த குடி ஒன்றிற் பிறந்தாருடைய பட்டப் பெயர்; அதிகமான் என்றும் அப்பெயர் வழங்கும். ஔவையாருக்கு நெல்லிக்கனி வழங்கிய அதிகமான் நெடுமான் அஞ்சி அந்தக் குலத்தில் உதித்தவன். அக்குலத்தில் உள்ளவர்களை அதிராஜர் என்று வடமொழியிலும் அதியரையர் என்று தமிழிலும் வழங்குவர். அக்குலத்தில் உதித்த ஒரு மன்னன் இத்தலத்திலுள்ள திருக்

கோயிலைக் கட்டியமையின் அதியரையமங்கலம் அல்லது அதியரைய மங்கை என்ற திருப்பெயர் இதற்கு அமைந்தது; அதுவே மருவி அதிகை என்று ஆயிற்று.

இறைவனுடைய வீரச் செயல்களை நினைக்கச் செய்யும் தலங்கள் எட்டு, தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றை அட்டவீரட்டம் என்றும் கூறுவர். வீர ஸ்தானம் என்பது வீரட்டானம் என்று தமிழில் திரிந்து, பின்பு வீரட்டம் என்றும் மாறியது. திருவதிகையில் இறைவன் திரிபுரம் எரித்த வீர விளையாட்டைப் புலப்படுத்தினனாதலின் இதுவும் வீரட்டத்திற் சேர்ந்ததாயிற்று. திருவதிகை வீரட்டம் என்று இதன் பெயர் வழங்கும். கெடில ஆற்றின் கரையில் இருப்பதால் திருவதிகைக் கெடில வீரட்டானம் என்று இதன் பெயர் நீண்டு ஒலிக்கும். அதியரைய மங்கையென்ற பெயருடையது, கெடில நதிக் கரையில் உள்ளது, வீரட்டத்தில் ஒன்று என்று மூன்று செய்தி களையும் அந்த நீண்ட திருநாமம் புலப்படுத்துகின்றது.

மருள்நீக்கியார் அதிகை வீரட்டானத்தில் உறைகின்ற ஐயனைப் பார்த்துக் கதறிய கதறல் தேவாரத்தில் நான்காம் திருமுறையில் முதற் பதிகமாக இருக்கிறது. அந்தப் பதிகத்தைப் பாடியதற்குமுன் மருணீக்கியாராக இருந்த அப்பெரியார் அதற்குப்பின் சூலை நோய் நீங்கித் திருநாவுக்கரசர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். அப்பெயரே வடமொழியில் வாகீசர் என வழங்கும். சொல்லுக்குத் தலைவர் என்பது அதன் பொருள்.

கூற்றாயின வாறு விலக்ககலீர்;
கொடுமைபல செய்தன; நான் அறியேன்;
ஏற்றாய்அடிக் கே;இர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்;
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேன்அடி யேன்;அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

(திருவதிகையில் கெடில நதிக்கரையில் வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவனே! கூற்றுவனாக இந்நோய் வந்திருப்பதை விலக்காமல் இருக்கிறீரே! நான் செய்தனவாகிய கொடுமைகள் பல உண்டு; நான் அவற்றின் பயனை முன்னம்

அறியவில்லை. இப்போது நீ என்னை நின் திருவடிக்கண் அடிமையாக ஏற்றுக் கொண்டாய். இனி இரவும் பகலும் நின்னைப் பிரியாமல் எப்போதும் வணங்குவேன். புறத்தே கண்ணுக்குத் தோற்றாமல் வயிற்றின் உள்ளிடத்தில் குடலோடு பிணைத்துக்கிடந்து, யாதொரு செயலும் செய்யவொட்டாமல் என்னை முடங்கிக் கிடக்கும்படி இது செய்யாநிற்க, இத்தகைய நோயை அடியேன் பொறுக்கமாட்டேன். இதனை நீ தீர்த்தருள வேண்டும்.

கூற்று - யமன். ஆயினவாறு - ஆனவண்ணத்தை. விலக்ககலீர் விலக்கீர். செய்தன கொடுமை பல. அடிக்கு ஏற்றாய்; என்றது திருவடி சம்பந்தமுடையதைச் சொன்னபடி; அடியைச் சார்வதனால் தான் அடியார் என்ற பெயர் அன்பர்களுக்கு அமைந்தது.

இதுகாறும் வெறும் நினைப்பளவிலே இருந்த நிலை மாறி* இனி இரவும் பகலும் வணங்கும் செயலை மேற்கொள்வேன் என்றார். அகம்படி - உள்ளிடம். துடக்கி - பிணைத்து; கோத்துக் கொண்டு. முடக்கியிட - முடக்க; முடங்கச் செய்ய. அம்மான் - தலைவன்.)

அந்த விடியற்காலையியல் மருள்நீக்கியாருடைய வேதனைக்கும் விடிவுகாலம் நேர்ந்தது. அதற்கு முன் இரவும் பகலும் மாறி மாறி வந்தாலும் அவருக்கு இருளாகவே இருந்தன. அதற்குப்பின் இரவும் பகலும் பிரியாது வணங்கும் நெறியிலே ஈடுபட்டமையால் அவருக்கு ஒளி மிகுந்த பகலே எப்போதும் உளதாயிற்று. தளர்ச்சியாகிய இரவும் கிளர்ச்சி யாகிய பகலும் மாறி, ''இன்பமே எந்நாளும், துன்பமில்லை'' என்ற நிலை கிடைத்தது. அத்தகைய ஒளி நிறைந்த வாழ்க்கைக்கு இன்று விடியல் நேரம். அந்த விடியற்காலையில் உதயமான குரல்தான், 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கிய திருப்பதிகம்.

★

---

* ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்'' என்று இவர் அடுத்தபாட்டில் கூறுவது காண்க.

ஆயிரம் பேரான்

தனக்கென்று உருவம் இல்லாதவன் இறைவன். ஆனாலும் அடியார்களுடைய தவத்துக்கும் அன்புக்கும் இரங்கி அவர் களுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படும் திருவுருவங்க ளோடு எழுந்தருளும் ஆற்றல் அவனுக்கு உண்டு. நாமும் உருவத்தோடு வாழ்கிறோம்; வேறு வேறு உருவங்களை எடுக்கிறோம். அப்படி வேறு உருவத்தை எடுக்கும் செயலையே பிறப்பு என்கிறோம். இறைவனும் வேறு வேறு திருவுருவங் களை எடுத்து அன்பர்களுக்கு அருளினானென்று புராணங்கள் சொல்கின்றன. அப்படியானால் நாமும் அவனும் ஒரே நிலையில் இருப்பவர்கள் தாமா?

இருவரும் பல வேறு உருவங்கள் எடுப்பது உண்மையே என்றாலும் வேறுபாடு உண்டு. நாம் எடுக்கும் உருவங்கள் நம்முடைய வினைக்கு ஈடாய் இறைவனால் நமக்கு வரை யறுத்து வழங்கப்படுவன. இறைவன் எடுக்கும் உருவங்கள் அருளின் வயப்பட்டுத் தானே மேற்கொள்பவை. இறைவ னுடைய ஆணையின்படி அமைபவை நம்முடைய பிறவிகள். நாம் விரும்பும் இயல்போடு, நாம் விரும்பும் காலத்தில் நமக்கு உடலம் அமைவதில்லை. அப்படியானால் ஒவ்வொருவரும் பேராற்றலும் பேரழகும் தீர்க்காயுளும் உடையவராக இருப் போம். உறுப்புக் குறையே உலகில் இராது. நம் பிறப்பு நம் கையில் இல்லை. இறைவனோ சுதந்தரமுடையவனாதலின் ஏதேனும் ஒரு காரணத்தினால் தானே விரும்பி மேற்கொள்ளும் திருவுருவத்தோடு வந்து அருள் செய்கிறான். நம்முடைய உடம்பு ஐம்பொறிகளால் அலைக்கப்படும் நாற்ற உடலம். இறைவனோ திவ்ய மங்கள விக்கிரகங்களை உடையவன்.

அவன் நம்மைப்போலத் திருமேனியுடையவனாக இருந்தாலும் அவன் திருமேனியின் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு தத்துவத்தைக் குறிப்பதாக அமையும். நமக்குத்

தலையுண்டு; இறைவனும் தலையுடையவனாக அடியார் களுக்குக் காட்சி கொடுக்கிறான். நம் தலை முடைத்தலை; அவன் திருமுடியோ சந்திரனும் கங்கையும் நிலவும் சடை. இப்படியே வேறுபாடுகளைக் காணலாம்.

அவனுக்குச் சரீரம் இயற்கையானது என்றால் ஒரு சமயத்தில் ஒரு திருமேனியை உடையவனாக இருப்பான். அது அவனுக்கு இயற்றகையன்றாதலின் ஒரே சமயத்தில் பல சரீரமுடையவனாகவும் தோன்ற முடிகிறது. ஒரே சரீரத்தில் பலபல உறுப்புகளை உடையவனாகவும் அவன் தோன்று கிறான்.

மனிதனுக்கு இரண்டு கால்களே உண்டு; விலங்கினங் களுக்கு நாலு கால்கள் இருக்கின்றன; சில பூச்சிகளுக்குப் பல கால்கள் உ.ள்ளன. இறைவனுக்கு இத்தனை கால்கள் என்ற வரையறையுண்டா? இல்லை. அவன் எத்தனையோ கால்களை உடையவன். கணக்குக்கு அடங்காத கால்கள் அவனுக்கு உண்டு. சில சமயங்களில் கணக்கிட முடியாமல் இருக்கும் பொருளையும் ஒரு கணக்குக்கு உட்பட்டதுபோல ஆயிரம் என்று சொல்வது ஒரு வழக்கம். அப்படிச் சொல்வதனால் திட்டமாக ஆயிரம் என்று வரையறையாகக் கொள்ளக்கூடாது. ''கூட்டத்துக்கு ஆயிரம் பேர் வந்திருந்தார்கள்'' என்று சொன்னால் சரியானபடி கணக்கிட்டு ஆயிரமென்று தெளிந்து சொன்னதாகக் கொள்வோமா? பலபேர் என்பதையே ஆயிரம் என்று சொல்கிறார்கள். இப்படி வரும் எண்ணிக்கையை அநந்த வாசி என்று சொல்வது புலவர் மரபு.* ஆகவே இறைவனுக்குப் பலபல கால்கள் உண்டு என்று சொல்வதையே, ''ஆயிரங் கால்களை உடையவன்'' என்று சொல்லலாம். ''ஆயிரங் கண்ணினன், ஆயிரம் சேவடியான்'' என்று வேதமும் பேசுகிறது.†

---

* *''ஒருநாள் எழுநாள்போற் செல்லும்'' (1269) என்னும் குறள் உரையில் பரிமேலழகர், 'ஏழென்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறித்து நின்றது' என்று எழுதியதையும், ''சங்கமளிப்பன ரத்னவிதஞ்சத கோடியே'' (தக்கயாகப்பரணி, 73) என்பதன் உரையில் உரை யாசிரியர், 'சதமென்பது அநந்தவாசி' என்று எழுதியதையும் காண்க.*

† *புருஷசூக்தம்.*

திருநாவுக்கரசர் இறைவன் தன் அருளினால் கொள்ளும் திருமேனி நலங்களை எண்ணிப் பார்க்கிறார். நமக்கு இரண்டே கால்கள் உள்ளன. ஒரு சமயத்தில் ஓரிடத்துக்குப் போக உதவுகின்றன. நமக்குக் கால்கள் இருந்தும் நாம் நினைத்தபடி நினைத்த இடத்துக்குப் பல சமயங்களில் போக முடியவில்லை. இறைவன் திருவுள்ளங் கொண்டானானால் ஒருகணத்தே எதையும் செய்ய வல்லவன். எத்தனை அடியார்களுடைய உள்ளத்தில் அவன் எழுந்தருளியிருக்கிறான்! ஒரே சமயத்தில் அத்தனை இடங்களில் எழுந்தருளுவதற்கு அவனுக்கு எத்தனை திருவடிகள் இருக்க வேண்டும்! ஒரு திருவுருவத்தில் மற்ற அங்கங்கள் பலவாக இருப்பதுண்டு; அடிகள் மாத்திரம் இரண்டுதான் இருக்கும். இராவணனுக்குப் பத்துத் தலை, இருபது கைகள்; ஆனால் இரண்டே கால்கள். இந்த வரையறைகூட இறைவனுக்கு இல்லை. அவன் திருமேனிகள் பல; திருவடிகளும் பல. இது யாரிடத்தும் காணாத வியப்பு அல்லவா? அதை முதலில் திருநாவுக்கரசர் சொல்கிறார்.

''ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்.''

அவனுடைய சிவந்த திருவடிகள் தாமரைபோல இருக்கின்றன. தாமரை மென்மைக்கும் தண்மைக்கும் எழிலுக்கும் விரிவுக்கும் பொலிவுக்கும் வண்ணத்துக்கும் இருப்பிடம். இறைவனுடைய திருவடிக்கு அதனை உவமை கூறுவது மரபு. தமிழருடைய உவமையுலகத்தில் தாமரை மிக மிக உயர்ந்த பொருள்களுக்கு உவமையாக நிற்பது. வடமொழியிலும் அப்படித்தான். தாமரை என்றாலே பாரத மக்களுடைய கற்பனையில் பல பல நல்ல எண்ணங்கள் உண்டாகும். இறைவனுடைய திருவடி அடியார்களுடைய உள்ளத்தை மிதிக்கச் சேர்வது அன்று. அது மெத்தென்று பூப்போலச் சேரும். தலையிலே கனமுள்ள ஒன்றை வைத்தால் அதைப் பாரம் என்று சொல்வார்கள். ஆனால் பூவை வைத்தால் அதை அலங்காரம் என்று சொல்வார்கள். நம்முடைய உள்ளத்தில் உலகியல் நினைவுகளையும் பற்று முதலியவற்றையும் பாரமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை மாற்றி இறைவனுடைய திருத்தாளை வைத்துக் கொண்டால், பெரிய கல்லைச் சுமந்து கொண்டிருந்த தலையிலிருந்து அக்கல்லை எடுத்துவிட்டுப் பூவைச் சூட்டியது போலாகும். தாமரை தான் இருக்கும்

இடத்துக்கு அழகும் மணமும் உயர்வும் தருவதுபோல, இறைவன் அடி சேர்ந்த மனம் கவலை நீங்கித் தூய்மை பெற்று ஓங்கி நிற்கும்.

> ''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது''

★

ஆயிரம் தாமரை போன்ற தாளையுடையவனாக இறைவனைத் தம் உள்ளத்திலே கண்ட அப்பருக்கு அவனுடைய அங்கங்கள் கண்கொள்ளாத அளவும் அழகும் உடையவையாக இருப்பதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது ஆசை. ஆனால் அப்படிச் சொல்வது இயலுங் காரியமா? அடி, நடு, முடி என்ற மூன்று பகுதிகளைப்பற்றிச் சொன்னாலே ஒருவாறு முற்றும் சொன்னதுபோன்ற நிலை உண்டாகும். இங்கும் இறைவனுடைய திருக்கோல விரிவைச் சொல்ல வரும் வாகீசர் முதலில் அடியைச் சொன்னார். பிறகு நடுவேயுள்ள திருக் கரங்களைச் சொல்கிறார்; தோள்கள் பல என்கிறார்.

இரண்டு தோள்களோடு நிற்கும் திருக்கோலம் இறைவனுக்கு உண்டு; நான்கு தோள்களோடு எழுந்தருள்வதும் உண்டு; எண்தோள் வீசி நின்று ஆடுகின்ற நிலையும் உடையவன் அவன்*; ஐந்துமுகங் கொண்டபோது பத்துத் திண்டோள்களோடு காட்சி தருவான்.† அதற்கு மேலும் தோள்களைக் கொண்டவன் அவன்.

தான் திருவுள்ளத்தில் நினைந்த இடத்துக்குச் செல்லும் உரிமையும் ஆற்றலும் உடையவன் என்பது தோன்ற, ''ஆயிரஞ் சேவடியான்'' என்று சொன்னார் அப்பர். இறைவன் தான் நினைத்தபடியே செய்யும் ஆற்றலை உடையவன் என்பதையும் புலப்படுத்த அவன் ஆயிரம் தோள்களோடு விளங்குகிறான் என்கிறார். கையென்பது செயலைக் குறிக்கும் அடையாளம். ஆற்றல் இல்லாதவனைக் கையால் ஆகாதவன் என்றும், செயலைச் செய்பவன், 'ஒரு கை பார்ப்பேன்' என்றும் கூறும்

---

* *''எண்டோள் வீசிநின் றாடும் பிரான்''* (திருநா. தேவாரம்.)

† *''திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துளான்''* (கந்த புராணம்.)

உலக வழக்குகள் இந்த உண்மையை விளக்குகின்றன. இறைவன் பல கரங்களை உடையான் என்பதும் பல செயல் களைச் செய்யும் ஆற்றலுடையவன் என்பதைப் புலப் படுத்துவதாகும்.

அவன் வண்ணம் பொன்வண்ணம்: அவன் தோள்கள் பொன்மலை போன்றன.

ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரம் தோளுடை யானும்.

★

இனி முடியைச் சொல்கிறார். எல்லாப் பொருள் களுக்கும் முடிவாக நிற்பது இறைவன் முடி. அவனுடைய இலக்கணங்களை ஆராய்ந்து சொல்பவர்கள் ஓரிடத்தில் நிறுத்துகிறார்கள். அந்த இடமே அவனுடைய முடி என்று கொள்ளலாகும். இதற்குமுன் பல பல சமயத்தினரும் தங்கள் தங்கள் ஆராய்ச்சிக்குத் தட்டுப்பட்ட வகையில் கடவுள் இலக்கணத்தைக் கூறிச் சென்றார்கள். இறைவனைப் பற்றி அவர்கள் வெவ்வேறாகக் கூறும் இலக்கணங்கள் அவ்வளவும் அவனுக்கு உரியனவே. அவை பலவாக இருக்கின்றன. இதையே அவன் தன் பல திருமுடிகளால் காட்டுகிறான். இறை வனைப்பற்றிய ஆராய்ச்சி முடிபுகள் பலவாக இருக்கின்றன; அவனுடைய திருமுடிகளும் பலவாக உள்ளன. இறைவன் திருமுடி பிற பொருள்களை விளக்கும் ஞாயிற்றைப்போல ஒளிவிட்டு விளங்குகின்றது. ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீண்முடி யானும்.

★

உலகில் நாம் காணும் எந்தப் பொருளுக்கும் உருவம் இருக்கிறது; பெயரும் இருக்கிறது. பொறிகளாலும் அறிவாலும் உணரப்படும் நிலையையே உருவம் என்று சொல்கிறோம். கண்ணாலே காண்பது உருவம் என்பது பெரும்பான்மை வழக்கானாலும் பொறிகளால் உணரப்படும் நிலையையும் அப்படிச் சொல்வது உண்டு. காற்றுக்கு உருவம் உண்டு; அது கண்ணாலே காணப்படுவதன்று; மெய்யால் உணரப்படுவது. கண்ணால் காண்பதை வடிவு என்றும் புலன்களால் உணர்

வதைப் பொதுவாக உரு என்றும் கூறுவது மரபு. ''அவர் பாடிய பாட்டு நல்ல உருவத்தையுடையது'' என்றால், அந்த ஒலியமைப்பின் நிலையைக் குறிப்பதாகிறது; செவியால் உணரும் ஒலிக்கு உருவம் உண்டென்று அதனால் தெரிகிறது.

பொறிகளால் உணரப்படுவதைக் குணமென்றும் சொல்லலாம். குணமுடைய எதற்கும் ஒரு பெயரும் உண்டு. பெயரைக் குறி என்று சொல்வர். உருவம், பெயர் என்னும் இரண்டும் பொறிகளால் நுகர் பொருள்களுக்கு உண்டு; நாம ரூபம் என்று சொல்வது வடமொழி வழக்கு. இந்த இரட்டையையே கோலமும் குறியும் என்றும், குணமும் குறியும் என்றும் சொல்லலாம்.

இறைவனுடைய கோலங்களைச் சொன்ன அப்பர் அவற்றோடு தொடர்புடைய குறிகளைப்பற்றிச் சொல்கிறார். உருவமுடையவனாக இறைவன் எழுந்தருள்வான் என்றால், திருநாமமும் உடையவனாகிறான் என்பது சொல்லாமலே அமையும். குணமிலாக் கடவுள் குணமுடையான்போல வரும்போது குறியும் உடையவனாகிறான். உருவிலா இறைவன் உருவுடையவனாக எழுந்தருளும்போது பெயரும் உடையவனாகிறான்.

பல பல திருக்கோலங்களை உடையவனாகிய இறைவனுக்குத் திருநாமங்களும் பலவாக அமைந்திருத்தல் வியப்பன்று. அடிகளும் தோள்களும் முடிகளும் பல என்ற கருத்தோடே ஆயிரம் ஆயிரம் என்று சொன்னதுபோலவே, திருநாமங்களும் ஆயிரம் என்று சொல்கிறார் வாகீசர்.

ஆயிரம் பேர்உகந் தானும்.

அந்தத் திருநாமங்களை அவன் உகந்து மேற் கொண்டிருக்கிறான். அவன் தானே விரும்பிக் கொள்ளும் திருமேனியை உடையவன்; அப்படியே தானே உகந்து மேற்கொள்ளும் திருநாமங்களையும் உடையவன்.

பல திருநாமங்களை உடைய இறைவனுக்கு ஆயிரந் திருநாமங்களை வரையறையாகச் சொல்லி அருச்சித்தல் ஒரு மரபு. ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனியே சகசிர நாமம்

உண்டு. ஒரே மூர்த்திக்குப் பலவேறு சகசிர நாமங்கள் இருக்கின்றன. சில தலங்களில் உள்ள இறைவனுக்குச் சிறப்பாகச் சகசிர நாமங்கள் வழங்குகின்றன. ஒருவாறு அளவிட்டு வழங்கும் இந்தத் திருநாமங்களைக் கூட்டிக் கணக்கிட்டாலே இறைவன் பல்லாயிர நாமங்களை உடையவன் என்பது தெரிய வரும். ஆனாலும் ஆயிரம் என்று சொல்வது வழக்காகிவிட்டது. ''பேராயிரமுடைய பெம்மான்'' என்று அப்பர் வேறிடத்திலும் கூறுகிறார். தனக்கு எனக் கோலமும் குறியும் இல்லாத இறைவனைக் கோலமும் பெயரும் உடையவனாகக் கொண்டு வழிபடுவதனால் அவனுக்குப் புதிய பெருமை ஒன்றும் வரப் போவதில்லை; நமக்குத்தான் நன்மை.

''ஒருநாமம் ஓருருவம் ஒன்றும்இலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''

என்ற மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

★

ஆயிரம் திருவடிகள் முதலியவற்றை உடைய இறைவன் கோலம் பெருந்திருக்கோலம். அந்தக் கோலத்தை எண்ணிப் பார்ப்பது எளிய செயலன்று. காதாலேயாவது கேட்கட்டும் என்று அப்பர் சொன்னார். கருத்திலே நினைந்து அகக்கண்ணால் காணும் நல்லருளுடையார் சிலர் இருக்கலாம். ஆனால் எல்லோரும் அந்தப் பேறுடையவர் ஆக முடியுமா?

'அவன் ஆயிரம் அடியும் ஆயிரம் தோளும் ஆயிரம் முடியும் ஆயிரம் பேரும் உடையவனாக இருந்தால் எனக்கு என்ன? அவை எனக்கு முன் தோன்றுமா? ஆயிரத்தையும் தரிசிக்க வகை இல்லையென்றால் ஒன்றையாவது காண வகை உண்டா?' என்று அப்பரைக் கேட்கலாம். அவர் அதற்கு விடை சொல்கிறார்.

குணம் குறி கடந்த இறைவன் குணங்குறி கலந்தவனாக அருளுடையாருக்குத் தோற்றுகிறான். அவர்களுடைய அகக் கண்ணினாலே அந்தத் திருக்கோலத்தைக் காணும்படி காட்சி தருகிறான். அவ்வளவு தூரம் இறங்கி வந்தவன் இன்னும் கீழே

இறங்கிவர முடியாதா? ஆயிரம் காலுடையவன் இரண்டு காலுடன் வருவான். ஆயிரம் பேருடையவன் ஒரு திருநாமத் தோடு வருவான். எல்லையின்றிப் பரந்திருக்கும் கடலுக்குக் கரையில்லை. ஆனால் அதன் நீரை நம்மிடம் இருக்கும் சிறிய பாத்திரத்தில் கொண்டுவரலாம். கடல் நீர் முழுவதையும் கொண்டுவர இயலாது; ஆனால் நம் பாத்திரம் முழுவதும் நிரம்பியிருக்கும் வகையிலே கொணரலாம். அப்படியே இறைவ னுடைய கோலங்கள் அத்தனையையும், நாம் உணர முடியாது. நம் ஆற்றலுக்கு ஏற்ற வகையில் எதையேனும் ஒன்றைக் கண்டு மன நிறைவு அடையலாம். இறைவன் நாம் புறக் கண்ணாலே தரிசித்துப் பேறு பெறும்படி திருக்கோயில்களில் விக்கிரக உருவத்தில் எழுந்தருளி இருக்கிறான். ஆயிரம் திருமுடிகள் முதலியவற்றை உடையவனாக இருப்பவன் எவனோ அவனே அந்த உருவத்திலும் இருக்கிறான். அதை நாம் காணலாம்.

தலந்தோறும் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய அருள் திருமேனியை அப்பர் காட்ட விழைகிறார். ஒன்று சொன்னால் மற்றவையும் அத்தகையனவே என்று கண்டு கொள்ளலாம் அல்லவா? ஆகவே ஒன்றை உதாரணமாகச் சுட்டிக் காட்டுகிறார்; "முன்னே சொன்ன, பெருந்திருக் கோலமுடையவனே திருவாரூரில் எழுந்தருளியிருக்கிறான்" என்று சொல்கிறார்.

ஆரூர் அமர்ந்த அம்மானே.

திருவாரூரில் தியாகராஜப் பெருமான் எழுந்தருளி யிருக்கிறார். அவர் அமர்ந்த திருக்கோலத்தில் விளங்குகிறார். அவர் நடனம் செய்தாலும் இருந்தபடியே செய்வார். அதனால் அப் பெருமானுக்கு 'இருந்தாடழகர்' என்ற திருநாமம் வழங்குகிறது. ஆதலின் ஆரூரில் இறைவன் அமர்ந்திருக் கிறான் என்று சொல்கிறார் அப்பர். பக்குவமுடையவர்கள் காண அவர்கள் நெஞ்சத்தே ஆயிரம் சேவடிகள் முதலியவற் றோடு எழுந்தருளி யிருக்கும் இறைவனே, பக்குவம் இல்லாருக் கும் அருள் செய்ய வேண்டி இப்படி அமர்ந்திருக்கிறான் என்று அவனுடைய கருணையை நினைப்பூட்டுகிறார் இப் பெரியார்.

ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேர்உகந் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

(பொன்வரை - பொன் மலை. ஞாயிறு - சூரியன். நீள் முடி - உயர்ந்த முடி. எல்லாப் பொருளிலும் உயர்ந்து நிற்றலால் நீள் முடியாயிற்று. இறைவனுடைய இலக்கணங்களுக்கு முடிவு காண்போம் என்று புகுவோருக்கு அந்த முடிவே தட்டுப்படுவதில்லை. அவனுடைய முடியைக் காண்போம் என்பவருக்கும் அது தட்டுப்படாமல் நீண்டு செல்லும் முடி என்றும் பொருள் கூறலாம். உகந்தான் - விரும்பி மேற்கொண்டவன். அம்மான் - தலைவன்.)

திருவாரூர் சோழநாட்டில் காவிரிக்குத் தென் கரையில் உள்ள தலம். சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகவும் கொள்வதுண்டு.

★

எப்போதும் இனியான்

தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருப்பதனால் இறைவனுக்குத் தேவேசன், தேவாதி தேவன், தேவர்கள் தம்பிரான் என்ற திருநாமங்கள் வழங்குகின்றன. முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயன்களை நுகர்பவர்கள் தேவர்கள்; எப்போதும் இன்புற்று வாழ்பவர்கள். இன்ப உலகமாகிய துறக்கத்தில் வாழும் குடிகள் அவர்கள்.

துன்பமும் வறுமையும் நோயும் உள்ள மக்களுக்குத் தம்முடைய குறைபாடு தெரியும். அவர்களுக்குள்ளும் செல்வம், கல்வி, ஆற்றல் மிகுதியாகிவிட்டால், 'எனக்கு நிகர் இல்லை' என்ற செருக்கு வந்துவிடுகிறது. இன்ப வாழ்விலே வாழும் அமரர்களுக்குச் செருக்கு உண்டாவதற்குக் கேட்பானேன்? அந்தச் செருக்கை அடக்குவதற்காக அமரர்கள் அனைவருக்கும் சேர்த்து இன்னல் உண்டாகும்படி இறைவன் திருவுள்ளம் கொள்வான். அப்போது அசுரர்கள் எழுவார்கள்; தேவலோக வாழ்வுக்கு இடையூறு விளைவிப்பார்கள்.

மனிதனுக்கு வரும் இன்னல் சிறியது. எறும்புக்கு உடம்பிலே காயம் பட்டால் சிறியதாகவே இருக்கும். தேவர்களுக்கு வரும் துன்பம் பெரிதாக இருக்கும். செருக்கிலே ஆழ்ந்திருக்கும் அவர்களுக்கு அத்துன்பத்தைப் போக்கும் ஆற்றல் இல்லை. அப்போதுதான் தமக்கெல்லாம் பாதுகாப்பாக இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் உண்டாகும். அவனிடம் ஓடுவார்கள்; காலில் விழுந்து கதறுவார்கள். இறைவன் அவர்களிடம் கருணை கொண்டு அவர்களுடைய இன்னலைப் போக்குவான். இப்படிப் பல முறை நிகழ்ந்ததுண்டு.

அநுபவத்தினாலே இறைவனுடைய அருமைப்பாட்டை உணர்ந்தவர்கள் அமரர்கள். அவர்கள் செருக்குற்ற காலத்தில்

தாம் தாமே முதல்வர் என்று எண்ணிக்கொண்டிருந்தாலும், அசுரர்களால் அலைக்கப்பெற்று இன்னல் அடைந்தபின் தமக்கெல்லாம் முதல்வன் இறைவன் என்ற உணர்ச்சி அவர்களிடம் உதயமாகியது. இனியும் தம் வாழ்வுக்கு ஊறுபாடு நேரக்கூடாதே என்ற அச்சத்தால் இறைவனை வழிபடத் தொடங்கினார்கள். தமக்கு இறைவனுடைய துணை இருந்தால் தான் வாழலாம் என்ற எண்ணம் இருப்பதால் அடுத்தடுத்து வழிபடுகிறார்கள்.

அரும்பு மலரும் பருவத்தில் இருந்தால் அதைப் போது என்று சொல்வார்கள். அரும்பு முதிர்ந்தால் பேரரும்பு ஆகும்; அதுதான் போது. அது முதிர்ந்தால் மலரும்போது மலர் ஆகும். அரும்பு, போது, மலர் என்ற மூன்று நிலையையும்,

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்"

என்று திருவள்ளுவர் ஓரிடத்தில் அமைக்கிறார். இறைவனுடைய பூசைக்குப் பேரரும்பாகிய போதும் மலரும் உரியன. சிறிய அரும்பைக் கொய்து அருச்சனை செய்வதில்லை. கொய்வதற்குரிய பேரரும்பை அரும்பென்றும் கொய்யத் தகாத அரும்பைக் காயரும்பென்றும் சொல்வது உலக வழக்கு.

தேவர்கள் இறைவனைப் பூசிக்கிறார்கள். கையாலே பேரரும்பாகிய போதையும் மலரையும் தூவுகிறார்கள். அவனால் தமக்கு உண்டாகும் பயனை எண்ணி எண்ணி அவனை விரும்புகிறார்கள்; காதலிக்கிறார்கள். வானோர்கள் நாள்தோறும் இப்படி வணங்குகிறார்கள். மூன்று போதும் தம்முடைய முடியைச் சாய்த்து வணங்கிக் கைகூப்பித் தொழுகிறார்கள். தன்னுடைய திருவடியின் கண்ணே முடி படிய வழிபட்டும் கைகுவித்து அஞ்சலி செய்தும் வானோர்கள் தொழாநிற்க, அவர்களுக்குத் துணையாக நிற்கிறான் இறைவன். அப்படித் தொழும் அமரர்கள் தம் காலம் செல்லத் தாமும் செல்கிறார்கள். புதிய தேவர்கள் வருகிறார்கள். அவர்களும் இறைவனை முதல்வனாக உணர்ந்து கையில் உள்ள போதையும் மலரையும் தூவிக் காதலித்து, முப்போதும் முடிசாய்த்துத் தொழுகிறார்கள். இவ்வாறு தேவர்கள் வருகிறார்கள்;

போகிறார்கள். ஆனால் அவர்களுடைய முதல்வனாகிய இறைவன் எப்போதும் தளர்ச்சியின்றி, போக்கின்றி, வரவின்றி, இறப்பின்றி, பிறப்பின்றி நிற்கிறான்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழ, நின்ற முதல்வனை.

(வானவர்கள் கையிலுள்ள பேரரும்பையும் மலரையும் தூவி விரும்பி மூன்று பொழுதும் தம் முடியைச் சாய்த்து, கையால் தொழ, சலனமின்றி ஒரு படித்தாக நின்ற தலைவனை.

'முதல்வனை என் மனத்தே வைத்தேனே' என்று சொல்ல வருகிறார்.

போது - பேரரும்பு. காதலித்து - விரும்பி. முடிசாய்த்தல் - காலில் முடிபடிய வணங்குதல். தொழுதல்- கைகூப்பித் தொழுதல். திருவடியில் வீழ்ந்து எழுபவர், பின்பு கையால் தொழுதல் வழக்கம். நின்ற - நிலையாக நின்ற.)

★

அப்பர் சுவாமிகளும் அந்த முதல்வனை வழிபட்டார். ஆனால் தேவர்கள் வழிபட்டதற்கும் அவர் வழிபட்டதற்கும் வேறுபாடு உண்டு. தேவர்கள் ஒரு பயன் கருதி இறைவனை வழிபட்டார்கள். திருநாவுக்கரசரோ, 'கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி, 'வீடும் வேண்டா விறல்' உடையவராதலின் அவனை வழிபடுவதனையே இன்பமாகக் காண்பவர். அவர் தாம் வழிபடும் வண்ணத்தைச் சொல்கிறார்.

தேவர்கள் மலர் தூவி வழிபட்டார்கள். நாவுக்கரசரும் மலர் தூவினார். அதற்கு முன் இறைவனுக்கு நீராட்டினார். அபிடேகம் செய்து அருச்சனை செய்வது மரபாதலின் புனல் தூவிப் பிறகு பூவும் தூவினார். தேவர்களும் அப்படிச் செய்வதுண்டு. ஆனால் அவர்கள் தம்முடைய சுகவாழ்வுக்குக் கேடு நேராவண்ணம் இறைவன் துணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் பூசை செய்தார்கள். தம் வாழ்க்கையில் தம் பொறிகளால் பெறும் இன்பம் நிரம்ப வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். 'கற்பதரு நீழலின் தண்மையை இடையூறின்றி நுகரவேண்டும். காமதேனுவினால் பெறும் பண்டங்களைக் குறைவின்றிப் பெறவேண்டும். அரம்பையரால்

வரும் இன்பம் முழுமையாக இருக்கவேண்டும்' என்று தம்முடைய புலன்களின் நுகர்ச்சியில் சிறிதும் குறைவு வராமல் நிரம்புவதை வேண்டியே அவர்கள் வழிபட்டார்கள். அப்பர் சுவாமிகளோ, ஐம்பொறியையும் அடக்கினார்; இறைவனுடைய தொடர்பில்லாத பொருள்களிலே செல்லாமல் ஒடுக்கினார். அவை அவருடைய தவச் சிறப்பால் அகத்தே அடங்கின. விரிப்பதையே தங்கள் தொழிலாக உடைய தேவர்களுக்கு மாறாகச் சுருக்குவதையே தம்முடைய தவமாகக் கொண்ட பெரியார் அப்பர்.

அதுமட்டுமா? தேவர்கள் இறைவனைக் கும்பிடுவதற்குக் காரணம், பகைவர்களால் தமக்கு இடையூறு நேருங்கால் அவன் துணையாவான் என்பதுதான். ஆகவே அவர்களுடைய மனத்தின் ஆழத்தில் வேரூன்றி இருப்பது தம் போகங்களில் உள்ள இச்சை; அதற்கு மேலே இருப்பது அப்போகத்துக்கு இடையூறுகளை உண்டாக்கும் பகைவர்களிடம் உள்ள அச்சம்; அதற்கு மேல்தான் இறைவனிடம் விருப்பம் இருக்கிறது. அச்சமும் விருப்பமும் மேற்பரப்பில் உள்ளவை; எந்தக் கணத்திலும் போய்விடும். உடம்பில் அணிந்த சட்டையைப் போல அவற்றை அவர்கள் கழற்றிவிடும் நேரமும் உண்டு. ஆனால் செல்லுமிடங்களிலெல்லாம் உடம்பு நீங்காது வருவது போல, தேவர்களின் உள்ளத்தில் எப்போதும் இடம் கொண்டிருப்பது போக இச்சை.

அப்பர் உள்ளத்தே என்ன இருக்கிறது? ஐம்புலன்களையும் அகத்தே அடக்கினவர் அவர். ஆதலின் அவருக்குப் போகத்திலே நாட்டம் இல்லை. அவர் இறைவனிடத்தே வைத்த அன்பு தூய அன்பு. அவருடைய உள்ளத்தே வேறு ஒன்றும் இல்லை; இறைவன்தான் இருக்கிறான். ஐம்புலன்களையும் போக நுகர்ச்சியிலே விரியவைத்து, உள்ளத்தே அப்போகத்தின்மேல் இச்சையை வைத்து, அந்தப் போகத்துக்கு இடையூறு வாராமல் இவன் பாதுகாப்பான் என்ற நினைவினால் வழிபடும் வானோர் களுக்கு இறைவன் எப்போதும் நன்மை செய்வதில்லை. அவர்களுக்குத் தண்டனையும் தருகிறான்.

ஆனால் ஐம்புலனை அகத்தடக்கிப் போகத்தின்பால் எள்ளளவும் நாட்டமின்றித் தம் உள்ளத்தே இறைவனையன்றிப்

பிற பொருளை வைக்காமல் வழிபடும் அடியவர்களுக்கு அவன் எப்போதும் இன்பத்தைத் தருகிறான். அவனையே உள்ளத்தில் வைத்தமையால் எப்போதும் இனியானாக இருக்கிறான். கற்கண்டுக் கட்டியை வாயிலே அடக்கிக் கொண்டவனுக்கு வாய் எப்போதும் இனிக்குமாறுபோல, இறைவனை மனத்தே வைத்தவர்களுக்கு அவன் எப்போதும் இனிக்கிறான். தேவர்களோ கையால் மலர் தூவினாலும் அவனைக் கருத்தின் ஆழத்தில் வைப்பதில்லை.

உலகத்தாரிற் பலர் இறைவன் அருள் செய்யவில்லை என்று சொல்வதுண்டு. ''நான் அவனையே நினைந்திருக்கிறேன். அவன் இன்னும் எனக்கு அருள் புரியவில்லை'' என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். நோய்வாய்ப் பட்டவன் சர்க்கரையை வாயிற் போட்டால் கசக்கிறதென்று சொல்வான். அதற்குச் சர்க்கரை காரணமன்று; அவன் நோயே காரணம். ஐம்புலனை அடக்காமல் இறைவனை மனத்தே வைத்ததாகச் சொல்கிறவர்களுக்கு அவன் எப்போதும் இனியனாக இராததற்குக் காரணம், அவர்களுக்குப் புலன் நுகர்ச்சியிலே நாட்டம் இருப்பதுதான்.

இறைவனைத் தலை மேலும் தோள் மேலும் வைத்துப் பயன் இல்லை. மனத்தகத்தே வைக்க வேண்டும். கற்கண்டைக் கையில் வைத்துக்கொண்டால் இனிக்காது. வாயிலே போட்டுச் சுவைக்க வேண்டும். கையால் எடுத்து வாயிலே போடுவது போல, அப்பும் (நீரும்) மலரும் தூவிப் புற உறுப்புக்களால் வழிபட்டு, உள்ளத்தே வைக்க வேண்டும். ஐம்புலனையும் அடக்கி, உள்ளத்தே வைத்தால் அவன் எப்போதும் இனியனாக இருப்பான். நோயில்லாதவன் வாயில் கற்கண்டை அடக்கிக் கொண்டால் அதன் இனிப்பை நுகர்வதுபோல அப்பர் இறைவனை எப்போதும் இனியனாகக் கண்டார். தேவர்கள் தங்கள் முதல்வனாகக் கண்டார்கள்; அப்பரோ எப்போதும் இனியனாகக் கண்டார்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை,
அப்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

(பின் இரண்டடி: எப்போதும் இனியவனை நீரோடு மலரைத் தூவி ஐஃபொறிகளையும் நுகர் பொருள்களின்மேற் சாராமல் அகத்தே அடக்கி என் உள்ளத்துள்ளே வைத்தேன்.

அப்பு - நீர். புலன் என்பது இங்கே பொறியை உணர்த்தியது; ஆகுபெயர். அகத்து அடக்கி - புறம்போந்து நுகர் பொருள்களின்மேற் பாயாமல் உள்ளே செயலின்றி நிற்கும்படி செய்து. உடம்பு உள்ளவரைக்கும் பொறிகள் அழியாமையின் அவற்றை அடக்கியதாகச் சொன்னார்.

முதல்வனை, இனியானை மனத்தே வைத்தேன் என்று கூட்டுக. முதல்வனை, எப்போதும் இனியானை என இரண்டையும் ஒருங்கே சொன்னால் தேவர்களுக்கும் எப்போதும் இனியான் என்ற பொருள் கொள்ளக் கிடக்குமாதலின் அதனை வேறு பிரித்துச் சொன்னார்.)

இது நான்காந் திருமுறை ஏழாம் பதிகத்தின் மூன்றாம் பாட்டு.

★

கற்பனைக் காட்சி

சிவபெருமானுடைய திருமேனியிலே பொருந்திக் கிடக்கும் பொருள்கள் பல. அவற்றை நினைக்கும்போது அன்பர்களுக்குச் சில கற்பனைக் காட்சிகளும் தோன்றுவதுண்டு. திருநாவுக்கரசர் இப்படிக் காட்டும் கற்பனை நிகழ்ச்சிகள் பல.

புலவர்கள் தாம் இயற்றும் காவியங்களில் கற்பனைக் காட்சிகளைப் புனைந்து கூறுவது வழக்கம். குறிஞ்சி முதலிய திணை வருணனைகளை அமைக்கும்போது அங்குள்ள பொருள்களைக் கொண்டு சில நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து காட்டுவார்கள். திருநாவுக்கரசர் தம் பெயருக்கு ஏற்ப நாவன்மை உடையவர். அவர் தம் புலமை முழுவதையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்தவர். அவருடைய கருத்தும் கனவும், கற்பனையும் விற்பனமும் இறைவனைப் பற்றியே அமைந் திருக்கும்.. இறைவனைப் பல படியாகப் பாடித் துதித்த பாவாணர் அவர். இறைவனுடைய திருக்கோல வருணனையை யும், அவனுடைய திருவிளையாடற் சிறப்பையும், அவனுடைய அருளின் உயர்வையும், அவனுடைய ஆற்றலின் மிகுதியையும் எடுத்து உரைப்பார். தாம் நெறி மாறி நடந்தபோது தம்மைத் தடுத்து ஆட்கொண்டதையும், இறைவனருளால் தாம் பெற்ற இன்பநலத்தையும் கூறுவார். மக்களை நோக்கி, இன்னவாறு அவனைப் பணிந்து ஒழுகவேண்டும் என்று அறிவுறுத்துவார். கற்பனையால் இறைவன்பால் நிகழ்வனவாகச் சில நிகழ்ச்சிகளைப் புனைந்து கூறுவார். அத்தகைய கற்பனைகளில் ஒன்று வருமாறு:

★

இறைவன் எல்லோரையும்போல மணிகளாலும் பொன்னாலும் ஆகிய அணிகளை அணியவில்லை. பிறர் கண்டால் அஞ்சும் என்பையும் பாம்பையும் அணிந்திருக்கிறான்.

அவன் திருக்கையில் இருப்பதோ கபாலம்; அதனை நகுதலை என்று சொல்வார்கள். மகளிருக்கு எளிதில் ஒன்றைக் கண்டு அஞ்சுவது இயல்பு. பாம்பென்றால் படையும் நடுங்குமானால் ஒரு பெண் அஞ்சுவதைச் சொல்லவும் வேண்டுமோ? இறைவன் திருமுடியிலே அது சும்மா கிடந்தால் அதைக் கண்டு அச்சம் உண்டாகாது. அது அசைந்தது; படம் எடுத்து ஆடியது. அதைக் கண்டவுடன் எம்பெருமான் முடியில் இருந்த கங்கை யாகிய அரிவை அஞ்சினாள்; பேதுற்றாள்; சற்றே நகர்ந்தாள்.

கங்கையின் உருவத்தைப் பாம்பு பார்த்தது. அவள் தன்னைக் கண்டு அஞ்சி நகர்ந்ததை அது உணரவில்லை. இப்போது அதற்கு அச்சம் எழுந்தது. அவள் கூந்தலும் அசை வும் கண்டு மயில் என்று எண்ணிவிட்டது. பாம்புக்கு மயில் பகையல்லவா? ஆகவே அரிவை பேதுற்று நகர்ந்த போது அது அஞ்சியது; மயிலென்றெண்ணி ஐயுற்று அஞ்சியது. பாம்பு ஐயுற்று நடுங்கித் துள்ளவே அதனைக் கண்டது, இறைவன் திருமுடியிலே உள்ள பிறை. சந்திரனுக்கும் பாம்புக்கும் பகை. ஆதலின் நீர் கிடக்கும் சடை மிசை இருந்த திங்கள், ''பாம்பு இப்படித் துள்ளுகிறதே! நம்மைத் தீண்டுமோ!'' என்று ஏங்கியது. இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் பார்த்தால் யாருக்கும் சிரிப்பு வரும் அல்லவா? இறைவன் கையில் இருக்கும் கபாலம் பல்லைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இயற்கை யாகவே அது அப்படி இருந்தாலும், இப்போது மேலே சொன்ன காட்சிகளைக் கண்டு சிரிப்பதுபோல இருந்தது.

குழந்தைகள் எதையாவது பார்த்துக் காரணமின்றி அஞ்சி நடுங்குவதைக் கண்டு சிலர் நகைப்பதுண்டு. இறைவன் திருமேனியிலே சேர்ந்த பிறகு பகைமை இன்றி வாழும் வாழ்வு பாம்புக்கும் திங்களுக்கும் கிடைத்திருக்கிறது. அப்படி இருக்க, அதனை மறந்து பழைய வாசனையின் விளைவாக அவை அஞ்சுகின்றன. அவற்றின் பேதைமை கண்டு சிரிப்பதுபோல இறைவன் கையில் நகுதலை விளங்குகிறது.

இந்தக் கற்பனைக் காட்சியைத் திருநாவுக்கரசர் பாடுகிறார்.

கிடந்தபாம்பு அருகுகண்டு அரிவை பேதுறக்
கிடந்தபாம்பு அவளைஓர் மயில்என்று ஐயுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே.

(திருமுடியிலே கிடந்த பாம்பைத் தன் அருகிலே கண்ட கங்கையாகிய மங்கை மயங்க, அந்தப் பாம்பு அவளை ஒரு மயிலென்று ஐயுற்று நடுங்க, நீர்கிடந்த சடையிலிருக்கும் பிறை பாம்பைக் கண்டு ஏங்க, இவற்றையெல்லாம் கண்டு திருக்கரத்திலே கிடந்த நகுகின்ற தலையையுடைய திருக்கெடில வீரட்டானத்தில் வாழும் இறைவர் இருந்தவாறு என்னே!

கிடந்த - முன்பு அசையாது கிடந்த. அருகு கண்டு - அசைந்து தன் அருகில் வரக் கண்டு. அரிவை - பெண்; இங்கே கங்கை, திருமேனியிலே உள்ள பாம்பைக் கண்டு இறைவி அஞ்சியதாகப் பொருள் கொள்ளலாம்; அது அவ்வளவு சிறப்புடையதன்று. பேதுற - மயங்க. ஐயுற - ஐயம் அடைய; ஐயுற்று நடுங்க என்று கொள்ளவேண்டும். நீரையுடைய சடை. ஏங்க - அச்சத்தால் ஏங்க. தான் கிடந்து நகும் தலை. நகுதலை - ஊன் கழிந்த தலை; கபாலம்; திருக்கரத்தில் இருப்பது. மாலையாக அணிந்த தலையென்றும் சொல்லலாம். கெடிலம் என்றது திருவதிகைக் கெடில வீரட்டானத்தை. தரும புத்திரனைத் தருமன் என்றும் வீமசேனனை வீமனென்றும் முழுப் பெயரின் ஒரு பகுதியைச் சொல்வது போன்றது இது. இதனை நாமைகதேச நாமக்கிரகணம் என்று வடமொழியாளர் கூறுவர். வாழ்நர் என்பது வாணரென வந்தது.

பேதுற, ஐயுற, ஏங்க, நகும் தலை என்று கூட்டவேண்டும். நகுதலையையுடைய கெடிலவாணர் இருந்தவாறு என்னே என்று சில சொற்களை வருவித்துப் பொருளுரைக்க வேண்டும். அறியாமையால் அஞ்சுகின்றவற்றை அணிந்திருக்கும் அவர் கோலத்தைக் கண்ட வியப்பினால் தாம் சொல்வதை முற்றும் கூறி முடிக்க முடியாமல், "கெடில வாணரே!" என்று நிறுத்தினார். 'கெடிலவாணர் இருந்தபடி என்ன வியப்பு' என்று வேண்டிய சொற்களைப் பெய்து பொருள் கொள்ளவேண்டும். இதை இசையெச்சம் என்று சொல்வார்கள். இந்தப் பதிகத்தின் பத்துப் பாடல்களும் இப்படியே முடிகின்றன.)

இது பத்தாம் பதிகத்தின் எட்டாம் பாட்டு.

என்ன குறை?

மனிதனுக்கும் விலங்குக்கும் உடம்பும் அவ் வுடம்பில் உறுப்புகளும் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு மனிதன் ஓடுகிறான்; ஆடுகிறான்; உழைக்கிறான்; தழைக்கிறான். விலங்குகளும் திரிகின்றன; உண்ணுகின்றன. அன்றன்று கிடைப்பவற்றை உண்ணுவதே பெரும்பாலான விலங்குகளுக்கு இயல்பு; நாளைக்கு வேண்டுமென்றோ அடுத்த ஆண்டுக்கு வேண்டுமென்றோ சேமித்து வைப்பதில்லை. அப்படிச் சேமித்து வைக்கவேண்டும் என்ற அறிவே அவற்றிற்கு இருப்பதில்லை.

மனிதன் ஆறறிவுடையவனாதலின் அன்றன்று எல்லா வற்றையும் தேடிக் கொண்டிருப்பதில்லை. பிச்சைக் காரனாக இருந்தாலும் சில நாட்களுக்கு உதவும் ஆடையை அணிந்திருக் கிறான். பல நாட்களுக்கு வரும் பல பொருளைச் சேமித்து வைப்பவர்களைச் செல்வர்கள் என்று நாம் சொல்கிறோம்.

வருங்காலத்துக்கும் உதவும் என்று தனக்கு வேண்டிய பண்டங்களைச் சேமித்து வைக்கும் மனிதன், பின்னும் தன் அறிவினாலே ஒரு காரியத்தைச் செய்கிறான். எறும்பும் முயன்று மழைக்காலத்திற்கு முன் அரிசியைச் சேமித்து வைக்கிறது; மனிதனும் பண்டங்களைக் கூட்டி வைக்கிறான் என்றால் அவனுக்குப் பெருமை இல்லை. அவனிடம் வேறு ஒரு சிறப்பு இருக்கிறது.

மனிதனுக்கு வேண்டிய பண்டங்களை யெல்லாம் ஒருமிக்க வாங்கி வைத்துக்கொள்ள முடியாது; அவற்றை வைக்க வீட்டில் முதலில் இடம் இராது. வாங்கி வைத்தாலும் அவை நாளடைவில் கெட்டுவிடும். ஆண்டுக்கு ஒரு முறை அரிசி முதலியவற்றை வாங்கி வைத்துக்கொள்ளுகிறான்; மாதத்துக்கு ஒருமுறை எண்ணெய் முதலிய பொருள்களை வாங்கிச் சேமிக்கிறான்; வாரத்துக்கு ஒரு முறை கிழங்கு

முதலியவற்றை வாங்குகிறான்; தினந்தோறும் பாலும் காய்கறியும் வாங்குகிறான்; சில ஆண்டுகள் பயன்படுத்தும் பாத்திரங்களும் பல ஆண்டுகளுக்கு உதவும் அணிகளும் அவனிடம் இருக்கின்றன.

ஆகவே அவன் எல்லாப் பண்டங்களையும் ஒரேயடியாகக் குவித்துக் கொள்வதில்லை. ஆனால் ஒன்றைமட்டும் எப்போதும் ஈட்ட முயல்கிறான். அதனை எத்தனை காலமானாலும் வைத்துக்கொள்ளலாம். எல்லாப் பண்டங்களையும் அதைக் கொண்டு எந்தச் சமயத்திலும் பெறலாம். அது என்ன? அதுதான் செல்வம். செல்வம் படைத்தவன் தனக்கு அவ்வப்போது வேண்டும் பண்டங்களை வாங்கிக் கொள்ள முடியும். ஏதேனும் புதிய இடத்துக்குச் செல்லும் போது தனக்கு வேண்டிய பண்டங்கள் அத்தனையையும் அவன் தூக்கிக்கொண்டு செல்ல முடியாது; ஆனால் கையில் பணம் இருந்தால் எங்கே போனாலும் வேண்டியவற்றை வாங்கிக்கொள்ளலாம்.

ஆதலின் மனிதன் பணத்தை ஈட்டுவதில் நாட்டமாக இருக்கிறான். செல்வம் ஈட்டுவது மனிதனுக்கே உரிய செயல். அது விலங்கினிடம் இல்லை. பணம் படைத்தவனுக்கு என்ன பண்டம் வேண்டுமானாலும் கிடைக்கிறது. அவனுக்கு வாழ்க்கைக்குரிய வசதிகளில் குறை உண்டாவதில்லை.

எத்தனை செல்வத்தை ஈட்டினாலும் அது வர வரக் குறைந்துகொண்டே வரும். அதனால் பெரிய செல்வர்கள்கூட மேலும் மேலும் செல்வத்தை ஈட்டிக்கொண்டே இருக்கிறார்கள். தம்முடைய செல்வம் எவ்வளவு மிகுதியாக இருந்தாலும் அதற்கு எல்லையுண்டென்று அறிந்து, அந்த எல்லையைக் காணும் காலம் வந்தால் என்ன செய்வது என்று அஞ்சி, மேலும் மேலும் நிரப்புகிறார்கள். இந்தக் காரணத்தால் செல்வ முடையவர்களும், தம் செல்வத்தின் மிகுதியை நினையாமல் அது செலவாகிவிடும் காலம் ஒன்று வருமே என்ற குறை யுடையவர்களாக இருக்கிறார்கள். உண்மையில் எத்தனைக்கு எத்தனை மிகுதியாகச் செல்வத்தைப் படைத்திருக்கிறார்களோ, அத்தனைக்கு அத்தனை மிகுதியாக அவர்களுடைய குறைகளும் இருக்கின்றன. எடுக்க எடுக்கக் குறையாக நிதி ஒன்று அவர்களுக்குக் கிடைக்குமானால் அவர்கள் அஞ்சமாட்டார்கள்;

''எமக்கு ஒரு குறையும் இல்லை'' என்று கூறுவார்கள். ஆனால் அப்படிக் குறைவிலாத நிதி அவர்களுக்குக் கிடைப்பது இல்லையே!

அப்பர் தமக்குக் குறைவிலா நிறைவாகிய பொருள் கிடைத்துவிட்டது என்கிறார். அது கிடைத்துவிட்ட பெருமிதத்தால், **''என்ன குறையுடையேன்?''** என்று மகிழ்ச்சி கூர்கிறார். ஆம்; இறைவனுடைய **பொறகழல்** அவருக்குக் கிடைத்து விட்டது. பொன்னாலாகிய கழலை அணிந்த திருவடியைப் பொறகழல் என்பார்கள். அப்பர் இறைவன் திருவடியைத் தமக்குரியதாக்கிக் கொண்டதை, பொறகழலைப் பெற்றதாகச் சொல்கிறார். எல்லாப் பண்டங்களையும் எவ்விடத்திலும் எக் காலத்திலும் வாங்க நாணயங்கள் உதவுவதில்லை. பொன்னாக இருந்தால் அதை எந்த இடத்திலும் மாற்றிக்கொள்ளலாம். பொறகழல் என்ற தொடர் கூட, எவ்விடத்திலும் எச் சமயத்திலும் பயன்படும் பொன்னைப் போன்ற திருவடி என்று நினைக்கும்படியாகவும் அமைந் திருக்கிறது.

அந்தப் பொறகழல் புதிதாக உண்டாகவில்லை. எப்போதும் உள்ளதுதான். எங்கோ ஆயிரம் பொன் புதையலாக இருந்தால் அதனால் நமக்கு என்ன பயன்? அப்பொருள் நம் கையில் இருக்க வேண்டும்; அப்போதுதான் நம் குறைகள் நீங்கும். நமக்கு உரியதாக இருந்து எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தும் படி இருப்பதால் பொருளைக் கைப் பொருள் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. ''இதோ என் கையில் காசு இருக்கிறது. என் பெட்டி நிறையப் பொருள் இருக்கிறது. என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்'' என்று கூறுபவனுடைய தைரியம் மற்றவர்களுக்கு வராது.

அப்பர் சுவாமிகள் பொறகழலை எங்கோ பார்த்துவிட்டு, ''இது நமக்கு உரியது'' என்று எண்ணவில்லை. ''இதோ என் வீட்டுக்குள் வைத்திருக்கிறேன்'' என்று சொல்வாரைப் போல, **''பொறகழல் ஈங்கு இருக்கப்பெற்றேன்''** எனகிறார். ஈங்கு என்று தம் உள்ளத்தையே சுட்டுகிறார். ''என் மனத்தில் இறைவன் பொறகழல் இருக்கிறது. அதனால் எனக்கு வேண்டியன அனைத்தும் கிடைக்கும். ஒரு குறையும் இல்லை'' என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார். இறைவனைப்

பார்த்தே சொல்கிறார். ''என்புண்ணியப் பயனெல்லாம் திரண்டு ஒருருவாக வந்த பரம்பொருளே! தூயவனே! உன் பொற்கழல் ஈங்கு என் மனத்தே இருக்கப் பெற்றேன்; ஆதலின், என்ன குறையுடையேன்?'' என்று பாடுகிறார்.

......புண்ணியா! புனிதா! உன் பொற்கழல்
ஈங்குஇருக் கப்பெற்றேன்; என்னகுறை உடையேன்?

''அவன் லட்ச லட்சமாகப் பணம் சேர்த்து வைத்திருக் கிறான். அவனுக்குக் குறைச்சல் என்ன?'' என்று ஒருவர் ஒரு செல்வரைப் பற்றிச் சொன்னால், கேட்பவர், ''எப்படி அப்பா அவ்வளவு பணம் சேர்த்தான்?'' என்று கேட்கிறார். அவர் சேர்த்த முறையை அறிந்து தாமும் அப்படிச் சேர்க்கலாம் என்ற ஆசை அவருக்கு. பணத்தைச் சேர்க்கும் முறைகள் எல்லோருக்கும் தெரிவதில்லை.உலகத்தில் பலருக்கு இன்னும் இரகசியமாகவே இருக்கின்றன. செல்வர்களை அணுகி, ''நீங்கள் எப்படிப் பணம் சேர்த்தீர்கள்?'' என்று கேட்டால், ''பாடுபட்டுச் சேர்த்தோம்'' என்று சொல்வார்கள். அதற்குமேல் பொருள் சேர்க்கும் நுணுக்கங்களைச் சொல்வது அரிது.

''நீங்கள் எப்படி இறைவனுடைய பொற்கழலை உங்கள் அகத்திற்குள் வந்து இருக்கும்படி செய்தீர்கள்?'' என்று அப்பர் சுவாமிகளைக் கேட்டுப் பார்க்கலாம். அந்த அருட் செல்வர் ஒளிவு மறைவு இன்றிச் சொல்கிறவர்; தாம் பெற்ற செல்வத்தை எல்லோரும் பெறவேண்டும் என்று விரும்பும் பெரியார். அவர் சொல்கிறார். அதையும் இறைவனைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்கிறார்.

''உன் கழல் கிடைக்காது என்றல்லவா நினைத்தேன்? அது உண்மையாக அன்புடன் நாடுவாருக்குக் கிடைக்கத் தக்கதாக இருப்பதை முன்பு உணரவில்லை. அது மென்மையான கழல்; பூங்கழல்; தாமரை மலரைப் போன்ற திருவடி. அதை நான் தொழுதேன்; வாயால் புகழ் கூறிப் பரவினேன். அப்படிப் பலகால் செய்ததனால் நான் பெற்ற பேறு என்னே! புண்ணியா! புனிதா! அக் கழலை நான் தேடித் தேடி அலைந்த நிலை மாறி அது இங்கே, என் உள்ளத்தே, இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'' என்கிறார்.

பூங்கழல்தொழு தும்பரவியும்
புண்ணியா!புனி தா!உன்பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன்;
என்ன குறையுடையேன்?

இறைவனுடைய திருவடித் தியானத்தை எப்போதும் செய்பவர்களுக்கு எந்தவிதமான குறையும் வராது. ஆனால் எளிதில் அந்தத் தியானம் சித்தியாது. பலகாலம் அவனுடைய கழலை உடம்பால் வணங்கவேண்டும்; பின்பு வாயினால் துதிக்க வேண்டும்; அப்போதுதான் உள்ளத்தில் அந்தக் கழல் பதியும். ஒரு பொருளை ஒருகால் கண்டால் அது நம் உள்ளத்தே போவதில்லை. பலமுறை கண்டு கண்டு பழகினால் அதைப் பற்றிப் பேசும் நிலை வரும். பல முறை கண்டும் பலமுறை அதைப்பற்றிப் பேசியும் பயின்றால் அது நம் மனத்தே குடிகொண்டிருக்கும்.

குறைவிலா நிறைவாகிய இறைவன் கழலை உள்ளத்தில் எப்போதும் நிலை கொள்ளும்படி செய்யப் பலகால் பயில வேண்டும். உடல், நா, உள்ளம் என்ற மூன்றும் முக்கரணங்கள் என்று பெயர் பெறும். உடலால் செய்யும் செயலும் நாவால் பேசும் பேச்சும் உள்ளத்தால் நினைக்கும் நினைப்பும் மூன்று கரணங்களால் இயற்றப் பெறுவன. செயலிலே பழகி முதிர்ந்தால் பேச்சிலே நிலைக்கும்; அது முதிர்ந்தால் மனத்திலே நிலைபெறும். அப்பர் சுவாமிகளுடைய உள்ளத்திலே இறைவன் பொற்கழல் நிலை பெற்றதற்கு அவர் அக் கழலைத் தொழுதும் பரவியும் பயின்ற பயிற்சியே காரணம்.

★

இந்த நினைவு நாவுக்கரசருக்குத் திருவாரூரிலே வந்தது. அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பார்த்துப் பெருமிதத்தோடு இதைச் சொல்கிறார். இறைவன் பொற்கழல் உறையும் இடமாக மனத்தை வைத்திருக்கும் தமக்கு ஒரு குறையும் இல்லை என்றார்; அவன் இருக்கும் திருத் தலத்திலும் குறைவின்றிப் பல வளங்கள் நிறைந்திருக்கின்றன என்று சொல்ல வருகிறார்.

திருவாரூரில் நீர்வளம் நிலவளம் நிரம்பியிருக்கின்றன. அவற்றை அங்கு உள்ள மரங்கள் காட்டுகின்றன. மரங்கள் பலவகை; இலையால் பயனுடையவை, மலரால் பயனுடையவை, கனியால் பயனுடையவை, வேறு ஒன்றுக்கும் ஆகாமல் விறகுக்கு ஆவன என்று பல வகையான பயன்களை உடையவை அவை. இவற்றுள் கனியாற் பயனுடையவை சிறந்தவை. ஊருக்குள் பழ மரங்கள் இருந்தால் அவை மிக்க பயனைத் தருவன.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்''

என்று வள்ளுவர் பழ மரத்தைப் பிறருக்கு ஈயும் வள்ளலுக்கு உவமை கூறுவர். திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் பெருவள்ளல்; தியாகேசன் என்பது அவன் திருநாமம். அவன் கழல் வைத்த இடமெல்லாம் குறைவின்றி நிறைவு பெறும். அடியார்கள் உள்ளத்தில் அப் பொற்கழல் இருந்தால் அவர்கள் நிறைவு பெற்று, ''என்ன குறையுடையேம்?'' என்று சொல்வார் கள். ஒரு தலத்தில் அப்பூங்கழல் இருந்தால் அங்கே பழ மரங்கள் பல்கி வளரும். திருவாரூரில் பழ மரங்கள் பல பழுத்து நிற்கின்றன.

நெடுந்தூரத்திலிருந்து திருவாரூரை நோக்கி வருவாருக்கு ஊருக்குள்ளே புகுவதற்கு முன்பே அங்குள்ள நிலவளம் தெரிந்துவிடுகிறது. உயரமாக ஓங்கி நிற்கும் தென்னமரங்கள் தலை நிமிர்ந்து, ''என்ன குறையுடையேம்?'' என்று சொல்வன போலத் தோன்றுகின்றன. ஊரைப் பின்னும் அணுகினால் ஓங்கிய தெங்குகளுக்கு அருகே அடர்ந்து நிற்கும் கமுக மரங்கள் தெரிகின்றன. அவற்றினுடைய ஓலைகள் எப்படி நீண்டு அகன்று படர்ந்திருக்கின்றன! அநேகமாக ஊரின் எல்லைக்கே வந்துவிட்டோம். கம் என்ற வாசனை வீசுகிறது. இந்த வாசனை, மலரின் மணம் அன்று, வாழை மரங்கள் வளர்ந்து கனிந்த குலைகளைத் தாங்கி நிற்கின்றன. அவற்றின் கீழே இளவாழைக் கன்றுகள் வளர்கின்றன. தோட்டத்துக்குள்ளே புகுந்து பார்த்தால் மாமரங்கள் நிற்பதைக் காணலாம். மாதுள மரங்கள் வளர்ந்து பழுத்து நிற்கின்றன. எல்லா மரங்களிலும்

கனிகள் குலுங்குகின்றன. எல்லாக் கனிகளும் இனிமையை உடையன; மக்களுக்குப் பயன்படுவன. மரங்களிலிருந்து அவை கனிந்து சிதறுகின்றன. என்ன அழகு! என்ன வளம்!

ஊருக்குள் பழ மரங்கள் பழுத்து நிற்கும் காட்சியும், அவற்றுக்கு மூலகாரணமாக எழுந்தருளி யிருக்கும் திருவாரூர் அம்மானும், அவனுடைய பொற்கழலும், அப்பொற் கழலைத் தன்னிடத்திலே பெற்ற அப்பர் சுவாமிகளுடைய திருவுள்ளமும் நினைக்க நினைக்க இன்பத்தைத் தருகின்றன. அவற்றை யெல்லாம் நினைந்து பக்தி செய்யும்படியாகத் திருநாவுக்கரசர் இந்தப் பாசுரத்தை அருளிச் செய்திருக்கிறார்.

பூங்கழல்தொழு தும்பரவியும்
புண்ணியா! புனி தா!உன்பொற்கழல்
ஈங்குஇருக் கப்பெற்றேன்;
என்ன குறையுடையேன்?
ஓங்குதெங்கு, இலை யார்கமுகு,இள
வாழை, மாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறும்
திருவாரூர் அம்மானே!

[புண்ணியத் திருவுருவானவனே! தூய்மையே உருவாக அமைந்தவனே! வளர்ந்தோங்கிய தென்னை, இலை நிறைந்த கமுகு, இளவாழை மரங்கள், மாமரம் இவற்றோடு மாதுள மரமும் பல இனிய கனிகளை உதிர்க்கும் திருவாரூரில் இருக்கும் இறைவனே! உன்னுடைய மலரைப் போன்ற திருவடியைக் கையால் தொழுதும் நாவால் புகழ்ந்தும் உன் பொன்னாலாகிய கழலை அணிந்த அவ்வடியை நினைத்து அது என் உள்ளத்தே இருக்கும்படியான பேற்றைப் பெற்றேன்: இனி என்ன குறையை உடையவனாவேன்? (ஒரு குறையும் எனக்கு இல்லை.)

பூங்கழல் - தாமரை மலரைப்போன்ற திருவடி; கழல் - ஆகு பெயர்; பொலிவு பெற்ற அடி என்றும் சொல்லலாம். தொழுதல், கையின் செயல்; அது வணங்குதல், பணிதல் முதலிய மெய்யோடிணைந்த செயல்கள் அனைத்தையும் உபலட்சணத்தால் கொள்ளும்படி நின்றது. பரவியும் - புகழ்ந்தும்; திருநாமம் கூறுதல், புகழைப் பாராட்டுதல், பாடுதல் ஆகிய அனைத்தையும் இது சுட்டியது. புனிதன் - தூயவன். பொற்கழல் - பொன்னாலான கழலை அணிந்த

திருவடி; பொன் போன்ற திருவடி என்றும் தோன்றும்படி இத்தொடர் அமைந்திருக்கிறது. கழலின் அருமைப்பாட்டை எண்ணி, அதைப் பலபடியாகப் பாராட்ட வேண்டும் என்ற நினைவால், பூங்கழல் என்று முன் சொன்னவர், பின்பு அது என்று சொல்லாமல் மீட்டும் பொற்கழல் என்று கூறினார். என்றாலும் அதையே சுட்டியதாகக் கொள்ள வேண்டும், ஈங்கு - என் மனத்தில்; ஈங்கு என்று அணிமைச் சுட்டாற் சொன்னது, தம்நெஞ்சைக்காட்டிலும் நெருங்கியது ஒன்று இன்மையால். இன்னது, என்று சொல்லாமல் ஈங்கு என்று சுட்டியதன் பொருள் அவர் உள்ளத்துக்குத் தெரியும்; இது நெஞ்சறி சுட்டு. இருக்க - நிலைபெற்றிருக்க. என்ன - எத்தகைய. தெங்கு - தென்னை, இலையென்றது கமுகின் ஓலையை. தீங்கனி - இனிய பழங்களை, சிதறும் - கனிந்து உதிரச் செய்யும். அம்மான் - தலைவன்; கடவுள்.]

இப் பாட்டு இருபதாம் திருப்பதிகத்தில் உள்ள நான்காம் பாடல்.

★

ஊடலும் ஆடலும்

அப்பர் சுவாமிகள் காட்டும் கற்பனைக் காட்சிகளில் மற்றொன்று. இந்தக் காட்சியில் முக்கியமான பாத்திரங்கள் இறைவனும் கங்கையும் உமாதேவியாரும் ஆவர்.

பகீரதனுடைய வேண்டுகோளுக்குக் கங்கை எளிதில் இணங்கவில்லை. பல காலம் தவம் செய்த பிறகு கங்கை தோன்ற, ''என்னுடைய முன்னோர்களின் என்புமேல் பாய வேண்டும்'' என்று பகீரதன் அவளை வேண்டினான். அப்போது கங்கை வானுலகில் மாத்திரம் உலா வந்து கொண்டிருந்தாள். பகீரத னுடைய முன்னோர்கள் ஒரு முனிவரின் சாபத்தால் பாதாளத்தில் எரிந்தனர். அவர்கள் உடம்பு எரிந்து இப்போது என்பாகிக் கிடந்தன. வானுலகத்தில் உலவும் கங்கை பாதாளத்துக்கு வருவதாவது! அது எத்தனை இழிசெயல்! வான் நதி என்ற பெயருடன் தேவருடைய தொடர்பு பெற்று வாழும் அப் பெருமாட்டி பூவுலகத்துக்கே இழியவில்லையே! அப்படியிருக்கப் பாதாளத்துக்கு இறங்கி வருவது என்பது நடக்கிற செயலா?

கங்கையின் உள்ளத்தில் கருணை இருந்தால், பாதாளம் என்ன, அதற்கும் கீழே இறங்கி வரலாம். ஆனால் அவள் உள்ளத்தே அகந்தைதான் இருந்தது. தவத்துக்கு எப்போதும் ஒரு வலிமை உண்டு. தன்னை நோக்கித் தவம் செய்த பகீரதனிடம், ''நான் அங்கே வரமுடியாது'' என்று சொன்னால் அவன் செய்த தவம் அவளைத் தீய்த்துவிடும். ஆதலின் போக்கு ஒன்று காட்ட எண்ணினாள். ''நான் பாதாளத்துக்கு வருவேன். ஆனால் நேரே வர இயலாது. என்னை யாரேனும் தாங்கி விட்டால் வருவேன்'' என்றாள். மேல் மாடியிலிருந்து கீழே இறங்கும் அரச குமாரிக்குக் கைலாகு கொடுக்க யாரேனும் முன் வருவதைப் போல ஒருவர் வேண்டுமென்று அவள் விரும்பினாள் போலும்!

பகீரதன் தவம் செய்வதற்கு அலுக்காதவன். முன்பு பிரமனை நோக்கித் தவம் செய்தான்; அப்பால் கங்கையை நோக்கித் தவம் செய்தான். இப்போது கங்கையைத் தாங்கிக்கொள்ள யாரைக் கெஞ்சுவது என்று எண்ணிப் பார்த்தான். மறுபடியும் பிரமனை நோக்கித் தவம் செய்தான். பிரமதேவன் தோன்றி, ''கங்கையைத் தாங்குவது என்பது நம்மால் முடியாது; பரமசிவனைக் குறித்துத் தவம் செய்வாயாக!'' என்று கூறிவிட்டான். மறுபடியும் அவன் சிவபிரானை நோக்கித் தவம் புரிந்தான்.

இறைவன் பகீரதன்முன் எழுந்தருளினான். அவனுடைய தவத்தை உணர்ந்து இறைவனுக்கு மிக்க கருணை உண்டா யிற்று. கருணை மிகுதியினால் தன்னுடைய அடியார்களைக் காக்க எவ்வளவோ தூரம் இறங்கி வருகிறவன் அவன். இப்போது மற்றவர்கள் இறங்குவதற்கும் துணை செய்ய முன் வந்தான்.

கங்கை இறங்க முடியாமல் நிற்கவில்லை; இறங்க விருப்பம் இல்லாமல் இருந்தாள். அவளுக்கு அகந்தை நிரம்பியிருந்தது. பகீரதன் தவத்தை மெச்சி, ''கங்கையை நான் தாங்குகிறேன்'' என்று கூறியருளினான் இறைவன். மீட்டும் பகீரதன் தவம் செய்து கங்கையை வருவித்தான்; சிவபிரான் ஏற்றுக்கொள்வதாக அருளியதைக் கூறினான்.

கங்கையோ தன்னை ஏற்பார் யாரும் இருக்கமாட்டார் என்ற எண்ணத்தோடு இருந்தாள். இறைவன் ஏற்பதை அவள் விரும்பவில்லை. இறைவனுடைய பேராற்றலை அவள் மறந்தாள். தன் ஆற்றலைக் காட்டவேண்டுமென்று ஆயிரமுக மாகப் புறப்பட்டாள். இறைவனுக்கு அடங்காதவர் யார்? ஆரவாரத்தோடு வந்த கங்கையை இறைவன் ஒரு சடையிலே அடக்கிவிட்டான். அதற்குமுன் அடங்காப் பிடாரியாக இருந்த கங்கை கணவன் முன் நிற்கும் மனைவியைப்போல அடங்கி ஒடுங்கி நின்றாள். ஆற்றின் உருவில் அகங்கார வெம்மை யோடிருந்த அவள் கருணைப் பெருங்கடலிலே கலந்து வெம்மை நீங்கினாள். பிறகு இறைவன் அங்கிருந்து கீழே விட்டான். பூவுலகத்துக்கு வந்து அப்பால் பாதாள வுலகத்துக்கும் பகீரதனைப் பின்பற்றிச் சென்றாள். அவள் முன்பு இருந்த இருப்பென்ன! இப்போது மாறிய வகை என்ன!

கருணை மயமான இறைவனுடைய தொடர்பினால் அவளுக்கும் கருணை உண்டாகிவிட்டதால், அழைத்த இடத்துக்கெல்லாம் வருகிறேன் என்பவளைப்போலப் பகீரதனைப் பின்பற்றிப் போனாள்.

இறைவன் தன் சடையில் கங்கையைச் சுமந்திருக்கவில்லை. அவள் அவனுக்கு ஒரு பாரம் அல்லவே! அவளைப் பூப்போலச் சூடியிருக்கிறான். அவனுடைய திருமுடியிலே கங்கை அடக்கமே உருவான பெண்ணாக விளங்குகிறாள்.

இறைவன் தன் திருமுடியிலே கங்கையை ஏற்கும் போது அவள் ஆரவாரத்தோடு வந்தாள் அல்லவா? அந்த ஆரவாரம் உமாதேவியின் காதில் விழுந்தது. 'இதென்ன பேரிரைச்சல்?' என்று அம்மை ஆராய்ந்தாள். உண்மை விளங்கியது. ''நான் ஒருத்தி இங்கே இருக்க, என்னை அறியாமல், என்னிடம் கூறாமல் வேறு ஒருத்தியைச் சடைமேல் வைப்பதாவது!'' என்று அப்பெரு மாட்டிக்குக் கோபம் உண்டாயிற்று.

இறைவன் தன் கருணைத் திருவிளையாடலைப் புரிந்துவிட்டு உமாதேவியை அணுகினான். எம்பெருமாட்டி அவனோடு பேசவில்லை; ஊடல் கொண்டாள்.

> சூடினார் கங்கை யாளைச்
> சூடிய துழனி கேட்டுஅங்கு
> ஊடினாள் நங்கை யாளும்.

கங்கையின் ஆற்றலையும் அகங்காரத்தையும் அடக்குவது எளிதாக இருந்தது இறைவனுக்கு. ஆனால் உமாதேவியின் ஊடலை நீக்குவது அத்தனை எளிதன்று. அதனை நீக்க வழி என்ன என்று ஆராய்ந்தான். நல்ல பாட்டைக் கேட்டால் உருகுவது எல்லோருக்குமே இயல்பு. உமாதேவி அன்பர்களுடைய பாட்டிலும் கலைமகளின் வீணை யொலியிலும் மனம் ஈடுபடுவது வழக்கம். அம்பிகையே இசையில் வல்லவள். பலகால் உமாதேவி ஊடல் கொண்டதுண்டு. அதனைத் தீர்க்க இறைவனும் பல முறைகளை மேற்கொண்டிருக்கிறான். இப்போது தன் தேவியின் ஊடலைத் தீர்க்க இன்னிசையைப் பயன்படுத்தத் திருவுளங் கொண்டான்.

எப்போதும் சாமவேதத்தை இசைத்துக் கொண்டிருப்பவன் அவன். ஆகவே இப்போது இன்னிசை எழுப்பிச் சாமகானம் செய்தான்; தாளத்தோடே பாடத் தொடங்கினான். அப்படிப் பாடும்போது அவனுக்கு உற்சாகம் வந்து விட்டது. பாட்டுப் பாடுவதை மட்டுமா அவன் அறிவான்? ஆடவும் தெரிந்தவன் அல்லவா? அதில் அவன் வல்லவன் ஆயிற்றே! நடனத்துக்கு அரசன் என்று அவனை வணங்குகிறோம். ஆதலின் சாம வேதத்தைத் தாளத்தோடு பாடப் பாட அவனுக்கு ஆடவேண்டு மென்ற நோக்கமும் உண்டாயிற்று; ஆடத் தொடங்கினான்.

இறைவியின் ஊடல் நீங்கும் அறிகுறி தோன்றியது; அவனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. சாம வேதம் பாடின தாளத்தோடே கூத்தாடினான்.

.......ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்;
பாடிய பாணி யாலே
ஆடினார்.

(பாணி— தாளம்.)

உமாதேவியாகிய பராசக்தி இறைவனோடு ஒன்றியும் இருப்பாள்; வேறு பிரிந்தும் நிற்பாள். சக்தி இறைவனது அருளின் உருவம். அப்பெருமாட்டி ஊடல் கொண்டால் இறைவனுக்கு இன்பம் இல்லை என்பது ஒரு குறிப்பு. இறைவனிடம் அருள் ஒன்றாவிட்டால் உலகுக்கே இன்பம் இல்லை. அருள் வழி நின்று உலகம் இயங்குகிறது. அந்த அருளாணை ஊடுதலாவது, வெளிப்படாமல் நிற்பது. சக்தி ஊடுதலின்றி இறைவனோடு கூடினால் உலகுக்கு இன்பம் உண்டாகும். இறைவன் அந்த அருளை மேற்கொண்டான் என்பதனையே உமாதேவியின் ஊடலை நீக்கினான் என்று கதையாகக் கொள்வார்கள்.

இறைவன் பாடியும் ஆடியும் உமாதேவியின் ஊடலை நீக்கிவிட்டான். அந்த இறைவன் யார் தெரியுமா? ''கெடில நதியினால் வரம்பு கட்டப்பெற்ற எங்கள் திருவதிகை வீரட்டத்தில் உள்ள பெருமான்'' என்கிறார் அப்பர். இறைவன் அருள் வெளிப்பட்டு அவனை இவ்வளவும் இறங்கிவரச்

செய்தது. இல்லையானால் அவன் குணங்குறி கடந்த நிலையில் இருப்பான். இங்கே வரமாட்டான். உமாதேவி ஊடல் நீங்காமல் இருந்தால் அவன் வெளியே எங்கே வரப்போகிறான்? அவள் ஊடல் நீங்கினாள்; நாம் சிவபிரானைத் திருவதிகையிலும் திருத் தில்லையிலும் மற்ற இடங்களிலும் காண்கிறோம்; ஆடுகிறோம்; பாடுகிறோம்.

''சூடினார் கங்கை யாளைச்
சூடிய துழனி கேட்டுஅங்கு
ஊடினாள் நங்கை யாளும்;
ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்;
பாடிய பாணி யாலே
ஆடினார், கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே.

(கெடில நதியை எல்லையாக உடைய திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளிய சிவபெருமான், கங்கையைத் தம் திருமுடியில் சூடினார்; அப்படிச் சூடும்போது உண்டான ஆரவாரத்தைக் கேட்டு அப்போது உமாதேவி ஊடினாள்; அப் பெருமாட்டியின் ஊடலை ஒழிக்க விரும்பி இறைவனார் சாம வேதத்தைப் பாடினார் அதைப் பாடின தாளத்திற்கு ஏற்பச் சதி மிதித்து ஆடினார்.

சூடுதல் - தலையில் அணிதல். துழனி - ஆரவாரம். மற்றவர்கள், ''கங்கையைச் சூடினார்'' என்று சொல்லும் ஆரவாரம் என்றும் சொல்லலாம். அங்கு - அப்போது. நங்கையாள் - உமாதேவி. பாணி - தாளம்; பாணியால் - பாணிக்கு ஏற்ப. வேலி-எல்லை)

இது, 27-ஆம் பதிகத்தில் உள்ள இரண்டாவது திருப்பாட்டு.

★

என் செய்கேன்!

அப்பர் சுவாமிகள் சற்று ஓய்வாக அமர்ந்திருந்தார். ஏதோ உள்ளத்திலே சிறிதளவு சலிப்புத் தோன்றியது. பழைய கதை அவர் மனக் கண்ணில் ஏடு ஏடாக விரிந்தது. சிவ பெருமானுடைய அடிக்கே ஆளாக வேண்டிய நாம் உறுதியாக அந்த வழியிலே செல்லவில்லை. எங்கெங்கோ மனம் தாவியது. புகழுக்கும் மதிப்புக்கும் ஆசைப்பட்டது. சைனனாக மாறி னோம். அங்காவது முழுப்பற்று இருந்ததா? அதுவும் இல்லை. இப்படி எத்தனை காலம் வாழ்ந்தோம்! ஒரு நாளா, இரண்டு நாளா? பல ஆண்டுகள் கழிந்தன. அவ்வளவு காலமும் நாம் வாழத்தான் வாழ்ந்தோம். ஆனால் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழவில்லையே!

நல்ல உணவை உண்ணத் தொடங்கியபோது, 'அடடா! இவ்வளவு நாள் கூழுக்கும் வகையின்றித் துன்புற்றோமே!' என்று வருந்துவது போல அப்பர் வருந்தலானார்.

'இடையீடில்லாமல் இளம் பருவ முதலே எம் பெருமானிடம் ஆராத அன்பு கொண்டு வாழ்ந்திருந்தால் எத்தனை இன்பத்தை அடைந்திருக்கலாம்! நான் போக்கிய காலம் கொஞ்சமா? அத்தனை கா்லமும் வீணாகக் கழித்து விட்டேனே! பாழுக்கல்லவா நீர் இறைத்தேன்? ஆம், உடல் வருந்தி இறைத்ததிற் குறைவில்லை. ஆனால் எதற்கு இறைக்க வேண்டுமோ, அதற்கு இறைக்கவில்லை. மனத்திலே எதையாவது ஒன்றைப் பற்றினால் அதைப் பற்றியே வாழலாம். நாளுக்கு ஒரு பொருளின்மேல் நாட்டமும் நேரத்துக்கு ஒரு காதலுமாக இருந்தால் மனம் ஒன்றிலே நிலைப்பது ஏது? ஒன்றை விட்டு ஒன்று பற்றினேன். நான் பற்றினாலும் அது என்னை விட்டுக் கழன்று போயிற்று. எதைப் பற்றவேண்டுமோ

அதைப் பற்றாமல் வாழ்ந்தேன்.* என் வாழ்க்கை உறுதியான பற்றுக்கோடு ஒன்றும் இல்லாத வாழ்க்கை ஆகிவிட்டது.'

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீர்இ றைத்தேன்

★

'இப்படியே என் வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. கடைசியில் எனக்கும் கொஞ்சம் அறிவு தட்டுப்பட்டது. என் உயிரையே மாய்க்கும் சூலை வந்தது. அதுவரையில் நான் தக்க பற்றுக்கோடின்றி நடை போடுகிறேன் என்ற நினைவே எனக்கு இல்லை. இப்போது நான் தளர்ந்தேன். என் உடல் வலிமை கெட்டது. என் மந்திர தந்திரம் கைவிட்டன. சுற்றியுள்ளார் கைவிட்டார். எதை எதைப் பற்றாக எண்ணிப் பற்றினேனோ அவையெல்லாம் நழுவின. அப்போதுதான் எனக்கு உண்மை யான பற்றுக்கோடு இல்லை என்பது புலப்பட்டது. எதை எதையோ நம்பி மோசம் போனேன் என்பது தெளிவாயிற்று. பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைத்த அவலம் தெரிந்தது. மூடனுக்குத் தானே பட்டாலன்றிப் பிறர் கூறினால் தெரியாது என்பார்கள். கயவனாக வாழ்ந்த எனக்கும் பட்டாலன்றி அறிவு உண்டாகவில்லை. உலகத்தார் சொல்லும் பழமொழி உண்மையாயிற்று. நானே அதற்கு இலக்காக, பொருத்தமாக, அதற்கு ஒத்தபடி நின்றேன்.'

உற்றலால் கயவர் தேறார்
என்னும்கட்டுரையோடு ஒத்தேன்.

அப்பர் சுவாமிகளுக்கு இன்னும் திருப்தி உண்டாக வில்லை. மேல்நிலையில் உள்ள சான்றோர்களுக்கு, 'இன்னும் நாம் திருந்தவில்லையே!' என்ற எண்ணமே இருக்கும். கயவர் களுக்கோ, 'நம்மளவு பெரியவர் யார் இருக்கிறார்கள்?' என்ற இறுமாப்பு உண்டாகும். அப்பர் சுவாமிகளைப் போன்ற

---

* *"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" (திருக்குறள்)*

பெரியவர்கள் தம்மை இழித்துக்கொண்டு, ''நான் பாவி, இழிந்தவன்'' என்று சொல்வதுண்டு. அதனால் அவர்கள் உண்மையாகவே மிக இழிந்த நிலையில் உள்ளவர்கள் என்று கொள்ளக்கூடாது. அவர்களுக்குத் தம்மைத் தாமே சோதித்துக் கொள்ளும் அறிவு இருப்பதனால் தம்மிடம் உள்ள சிறிய குற்றத்தையும் பெரியதாகப் பாவிக்கும் உள்ளப்பான்மை உண்டாகிறது. கயவர்கள் தம் குணம் சிறிதாக இருந்தாலும் அதைப் பெரிதாகக் காண்பர்; தம் குற்றம் மலையாக இருந்தாலும் அதனைக் காணமாட்டார்கள். பெரியவர்களோ தம் குற்றம் சிறிதாயினும் அதனை மலையாக எண்ணி மனம் வ்ருந்திக் குலைவர்; தம் குணம் எவ்வளவு பெரிதாயினும் அதனை எண்ணார். பிறர் திறத்திலும் கயவர் நிலையும் நல்லோர் நிலையும் இப்படியே வேறுபடும். கயவர் பிறர் குணங்களைக் காணாமல் குற்றத்தைப் பெரிதாகக் கண்டு குறை கூறுவர். நல்லோர் பிறர் குணத்தையே பெரிதாகக் கண்டு குற்றங்களைக் காணமாட்டார்.

நாவுக்கரசர் தம் குற்றத்தைப் பெரிதாகக் காண்பவர். முன்பு நடந்தவற்றை எண்ணி இரங்குகிறார். 'நான் எதற்காகப் பிறந்தேன்? எதற்காக உயிரோடு இருக்கிறேன்? இனி என்ன செய்யப் போகிறேன்?'' என்று வருந்துகிறார்.

எற்றுளேன்? என்செய் கேன் நான்?

★

'கயவர்கள் துன்பத்தை அடைந்தால் தெளிவை அடைவார்கள் என்று அல்லவா சொன்னேன்? நான் துன்புற்று இப்போது அறிவு பெற்றேன் என்று சொல்லலாமா? இன்னும் பெறவேண்டிய அறிவைப் பெறவில்லையே! இடும்பைப் பட்டேன் நான். ஆனாலும் எனக்குப் புத்தி வரவில்லையே! மனிதன் அநுபவத்தால் அறிவாளியாகிறான். துன்பத்தை நுகர நுகரத் துன்பம் இல்லாத வழி அவனுக்குப் புலப்படுகிறது. எனக்கோ அந்த இயல்புகூட இல்லாமல் இருக்கிறதே! இடும்பைகள் வந்தும், அவற்றாலே நான் படாத பாடுகளைப் பட்டும், ஞானம் ஏதும் கற்றுக் கொண்டதாகத் தெரிய வில்லையே!'

.......இடும்பையால் ஞானம் ஏதும்
கற்றிலேன்.

இப்படியெல்லாம் நினைத்துக் கொள்கிறார் அப்பர். 'இனி நான் என் செய்வேன்! இந்நிலையை மாற்ற வழி இல்லையா? என் துன்பத்தைப் போக்கும் களைகண் எனக்குத் தெரிய வில்லையே!' என்று வருந்தினார்.

திருக்கடவூருக்குச் சென்றிருந்தபோது இந்தத் தளர்ச்சியான நினைவு அவருக்கு உண்டாயிற்று. திருக்கடவூரில் இறைவன் மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்தான். அந்தத் தலத்திற்கு வந்ததும் அப்பர் சுவாமிகளுக்கு, 'நம்மையும் காலன் வந்து கைப்பற்றும் காலம் ஒன்று உண்டு' என்ற நினைவு உண்டாயிற்று. அப்போது சிறிது வலியிழந்தவரைப்போல இருந்தார். அந்த ஒரு கணத்தில் இந்த நினைவுகளெல்லாம் அவர் உள்ளத்தே முடுகின. 'ஒரு துணையும் எனக்கு இல்லையே! கடவூர் வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே!' என்று முறையிடுகிறார்

.....களைகண் காணேன்
கடவூர்வீ ரட்ட னிரே!

மரண பயம் என்பது எத்தகையவரையும் ஓர் ஆட்டு ஆட்டி விடும் ஆற்றல் உடையது. அதனால் அப்பர் சுவாமிகள் இவ்வாறு பாடினார்.

★

எட்டு வீரட்டானங்களுள் திருக்கடவூர் ஒன்று. அது யமனை இறைவன் உதைத்த தலம்; சோழ நாட்டில் காவிரிக்குத் தென் கரையில் உள்ளது. இறைவன் அமுதகடத்துள் தோன்றியமையால் கடவூர் என்ற பெயர் வந்தது. காலபயம் தீர்த்த இடத்தில் காலனுடைய நினைவு வருவது இயற்கை. அறிவுடையார் அஞ்சவேண்டுவதைக் கண்டு அஞ்சுவார்கள். நாமோ கடவூரைக் கண்டாலும் காலனை நினைப்பதில்லை; செத்துப்போவாரைக் கண்டாலும் மரணத்தை நினைப்பதில்லை; ஒருகால் நினைத்தாலும் அடுத்த கணமே மறந்து விடுகிறோம். அப்பர் சுவாமிகள், 'நான் பற்றுக் கோடின்றி இவ்வளவு காலம்

வாழ்ந்துவிட்டேன்; பட்டால் அறிவு பெறும் கயவனைவிடக் கீழானவனாக, இடும்பை வந்தும் எள்ளளவும் ஞானம் பெறாமல் வாழ்கிறேன். இனி என் செய்வேன்!' என்று சொல்வது அவர் திறத்தில் எத்துணைப் பொருத்தமோ, அதனை ஆராய நமக்கு ஆற்றல் இல்லை. ஆனால் நம் திறத்தில் இது அத்தனையும் பொருத்தம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நமக்கு ஒன்றைப் பற்றவும் தெரியாது; பற்றிக்கொண்டு வாழவும் தெரியாது; பாழுக்கு இறைப்பதன்றி வேறு ஒன்றும் நம் வாழ்க்கையில் இல்லை. சில சமயங்களில் துன்புறும்போது அறிவு மின்னலைப்போலப் பளிச்சிடுகிறது. மறுகணமே மறந்து போகிறது. ஆகவே இடும்பை வந்தும் நமக்கு ஞானம் வருவதாகத் தோன்றவில்லை. இந்த நிலையில் நம் துயரைக் களையுந் துணை இன்னார் என்ற அறிவு எங்கே வரப்போகிறது?

ஆதலின் அப்பர் சுவாமிகள் இந்தப் பாட்டை நமக்காகவே பாடிக் கொடுத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. நாம் இதைப் பாடி இதன் கருத்தை உணர்ந்து களைகண்ணைத் தேடிக் கொள்ளலாமே!

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீர்இ றைத்தேன்;
'உற்றலால் கயவர் தேறார்'
என்னும்கட் டுரையோடு ஒத்தேன்;
எற்றுளேன்? என்செய் கேன்நான்?
இடும்பையால் ஞானம் ஏதும்
கற்றிலேன்; களைகண் காணேன்.
கடவூர்வீ ரட்ட னீரே!

(திருக்கடவூர் வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் அமுத கடேசரே! ஒரு பற்றுக்கோடும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து, பயனில்லாமல் பாழுக்கே நீரை இறைத்தேன்; 'துன்பம் வந்தாலன்றி இழி குணத்தோர் உண்மையைத் தெளியமாட்டார்' என்று உலகத்தோர் சொல்லும் பழமொழிக்கு ஒப்ப இருந்தேன். நான் எதற்காக உயிரோடு இருக்கிறேன்? என்ன செய்வேன்? நான் அடைந்த துன்பங்களால் சிறிதளவும் அறிவைப் புதியதாகத் தெரிந்து கொள்ளவில்லை. என் துன்பங்களைப் போக்கும் துணையையும் கண்டிலேன்.

பற்று - பற்றுக்கோடு. பாழுக்கே நீர் இறைத்தேன் என்னும் குறிப்பு, என் முயற்சிகள் யாவும் எனக்கு ஒரு பயனும் தாராத வகையில் வாழ்ந்தேன் என்ற கருத்துடையது. உற்று அல்லால்: உறுதல் - துன்பம் அடைதல்; அதனால் ஊறு என்பது துன்பத்துக்கே ஒரு பெயராயிற்று. தேறார் - தெளியார்; தம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டனவும் உண்டு என்பதைத் தெளியமாட்டார். கட்டுரை - சொல்; பழமொழி. கட்டுரையோடு ஒத்தேன் - கட்டுரைக்குப் பொருத்தமானவன் ஆனேன். எற்று - எதற்காக. உளேன் - உயிரோடு இருக்கிறேன். செய்கேன் - செய்வேன். இடும்பை - துன்பம். ஏதும் - சிறிதும். களைகண் - துன்பந் துடைக்கும் துணை. வீரட்டனார் என்பது விளி ஏற்று வீரட்டனீரே என்றாயிற்று. அறிவுடையாரை விளிக்கும்போது அறிவுடையீரே என்று வருதல் போன்றது இது.)

இது 31-ஆம் பதிகத்தின் எட்டாம் பாட்டு.

★

ஆவி வாழும் வீடு

சின்ன வீட்டை ஒருவர் கட்டினார்; மண்ணினால் எடுத்த வீடு; கூரை வேய்ந்த வீடு. மரம், மண், தென்னங்கீற்று இந்த மூன்றையும் வைத்துக்கொண்டே அவர் இதைக் கட்டிவிட்டார். இந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தால், தரையிலே இது நிற்பதற்கும், நிழல் தருவதற்கும் என்ன என்ன பொருள்கள் இருக்கின்றன என்பதை எளிதிலே கண்டுகொள்ளலாம்.

வீட்டின் கூரையைத் தாங்க முக்கியமாக இரண்டு கால்களை நட்டிருந்தார். இரண்டு பக்கமும் கைமரங்களை வைத்து அவற்றின் குறுக்கே வரிசையாகக் கோல்களைப் பரப்பி னார். சுற்றிச் சுவரெடுத்திருந்தார். மண்ணையும் தண்ணீரையும் கலந்து குழைத்த சுவர் அது. மேலே கூரை வேய்ந்திருந்தார்.

இந்தச் சின்ன வீட்டுக்கு முன் வாசல் ஒன்று, பின் வாசல் ஒன்று. ஏழு சன்னல்கள் வைத்தார். இதற்குமேல் அந்த வீட்டுக்கு வெள்ளையடித்து வர்ணம் பூசி அழகுபடுத்தினார். அதைக் கட்டும்போது பார்த்தால் கண்ணுக்கு நன்றாகவே இருக்கவில்லை. இப்போது கட்டி முடிந்த பிறகு பார்த்தால் வீடு கண்ணைப் பறிக்கிறது. உள்ளே ஒருவரைக் கொண்டு வந்து குடியும் வைத்துவிட்டார். அவர் மகாசாமர்த்தியக்காரர். குடிபுகுந்தவர் அல்ல; வீட்டைக் கட்டினவரைச் சொல்கிறேன்.

திருநாவுக்கரசர் இதுபோன்ற ஒரு வீட்டைப் பற்றிச் சொல்கிறார். அந்த வீட்டைக் கட்டினவர் ஒருவர். குடியிருப் பவர் ஒருவர். ஆனால் குடியிருக்கிறவர் அதனைத் தம்முடைய தாக நினைத்து ஏமாந்து போகிறார். எந்தச் சமயத்திலும் அவர் வீட்டை விட்டு ஓடிப் போகவேண்டியிருக்கும். அதை மறந்துவிட்டு அந்த வீட்டுக்கு அலங்காரம் செய்து, அழகு பார்க்க ஆரம்பிக்கிறார். தாம் அதில் வாழ்கிற வரைக்கும் சுத்த மாக வைத்துக் கொண்டால் போதாதோ? அது தாமே கட்டினது போலவும், தமக்கே உரியது போலவும் எண்ணிக்கொண்டு அந்த

வீட்டை அலங்காரம் செய்யத் தொடங்குகிறார். அது மாத்திரம் அல்ல. வீட்டுக்கு எசமானர் ஒருவர் இருக்கிறார் என்பதையே அடியோடு மறந்துவிட்டு, அதற்குக் கொடுக்க வேண்டிய வாடகையையும் கொடுக்காமல் காலம் கழிக்கிறார்.

வீட்டுக்காரர் - அந்த வீட்டைக் கட்டித் தந்தவர் - குடியிருக்கிறவரைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். 'இந்த மனிதன் இந்த வீட்டிலே இருந்துகொண்டு தான் செய்ய வேண்டிய வேலைகளை ஒழுங்காகச் செய்யட்டும் என்று இதைக் கட்டிக் கொடுத்தேன். இவன் வீட்டை அழகு படுத்துவதிலே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறானே!' என்று நினைக்கிறார். அவர் இந்த ஒரு வீட்டை மாத்திரமா கட்டியிருக்கிறார்? கோடிக்கணக்கான வீடுகளைக் கட்டி அங்கங்கே மனிதர்களைக் குடி வைத்திருக்கிறார்.

சிலர் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டு பல நாள் அதில் வாழ்கிறார்கள். வேறு சிலருடைய வீடுகள் அடிக்கடி பழுதுபட்டுப் போகின்றன. மழைக்கு ஒழுகுகின்றன. எலி, பெருச்சாளிகள் தொந்தரவு வேறே.

ஒருவரை ஒரே வீட்டில் இருக்கும்படி விடுவதில்லை அந்த முதலாளி. மாற்றி மாற்றிப் புதிய புதிய வீடு கட்டிக் கொடுக்கிறார். பழைய வீடுகளை இடித்துத் தள்ளிவிடுகிறார். அதை இடிக்கிறபோது மனிதர்கள் கண்டு, ''ஐயோ! இவ்வளவு நாளும் வாழ்ந்த வீட்டை இடிக்கிறாரே!'' என்று வருந்துகிறார்கள். அழக்கூட அழுகிறார்கள். முதலாளி வேறு வீட்டில் குடியேற்றி விடுகிறார்.

இப்படியெல்லாம் நிகழும் வீடு இன்னதென்று இதற்குள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். உயிர் வாழும் உடம்பைத்தான் அப்பர் சுவாமிகள் வருணிக்கிறார். இந்த வீட்டை மறைக் காட்டிலே இருக்கிற முதலாளி கட்டினார். ஆவியை இந்த வீட்டிலே குடிவைத்து, வாழும்படி செய்தார்.

இந்த வீட்டுக்கும் கால்கள் உண்டு. மற்றவர்கள் கட்டும் வீடுகள் ஒரே இடத்தில் உள்ள வீடுகள். இந்த வீடோ அங்கும் இங்கும் செல்லும் வீடு. மேல் நாடுகளில் இடம் விட்டு இடம் மாறும் வகையில் சில வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள் என்று

பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. இந்த வீடும் அந்த வீடுகளைப் போல இயங்கும் வீடு. இரண்டு கால் படைத்த வீடு இது. இரண்டு கைகளும் உண்டு. வீட்டுக்கு இரண்டு பக்கமும் அமைக்கும் கை மரங்களைப் போல இவை இருக்கின்றன. குறுக்கே போடும் கழிகளைப்போல இங்கும் எலும்புகளை அடுக்கியிருக்கிறார். அவற்றிற்கு மேலே ஊனை வேய்ந்திருக்கிறார். அதற்கு மேல் தோலைப் பரப்பி மூடியிருக் கிறார். சுவர் எடுக்கத் தண்ணீர் வேண்டும். இங்கு உதிரம் என்ற நீரைக் கொண்டு தசைகளைக் குழைத்துச் சுவர்களை எடுத்திருக்கிறார். இதற்கும் மலஜலம் கழிக்கும் இரண்டு வாசல்கள் இருக்கின்றன. கண் இரண்டு, காது இரண்டு, மூக்குத் துளைகள் இரண்டு, வாய் ஒன்று ஆக ஏழு ஜன்னல்கள் வைத்திருக்கிறார். இதிலே குடியிருக்கிறவர் ஆவி (உயிர்) என்பவர்.

ஊனும் எலும்பும் தோலும் கொண்டு இந்த வீட்டைக் கட்டினார். ஆனால் ஊன் முதலியவற்றைத் தனித்தனியே கண்டால் எத்தனை அருவருப்பாக இருக்கிறது! எலும்பும் இறைச்சியும் இரத்தமும் ஒரே குவியலாக வைத்திருந்தால் பயமாகக்கூட இருக்கும். முதலாளியின் சாமர்த்தியம் இந்த வீட்டைக் கட்டுவதிலேகூட அதிகமாகப் புலப்படவில்லை. இவ்வளவு அழகற்றதும், அருவருக்கத்தக்க பண்டங்களை வைத்துக் கட்டினதும் ஆகிய வீட்டைக் கொஞ்சங்கூட அருவருப்பு இல்லாமல் பார்க்கப் பார்க்க அழகாகத் தோன்றும் படி பண்ணிவிட்டார்; அதுதான் ஆச்சரியம்! இதைக் கண்ட மற்றவர்கள் இந்த வீட்டினரிடம் ஆசை கொள்ளுகிறார்கள். உள்ளே வாழ்கிறவனோ, விடமாட்டேன் என்கிறான். அத்தனை மோகம் இதன்மேல்.

இப்படி இதனிடம் ஒருவிதமான கவர்ச்சியை வைத் திருக்கிறார் மறைக்காடனார். கண்டு மயக்கும்படி உள்ள இந்த வீட்டிலே வாழ ஆவிக்கு ஆசை அளவற்றதாக இருக்கிறது. 'வெறும் குருதியும் நரம்பும் எலும்பும் கூடின கூட்டந்தானே இந்த உடம்பு?' என்ற நினைவு யாருககும் வருவதில்லை. இதனிடம் தனி மோகங்கொண்டு அழகு செய்கிறார்கள். மற்றவர் உடம்பைக் கண்டும் மால் (ஆசை) கொள்ளுகிறார்கள்.

இந்த மாலை வைத்தது நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது.

கால்கொடுத்து இருகை ஏற்றிக்
கழிநிரைத்து இறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால்
சுவர்எடுத்து இரண்டு வாசல்
ஏல்வுடைத் தாஅ மைத்துஅங்கு
ஏழுசா லேகம் பண்ணி
மால்கொடுத்து ஆவி வைத்தார்
மாமறைக் காட னாரே.

(பெருமையை உடைய திருமறைக் காட்டில் எழுந்தருளியிருக்கும் இறைவர், காலைக் கொடுத்து, இரண்டு கையை அமைத்து, கழிகளை வரிசையாக வைத்து, மாமிசத்தால் வேய்ந்து, தோலைப்பரப்பி இரத்தம் என்ற நீரால் குழைத்துச் சுவரை எடுத்து, இரண்டு வாசல்களைப் பொருத்தமுடையனவாக அமைத்து, அந்த வீட்டில் ஏழு சாளரங்களை வைத்து, கண்டு மயங்கும் வண்ணம் கவர்ச்சியையும் அதற்குக் கொடுத்து உயிரைக் குடியிருக்க வைத்தார்.

இது உருவகம். கால், கை என்பன இரண்டும் சிலேடையாக வீட்டில் உள்ள தூண்களையும் கை மரங்களையும் குறிக்கும் பெயர்களாகவும், உடம்பிலுள்ள கால்களையும் கைகளையும் குறிக்கும் பெயர்களாகவும் உள்ளன. கழி, சுவர், வாசல், சாலேகம் என்பன வீட்டிற்கு உறுப்பாகிய பெயர்களாகிக் குறிப்பால் எலும்பு, முண்டம், மலஜலங் கழிக்கும் உறுப்புக்கள், கண் முதலிய ஏழு உறுப்புக்கள் ஆகியவற்றை முறையே புலப்படுத்தின. கழி என்பதற்கு மாமிசம் என்ற பொருள் உண்டேனும், இறைச்சி என்று பின் வருவதனால் அது பொருந்தாது. இறைச்சி, தோல் என்பன உடம்புக்குரிய பொருள்களாய்க் கூரை, கூரையின்மேலே போடும் வைக்கோல் முதலியவை என்ற உருவகப் பொருள்களாகக் கொள்ள நின்றன. உதிர நீர் என்பது உடம்புக்குரிய பொருளை வீட்டுக்குரிய பொருளாக உருவகம் செய்தபடி. ஆகவே, இந்த உருவகத்தில் கால் கை என்பன சிலேடை வகையாலும், உதிர நீர் என்பது வெளிப்படையாகவும் உருவகமாகிய பொருளுக்கும் உருவகப்படுத்திய பொருளுக்கும்

உரியவையாக நிற்கின்றன. கழி, சுவர், வாசல், சாலேகம் என்பன உருவகமாக வந்ததைச் சார்ந்தன; இறைச்சி, தோல் என்பன உருவகப்படுத்துவதைச் சார்ந்தன.

கால் - தூண், கால் என்னும் அங்கம். கை - கைமரம், கையாகிய அங்கம். ஏற்றி - மேலே அமைத்து. கழி - கோல். நிரைத்து- வரிசையாகப் பரப்பி. மேய்ந்து - வேய்ந்து; மேய்ந்து என்பது மரூஉமொழி. படுத்து - பரப்பி. ஏல்வு - பொருத்தம். இருவாசலையும் இணைத்து ஒன்று போல வைத்தமையால் 'உடைத்தாய்' என்று ஒருமையால் சொன்னார்; சாதியொருமை. சாலேகம் - சாளரம். மால்- மயங்குவதற்குக் காரணமான கவர்ச்சி. மால் என்பது மயக்கத்தைக் குறிக்கும் சொல்; இங்கே அதற்குக் காரணமான கவர்ச்சியைக் குறித்தது; காரியவாகுபெயர். ஆவி - உயிர்.)

இது 33-ஆம் பதிகமாகிய திருமறைக் காட்டுத் திருநேரிசையில் நான்காவது பாட்டு.

★

பொருளும் அருளும்

ஐயா, பிச்சை!'' என்று கதறுகிறான் பிச்சைக்காரன். ''ஒரு வருஷமாக வேலையில்லாமல் அல்லற்படுகிறேன். ஏதாவது உதவி செய்யவேண்டும்'' என்று யாசிக்கிறார் ஒருவர். வெளிப் படையாகப் பிறருக்குத் தெரியாமல் சிலபேர் தம்முடைய யாசகத் தொழிலைக் கௌரவமாக நடத்தி வருகிறார்கள். எப்படியோ இறைவன் அத்தனை பேருக்கும் படியளந்து கொண்டுதான் இருக்கிறான்.

மகாத்மா காந்தியடிகள் செல்வர்களைப்பற்றி ஒன்று சொல்வதுண்டு. 'செல்வத்தை நம்முடைய சொந்த நன்மைக் காகவே இறைவன் தந்ததாக எண்ணிப் பிறருக்கு உபகாரம் செய்யாமல் வாழக்கூடாது. முதலாளிகளெல்லாம் தம்மிடம் இருக்கும் செல்வத்துக்குத் தாங்களே உரிமையாளர் என்ற நினைப் பொழிந்து தர்மகர்த்தாக்கள் என்ற முறையில் வாழவேண்டும். அப்படி இருந்தால் நாட்டில் பொருளாதார இடைஞ்சலால் மக்கள் துன்புற வேண்டிய நிலை இராது' என்று சொல்வது வழக்கம். பொருளுக்கு உரிமை கொண்டாடுவது கூடாது, அதைப் பிறருக்கும் வழங்கவேண்டும் என்ற இந்தக் கருத்தையே இந்த நாட்டில் பலகாலமாகப் பெரியோர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

ஒரு செல்வர் தம்முடைய பிள்ளைகளில் ஒருவனிடம் நிறையச் செல்வத்தைக் கொடுத்து, ''அப்பா, இதை நன்றாகப் பாதுகாத்து உனக்கு வேண்டியதைப் பயன்படுத்திக்கொண்டு உன் சகோதரர்களுக்கும் கொடுத்து வாழ்வாயாக'' என்று சொல்லிச் செல்கிறார். அந்த மனிதன் அந்தச் சொத்து மற்றவர்களுக்கும் உரியது என்பதை மறந்துவிடுகிறான். அதைவிட ஆச்சரியம், அதைத் தன் தந்தையார் வழங்கினார் என்பதையும் மறந்து போகிறான். செல்வம் முழுவதையும் தானே பயன்படுத்திக் கொள்கிறான். இது முறையாகுமா? உலகில் பிறருக்கு உதவாத செல்வர்கள் இந்த முறையற்ற செயலையே செய்கிறார்கள்.

நல்லவர்கள் தாம் பெற்ற செல்வம் இறைவன் தந்த தென்று கருதி அறம் செய்வார்கள். இறைவன் செல்வர்களிடம் அவர்களுக்கே உரிமையாகப் பொருளைக் கொடுக்கவில்லை. நான்கு பேருக்குப் பயன்படும்படி பொதுவான இடத்தில் ஒரு பொருளை வைப்பதுபோல வைத்திருக்கிறான். இரக்கின்ற ஏழையருக்கு ஈயும் பொருட்டு அதை வைத்திருக் கிறான்.

இரப்பவர்க்கு ஈய வைத்தார்

(வறுமையினால் செல்வர்களிடம் வந்து ஈ என்று இரப்பவர்களுக்குக் கொடுக்கும் பொருட்டாகவே அச் செல்வர்களிடம் பொருளை வைத்தார்.)

இரப்பவர்களிடம் இறைவனுக்குக் கருணை இருப்பதா னால் அவர்களிடமே பொருளைக் கொடுத்துவிடலாமே என்று தோன்றும். பல தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவர்களுக்குள் ஆற்றலால் உயர்ந்தவனைத் தலைவனாக வைத்து அவனை ஏவும் அதிகாரியாக நியமிப்பதுபோல, புண்ணியம் செய்தவர்களுக்குப் பொருளை அளித்து ஏனைய வர்களுக்கு அளிக்கும்படி வைத்தான் இறைவன். இரப்பவன் கொடுப்பவனைக் கண்டு, தம் இருவருக்குக்குள்ளும் அமைந்த வேறுபாட்டுக்கு முற்பிறப்பிற் செய்த பாவ புண்ணியங்கள் காரணம் என்ற உணர்ச்சி பெற்றுப் புண்ணியச் செயல்களைச் செய்யும் நாட்டமுறுவான் அல்லவா? ஆகவே இரப்பவனுக்கு இழிநிலை இருந்தாலும் அதனால் வரும் துன்பத்தினின்றும் நீங்கும்படி அவனுக்குக் கொடுக்க ஒருவனை வைத்திருக்கிறான் இறைவன். கொடுக்கும் நிலையையுடையவன், சென்ற பிறவிகளிலே நல்வினை செய்தமையால் இந்தப் பிறவியிலே செல்வத்தைப் பெற்றான். இப்போது அச் செல்வத்தை இரப்பவர்களுக்கு ஈகிறான். இந்த ஈகைக்குப் பயன் என்ன? தன்னிடம் கொடுத்த சொத்தைப் பிற பிள்ளைகளுக்கும் பகிர்ந் தளித்து வாழ்ந்த மூத்த மகனிடம் தந்தைக்கு அன்பு உண்டாகும். அப்படியே இரப்பவருக்கு ஈதலைத் தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவனுக்கு இறைவன் இந்தச் செல்வத்தினும் மேலான செல்வத்தைத் தருகிறான்; அருளை வழங்குகிறான். அந்த அருளால் ஆகாதது ஒன்றும் இல்லை. அதனினும் சிறந்த ஊதியமும் இல்லை.

ஈபவர்க்கு அருளும் வைத்தார்.

(தாம் வைத்த பொருளை இரப்பவர்க்கு அளிக்கும் செல்வர் களுக்கு, அந்த ஈகையின் விளைவாகத் தம் அருளை வழங்கினார்.

ஈதல் - உயர்ந்தோர் இழிந்தாருக்கு அளித்தல். இரப்பவர்களுக்கு அளிக்க ஈபவர்களிடம் பொருளை வைத்ததுபோல, ஈபவர்களுக்கு அளிக்கத் தம்மிடம் அருளை வைத்திருக்கிறார் என்றும் சொல்லலாம்.)

★

இரப்பவர்களுக்கு ஈயும்பொருட்டுத் தம்மிடம் இறைவன் பொருளை அளித்திருக்கிறான் என்ற உணர்ச்சியின்றி அவற்றைப் பிறருக்கு ஈயாமல் மறைத்து வைத்திருக்கிறார்களே, அவர்களை இறைவன் என்ன செய்வான்? அவர்களுக்கு நரக வாழ்வைக் கொடுக்கிறானாம். நல்வினை செய்வார்க்கு இன்ப வாழ்வாகிய சொர்க்கத்தையும் தீயன புரிவார்க்குத் துன்ப வாழ்வாகிய நரகத்தையும் வகுத்திருக்கிறான் அவன். மற்றத் தீவினைகள் செய்பவர் அடையும் நரகங்கள் ஒரு வகை. தம்மிடம் இறைவன் வைத்த பொருளை உரியவர்களுக்குக் கொடுக்காமல் மோசம் செய்கிறவர்களாகிய லோபியர்களுக்கோ கடுமையான நரகங்களை வைத்திருக்கிறானாம்.

கரப்பவர் தங்கட்கு எல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்.

(தம்பால் உள்ளபொருள் இரப்பவர்களுக்கு ஈயும் பொருட்டு இறைவனால் வைக்கப்பெற்றது என்பதை உணராமல், அதனைப் பிறருக்குக் கொடுக்காமல் மறைக்கிறவர்கள் யாவருக்கும் கடுமையான நரகங்களை அமைத்தார்.

கரப்பவர் - இரப்பவருக்குக் கொடுக்காமல் தம் பொருளை மறைத்து வைக்கும் லோபிகள்.)

★

ஈகையால் வரும் நன்மையையும், லோபத்தால் வரும் தீமையையும் பொது வகையிலே சொன்ன அப்பர் சுவாமிகள் உதாரணமுகத்தால் அவற்றை விளக்க வருகிறார்.

கங்கையிடம் நிறைய நீர் இருக்கிறது. அது வற்றாத ஆறு. பரந்து விரிந்த நீரை உடையது. நீராடுவாருக்கும் குடிப்பவருக்

கும் பயன்படும்பொருட்டே அந்த நீர் இருக்கிறது. இறைவன் திருவருளால் குறைவில்லாத நீரைப் பெற்றிருக்கிறது கங்கை. அதற்குத் தன்பால் உள்ள செல்வமாகிய நீர், இரப்பவர்க்கு ஈயும் பொருட்டு இறைவன் வைத்தது என்ற நினைப்பு ஒருகால் இல்லாமற்போயிற்று.

பகீரதன் வந்து கங்கையை இரந்தான். அவனுக்கு ஈய மனம் வராமல் ஏதோ சாக்குப் போக்குச் சொன்னாள் கங்கா தேவி. இறைவன் கங்கையின் லோபத்தனத்தை உணர்ந்தான். பரந்து விரிந்து நின்ற கங்கை, தன் மனம் போனபடி அலைவீசி ஓடிய கங்கை, சிறைக்குட்பட்டது போலத் தன் சடையிலே ஒரு மூலையிலே அடங்கி முடங்கிக் கிடக்கும்படி வைத்துவிட்டான். கங்கைக்கு அது பெரிய தண்டனை அல்லவா?

பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்.

(பரப்பாக விரிந்த நீரை உடைய கங்கையை படர்ந்த சடாபாரத்தின் ஒரு பகுதியிலே வைத்தார். பாகம் - பகுதி.)

ஈயாத லோபிக்கு இறைவன் தரும் தண்டனைக்கு இது சிறந்த உதாரணம்.

பொருளைப் படைத்த செல்வர்கள் ஈயென்று கேட்டால் கொடுக்க வேண்டுமென்றால், இறைவன் அருளைப் படைத்த செல்வனாயிற்றே; அவனைக் கேட்டால் அதைத் தருவானா?

''ஊராருக்கு ஒரு நீதி, தமக்கு ஒரு நீதி'' என்று வாழும் தலைவர்களைப் போன்றவன் அல்ல அவன். என்றும் குறையாத பேரருளாகிய செல்வத்துக்கு உரிமையாளன் அவன். அதை அவன் கேட்டவர்களுக்கெல்லாம் கொடுக்கும் பெருவள்ளல். முன்பு தனக்கு ஆகாதனவற்றைச் செய்துவிட்டுப் பின்பு வந்து ஈயென்று கேட்டாலும் அவனுடைய முன்னைச் செயல்களை மறந்துவிட்டு, இப்போது வந்து இரப்பது ஒன்றையே கருதி அருளை வழங்கும் பெருந்தன்மையை உடையவன் அவன். அதற்கு உதாரணம் வேண்டுமா?

இராவணன் வான் வழியே தன் தேரைச் செலுத்திச் சென்றான். கைலை மலையின்மீதே அந்தத் தேர் செல்ல வில்லை. தன் தேரின் போக்குக்குத் தடையாக உள்ள கைலைக் குன்றத்தைப் பெயர்த்து எடுத்துவிடலாம் என்று அவ்வரக்கன்

முயன்றான். இறைவன் மெல்லத் தன் கால்விரல் ஒன்றை அழுத்தினான். இராவணன் கைலையின் கீழே நசுங்கினான். அப்போது அவன் இறைவனைச் சாமவேதத்தால் பாடி இரந்தான். 'செருக்குற்று நம் மலையை எடுத்தவன் அல்லவா இவன்.' என்று அவனுடைய தீய செயலை நினையாமல், அவன் இசைபாடி இரந்ததற்கு இரங்கி, இறைவன் அவனுக்கு உடைவாளும் முக்கோடி வாழ்நாளும் வழங்கினான். இதைக் காட்டிலும் பேரருள் உண்டா?

அரக்கனுக்கு அருளும் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

(அரக்கனாகிய இராவணனுக்கும் அருளை வழங்கினார், மேலானவராகிய திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் இறைவர்.

அரக்கனுக்கும் அருள் வைத்தார் என்று உம்மையைப் பிரித்துக் கூட்டவேண்டும். ஐயன் - தலைவன். ஐயாறனார் - திருவையாறு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர்.)

★

இரப்பவருக்குக் கரவாமல் ஈயும் வண்மையாளருக்கு இறைவனும் தன்பாலுள்ள அருளைக் கரவாமல் ஈகிறான். கரப்பாருக்கு இன்னல்களை விளைவிக்கிறான். அவனுடைய அருஞ்செயல்களின் மூலமாகவும் இந்த முறையை உணர்ந்து கொள்ளலாம்.

இரப்பவர்க்கு ஈய வைத்தார்;
ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்;
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்;
அரக்கனுக்கு அருளும் வைத்தார்;
ஐயன்ஐ யாற னாரே.

திருவையாறு சோழநாட்டில் உள்ள தலங்களில் ஒன்று. இங்கே அப்பர் சுவாமிகளுக்கு மிகுதியான ஈடுபாடு உண்டு.

இது 38-ஆம் பதிகத்தின் கடைசிப் பாட்டு.

சிறந்த கோயில்

உலகங்கள் பதினான்கு என்று சொல்வார்கள். மேலே ஏழு உலகமும் கீழே ஏழு உலகமும் உள்ளன என்று நூல்கள் கூறும். பிரபஞ்சங்களின் கணக்கோ எண்ணித் தொலையாது. விஞ்ஞானிகள், ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன் என்றும், அந்தச் சூரியன் ஒவ்வொன்றையும் சுற்றிக் கிரகங்கள் இருக்கின்றன ஏ்னறும் சொல்கிறார்கள். மாணிக்கவாசகப் பெருமான்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்று பாடுகிறார். நூற்றொரு கோடிக்கு மேலே அண்டங்கள் விரிந்துள்ளன என்று அவருடைய திருவாக்கிலிருந்து உணர்கிறோம்.

இத்தனையையும் நாம் கண்கூடாக உணர்வதில்லை. நம் கண்முன் இருக்கிற உலகத்தை நாம் ஓரளவு அறிந்திருக்கிறோம். மேல், கீழ், நடு என்று சொல்லும் மூவகை அடுக்கில் இது நடுவாக உள்ளது. புண்ணியத்தின் பயனையே நுகரும் சொர்க்கபூமியும், பாவத்தின் பயனையே நுகரும் நரகமும்போல இராமல் இரண்டையும் கலந்து நுகரும் இடம் இது. இரவும் பகலும், மேடும் பள்ளமும், குளிரும் வெப்பமும், இன்பமும் துன்பமும், உவகையும் அழுகையுமாக விளங்கும் உலகம் இது. அவரவர்கள் வினைப்பயனை நுகர்வதற்குப் பிற உலகங்களில் வாழ்ந்தாலும், முத்தியைச் சேர வேண்டும் எனின் இங்கே பிறந்து இறைவனுக்கு அன்பு செய்து, இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய கைவரப் பெற்று,

அவனருளால் ஞானமடைந்து முத்தியின்பத்தை அடைய வேண்டும் என்று சமய நூல்கள் சொல்லுகின்றன. ஆதலின் இவ்வுகலத்திற்குத் தனிப் பெருமை இருக்கிறது. இறைவனைத் தேவரும் பூசிப்பது உண்டென்றாலும் தமக்கு அவனால் உண்டாகும் பயன் ஒன்றைக் கருதி வழிபடுவதையன்றி அன்பினால் வரும் இன்பம் கருதி வழிபடுவதில்லை. உண்மையான அன்பர்களை நிலவுலகத்திலேதான் காணலாம். இறைவன் திருவுள்ளத்துக்கு உகந்தவர்கள் தேவர்கள் அல்ல; வேறு உலகங்களில் வாழ்வாரும் அல்ல; நிலவுலகில் வாழும் மக்களே. அவனுடைய அடியார்கள் இந்தச் சகத்தில் வாழ்பவர்களே. இந்தச் சகமன்றி அவனுக்கு உண்மையான அடிமைத் தன்மையை உடையது வேறு இல்லை.

சகமலாது அடிமை இல்லை.

சகத்தில் உள்ள அடியவர்களுக்கு இறைவனுடைய திருவடி ஒன்றே பற்றுக் கோடு. உண்மையான அன்பர்களை அடியார்கள் என்று சொல்கிறது பெருவழக்கு. இறைவனுடைய அடியைப் பற்றுக் கோடாகக் கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம். இறைவன் திருமுன் அகந்தையொழிந்து பணிந்து நிற்கும் அடியார்களுக்கு அவனுடைய உறுப்புகளில் திருவடி ஒன்றே புலனாகும். அது அவர்களுடைய பிறவிப் பெருந் துயரைப் போக்கும் மருந்தாதலின் அதை விடாமற் பற்று வார்கள். இறைவனைக் காட்டிலும் அவன் திருவடிகளே ஏற்ற முடையன என்று சொல்லும்படி அடியார்களின் திருவடிப்பற்று அமைந்திருக்கிறது.

''நின்னிற் சிறந்தநின் திருவடியவை''

என்பது பரிபாடல்.

தமக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும் துணையாக நிற்பன எம்பெருமானுடைய திருவடிகளே என்று பற்றிக் கிடப்பது சகத்தில் உள்ள அடியார்களின் இயல்பு. சகத்தை அடிமையாகக் கொண்டான் இறைவன்; அச்சகத்தில் உள்ளோர் அவன் திருவடிகளைப் பற்றுக் கோடாகப் பற்றி வாழ்கிறார்கள்.

சகமலாது அடிமை இல்லை;
தாள்அலால் துணையும் இல்லை.

★

அதோ போகிறாரே அவர் ஒரு பக்தர், மெய்யடியார்; நிலவுலகவாசிதான். இறைவன் தாளே என்றும் துணை என்று வாழ்கிறவர் அவர். இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் தொண்டு செய்வதையே தம் வாழ்க்கைப் பெரும் பயனாகக் கருதும் தொண்டர் அவர்.

காலையில் எழுந்து நீராடுவார். அப்பால் நந்தனவனம் செல்வார். அங்குள்ள மலர்களை நின்று நிதானமாகக் கொய்வார். மலர்களெல்லாம் அப்போதுதான் மலர்ந்து கொண்டிருக்கும். விடியற்காலையிலே மலரும் பருவத்தில் அவற்றைப் பறிப்பார். இந்தத் தொண்டை அவர் பல காலமாகச் செய்துவருகிறார். உண்பதை மறந்தாலும் மலர் கொய்யும் திருத்தொண்டை மறந்தறியார். அவருடைய விரல்களைப் பார்த்தால் அவர் செய்துவரும் தொண்டின் அடையாளம் இருக்கும். அவை மலர் மணம் வீசும். அது மட்டுமல்ல; இறைவனுடைய திருவடித் தொண்டிலே ஈடுபடுபவருக்கு மெல்ல மெல்லத் தீவினை தேய்வதுபோல, மலர் கொய்து கொய்து அவருடைய கை நகங்கள் தேய்ந்துவிட்டன. மெல்லிய மலராதலின் பலமுறை கொய்தாலும் எளிதில் நகம் தேயாது; நகம் வலியது. இந்த அடியாரோ கணக்கு வழக்கின்றி மலர் கொய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். அதனால் அவர் நகங்கள் தேய்ந்தன. எறும்பூரக் கல் குழியும் என்பார்கள். மலர் பறித்துப் பறித்து நகங்கள் தேய்ந்தன என்றால், அவர் பறிக்கும் மலர்களின் பேரளவை ஒருவாறு கற்பனை செய்து பார்க்கலாம். நகமெலாம் தேயும்படி கையினால் நாள்மலர்களைப் கொய்து வந்து இறைவனைப் பூசை செய்கிறார் அவர்.

மனிதனுக்கு மனிதன் உபசாரம் செய்வதனால் செய்பவனும் ஓர் எல்லைக்குள் நின்றுவிடுவான்; உபசாரத்தைப் பெறுகிறவனும் ஓர் அளவுக்குமேல் தாங்கமாட்டான். இறைவ னுக்கு அப்படி இல்லை. எத்தனை மிகுதியாகப் பூசைக்குரிய பொருள்களைச் சேமித்துப் பூசை செய்தாலும், 'இனி இறைவன் தாங்கமாட்டான்' என்று சொல்லும் நிலை வராது. உள்ளங்கை நீரும் பச்சிலையும் இட்டுப் பூசித்தாலும் ஏற்கிறான். உலகில் உள்ள ஆறுகளையெல்லாம் கொணர்ந்து ஆட்டி, மலர்களை யெல்லாம் தொகுத்து அருச்சித்தாலும் ஏற்றுக்கொள்வான்.

அவரவர்களுடைய அன்பு நிலைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் பூசையின் விரிவு அமைந்திருக்கும்.

இங்கே இந்த அன்பருடைய அன்பு விரிந்து பரந்த இறைவன் உலகிலே படைத்திருக்கும் மலர்மரங்களும் செடி கொடிகளும் பல பல. மலைமலையாகப் பூவைத் தொகுத்து இறைவனுக்குப் பூசை செய்யவேண்டும் என்பது அவர் ஆசை. அன்பில்லாதவர்களுக்குப் பத்துப் பூப் பறித்தாலே சலித்துவிடும். அன்புடையவர்களுக்கு அப்படிச் சலிப்பு ஏற்படாது. அவர் பறித்துக் கொண்டே இருப்பார்.

இவ்வாறு நகமெல்லாம் தேயக் கையால் மலரைப் பறித்து இறைவனுக்குப் பூசை செய்யத் தொடங்குகிறார் அவர். அவனைத் தொழுது, அவன் திருநாமங்களைக் கூறி, ம்லர் தூவி அருச்சிக்கிறார். அவருடைய அன்புக்கு அவர் மலர் பறிப்பது அடையாளம்; அவர் கைநகம் தேய்ந்தது அடையாளம். ஆனால் அவற்றிற்கும் மேலாக ஓர் அறிகுறி உண்டு. அதுதான் அன்புக்கு உண்மையான அடையாளம்.

> ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்''

என்னும் அருமைத் திருக்குறளில் வள்ளுவர் அன்பை வெளிப்படுத்தும் அடையாளம் கண்ணீர் என்று சொல்கிறார். இறைவனிடம் அன்பு முதிர்ந்தவர்களுக்கு உள்ளம் கசியும்; முகம் மலரும்: கண்ணீர் பெருகும்.

> ''உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
> வெள்ளந்தான் பாயாதால்''

என்ற மணிவாசகர் வாக்கில் இந்த அன்பின் அறிகுறியைச் சொல்கிறார்.

இந்த அடியார் நகமெலாந் தேய மலர் பறித்து இறைவனைப் பூசிக்கும்போது, உள்ளே உள்ள அன்புக் கடல் பொங்குகிறது; பொங்கி வழிகிறது. அவர் கண்களில் நீரூற்றுப் பெருகுகிறது. முகமெலாம் அந்தக் கண்ணீர் மல்குகிறது. இறைவன் திருமுன் வீழ்ந்து பணிந்து கதறிப் பாடியாடுகிறார். இத்தனை மலர்களைப் பறித்துத் தூவியும், ''நான் ஒன்றும்

செய்திலேனே!'' என்று வேசாறிப் புலம்பி நைகிறார்; விம்மு கிறார். இறைவனை நறுநீரால் ஆட்டிப் பூசை புரியும் அவருடைய திருமேனியும் அன்புக் கண்ணீரில் ஆடுகிறது. இறைவனுக்கு மாலையிட்டு வழிபடும் அவர் மேனியிலே கண்ணீர் மாலை மாலையாகச் சோர்கிறது.

கைநகம் தேயத் தம் அன்பைச் செயலிலே காட்டுகிறது பெரிதன்று. யாரேனும் பொருள் தருவதாக இருந்தால் கை முழுவதும் தேயும் வரையில் மலர் பறிப்பவர்கள் இருக்கிறார் கள். ஆதலின் அந்தச் செயலை மாத்திரம் கொண்டு அவருடைய அன்பை அளக்கக்கூடாது. உள்ளத்தே உள்ள அன்புக்கு உண்மை யான அடையாளத்தை இப்போது காண்கிறோம். மலரைக் கொய்வதிலும், அதனைத் தூவிப் பூசிப்பதிலும் அவரது அன்பு தோன்றினாலும், முகமெலாம் கண்ணீர் மல்க நிற்கும்போது தான், 'அது புறத்திலே மட்டும் அமையும் போலியன்பன்று; உள்ளங்கசிந்து வரும் உண்மையன்பு' என்பது புலனாகிறது.

அவர் வாழும் ஊரிலே திருக்கோயில் உண்டு. அங்கே இறைவன் எழுந்தருளியிருக்கிறான். அவர் வசிக்கும் வீட்டிலே அவர் வழிபடும் பூசையிடம் உண்டு. அங்கும் அவருடைய ஆன்மார்த்த மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறான். இந்த இரண்டிடங்களுக்கும் அவர் சென்று வழிபடுகிறார். யாருங் காண நாட்டுக் கோயிலிலும் வீட்டுப் பூசையிலும் இறைவன் இலங்குவது பெரிதல்ல. மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியும் காட்சிகள் இவை. ஆனால் பிறர் கண்ணுக்குப் புலனாகாமல் இறைவன் உறையும் திருத்தலம் ஒன்று இருக்கிறது. அந்த இடந்தான் இறைவன் தானே விரும்பி மேற்கொள்வது. அது தொண்டருடைய உள்ளக் கோயில்.

அண்டங்கள் அனைத்தும் அவன் ஆணையின்படி நடப்பன; ஆயினும் அவனுடைய அடியார்கள் வாழும் இடம் இந்த நிலவுலகம். இங்கே இறைவன் பல திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கிறான். பிற உலகங்களைவிட நிலவுலகத்திலே அவன் அருள் சிறப்பாகப் படர்கிறது. இந்த நிலவுலகத்தில் திருச்கோயில்களில் யாரும் வணங்கும்படி எழுந்தருளியிருக் கிறான். அடியார்களின் இல்லங்களிலும் பூசித்து வழிபடும் மூர்த்தியாக இருக்கிறான். அவற்றைக் காட்டிலும் சிறப்பாகத் தொண்டர்களின் அகத்தில் வீற்றிருக்கிறான்.

ஏனைய உலகங்களுக்கிடையே பூவுலகம் அவனுடைய திருக்கோயிலாக இருக்கிறது. பூவுலகத்திலும் ஆலயங்கள் அவனுக்குச் சிறந்த இருப்பிடமாக உள்ளன. ஆலயங்களினும் ஆன்மார்த்த பூசை புரியும் இல்லங்கள் சிறந்த கோயில்களாகத் திகழ்கின்றன. அன்பருடைய அகக் கோயிலோ, மற்ற எல்லா வற்றிலும் உயர்ந்ததாக நிலவுகிறது. அவன் உறையும் கருப்பக் கிருகம் அது என்றே சொல்லிவிடலாம். பிரபஞ்சம் முழுவதும் அவன் ஊர்; நிலவுலகம் அவன் தன் அன்பர்களுடன் தங்கும் வீடு; கோயில்கள் அவனுக்குரிய அறை; பூசையிடம் அவ்வறையில் அவன் அமரும் சூழல்; அன்பர் உள்ளம் அவன் திருமேனி படிய அமரும் ஆதனம்; இளைப்பாறத் தங்கும் பாயல்; ஆட்சிபீடமாகக் கொண்டு சிங்காதனம்; அருள் முழுவதையும் வஞ்சகமின்றி வெளிப்படுத்தும் இடம்.

நம்மை ஆளுடைய ஐயன் எல்லா அண்டங்களிலும் இருக்கிறான்; தன் அருளாணையினாலே அவற்றைப் புரக் கிறான். ஆனாலும் அவன் இருக்கும் நாடு பூவுலகம்; அவனுடைய இராசதானி ஐயாறு; அவனுடைய அரண்மனை அடியார் வாழும் இல்லம்; அவனுடைய சிங்காதனம் தொண்டருடைய உள்ளம் - இப்படியும் கொள்ளலாம். அப்பர் சுவாமிகள் அருளிய வாக்கு இந்த வகையிலே நம்முடைய கற்பனையை விரிக்க இடம் கொடுக்கிறது.

சகம்அலாது அடிமை இல்லை;
தாள்அலால் துணையும் இல்லை;
நகம்எலாம் தேயக் கையால்
நாள்மலர் தொழுது தூவி
முகம்எலாம் கண்ணீர் மல்க
முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகம்அலால் கோயில் இல்லை;
ஐயன்ஐ யாற னார்க்கே.

(எங்களை ஆண்டருளும் கடவுளாகிய திருவையாற்றுப் பெருமானுக்குச் சகத்தில் உள்ளார் அல்லாமல் சிறந்த அடிமை செய்வார் இல்லை; அவர்களுக்கு அவன் தாளையன்றிச் சிறந்த துணையும் இல்லை; நகங்கள் யாவும் தேயும்படியாகக் கையினால் அன்றலர்ந்த மலர்களைத் தூவி, முகமுழுவதும் கண்ணீர் பரவ,

இறைவன் திருமுன் வீழ்ந்து பணிந்து வாயார அவன் புகழ் பாடித் துடிக்கும் தொண்டர்களின் உள்ளமன்றி வேறு சிறந்த கோயில் இல்லை.

சகம் - நிலவுலகம்; தோன்றுதலும் அழிதலும் உடைமையால் இப்பெயர் பெற்றது. அடிமை - தொண்டு செய்யும் தன்மை; இங்கே அதனை உடையாருக்கு ஆயிற்று. தாள் - திருவடி. நகம் - கைநகம். நாள்மலர் - அன்றலர்ந்த மலர். கையால் மலர் தூவி என்றாரேனும் தேய என்று சொன்னமையால் மலரைக் கொய்து தூவி என்று குறிப்பாற் பெற வைத்தார். மல்க - நிரம்ப. அகம் - உள்ளம்.

அடிமை, துணை, கோயில் என்பன அவ்வினங்களிற் சிறந்தவற்றைச் சுட்டி நின்றன. தேவர் முதலிய ஏவலர் இருப்பினும் பூவுலகத்து மக்களே சிறந்த அடியார்; சுற்றத்தார், நண்பர் ஆகிய துணைஇருப்பினும் இறைவன் தானே சிறந்த துணை; ஆலயங்கள் இருப்பினும் தொண்டருடைய அகமே சிறந்த கோயில் என்பது கருத்து.

சகம் அலாது என்பதனால் பிற உலகங்கள் இருத்தலையும் அவற்றுள் நிலவுலகம் சிறந்து நிற்பதையும் உணர்கிறோம். ஐயாறனார் என்பதனால் அந்தச் சகத்தில் இறைவனுக்குச் சிறந்தவை திருத்தலங்கள் என்பது புலப்படுகிறது. தொழுது தூவி என்றமையால் அப்பூசை நிகழும் இல்லம் இறைவனுக்கு உகந்தது என்று குறிப்பிடுகிறார். அவை யாவற்றிலும் உயர்நிலையாகத் திகழ்வது தொண்டர் அகம் என்றார்.)

இப்பாசுரம், 40-ஆவது திருப்பதிகத்தில் எட்டாவது திருப்பாடல்.

★

ஐயாறன் அடித்தலம்

அன்பர்களுக்கு இறைவனுடைய திருவடியிலே காதல் மிகுதி. அதைக் கண்டு களிப்பதும் அதன்கண் வீழ்ந்து பணிவதும் அதற்கு அருச்சனை புரிவதும் அதன் புகழே பாடுவதும் அவர்களுக்கு இயல்பு. மக்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பது அடியேயாதலின் வள்ளுவரும் கடவுள் வணக்கத்தில் அவ்வடியைப் பற்றியே பெரும்பாலும் சொன்னார். திருநாவுக்கரசு நாயனார் திருவையாற்றில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவடியைப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு திருப்பதிகத்திலும் பத்து அல்லது பதினொரு பாடல்கள் அமைந்திருப்பது வழக்கம். ஆனால் ஐயாறன் அடித்தலத்தைப் பாடத் தொடங்கிய அப்பர் இந்த வரையறையையே மறந்தார். பத்துப் பாட்டுக்கு மேலும் பாடிக்கொண்டே போனார். பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று என்று பதிகம் வளர்ந்துகொண்டே போயிற்று. இருபதாவது பாட்டில் வந்து நின்றது. இந்த இருபது பாடல்களும் மிகவும் அற்புதமானவை.

காரியாலயத்திலே நெடுநேரம் வேலைசெய்த ஒருவனுக்குத் தன் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. வீட்டுக்கு வருகிறான். இளைப்பாற எண்ணும் அவன் அதற்குரிய அறைக்குச் செல்கிறான். அங்கே போனால் அவனை அறியாமலே தூக்கம் வருகிறது. அப்படி உலக நினைவிலிருந்து விலகி இறைவனுடைய திருக்கோல நினைவிலும் திருவருள் நினைவிலும் இன்பம் காணுகிறவர்கள் அன்பர்கள். அவற்றுள்ளே திருவடி நினைவிலே எல்லாவற்றையும் மறந்து இன்பத் துயில் புரிவது அவர்களுக்கு இயல்பு.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவனுடைய திருவடிகளும் அப்படியே தோற்றமும் முடிவும் இல்லாதன. ஆனால் தாமே எல்லாப் பொருட்கும் தோற்றமும் ஈறுமாய் நிற்பவை. மக்கள் எடுக்கும் உடம்புக்குத் தோற்றம் உண்டு; இறப்பு உண்டு. பிறவா யாக்கைப் பெரியோனாகிய இறைவன் அடிமலர்களுக்கு அவ்விரண்டும் இல்லை.

எழுவாய் இறுவாய் இலாதன.

(தோற்றமும் முடிவும் இல்லாதன. எழுவாய் - தோற்றம். இறுவாய் - முடிவு.)

மக்களுக்கு வரும் நோய் அளவற்றவை. அந்த நோய்களால் அவர்கள் படும் துன்பங்களும் அளவற்றவை. நோய்கள் யாவும் உடம்பினால் வருபவை. மனநோய் என்று சில நோய்களை வகுத்திருக்கிறார்கள். அவையும் உடம்பிலே துன்பத்தை ஏற்றுபவை. இந்த நோய்களைத் தீர்ப்பதற்குரிய மருத்துவ முறைகள் இருக்கின்றன. தீராத நோய்கள் என்று சிலவற்றைச் சொல்வதுண்டு. அவைகூட உடம்பு அழிந்தால் உடம்போடு போய்விடும். ஆனால் உண்மையிலே தீராத நோய்கள் இரண்டு உண்டு. உள்ளத்தையும் உடலையும் பற்றிய நோய்களைப் போன்றவை அல்ல அவை; உயிரையே பற்றியவை. இறப்பென்றும் பிறப்பென்றும் சொல்லப் பெறுவனவே அந்த நோய்கள். பிறப்பென்னும் நோயால் வருவது உடம்பு; அந்த உடம்புக்கே இந்த நோய்கள் வருகின்றன. உடம்பாகிய நிலைக்களம் போய்விட்டால் நோய்களுக்கு இடமே இராது. ஓர் உடம்பு அகன்றால் அதனோடு தொடர்புடைய நோய்கள் போய்விடும். ஆனால் மற்றோர் உடம்பு வந்துவிடுகிறது. ஓர் உடம்பை விட்டு உயிர் செல்வதை இறப்பென்றும், வேறு ஓர் உடம்பிற் புகுவதைப் பிறப்பென்றும் சொல்கிறோம். இவ்விரண்டும் உடம்பை விட்டு உடம்பு புகும் உயிருக்கு அமைந்த இரண்டு தீராத நோய்கள்; பெருநோய்கள். இவற்றிற்குரிய மருத்துவம் செய்பவர்கள் இவ்வுலகில் இல்லை.

ஆங்கிலத்தில், ''மருத்துவரே, உம்முடைய நோயை முதலில் தீர்த்துக் கொள்ளும்'' என்ற ஒரு பழமொழி வழங்கும். இறப்பும் பிறப்பும் ஆகிய இரண்டு பெரும்பிணிகளையும் தீர்க்க மற்றப் பிணிகளைத் தீர்க்கும் மருத்துவர்களுக்கு ஆற்றல்

இல்லை. அவர்களே அந்தப் பிணிகளுக்கு உட்பட்டு உழன்று துன்புறுகிறவர்கள். யார் அந்த நோய்களினின்றும் அகன்று நிற்கிறவரோ அவரே அவற்றுக்குரிய மருத்துவத்தைச் செய்யும் ஆற்றல் படைத்திருப்பார்.

ஐயாறன் அடித்தலம் அவ்விரண்டு பிணிகளுக்கும் அப்பாற்பட்டவை. ஆதலின் தம்மை அடைந்தாருக்கும் மிகக் கொடியனவாக அமைந்த இரண்டு பிணிகளையும் நீக்கிச் சிறிதும் தவறாத மருந்தாகத் திகழ்கின்றன.

...............வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன.

(கொடுமையான நோய்களைப் போக்கி, பயன் தருதலில் சிறிதும் தவறாத மருந்தாக இருப்பவை.

வெங்கண் - கொடுமையையுடைய; பிணி - நோய்; இங்கே இறப்பையும் பிறப்பையும் குறித்தது. வழுவா - தவறாத. மருத்துவம் - வைத்தியர்; இது இங்கே மருந்தைக் குறிக்க நின்றது; ஆகுபெயர்.)

உடம்பை எடுப்பதும் விடுப்பதுமாகிய நோய்களுக்குக் காரணமாக இருப்பவை உயிர்கள் செய்யும் இருவினைகள். நல்வினை, தீவினை என்னும் அவ்விரண்டினாலும் உயிர்கள் மாறி மாறிப் பிறந்து வாழ்ந்து இறக்கின்றன. மிகவும் கொடிய தீவினைகள் செய்தால் இம்மை நீங்கின் நரகத்தில் அவ்வினைக் குரிய தண்டனைகளைப் பெறுகின்றன. உயிர்களுக்குப் பருவுடம்பு என்றும் நுண்உடம்பு என்றும் இருவகை உடம்புகள் உண்டு. பருவுடம்பை எடுத்து உலகத்தில் வாழ்வு நடத்து கின்றன. இறப்பும் பிறப்பும் இவ்வுடம்போடு தொடர் புடையன. நுண் உடம்புக்கும் நோய் உண்டு. நரகத்தில் துன்பமும், சொர்க்கத்தில் இன்பமும் அடைவது அந்தச் சூட்சும சரீரமே. தீவினைகளைச் செய்யும் உயிர்களைப் பெரிய நரகக் குழியிலே தள்ளும் காரியத்தை இறைவன் திருவடிகளே செய்கின்றன. ஆனால் அவற்றையே பற்றாகப் பற்றிக்கொண்டால் நரகக் குழியில் விழுந்த உயிர் களையும் அத்துன்பத்திலிருந்து மீட்கும் அருளை உடையவை அவை.

............மாநர கக்குழிவாய்

விழுவார் அவர் தம்மை வீழ்ப்பன; மீட்பன.

(பெரிய நரகமாகிய குழிகளில் வீழ்ந்து துன்புறுபவர்களாகிய அவர்களை அவற்றில் வீழும்படி செய்வனவும் அவைகளே; அவற்றினின்றும் மீட்பனவும் அத்திருவடிகளே. வீழ்ப்பன - வீழச் செய்வன.)

உள்ளத்திற்கும் உடம்புக்கும் உயிருக்கும் வரும் துன்பங் களைத் திருவடிகள் போக்கும். துன்பத்தைப் போக்குவதோடு நிற்பன அல்ல அவை; மேலும் இன்பத்தை உண்டாக்குபவை. மருத்துவன் நோயாளிக்கு மருந்துகளைக் கொடுத்து நோயை ஒழித்து விடுகிறான். நோய் நீக்கினாலும் அதனாற் பற்றப் பெற்றவன் மெலிவாக இருப்பான். அதன்பின் அவனுக்கு உடம்பு வன்மை அடையும் மருந்துகளைத் தந்து நன்கு உண்ணுதல், உறங்குதல், பிற நுகர்ச்சி ஆகியவற்றால் இன்பம் அடையச் செய்வான். முன்னைய முறை துன்ப நீக்கம்; பின்னையது இன்ப ஆக்கம்.

திருவடிகள் உயிர்களுக்குச் செய்யும் மருத்துவம் இப்படி இரண்டு நிலைகளை உடையன. வெங்கட் பிணி தவிர்த்து, நரகக் குழியினின்றும் மீட்பதோடு, இன்பமும் அருளுகின்றன. அளவுக்கு அடங்காத அன்பை உடையவர்களுக்கு இனிமையாக இருக்கின்றன. அவ்வன்பர்கள் அன்பினால் அழுகிறார்கள். அழுகை அன்பின் மிகுதிக்கு அடையாளம். அவர்களுக்கு அமுதம்போல இனிப்பவை இறைவன் அடித்தலங்கள்.

......................மிக்க அன்போடு

அழுவார்க்கு அமுதங்கள் காண்கஐ யாறன் அடித்தலமே.

(மிகுதியான அன்போடு அழுபவர்களுக்கு அமுதங்களைப் போன்றவை, ஐயாறனுடைய அடிகளாகிய இடம்.)

உயிரிலே இன்பம் பாய்ச்சுவன ஆகையால் அமுதம் என்றார்.

எவ்வுயிர்க்கும் ஆதியாய் அந்தமாய் நின்று உயிர்களுக்கு வரும் தோற்றமும் இறுதியும் தமக்கு இல்லாதனவாய்,

உயிர்களிடத்தும் அந்த இரண்டையும் நீக்கி, சூட்சும உடம்புக்கு வரும் துன்பமாகிய நரக வேதனையையும் மாற்றி, என்றும் சாவாத இன்பத்தைத் தரும் பேரமுதமாக இலங்குவன, திருவையாற்றில் உள்ள எம்பிரானுடைய திருவடிகள் என்று பாடி மகிழ்கிறார் அப்பர்.

எழுவாய் இறுவாய் இலாதன; வெங்கட் பிணி தவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன; மாநர கக்குழிவாய்
விழுவார் அவர்தம்மை வீழ்ப்பன, மீட்பன; மிக்க அன்போடு
அழுவார்க் கமுதங்கள் காண்க, ஐ யாறன் அடித்தலமே.

இது 92-ஆம் பதிகத்தில் ஐந்தாவதாக அமைந்த திருப்பாட்டு.

★

விண்ணப்பம்

யாருக்கும் இல்லாத அடையாளங்கள் சிவபெருமானிடத் தில் இருக்கின்றன. மற்றவர்களெல்லாம் அழகும் உயர்வும் உடைய பொருள்களைத் தமக்கு ஆடையாகவும் அணியாகவும் இருப்பிடமாகவும் கொண்டிருப்பார்கள். சிவபெருமானோ இதற்கு மாறாக, அழகற்றனவும், அச்சத்தைத் தருவனவும், உலகத்தாரின் இகழ்ச்சிக்குரியனவுமாகியவற்றைக் கொண்டிருக்கிறான். அவனுக்கு இயல்பாகவே அழகும் உயர்வும் இருப்பதனால் அணியாலும் ஆடையாலும் புதிய அழகும் மதிப்பும் வரவேண்டும் என்பது இல்லை. அவன் ஏற்றுக்கொண்ட இழிந்த பொருள்கள் யாவும் அவனுடைய தொடர்பினால் உயர்ந்த பொருள்கள் ஆகிவிடுகின்றன.

இறைவன் தன் திருக்கழுத்தில் ருத்திராட்சமாலை தரித்திருக்கிறான். அவன் திருவிழியில் கருணையினால் தோன்றிய நீர்த்துளிகள் ருத்திராட்சங்கள் ஆயின. ருத்திரனுடைய கண்ணிலே தோன்றியவை என்ற பொருளுடையது ருத்திராட்சம் என்ற தொடர். கண்ணுக்கு அழகு தருவது கருணைப் பார்வை. அக் கருணையைக் காட்டுவது அதில் தோன்றிய துளிகள். அவற்றின் உருவமாகிய ருத்திராட்ச மணிகளை இறைவன் அணிந்திருப்பது அவன் கருணையையே அணியாக உடையவன் என்பதைக் காட்டுகிறது. அந்தக் கருணையுருவாகிய ருத்திராட்சத்தைச் சிவனடியார்கள் அணிந்து இன்புறுகிறார்கள். இறைவனுடைய கருணையையே தாரகமாக உடையவர்கள் அல்லவா?

ருத்திராட்சத்துக்குக் கண்டி என்றும் ஒரு பெயர் உண்டு. கண்டம் என்பது கழுத்துக்குப் பெயர். அதில் அணிவதாதலின் கண்டி என்ற பெயர் வந்தது. மகர கண்டி, பொற்கண்டிகை என்று வழங்குவதைக் காண்க. கழுத்தில் அணியும் மாலைகள்

பலவற்றிலும் சிறந்தது ருத்திராட்சம். சிறந்த ஒன்றை அடையின்றிச் சொல்வது உலக வழக்கு. பூ என்று சொன்னால் எல்லாப் பூக்களிலும் சிறந்த தாமரைப் பூவையே குறிக்கும். எவ்வித அடையும் இன்றிக் கண்டி என்றால் எல்லாவற்றினும் சிறந்த ருத்திராட்சத்தைக் குறிக்கும். இறைவனுடைய திருக் கழுத்தில் கண்டி அழகு செய்கிறது. இறைவன் தனக்கு ஓர் அணி அணியும் அவசியம் இல்லாதவன்; உருவமே இல்லாதவன். ஆயினும் அவன் உருவத்துக்குள் அமைந்து அன்பர்களுக்குக் காட்சி தருகிறான். அந்தத் திருமேனி பல ஆடைகளுக்குள்ளும் அணிகளுக்குள்ளும் அமைந்து விளங்கு கின்றது. அவன் திருக்கழுத்துக் கண்டிக்குள்ளே பொருந்தி இலங்குகிறது.

கண்டியுட் பட்ட கழுத்துடையீர்!

(ருத்திராட்ச மாலையைப் புறத்தே அணிந்து அதற்குள் அமைந்து திகழும் திருக்கழுத்தை உடையவரே!

கண்டி - ருத்திராட்சமாலை. உட்பட்ட - அதனைப் புறத்தே அணிந்து அதற்குள் தான் பொருந்தித் தோன்றிய.)

★

இறைவன் வீடுதோறும் பிச்சை வாங்கி உண்கிறானாம். தன்னை நாடி வந்து அன்பு செய்ய வேண்டிய உயிர்களுக்கு, அந்தச் சிரமத்தைக் கொடுக்காமல் அவர்களை நாடிச் சென்று அன்பாகிய பிச்சை கேட்கிறான். அந்தப் பிச்சையை ஏற்கும் பாத்திரம் பிரமகபாலம்; பிரமனுடைய மண்டையோடு. உயிர்களின் பிறப்புக்கும் வாழ்க்கைக்கும் இறப்புக்கும் மூலக் கருவாக நிற்பது வினை; அதை விதியென்றும் சொல்வதுண்டு. அந்த விதியின் அடையாளமாகிய எழுத்து, தலையில் இருப்பதாகச் சொல்வது ஒரு மரபு; தலையெழுத்து என்று சொல்வார்கள். கபாலத்தைக் கண்டவர்கள் தலையெழுத்தை நினைத்துக் கொள்வார்கள். உடம்புகள் எரிந்து கரிந்து எலும்பாகும் கரிகாட்டில் எலும்புகள் உடம்பு நிலையாது என்ற உண்மையைக் காட்ட, கபாலம் எல்லாவற்றிற்கும் காரணமான விதியை நினைப்பூட்டுகிறது. விதிப்பவன் பிரமன். உயிர்கள் செய்யும் வினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை நுகரும்படி

அமைக்கும் வரையறையே விதி. அந்தக் கணக்கைப் பார்த்து எழுதும் கணக்கப்பிள்ளை பிரமன். அதனால் அவனுக்கு விதி என்றே ஒரு பெயர் உண்டு. அவன் எல்லார் தலையிலும் எழுதுகிறான்; அவன் தலையில் எழுதுகிறவன் இறைவன். விதிக்கும் விதியாக நிற்பவன் இறைவன். பிரமனைப் பிறவியைத் தரும் கடவுள் என்று சொல்கிறோம். ''அப்பா, உன் தலையெழுத்தை எழுதும் பிரமாவின் தலையெழுத்து என் கையில் அமைந்திருக்கிறது. அவனையே அழித்துத் தலை யோட்டைத் திருப்பிவிட்டேன். அவனால் வரும் பிறவி நோயையும் தீர்ப்பேன். நீ உன் அன்பைத் தா'' என்று கேட்கிறான் இறைவன்.

உடம்பு ஒரு வண்டியைப் போன்றது. உயிர் வாழ்க்கையை ஜீவயாத்திரை என்று சொல்வதுண்டு. யாத்திரைக்கு வண்டி வேண்டாமா? ஆகவே இதை அப்பர் சுவாமிகள் வண்டி என்றே சொல்கிறார். பழுதுபட்ட வண்டியை மூலையிற் போட்டு விடுவார்கள்; இந்த வண்டியைச் சுடுகாட்டில் எரித்துவிடுவார்கள். அப்போது எரியாமல் எஞ்சி நிற்பது மண்டையோடு; கபாலம். அதை இறைவன் தன் பிச்சைப் பாத்திரமாக, பரிகலமாகத் திருக்கரத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

.....கரி காட்டில்இட்ட
பண்டியிற் பட்ட பரிகலத்தீர்!

(சுடு காட்டிலே கொண்டுபோய் இட்டுக் கொளுத்தின உடம்பாகிய வண்டியில் அமைந்திருந்த கபாலமாகிய பாத்திரத்தை உடையவரே!

கரிகாடு - கரியும் காடு; சுடுகாடு. பண்டி - வண்டி. பட்ட - அமைந்த; தோன்றிய எனலும் ஆம். பரிகலம் - பாத்திரம்; இறைவன் திருக்கரத்தில் உள்ள பிரமகபாலத்தைச் சுட்டியபடி.)

★

இறைவன் கருணைக்கு அடையாளமாக இருப்பது ருத்திராட்சம். அவனுடைய அழியாமைக்கும், பிறப்பை அறுக்கும் ஆற்றலுக்கும், எளிமைக்கும் அடையாளமாக இருப்பது கபாலம். கருணையும் பிறப்பறுக்கும் வன்மையும்

ஆருயிர்களின்பால் எளியனாக வந்து வலிய அருள் செய்யும் பெருமையும் உடைய இறைவனிடத்திலே ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறார் அப்பர். ''இறைவரே! நான் உம்மை மறந்தாலும் தேவரீர் என்னை மறவாமல் ஆட்கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக் கொள்கிறார்.

மனிதன் சுகத்தை நுகரும்போது அதைத் தனக்கு வழங்கியவனை மறந்துவிடுகிறான். நன்றாக வயிறாரச் சாப்பிட்டால் அந்த நிறைவிலே ஒரு விதமான மயக்கத்தை அடைந்து நினைக்க வேண்டிய கடவுளை மறந்து போகிறான். உணவு கிடைக்காத பட்டினியில் அவன் வாடும்போதும் இறைவன் நினைப்பு வருவதில்லை. பசியினால் அல்லற்படும் போது, ''சோறு, சோறு'' என்று பறக்கிறான். அவனுக்குச் சோற்றைத் தவிர வேறு ஒன்றுமே நினைவில் இருப்பது இல்லை. ஆகவே பட்டினி கிடக்கும்போதும் இறைவனை மறந்து விடுகிறான். அப்படியே நோயால் தவிக்கும்போதும் அந்த நோயால் வரும் துன்பத்திலே வாடி, இது தீருமா என்ற நினைப்பையன்றி வேறு எண்ணாமல் இருக்கிறான். அப்போதும் இறைவனை நினைப்பதில்லை.

தூங்கும்போது எல்லாவற்றையும் மறந்து போகிறான் மனிதன். 'யமனுடைய தலை வாசலில் நிற்கிறோமே' என்ற கவலை இருந்தால் அவன் தூங்குவானா? 'யமனால் வரும் துன்பத்தைப் போக்கும் இறைவன் அருளை இன்னும் பெறவில்லையே!' என்ற ஏக்கம் இருந்தால் அவன் தூங்க முடியுமா? அவற்றையெல்லாம் நினைக்காமலே அவன் தூங்குகிறான். இவ்வளவுக்கும் காரணம் என்ன?

மனிதன் ஐந்து பேர்களுக்கு அடிமையாக இருக்கிறான். அந்த ஐந்து பேர்களும் அவனைக் கொள்ளையடிக்கிறார்கள். அவனிடத்தில் சிறிதளவு பக்தி தோன்றினாலும் அதை உடனே கைப்பற்றி மறைத்துவிடுகிறார்கள். எந்தக் காலத்திலும் மனிதனுக்கு விரோதிகளாக, அவன் துன்புற்றாலும் இன்புற்றாலும் அவனுடன் இருந்து அவனை அலைத்து அவன் வாழ்வை நரகமாக்கிவிடுகிறார்கள். அவர்கள் அடிக்கிற கொள்ளையில் இறைவனை நினைக்கவே முடியாது. அந்த ஐவர் மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஐந்து பொறிகள். இந்திரியங்களாகிய

இவர்களை அடக்காமல் மனிதன் உய்வது என்பது இயலாத காரியம்.*

இவற்றையெல்லாம் எண்ணி அப்பர் இறைவனிடம் விண்ணப்பம் செய்கிறார். ''கருணையும் எளிமையும் உடைய பெருமானே! உம்மை நான் மறவாமல் நினைக்க முடிவ தில்லை. உண்டாலும் மறக்கிறேன். பட்டினி கிடந்தாலும் மறக் கிறேன். நோய்வாய்ப்பட்டாலும் மறக்கிறேன். உறங்கினாலும் மறந்து போகிறேன். ஐவர்கள் அடிக்கும் கொள்ளையிலே பட்டு மறக்கிறேன். இப்படி உம்மை நினைக்காமல் மறந்தாலும் தேவரீர் அடியேனை மறவாமல் திருவுள்ளத்திற் கொண்டருள வேண்டும்'' என்று சொல்கிறார்; திருவீழி மிழலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடம் கூறுகிறார்.

கண்டியிற் பட்ட கழுத்துடையீர்!கரி காட்டில்இட்ட
பண்டியிற் பட்ட பரிகலத் தீர்!பதி வீழிகொண்டீர்!
உண்டியில், பட்டினி, நோயில், உறக்கத்தில், உம்மைஐவர்
கொண்டியிற் பட்டு மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே!

(ருத்திராட்சம் அணிந்த திருக்கழுத்தை உடையவரே!பிரம கபாலத்தைக் தரித்தவரே! இருக்கும் இடமாகத் திருவீழிமிழலையைக் கொண்டவரே! அடியேன் உணவு உண்ணும் போதும் பட்டினியிலும் நோயிலும் உறக்கத்திலும் ஐம்பொறிகள் இடும் கொள்ளையிலே அகப்பட்டுத் தேவரீரை மறந்தாலும் தேவரீர் அடியேனை மறவாது நினைத்துக்கொள்ளுங்கள்.

பதி - இருக்கும் ஊர். வீழி - திருவீழிமிழலை; சோழநாட்டுத் தலம். மிழலை என்பது ஊர்ப்பெயர். வீழி என்னும் கொடியைத் தலவிருட்சமாக உடைமையால் வீழி மிழலையாயிற்று. வீழியென்று சுருங்கச் சொன்னார்; நாமைகதேசம். உண்டி - உணவு. பட்டினியில், நோயில் என்று தனித்தனியே பிரித்துச் சொல்வது சிறப்பு. குறிக்கொண்மின் - நினைவு வைத்துக்கொள்ளுங்கள். இது குறிப்பாக நின்று, அருள் செய்யவேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்தியது.)

இது, 95 - ஆம் பதிகத்தின் ஆறாவது திருப் பாட்டு.

★

---

* *''ஒரவொட் டார்ஒன்றை உன்னவொட் டார்மலர் இட்டுனதாள், சேரவொட்டார்ஐவர் செய்வதென் யான்'' என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் முறையிடுவது இங்கே நினைவுக்கு வருகிறது.*

'இப்போதே எழுதி வை'

வருமுன் காத்தல் எப்போதுமே நல்லது. பசிக்கும் போது அரிசி வாங்கிச் சமைக்கலாம் என்றிருப்பது தவறு; அரிசி வாங்கிச் சமைத்து வைத்திருந்தால்தான் பசிக்கு உதவும். ''யமனுடைய தூதுவர்கள் என் உயிரைப் பிரித்துச் செல்வார்கள்; இந்த உடம்பை வீழ்த்தி விடுவார்கள். அதற்கு முன்பே எனக்கு அருள் செய்யவேண்டும்'' என்று அப்பர் சொல்கிறார், இறைவனை நோக்கி.

''நான் என்ன செய்யவேண்டும்?''

''உன் திருவடி ஒன்றுதான் யம பயத்தைப் போக்கும் என்று உணர்ந்து கொண்டேன். ஆதலால் அது என் நெஞ்சிலே காவலாக இருந்தால் அந்த அச்சம் இராது.''

''அதை நெஞ்சில் தியானிக்கலாமே!''

''நானாக அதனைத் தியானிக்கவேண்டும் என்று முயன்றால் போதாது. நின்னை நினைப்பதற்கும் நின் அருள் வேண்டும். நீ உன்னை நினைப்பித்தால் நான் நினைக்கிறேன். உன் திருவடியை என் நெஞ்சிலே வைத்தால் அதனை நான் பற்றிக்கொள்ள முடியும்.''

''நீ இப்போது என் திருவடியை நினைந்துதானே பேசுகிறாய்?''

''இப்படி நினைப்பது போதாது. மிக வேண்டியவர்களின் உருவத்தைக்கூட வேண்டும்பொழுது நினைத்தால், அது தெளிவாக மனத்தில் வருவதில்லை. ஆகவே உன் திருவடி மின்னல் தோன்றி மறைவதுபோல உள்ளத்தில் தோன்றி மறைவதில் பயன் இல்லை. எப்போதும் என் மனத்தில் நிலையாக நிற்கவேண்டும். எழுதி வைத்தது போலச் சிறிதும் சலனமின்றி இருக்கவேண்டும்.''

''அப்படி இருப்பதற்குரிய முயற்சியை நீ செய்யலாமே!''

''அப்படி ஏழையேனால் செய்ய இயலாது அப்பனே! நீயாகத் திருவுள்ளம் கொண்டு என் நெஞ்சத்து உன் தாள் எழுதி வைத்தால்தான் அது அங்கே நிலைநிற்கும்.''

''இன்னும் சில நாட்கள் செல்லட்டும். இந்தப் பிறவி ஒழிந்த பிறகு எழுதி வைக்கிறேன்.''

''ஐயோ! அது வேண்டாம். இம்மையிலேயே உன்தாளை என் நெஞ்சத்தில் எழுதிவிட வேண்டும் வெம்மையான சொல்லும் செயலுமுடைய நமனுடைய ஏவலாளர் மிகுதியாக வந்து என் உடம்பை விழுத்துவதற்குமுன் இப்போதே அந்தக் காரியத்தைச் செய்தருள வேண்டும்.''

''அப்புறம் செய்தால் என்ன?''

''இப்போது நீ இதனைச் செய்யாமல் விட்டுவிட்டால் அப்புறம், இப்பிறவி முடிந்தவுடன், அம்மையில், அடியேனுக்கு அருள் செய்கிறது என்பது என்ன உறுதி? அப்படி அருள் செய்கிறாய் என்பதை ஆர் அறிவார்?''

அப்பர் இறைவனை நெருங்கிப் பேசுகிறார். ''சுவாமி, இப்போதே என்பேரில் எல்லாவற்றையும் எழுதிவைத்து விடுங்கள். பிறகு செய்கிறேன் என்றால் அப்போது நீர் செய்வது என்ன நிச்சயம்?'' என்பது போலச் சொல்கிறார்.

''நான் என் நெஞ்சத்திலே திருவடியை எழுதி வைக்கும் படி சொன்னது முத்தி பெறுவதற்கு மாத்திரம் அல்ல. அது மாத்திரம் என் குறிக்கோளானால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று இருப்பேன். இந்த உடம்பை விட்டு ஒழியும்போது நமன் தமர் வந்து செய்யும் கொடுஞ் செயல்களைத் தாங்க இயலாது. அந்தத் துன்பம் என்னைச் சாராமல் போகவும் அத் திருத்தாள் பாதுகாப்பாகும். ஆதலின் அவர்கள் வருமுன் என் நெஞ்சத்தில் நின் தாளை எழுதி வைக்கவேண்டும்'' என்று கேட்கிறார்.

வெம்மை நமன் தமர் மிக்கு விரவி
விழுப்பதன்முன்

இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்து எழுதிவை;
ஈங்குஇகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பதுஇங்கு
ஆர் அறிவார்?

இறைவன் முத்தி தர வல்லவன். சோழநாட்டில் கும்ப கோணத்துக்கு அருகில் சத்தி முற்றம் என்னும் திருத்தலத்திற்குச் சென்றபோது இந்த வேண்டுகோளை இறைவனிடம் சமர்ப்பிக் கிறார் அப்பர்.

இம்மையிலே முத்தி யின்பத்தைப் பெறலாம். அதை ஜீவன் முத்தி என்பர். இறைவன் திருவடி ஞானவடிவாதலால் அதனை நெஞ்சில்கொண்டால், எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகி இறப்பையும் பிறப்பையும் உண்டாக்கும் அஞ்ஞானம் நீங்கும். அது நீங்கவே, துன்பங்கள் விலகி ஜீவன் முத்தி நிலை உண்டாகும்.

''தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டிருக்
கும்சுத்த ஞானம்என்னும்
*தண்டையம் புண்டரி கம்தருவாய்''**

என்று அருணகிரியார் திருவடியையே ஞானம் என்கிறார்.

முத்திக்குப் பல பெயர்கள் உண்டு. எவ்வகைத் துன்பமும் இல்லாததாய், அறியாமை யிருளற்ற ஞான ஒளிநிலையமாய் இருத்தலின் அதனைச் செம்மை என்ற சொல்லால் குறிப்பர். நிறைவைச் செம்மை என்று சொல்வது ஒரு வழக்கு. குறையாத இன்பத்தைத் தரும் நிலையாதலின் முத்தி, செம்மையாயிற்று.

''செம்மையே யாய சிவபதம் அளித்த செல்வமே''

என்பதில் முத்தியாகிய சிவபதத்தைச் செம்மை என்று மணிவாசகப் பெருமான் கூறினார். சத்தி முற்றத்தில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானுக்குச் சிவக்கொழுந்து என்பது திருநாமம். தன்னை வழிபட்டாருக்கு முத்தி தரும் பொருட்டுச் சிவபெருமான் சத்தி முற்றத்திலே எழுந்தருளியிருக்கிறான்.

செம்மை தருசத்தி முற்றத் துறையும்
சிவக்கொழுந்தே!

**கந்தர் அலங்காரம்.*

எத்துணை ஆற்றல் உடையவர்களாக இருப்பினும் யமனுக்கு முன் அவர்களுடைய ஆற்றல் செல்வதில்லை. மிகப் பெரியவர்களும் இறைவனிடம், ''அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்'' என்று சொல்வார்கள். அப்பர் சுவாமிகளோ, ''அப்போது நீ வந்து இது செய்வாய் என்ற உறுதி எனக்கு இல்லை. அதை இப்போதே செய்துவிடு. நீ என் நெஞ்சத்து உன் திருவடியை எழுதி வைக்க இப்போது ஒரு தடையும் இல்லையே!'' என்று முன்கூட்டியே பாதுகாப்புச் செய்துகொள்ள நினைக்கிறார்.

வெம்மை நமன்தமர் மிக்கு விரவி
விழுப்பதன்முன்
இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்து எழுதிவை;
ஈங்குஇகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பதுஇங்கு
ஆர்அறிவார்?
செம்மை தருசத்தி முற்றத்து உறையும்
சிவக்கொழுந்தே!

(வெம்மைக் குணமுடைய யமனுடைய ஏவலாளர் மிகுதியாக வந்து என்னை அடைந்து உடம்பை வீழ்த்துவதற்கு முன்னாலே இந்தப் பிறவியில் இப்போதே நின் திருவடியை அடியேனுடைய நெஞ்சத்திலே எழுதியவை; இப்போது எழுதாமல் விட்டால், அம்மையில் அடியேனுக்கு அருள் செய்வாய் என்பதை இங்கே ஆர் அறிவார்கள்? வீட்டை அருள்கின்ற சக்தி முற்றத்தில் எழுந்தருளிய சிவக்கொழுந்தே!

தமர் - சார்ந்தவர்; யமதூதர். விழுப்பது - விழச்செய்வது. இம்மை - இப் பிறவி. ஈங்கு - இப்போது. இகழில் - செய்யாது விட்டால். அம்மை - இப் பிறவிக்குப் பின் உள்ள வாழ்வு. அருளுதி - அருள்வாய். செம்மை - முத்தி.)

இது 96 - ஆம் பதிகத்தின் ஆறாம் பாட்டு.

★

இன்பப் பிறவி

முன்னுரை

திருநாவுக்கரசருடைய தேவாரங்கள் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்றன. நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகளாக அவை விளங்குகின்றன, ஐந்தாம் திருமுறையில் நூறு பதிகங்கள் அடங்கியிருக்கின்றன.

இந்தப் பதிகங்கள் யாவும் திருக் குறுந்தொகை, குறுந்தொகை என்பது யாப்புக்குரிய பெயரென்று தோன்றுகிறது. குறுகிய பாவினமாகிய கலிவிருத்தங்களாக அமைந்தவை இப்பாடல்கள். பதிகம் என்பது பத்துப் பாடல்களையுடையது என்று கொள்வது வழக்கம். ஆயினும் பயனைக் கூறும் பாட்டோடு பதினொன்றாக இருப்பதும் உண்டு. தம் பெயரை அமைப் பதும் பயன் கூறுவதும் அப்பர் சுவாமி களுக்கு வழக்கம் இல்லை. ஆனாலும் பல பதிகங்கள் பதினொரு பாடல்களை உடையன வாக இருக்கின்றன. இத் திருமுறையில் 22 பதிகங்கள் 11 பாடல்களை உடையன. இரண்டு பதிகங்களில் (7,53) 12 பாடல்கள் இருக்கின்றன. 97 - ஆம் பதிகத்தில் 30 பாடல் கள் அமைந்துள்ளன.

ஏட்டிலிருந்து எடுத்தபோதே சிதலுக்கு இரையானவை போக எஞ்சியவையே

கிடைத்தன. ஆதலால் இத் திருமுறைகளிலும் இடையிடையே பாடல்கள் குறைந்துள்ள பதிகங்களும் இருக்கின்றன. அவ்வாறு உள்ளவை 13 பதிகங்கள் (9, 15, 26, 38, 40, 60, 67, 76, 78, 79, 81, 85, 91.)

முதல் 88 பதிகங்களும் தலங்களைப் பற்றியவை. பத்துத் தலங்களுக்கு இரண்டிரண்டு பதிகங்களும், 68 தலங்களுக்கு ஒவ்வொரு பதிகமும் உள்ளன. எஞ்சிய பன்னிரண்டு பதிகங்களும் பொதுவானவை. தனிக்குறுந்தொகை (89, 90, 91), காலபரசத்தியக்குறுந்தொகை, மறக்கிற்பனே என்னும் திருக் குறுந்தொகை, தொழற்பாலதே என்னும் திருக்குறுந்தொகை, இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை, மனத்தொகைத் திருக்குறுந்தொகை, சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை, உள்ளத் திருக்குறுந்தொகை, பாவநாசத் திருக்குறுந்தொகை, ஆதி புராணத் திருக்குறுந்தொகை என்ற பெயர்கள் முறையே அவற்றிற்கு வழங்கும்.

இந்தப் புத்தகத்தில் 13 பாடல்களுக்குரிய விளக்கத்தைக் காணலாம். இவற்றில் கோயில், திருவாரூர், திருவீழிமிழலை, திருவிடைமருதில், திருக்கடம்பூர்த் திருக்கரக் கோயில், திரு இன்னம்பர், திருவானைக்கா, திருச்சோற்றுத்துறை, திருமருகல் என்ற ஒன்பது தலங்களைப் பற்றிய பாடல்கள் ஒன்பது; பொதுப் பாடல்கள் நான்கு.

திருநாவுக்கரசர் இறைவனுடைய புகழை வெளியிடும் முறைகள் பல. அவனை முன்னிலைப் படுத்தி அவன் புகழைப் பாடுதல் ஒரு வகை. படர்க்கையாக அவன் பெருமையை எடுத்துரைப்பது ஒரு முறை. நெஞ்சை நோக்கிச் சொல்வதும், தமக்கு

இன்னது வேண்டும் என்று வேண்டிக் கொள்வதும், தம் துயரத்தை எடுத்துரைப் பதும் ஆகிய பதிகங்கள் சில. உலகினரை நோக்கி இன்னது செய்தால் நன்மை உண்டாகும் என்று உபதேசம் செய்வார். இறைவனிடம் பக்தி பூணாதவர்களை நோக்கி இரங்குவார்.

இந்தப் புத்தகத்தில் உள்ள பாடல்களில் இறைவனை முன்னிலைப் படுத்திக் கூறுவதாக ஒரு பாட்டு அமைந்திருக்கிறது (3). படர்க்கையாக இறைவன் புகழைச் சொல்லும் திருப் பாட்டுக்களில், அவன் எல்லாவற்றிலும் இனியன் என்று சொல்வது ஒன்று (4); அவன் நம்மைக் காப்பாற்றும் கடப் பாடுடையவன் என்று சொல்வது ஒன்று (5): தன்னை நினைப் பவரையும் நினையாத வரையும் அவன் அறிவான் என்பதைச் சொல்வது ஒருபாட்டு (6), 'திருச்சிற்றம்பலம் இன்னும் இந்த இன்பப் பிறவியைத் தருமோ! என்று வினாவாக அமைந்தது ஒன்று (1); நெஞ்சை நோக்கி, நீ இறைவனைப் பணிவாயாக என உபதேசிப்பது ஒன்று (8);

உலகினரைப் பார்த்து இறைவனை வஞ்சமின்றி வணங்குங்கள் என்றும், அவன் கனியைப் போன்றவன் என்றும் கூறுகிறார் அப்பர் சுவாமிகள் (7,11). இறைவனைக் காதலனாக வைத்து அவனிடம் காதல் கொண்டுள்ள தலைவியைப்பற்றிச் செவிலி கூறுவதாகவும் (2), தோழி கூறுவதாகவும் (9) அமைந்தவை இரண்டு பாடல்கள். இறைவ னுடைய குறிகளையும் கோலங்களையும் அறியாதவர்களையும் (10), அரனுக்கு அன்பு இல்லாமல் தீர்த்தயாத்திரை செய்பவர் களையும் (12), இறைவன் பெருமையை

உணராதவர்களையும் (13), பார்த்து இரங்கிக் கூறும் பாடல்கள் மூன்றை இதில் காணலாம்.

சிறிய பாடல்களானாலும் பெரிய பொருளைத் தம்முள்ளே செறித்து வைத்திருக் கின்றவை இவை.

-கி.வா. ஜகந்நாதன்

இன்பப் பிறவி

எப்போதும் முயற்சி செய்துகொண்டே இருப்பவனுக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும் என்று சொல்கிறோம். அது எவ்வளவு தூரம் உண்மை என்று நினைத்துப் பார்க்கிறோமா? எப்போதும் முயற்சி செய்து கொண்டே இருப்பது மனிதனுக்கு முடிகிற காரியமா? அவனுக்குச் சோர்வு வராதா? எவ்வளவோ பேர்கள் முயற்சிகளைச் செய்திருந்தும், ''நாங்கள் நினைத்தபடி வெற்றி பெறவில்லை'' என்று சொல்லி வருந்துவதை நாம் கேட்பதில்லையா? அவர்களுடைய கைக்குள்ளே அகப்படாத ஏதோ ஒன்று, முயற்சியிலே வெற்றி கிடைக்காமற் பண்ணு கிறது; அதனால் அவர்களுக்குச் சோர்வு உண்டாகிறது.

எவ்வளவு ஆற்றல் உடையவர்களாக இருந்தாலும் அது சமயத்துக்கு உதவுவதில்லை. அப்படியே பொருள், கல்வி, ஆள்பலம் இருந்தாலும்கூட எப்போதுமே கைகொடுத்து உதவுவதில்லை. அத்தகைய சமயங்களில் மனிதன் படும் பாடு பார்க்கச் சகிக்காது.

ஆனால் வேறு ஒருவகை மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆற்றல் இருக்கிறதோ இல்லையோ, பொருள் இருக்கிறதோ இல்லையோ, நமக்குத் தெரியாது; நம்பிக்கை இருக்கிறது; அது உறுதியாக இருக்கிறது. மனிதர்களிடத்திலும் உலகத்திலும் நம்பிக்கைதான். ஆனால் அது நேர் முகமாக அவர்களிடத்தில் இல்லை. உலகைப் படைத்த ஆண்டவனிடத் தில் அவர்களுக்கு இடைவிடாத நம்பிக்கை; என்றும் தளராத அன்பு. அந்த அன்பினால் அவனுடைய குழந்தைகளே இவ்வுலகத்து உயிர்கள் என்ற எண்ணம் வளர்கிறது. உள்ளத்தில் சர்வஜீவ தயை உண்டாகிறது. அதனால் உலகம் முழுவதும் அவர்களுக்கு வசப்பட்டுப் போகிறது.

தன்னுடைய கையிலே லட்சக்கணக்கான பணத்தை வைத்திருக்கிறான் ஒரு செல்வன்; ஆயிரம் ஏகரா நிலம் இருக்கிறது; வீட்டில் மூட்டை மூட்டையாக நெல் இருக்கிறது. ஆனால் அவன் ஒரு கவளம் அன்னம் உண்பதில்லை; உண்ணமுடிகிறதில்லை. ஏன்? அவனிடம் எத்தனை பண்டங்கள் இருந்தாலும் அவற்றை நுகரும் புண்ணியம் இல்லை. பெட்டி நிறையப் பணத்தை வைத்துப் பூட்டிக் கொடுத்து விட்டுச் சாவி கொடுக்காமல் மறந்துவிட்டால் அவன் என்ன செய்வான்? அப்படி இருக்கிறது அவன் நிலை.

இந்த வேடிக்கையையெல்லாம் கண்டுதான் இந்த நாட்டுப் பெரியவர்கள் எதை ஈட்டினாலும் ஈட்டாவிட்டாலும் இறைவன் அருளை ஈட்டினால்தான் மற்றவை பயன்படும் என்று உணர்ந்து மற்றவர்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள்.

★

சிதம்பரத்துக்குத் தில்லை என்று தமிழில் பெயர் உண்டு. தில்லை என்பது ஒரு மரத்தின் பெயர்; அது அந்தத் தலத்தின் விருட்சமாக இருப்பதால் ஊருக்கும் தில்லையென்ற பெயர் வந்தது. தில்லை வனம் என்றும் சொல்வார்கள்.

எல்லாத் தலங்களிலும் சிவாலயத்தில் நடராஜமூர்த்தியைக் காணலாம். இந்த நடராஜமூர்த்திகள் அனைவருக்கும் மூலமாகிய மூர்த்தி சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி. நடராஜர் என்றாலே சிதம்பரத்தின் நினைவுதான் வரும். அவ்வளவு சிறப்பான அந்தத் தலத்தைக் கோயில் என்று சொல்வது சிவனடியார்களுக்கு வழக்கம். எல்லாக் கோயில் களிலும் சிறந்தது அது; ஆகையால் அதை ஒரு சிறப்பும் சேர்க்காமல் கோயில் என்று சொன்னாலே போதும். அங்கே இறைவன் நடராஜனாக எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சிற்றம்பலம் என்று பெயர்; திருச்சிற்றம்பலம் என்பார்கள்.

தேவாரத்தை முறையாக ஓதுபவர்கள், எந்த ஊர்த் தேவாரத்தை ஓதினாலும். ''திருச்சிற்றம்பலம்'' என்று சொல்லித் தான் தொடங்குவார்கள். அதைச் சொல்லியே நிறை வேற்று வார்கள். வேதத்தை ஓதுபவர்கள் முதலில் ''ஓம்'' என்று சொல்லித் தொடங்கி, முடிக்கும்போதும் ''ஓம்'' என்று சொல்லி முடிப்பார்கள். தேவாரம் தமிழ் வேதம். வேதத்துக்கு எத்தனை

மதிப்பு உண்டோ, அத்தனை மதிப்பைத் தேவாரத்துக்குத் தமிழ் மக்கள் கொடுத்திருக்கிறார்கள்; இறைவனே அந்த மதிப்பு அதிகமாகும்படி செய்தருளியிருக்கிறான். அந்தத் தமிழ் வேதத்தை ஓதும்போது, பிரணவத்தைப்போலத் திருச்சிற்றம் பலம் என்பதை முதலிலும் முடிவிலும் சொல்கிறார்கள். எங்கே இருந்தாலும் திருச்சிற்றம்பலத்தை நினைந்து வழிபடுவது இன்றியமையாதது என்ற கருத்தை இந்த வழக்கம் தெளி வாக்குகிறது.

இவ்வளவு பெருமையை உடைய சிதம்பரத்தில் மூவாயிரம் அந்தணர்கள் இறைவனைப் பூசித்து வந்தார்கள். இப்போது மூவாயிரவர் இல்லாவிட்டாலும் 'தில்லை மூவாயிரவர்' என்றே அவர்களைச் சொல்வது வழக்கம். அவர்கள் செய்யும் பூசையை இந்தக் காலத்தில் போய்ப் பார்த்தாலும் மிகமிகச் சிறப்பாக இருக்கும். ஒரு நாளாவது இந்தப் பூசை வழிபாடுகள் எப்படி நடக்க வேண்டுமோ, அந்த முறையினின்றும் தவறுகிறதே இல்லை.

ஒருநாள் நான் ஒரு தீட்சிதரிடம் பேசிக் கொண்டிருந்தேன். தில்லைவாழ் அந்தணர்களைத் தீட்சிதர்கள் என்று சொல் வார்கள். ஒவ்வொரு தீட்சிதருக்கும் நடராஜப்பெருமானைப் பூசிக்கும் முறை உண்டு. அப்போது கோயிலைப் பற்றிய வழக்கு ஒன்று நடைபெற்று வந்தது. அதைப்பற்றி முன்னே சொன்ன தீட்சிதர் பேசிக் கொண்டிருந்தார். பேச்சுக்கு நடுவில் அவர், ''நாங்கள் எல்லாம் ஏழைகள்; எங்களுக்குச் சோறு போடுகிறவர் நடராஜர். அவரே எங்களுடைய செல்வம். அவரை விட்டுவிட்டு, அவரைப் பூசை புரியும் எங்கள் உரிமையை இழந்துவிட்டு, நாங்கள் எப்படி வாழ்வோம்!'' என்றார். அதைக் கேட்டபோது என் கண்ணில் நீர் வந்துவிட்டது. 'கடவுள் நம்பிக்கை எவ்வளவோ குறைந்து போன இந்தக் காலத்திலும் இவர்களுக்கு நடராஜாவினிடம் இத்தனை நம்பிக்கை இருக்குமானால், பழங் காலத்தில் பெரியவர்களுக்கு இருந்த நம்பிக்கை எவ்வளவு சிறந்ததாக இருக்கவேண்டும்!' என்று எண்ணினேன்.

இன்றைக்கும் சிதம்பரத்தில் நிவேதனங்களுக்குப் பஞ்சம் இல்லை. தீட்சிதர்களுக்கு நடராஜா சோறும், பொன்னும் அருள்

செய்துகொண்டுதான் இருக்கிறார். போய்த் தரிசிக்கிற அடியார் களுக்கும் பிரசாதம் கிடைக்கிறது; நம்பிக்கை இருந்தால் மற்றவையும் கிடைக்கும்.

★

அப்பர் சுவாமிகள் தில்லைச் சிற்றம்பலத்தின் பெருமையைச் சொல்ல வருகிறார். ''அந்த வீட்டுக்குப் போனால் என்ன குறைச்சல்? வேண்டியமட்டும் சாப்பிடலாம்'' என்று சில பெரிய மனிதர்கள் வீட்டைப்பற்றிச் சொல்லுவதை நாம் கேட்டிருக் கிறோம். வீட்டுக்கு உடையவர் நல்ல அன்ன தாதா. அதை அந்த வீட்டின்மேல் வைத்துச் சொல்கிறது வழக்கம். அதுமட்டும் அல்ல; பசிக்கிறவர்கள் அந்த வீட்டுக்காரரைப் போய்ப் பார்த்து, ''ஐயா, சோறு போடுங்கள்'' என்று கேட்க வேண்டிய அவசியமே இல்லை. வீட்டுக்குள்ளே சென்றாலே போதும்; அங்கே இருப்பவர்கள், ''வாருங்கள் சாப்பிட'' என்று அழைப்பார்கள். அந்த வீடு முழுவதும் அன்னதானக் காற்று வீசும். தில்லைச் சிற்றம்பலமும் இப்படித்தான் இருக்கிறதாம். திருநாவுக்கரசர் சொல்கிறார்.

''சோறு, சோறு என்று பறக்கிறாயே! இங்கே வா. தில்லைச் சிற்றம்பலத்தைப் பார். எத்தனை பேருக்கு இங்கே சோறு கிடைக்கிறது பார்த்தாயா? நிலமாகக் கொடுத்தால் உழவேண்டும்; நெல்லாகக் கொடுத்தால் குற்றவேண்டும்; அரிசியாகக் கொடுத்தால் சமைக்கவேண்டும். தில்லைச் சிற்றம்பலம் அன்னமாகக் கொடுக்கிறது'' என்று சொல்கிறார்.

உடம்பு படைத்த மனிதன் அந்த உடம்பைப் பாதுகாக்கச் சோறு உண்கிறான். அதற்காக என்ன என்னவோ காரியங்களைச் செய்கிறான். 'அன்ன மயம் பிராண மயம்'' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். சங்ககாலப் புலவர் ஒருவர்,

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்''**

---

* *புறநானூறு, 18, 'உணவு கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவர் ஆவார். உணவால் உளதாகிய பிண்டம் இவ்வுடம்பு. இது உணவை ஆதாரமாக உடையது' என்பது இதன் பொருள்; இதைப் பாடினவர் குடபுலவியனார்.*

என்று சொல்கிறார். அவர் ஓர் அரசனைப் பார்த்து, ''நீ எல்லோருக்கும் உணவு கிடைக்கும்படி நீர் நிலைகளுக்குக் கரை போட்டும், அணை கட்டியும் நீரைச் சேமிக்க வேண்டும்'' என்று சொல்கிறார். நீரைச் சேமித்தாலும் எல்லோருக்கும் சோறு கிடைப்பதில்லை. பணக்காரர்கள் கையில் நிலமும் பொருளும் அடங்கிவிடுகின்றன. விளைந்தாலும் விளையாவிட்டாலும் ஏழைகளுக்கு எப்போதும் பஞ்சந்தான். அவர்களுக்குச் சோறு போடுகிறவன் தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமான்.

அப்பர் சுவாமிகள், ''தில்லைச்சிற்றம்பலம் யாவருக்கும் அன்னத்தைப் பாலிக்கும்'' என்று சொல்கிறார். ஏழைகளா னாலும் சரி; செல்வர்களானாலும் சரி; அவர்கள் வயிற்றிலே அன்னம் விழும்படி செய்வது இறைவன் திருவருள்தானே?

சோற்றின் மறைவிலே நாம் வாழ்கிறோம். நமக்கு முன்னே சோற்றைக் குவித்துவிட்டால் மற்ற ஒன்றையும் நாம் பார்க்கமுடியாது, புறக்கண் முன்னே சோற்றுக்குவியல் இல்லை. ஆனால் மனக்கண்முன் அது நிற்கிறது. சதா அதையே நினைத்துக்கொண்டிருக்கிறோம். உடம்புக்கு வேண்டிய எல்லாமே சோறும் அதற்கு இனமான நுகர் பொருளும் என்று சொல்லிவிடலாம். அந்த நுகர் பொருளையெல்லாம் வாங்கித் தருவது பொன். சோறு, பொன் என்னும் இரண்டும் கிடைத்தால் இவ்வாழ்வுக்கு வேண்டிய எல்லாவற்றையும் பெற்றதாக முடியும். அந்தப் பொருள்கள் இல்லையே என்ற கவலை, வேண்டும் என்ற ஆசை, அவற்றை எப்படிப் பெறலாம் என்ற யோசனை, பெறுவதற்கு உரிய முயற்சி, அதிலே தளர்ச்சியும் கவலையும், வெற்றி பெற்றால் கிடைத்த பொருள்களைக் காப்பாற்றுதல், அவை குறைந்துவிடுமே என்ற கவலை மறுபடியும் அவற்றிற்காக முயற்சி பண்ணுதல் - இப்படி ஒன்றன்பின் ஒன்றாகச் சக்கரம்போலச் சுற்றுகிற செயல்களிலே நாம் ஈடுபட்டு நிற்பதுதான் வாழ்க்கையாகி விட்டது. இந்தச் சக்கரத்தின் ஆரைகளாக முயற்சிகளும் அனுபவமும் இருந்தாலும் சக்கர முழுவதற்கும் அன்னசக்கரம் என்று பெயர் வைத்துவிடலாம். அதன்மேல்தான் உடம்பாகிய வண்டி ஒடுகிறது. சக்கரத்தைத் தள்ளிவிட்டு வண்டியை நகர்த்துகிறோம். இதற்கு அச்சு எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை.

''இதோ பார் அச்சு'' என்று காட்டுவதைப்போலச் சொல்கிறார் அப்பர்.

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்.

★

வாழ்க்கையின் தேவைகளைச் சுருக்கிச் சொன்னால் உண்டி, உடை, உறையுள் என்று மூன்றில் அடக்கிவிடலாம். உண்டிதான் அன்னம்; மற்ற இரண்டும் சொன்னத்தால் கிடைக்கும். ஆதலின் அந்த மூன்றையும் அன்னம், சொன்னம் என்ற இரண்டிலும் அடக்கி விடலாம். அன்னம் எல்லோருக்கும் வேண்டும்; அது இல்லாவிட்டால் வாழவே முடியாது. அதற்குமேல் பொருள் இருந்தால் எல்லா வகை வளமும் பெறலாம். அன்னம் வாழ்வுக்கு இன்றியமையாதது; சொன்னம் வாழ்வின் பெருக்கத்துக்கு வேண்டியது. இரண்டும் ஒருங்கே கிடைத்தால் மனிதன் குறையின்றி வாழ்வான். இதனை அறிந்தே பழம் புலவர் ஒருவர்,

''நெல்பல பொலிக! பொன்பெரிது சிறக்க''[*]

என்று வாழ்த்துகிறார்.

தில்லைச் சிற்றம்பலம் மனிதர்களுக்கு வளவாழ்வு பாலிக்கு மென்கிறார் நாவுக்கரசர். 'அன்னம் பாலிக்கும்; அதற்குமேல் பொன்னும் பாலிக்கும்'' என்று அருளிச் செய்கிறார்.

பொன் என்பதைப் பொன்னம் என்று சொல்கிறார். சில சொற்களுக்கு அம் என்ற சாரியையைச் சேர்த்துச் செய்யுளிலே சொல்வது வழக்கம். திரு என்பதைத் திருவம் என்று புலவர்கள் செய்யுளில் அமைப்பார்கள். அது போலப் பொன் என்பதைப் பொன்னம் என்று சொல்கிறார் வாகீசர். தங்கம் என்று நாம் சொல்கிறோமே, அதுபோல அம் என்று முடியும்படி சொல்வது, கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ''அன்னம் பாலிப்பதற்கு மேலே பொன்னமும் பாலிக்கும்'' என்று மனிதனுடைய வாழ்வின் ஆதாரங்களை அறிந்து சொல்கிறார் திருநாவுக்கரசர்.

பொன்னம் பாலிக்கும் மேலும்.

★

---

[*] ஐங்குறுநூறு, 7.

''தில்லைச்சிற்றம்பலம் அன்னத்தைத் தரும்; பொன்னைத் தரும்'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினால், ''நம்முடைய வாழ்க்கைக்குப் பயன் சோறு தின்றுவிட்டுச் சுகமாக வாழ்வதுதான்'' என்று தோன்றிவிடும் அல்லவா? நிலமும் திருவும் படைத்த பணக்காரர்கள் எல்லோருமே சுகமாக இருக்கிறார்களா? சோற்றுக்கும் பொன்னுக்கும் அப்பாலே, அந்தச் சுகம் என்பது எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறது.

அன்னமும் பொன்னும் இருந்தால் உடம்புக்குச் சுகம் கிடைக்கும். ஆனால் இன்பம் என்பது உடம்பின் சுகம் மாத்திரம்அன்று. இன்பம் துன்பம் என்ற இரண்டுமே மனத்திலே தோன்றும் அநுபவங்கள். அவை உடம்பின் மூலமாக வரலாம். நாவுக்கு இனிய தேனை உண்டால் இன்பம் உண்டாகிறது. அந்த இன்பம் உண்டாகும் இடம் மனம். அளவற்ற துக்கத்திலே ஆழ்ந்து கிடக்கிறவன் வாயிலே தேனைச் சொட்டினால், அது தித்திப்பாகத்தான் இருக்கும்; ஆனாலும் அதனால் அவனுக்கு இன்பம் உண்டாகாது. காரணம், அவன் மனம் சரியாக இல்லை.

ஆதலின் புறத் தேவையாகிய உணவும் பொருளும் வந்துவிட்டால் மனிதனுக்குப் போதா. உள்ளத்திலே அமைதி வேண்டும். அப்போதுதான் இன்பம் உண்டாகும். உயிரை உடம்போடு வைத்துக் காப்பாற்றுவது உணவு; பலவகைப் போகங்களை நுகரத் கருவியாக இருப்பது பொருள். இந்த இரண்டும் உயிரைப் போகாமல் நிறுத்தி வைக்குமேயன்றித் துயரமின்றிச் செய்யாது. அதற்கு இறைவன் அருள் வேண்டும். அந்த அருளைப் பெறுவதற்கு அவனிடம் அன்பு செய்ய வேண்டும். அந்த அன்பே எல்லா உயிர்களையும் நேசிக்கும் அன்பாக விரியும். இறைவனிடம் அன்புடையவர் எல்லா உயிர்க்கும் அன்புடையாராக இருப்பார். இப்படி அன்பு பெருகுவதால் அவருடைய உயிருக்கு இன்பம் உண்டாகும்.

> ''அன்பைப் பெருக்கிஎன் ஆருயிரைக் காக்கவந்த
> இன்பப் பெருக்கே இறையே பராபரமே''

என்பது தாயுமானவர் வாக்கு. அன்பு பெருகப் பெருகத் துன்பம் சுருங்கும்; இன்பம் வளரும். உடம்பை வளர்ப்பதற்கு உணவும்

பொன்னும் பயன்படும். அந்த உடம்பைக்கொண்டு அன்பை வளர்க்க வேண்டும்.

"அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்று வள்ளுவர் கூறுகிறார்.

நெல்லும் பொருளும் கிடைக்கும் இடம் தில்லைச் சிற்றம்பலம். அங்கேயே அன்பும் கிடைக்குமாம்.

எல்லோருக்குமே இறைவன் அன்பை வைத்திருக்கிறான். அதை எங்கெங்கோ வைத்து மாசுபடுத்திவிடுகிறோம். அதை மேலும் மேலும் வளர்ப்பதில்லை. ''உலகத்திலுள்ள மக்கள் எல்லாரும் நம் உடன் பிறந்தவர்கள்'' என்று மேடையின்மீது ஆரவாரிப்பவர்களைப் பார்க்கிறோம். உண்மையில் அவர்கள் உள்ளத்திலே அந்த நினைவு இருக்கிறதா? ஒரு வீட்டுக்குள் வாழும் உடன்பிறந்தவர்களிடம் அன்பு செய்யத் தெரியாதவன் ஊரில் உள்ளவர்களைச் சகோதரர்களாகக் கருதி வாழ முடியுமா?

சகோதர பாசத்துக்கு மூலம் தாய் அன்பு. நமக்குத் தாயிடத்தில் பற்று, குழந்தையாக இருக்கும்போது ஏற்படுகிறது. பிறகு தகப்பனிடம் அது பரவுகிறது. தாய் தந்தையரிடம் உள்ள அன்பே பின்பு நம்மைப்போலவே அவ்விருவர்பாலும் உரிமையுடைய சகோதரர்களிடம் பரவுகிறது. மற்றவர்களிடம் அவ்வளவு அன்பு உண்டாகிறதில்லை.

ஒருவனுக்கு அண்ணன் இருந்தான். ஆனால் அவன் சிறு பிராயத்திலே வீட்டைவிட்டுப் போய்விட்டான். தாய் அடிக்கடி தம்பியிடம், ''உனக்கு ஓர் அண்ணன் இருந்தான்; அவன் எங்கேயோ போய்விட்டான். அவன் இப்போது எங்கே இருக்கிறானோ?'' என்று சொல்கிறாள். பல காலம் கழித்துத் தம்பி வேறே ஓர் ஊருக்குப் போகிறான். அங்கே ஓரிடத்தில் ஒருவனைச் சந்திக்கிறான். அவன் மிகவும் ஏழை; கந்தையைக் கட்டிக்கொண்டிருக்கிறான். இவனிடம் வந்து ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்கிறான். ''ஏன் அப்பா, இப்படிப் பிச்சை எடுக்கிறாய்? ஏதாவது தொழில் செய்யக்கூடாதா?'' என்று இவன் சொல்கிறான் அந்த ஏழை ஏதோ பதில் சொல்கிறான். அவன் பேச, இவன் பேச அவர்களுடைய பேச்சு

விரிகிறது. இவன் அவனுக்கு ஒன்றும் கொடுப்பதாக எண்ணவில்லை. ஆனால் பேச்சு விரிய விரிய அவன்தான் ஓடிப்போன தன் அண்ணன் என்று தெரியவருகிறது. அப்போது தம்பிக்கு எத்தனை ஆனந்தம் உண்டாகும்! உடனே தன் பெட்டியிலிருந்து ஆடையை எடுத்துக்கொடுத்துக் கட்டிக் கொள்ளச் சொல்கிறான். நல்ல உணவு கிடைக்கச் செய்கிறான். ஊருக்கு அழைத்துச் செல்கிறான். அண்ணன் என்று தெரிகிற வரைக்கும் அவனுக்கு உதவி செய்ய நினைக்கவில்லை; தெரிந்த பிறகு அன்பு உண்டாகிவிடுகிறது. இது மனித சுபாவம்.

அப்படியே மற்ற உயிர்கள் நம்முடைய சகோதரர்கள் என்று உணர்ச்சி வரவேண்டுமானால் அதற்கு முன் வேறு ஓர் உணர்ச்சி உண்மையாக உண்டாகி உரப்படவேண்டும். சகோதரன் என்பதற்கு ஒரு வயிற்றிலே பிறந்தவன் என்பது பொருள். தனக்கும் தன் சகோதரனுக்கும் இடம் தந்த வயிறுடையவள் ஒரே அன்னை என்ற நினைவு முதலிலே தோன்றி, அந்த அன்னையிடம் அன்பு உண்டாக, அப்பால் சகோதரன் என்ற நினைவும் சகோதர பாசமும் உண்டாகும். அதுபோல, எல்லோருக்கும் ஒரே தாயும் பிதாவுமானவன் இறைவன் என்ற உணர்ச்சியும், அவனிடத்திலே அன்பும் வளர்ந்தால் உயிர்களிடத்தில் அன்பு உண்டாகும். ஆதலின் இறைவனிடத்தில் உள்ள அன்பை வளர்த்தால் உயிர்கள் அனைத்துக்கும் அன்புடையவர்களாகும் நிலை தானே வரும்.

உடம்பைக் கொண்டு அன்பை வளர்த்தால் இன்பம் உண்டாகும்; அதற்குச் சிற்றம்பலம் உதவிபுரியும். அங்கே இறைவனுடைய தரிசனத்தைக் கண்டுவிட்டால், உள்ளம் வேறு ஒன்றையும் நாடாது.

மனிதனுடைய உள்ளத்திலே இறைவன் அன்பு விதையை நட்டிருக்கிறான். அதை முளைக்க விடாமல், ஈரமே சிறிதும் படாமல் வைத்திருப்பதால் அது வளர்வதில்லை; அருள் மழை பொழியும் சிற்றம்பலத்துக்குச் சென்றால் அந்த வித்து முளைக்கும்; வளரும்; படரும்.

அப்பர் சொல்கிறதைக் கேட்கலாம். அன்னமும் சொன்னமும் வழங்கும் சிற்றம்பலம் அன்பையும் வளரப் பண்ணுகிறதாம். சிற்றம்பலத்தைக் கண்டால் நீர் பெற்ற

வயலில் நெல் விளைந்து சலசலவென்று ஒலி செய்வதுபோல அன்பும் நன்றாக விளைந்து ஆலிக்குமாம்.

என் அன்பு ஆலிக்கு மாறுகண்டு.

சிற்றம்பலத்தைக் கண்டால் முன்பே உள்ளே புதைந்திருந்த அன்பு எழுந்து பரந்து கூத்தாடி ஆரவாரிக்கிறதாம். அன்பு ஆலிக்கும்படியாகக் கண்டால் வரும் பயன் என்ன? அன்பினால் இன்பம் ஆர்வதை அறிந்தவர் அப்பர். ''நான் சிற்றம்பலத்தைக் கண்டால் என் அன்பு ஆலிக்கும்; அதனால் இன்பம் உண்டாகும். என்கிறார்.

என் அன்பு ஆலிக்கு மாறுகண்டு இன்புற.

★

அன்னம் பாலிக்கும் அம்பலம் அது; பொன்னம் பாலிக்கும் பொன் மன்றம் அது; அன்பை ஆலிக்கச் செய்யும் அருள் நிலையம் அது. அதை அடைந்து கண்டு அன்னமும் சொன்னமும் அடையலாம்; அவற்றிற்குமேல் அன்பு வளர்ச்சியைப் பெறலாம்; பெரிய இன்பத்தை அடையலாம். அன்னம் கிடைத்தால் அப்போதைக்குப் பசி அடங்கும்; பொன் கிடைத்தால் ஓரளவு குறை நீங்கும். ஆனால் இவ்விரண்டோடு நின்றால் வாழ்வு இன்ப வாழ்வு ஆகாது. அன்பு பெருகினால்தான் இன்பம் உண்டாகும். சிற்றம்பல தரிசனத்தால் அன்பு பெருகும்போது உண்மையான இன்பம் உண்டாகும்.

திருச்சிற்றம்பல தரிசனம் கண்ட நாவுக்கரசர் அதன் பெருமையை இவ்வளவு நன்றாக எடுத்துச் சொன்னார். இதற்குமேல் மிக அருமையாக ஒன்று சொல்கிறார். அதுதான் அவருடைய அன்பின் நுட்பத்தை வெளியிடுகிறது.

கடவுளை வணங்குபவர்கள், ''இந்த உலக வாழ்வு வேண்டாம்; இந்த உடம்பு வேண்டாம்'' என்று சில இடங்களில் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய இடங்களை மாத்திரம் கண்டு, ''அவர்களுக்கு எப்போதும் அழுகைதான்; உலகத்தைக் கண்டால் வெறுப்புத்தான்'' என்று நினைத்துவிடக் கூடாது. இந்த உலகத்தில் நன்றாக வாழத்தெரிந்தவர்கள் நம்முடைய முன்னோர்கள்; பொருளை ஈட்டி வாழ்ந்தவர்களைக்

காட்டிலும் இறைவனுடைய அருளை ஈட்டி மிகமிக இன்பமாக வாழ்ந்தார்கள். இந்த உலகத்திலேயே முத்தி யின்பத்தை அடையலாம் என்ற நம்பிக்கையும், அநுபவமும் வாய்ந்தவர்கள் அவர்கள்.

''இதெல்லாம் பிற்காலத்தில் சமயப்பற்று மிகுதியாக வந்தபோது உண்டான கொள்கை'' என்று அரை குறை ஆராய்ச்சியின் பயனாகச் சிலர் கூறுவதுண்டு. சங்ககால நூலாகிய திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், இந்த உலகத்தில் வாழும்போதே இணையில்லாத இன்ப நிலையாகிய சீவன் முத்தியை அடையலாம் என்று சொல்கிறார்.*

தில்லைச் சிற்றம்பலத்திற்குச் சென்று இறைவனுடைய தரிசனம் பெற்று அன்பை வளர்த்து இன்புற்றால் இந்த மனிதப் பிறவியே முத்தியின்பத்தை அடையும் நிலையைப் பெற்று விடுகிறது. அந்த இன்ப நிலையில் இருந்து பேசுகிறவர் களுடைய உணர்ச்சி நமக்கு எளிதிலே விளங்காது. சின்னக் குழந்தைக்குக் காதலின்பம் தெரியுமா? எவ்வளவுதான் புத்தகங்கள் வாசித்தாலும், நாடகங்களைப் பார்த்தாலும் பருவம் வராத வரையில் தெரியாது. சிற்றின்பம் என்று சொல்கிற இதுவே அத்தகையதானால் புலன்களுக்கு எட்டாத அந்தப் பேரின்பத்தை உணர்வதற்குப் பெரிய தகுதி வேண்டாமா?

அப்பரைப் போன்றவர்கள் அந்தத் தகுதி பெற்றவர்கள். சிற்றம்பல தரிசனம் கண்ட மாத்திரத்தில் அவர்கள் உயிரிலே இன்பம் பாய்கிறது. மின்சாரத் தாக்குதலைப் போல விளைந்த அந்த ஆனந்த அதிர்ச்சியிலே, ''இப்படியே இருந்து விட மாட்டோமா!'' என்று ஏங்குகிறார்கள்.

''பூவுலகத்துக்குப் புறம்பே இன்ப உலகம் இருக்கிறதா, இல்லையா என்ற ஆராய்ச்சி இப்போது வேண்டாம். கண்கூடாக நான் இன்பத்தை இவ்வுலகத்திலேயே நுகர்கிறேன். இந்தப் பிறவியினால் எப்போதும் துன்பமே உண்டாகிறது என்று சொல்கிறவர்கள் பலர். நானும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது அது தவறு என்று தோன்றுகிறது. பட்டினி கிடக்கிறவன் சோறு கிடைக்காமை

---

*'*வழிகாட்டி*' *என்னும் புத்தகத்தில் இதை விரிவாகக் காணலாம்.*

யால், 'பாழும் வயிறே!' என்று தன் வயிற்றை வைகிறான் நல்ல சாப்பாடு கிடைத்தால் அதை உண்ணுவதற்கு ஏற்றபடி வலியில்லாத வயிறு இருப்பதை எண்ணி அவன் மகிழ்ச்சியே அடைவான். அப்படி இறைவனுடைய தரிசனத்தால் நான் அடையும் இன்பம் உயிரைக் குளிர்விக்கும் இன்பமாக இருப்பதனால், இந்த உடம்பினால் வந்த துன்பத்தையே மறந்துவிடுகிறேன். இந்த உடம்பு இருப்பதனாலல்லவோ இங்கே வந்து என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற முடிகிறது? இதற்கு முன்பு இந்த உடம்பை எடுத்தேனே என்று இரங்கினேன். இப்போது 'இந்த உடம்பு எடுத்தேனே; எவ்வளவு நல்ல காரியம்!' என்று மகிழ்ச்சி அடைகிறேன். அது மட்டுமா? இந்தப் பிறவிக்கு ஓர் எல்லை உண்டல்லவா? அந்த எல்லையை அணுகி இப் பிறவி தீர்ந்தாலும் மறுபடியும் இப் பூவுலகில் வந்து பிறந்து சிற்றம்பலத்தைக் கண்டு மீட்டும் இன்புற வேண்டுமென்று தோன்றுகிறது.''

அப்பர் சுவாமிகள் இப்படிச் சொல்கிறார். இவ்வளவு விரிவாகச் சொல்லாவிட்டாலும் இப்படி யெல்லாம் நினைத்து நினைத்துப் பிறகு சுருக்கமாகச் சொல்கிறார். 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் அதற்கு மேலும் பொன்னம் பாலிக்கும்; அதைத் தரிசித்தால் அன்பு ஆலிக்கச் செய்யும்; அதைக் கண்டு இன்புற இப் பூமிசை இன்னம் இப் பிறவியைப் பாலிக்குமோ!' என்கிறார்.

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்;
பொன்னம் பாலிக்கும் மேலும்;இப் பூமிசை
என் அன்பு ஆலிக்கு மாறுகண்டு இன்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே!

(அன்னத்தை வழங்கிக் காப்பாற்றும் தில்லைச் சிற்றம்பலம்; அதற்கு மேலும் பொன்னை வழங்கும்: என்னுடைய அன்பு வளர்ந்து பொங்குமாறு அதனைக் கண்டு இன்புறும்படியாக இந்த மனிதப் பிறவியை இன்னம் எனக்கு அது வழங்குமோ?

அன்னம் - சோறு. பாலித்தல் - வழங்குதல், பாதுகாத்தல்; இங்கே வழங்கிப் பாதுகாத்தல் என்று கொள்க. தில்லை, ஊரின் பெயர்; சிற்றம்பலம், இறைவன் எழுந்தருளியிருக்கும் நடன சபைக்குப் பெயர். பூமிசை - நிலவுலகத்தில். ஆலிக்குமாறு - ஆரவாரிக்கும்படி;

என்றது இங்கே வளர்ந்து பயன் பெறுவதைச் சுட்டியது. கண்டு - தரிசித்து. சிற்றம் பலத்தைக் கண்டால் அன்பு ஆலிக்கும்; அதனால் இன்பம் உறும். இன்னம் - இனிமேலும், இப் பிறவி - கண்டு இன்புறுதற்கு ஏதுவான மானிடப் பிறவி.)

பலர் துன்பப் பிறவி என்று குறை கூறும் மனிதப் பிறவியை இன்பப் பிறவியாகக் காணுகிறார் அப்பர். தில்லைச் சிற்றம்பலத்தில் நடராஜப் பெருமானுடைய காட்சியினால் உண்டாகும் ஆனந்தம் அவரை அத்தகைய நிலையில் வைத்து விடுகிறது.

குனித்த புருவமும் கொவ்வைசெவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியும்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே.*

என்று கூறும் பெருமான் அவர். தில்லைச் சிற்றம்பலத்தைக் கண்டு இன்புறுவதற்காக இப்பிறவி மீண்டும் வேண்டும் என்கிறார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைச் சிற்றம்பலத்துக்கு வந்து தரிசித்தபோது அவர், 'இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின், வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.' அப்போது திருநாவுக்கரசருக்கு உண்டான ஆனந்த அதிர்ச்சி அவருக்கும் உண்டாயிற்று. 'இப்படியே இருந்துவிடலாமே!' என்று அவர் உள்ளம் எண்ணியது போலும்! உணர்ந்தும் ஓதற்கரிய இன்ப நுகர்ச்சியிலே கரைந்து போன அவர் அதைச் சொல்லாவிடினும், நாயன்மார் உள்ளப் பண்புகளைத் தெரிந்து தம் இனிய பாடலில் எடுத்துக் காட்டும் தெய்வப் புலவராகிய சேக்கிழார் சொல்கிறார்.

** 4-ஆம் திருமுறை, 81 - ஆம் பதிகம், 4- ஆம் பாசுரம்.*

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.''*

அப்பர் சுவாமிகள் இந்தப் பிறவியையே இன்பப் பிறவியாகக் கண்டார். அவர் போன்ற அன்பர்களும் மண்ணிலே வந்த பிறவியைத் தூய இன்பமுடையதாகக் கண்டார்கள். 'இப்பிறவி வேண்டாம்' என்ற கூட்டத்தாரோடு சேராமல், 'இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே!' என்று சொல்லும் நிலை அவர்களுக்கு இருந்தது.

''அன்னம் பாலிக்கும்!'' என்ற பாசுரம், ஐந்தாந் திருமுறையில் முதற் பதிகத்தின் முதற்பாட்டாக உள்ளது.

★

* *பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், 107.*

தவ மகள்

''இந்தா, இந்தப் பாலைக் கொஞ்சம் குடி'' என்றாள் தாய்.

''பாலும் வேண்டாம்; மோரும் வேண்டாம்'' என்று எரிந்து விழுந்தாள் இளம் பெண்.

''இரண்டு பழமாவது சாப்பிடமாட்டாயா?'' - மறுபடியும் தாய் வருந்திக் கேட்டாள்.

''எனக்கு ஒன்றுமே வேண்டாம். ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்?'' என்று அவள் அலுத்துக் கொண்டாள்.

அவளை அன்புடன் வளர்த்த செவிலித் தாய் வந்தாள்; ''என்ன இது, தலையைக்கூட வாரிப் பின்னிக் கொள்ளாமல் இருக்கிறாயே! முகத்தைப் பார்த்தால் வியாதிக்காரி மாதிரி இருக்கிறது. போ; முகத்தைத் துடைத்துக் கொண்டு இரண்டு வாய் சாப்பிடு'' என்றாள்.

''நீயும் வந்துவிட்டாயா? இன்னும் ஊரில் இருக்கும் பெண்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வந்து, சோறு, சோறு, சோறு என்று என் காதில் ஓதச் சொல் .... அப்பப்பா! என்ன சோறு வேண்டியிருக்கிறது? இந்த உடம்பு வாடினால் இவர்களுக்குக் கண்ணைக் குத்துகிறதாம். அவ்வளவு அக்கறை உள்ளவர்கள்! இன்னும் சாப்பிடவில்லையே என்று கேட்கிறார்களே ஒழிய, ஏன் இப்படி இருக்கிறாய் என்று கேட்கிறார்களா? நான் சாப்பிடாவிட்டால் இவர்களுக்கு என்ன? இவர்களுடைய சாப்பாட்டை நான் பிடுங்கிக் கொள்கிறேனா...?''

அவள் என்ன என்னவோ சொன்னாள்.

'இந்தப் பெண், என்ன இப்படிப் போய்விட்டாள்? எப்போதும் முக மலர்ச்சியோடு கூத்தும் பாட்டுமாக இருக்

கிறவள், இப்படிப் பலபல பேசுகிறாளே! நம்மையெல்லாம் அலட்சியமாகப் பேசுகிறாள். இவளிடத்தில் நாம் வெறுப்பாக இருப்பதுபோல எண்ணியல்லவா பேசுகிறாள்? ஏன் இப்படி?' என்று செவிலித்தாய் யோசித்துப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

தான் வளர்த்த அந்த அழகியிடத்தில் அவளுக்கு உள்ள அன்பு யாவருக்கும் தெரியும்.

ஒரு நாள் அந்தப் பெண் தனியே அமர்ந்திருந்தாள். ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள். செவிலித்தாய் சற்றுத் தூரத்தில் மறைவாக நின்று அவள் என்ன சொல்கிறாளென்று கவனித்தாள். ''ஆரூர்ப் பெருமானே! ஐயா அரனேயா!'' என்று அவள் தானே பேசிக் கொண்டிருந்தாள்; இடையிடையே பெருமூச்சு விட்டாள். ''இருந்தாடும் அழகனே! எம் பெருமானே! உன் செவ்வந்தித் தோட்டின் அழகு ஒன்றே போதுமே, என் உயிரைக் கொள்ளை கொள்ள!'' - அவள் இப்படியே பேசிக்கொண்டிருந்தாள்.

'இந்தப் பெண் யாரிடமோ உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள்' என்ற உண்மையைச் செவிலி உணர்ந்தாள். சில நாட்களுக்கு முன் அந்தப் பெண் திருவாரூருக்குப் போயிருந் தாள். செவிலித் தாய்க்குச் சொந்த மகள் ஒருத்தி இருக்கிறாள். அவள் இந்தப் பெண்ணுக்கு உயிர்த்தோழி.இவளைப் பற்றிய இரகசியமெல்லாம் அவளுக்குத் தெரியும். அந்தத் தோழியும் இந்த இளம்பெண்ணுடன் திருவாரூருக்குப் போயிருந்தாள். இது செவிலித் தாய்க்கு நினைவு வந்தது. திருவாரூருக்குப் போய் வந்ததிலிருந்தே தன் அன்புக்குரிய இந்தப் பெண் ஒருமாதிரி இருப்பதைக் கவனித்தாள். சரியாக உணவு கொள்ளாமலும், தன்னை அழகுபடுத்திக் கொள்ளாமலும் இருப்பது தெரிந்தது. இப்போது அந்த நிலை வரவரக் கடுமையாகி வருகிறதை உணர்ந்தாள். 'இதென்ன? சின்னப் பெண்; இளம் பெண் அழகுப் பொருளையெல்லாம் வாரி வாரி அணிந்து கொள்ளும் பருவம் இது. மலரும் வீணையும் நிலவும் ஆடையும் இன்பத்தைத் தரும் காலம். சுவை தெரிந்து உண்ணும் பருவம். ஒன்றும் வேண்டாம் என்று தவமகளைப்போல ஊணை ஒடுக்கி, அலங்காரம் செய்துகொள்வதைக் குறைத்துக் கொண்டு

இருக்கிறாளே!' என்ற சிந்தனையில் மூழ்கினாள். பிறகு தன் மகளும் அவளுடைய உயிர்த் தோழியுமாகிய பெண்ணைக் கேட்டாள்; ''திருவாரூரில் யாரையாவது பார்த்தாளா?'' என்று கேட்டாள்.

''ஆம்'' என்று தோழி சொன்னபோது செவிலித்தாய்க்குத் தூக்கி வாரிப் போட்டது.

''யார் அவன்?'' என்று படபடப்பாகக் கேட்டாள்.

''வீதிவிடங்கன்'' என்றாள் தோழி.

''அவன் யார்?'' என்று மீட்டும் கேட்டாள் செவிலித் தாய்.

அவன்தான் ஆரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். திருவீதியிலே அப்பெருமான் பவனி வந்தான். அப்போது அவனுடைய திருக்கோலத்தைக் கண்டாள். தன் நிலையை மறந்தாள். கீழே விழப் போனாள். நான் பிடித்துக் கொண்டேன். அவளுக்கு அது முதல் வேறு நினைவே இல்லை. கிண்கிணிக்கால் அழகனாகிய தியாகராஜப் பெருமானிடம் காதல் கொண்டு விட்டாள்'' என்று உண்மையைச் சொன்னாள்.

'இத்தனை சிறு பெண் காதல் கொள்வதா! மணல் வீடு கட்டி விளையாடினவள்; இவளா வீதிவிடங்கனைக் கண்டு காதல் கொண்டாள்? என்ன ஆச்சரியம்!' - செவிலி ஆச்சரியப் படுவதற்குக் காரணம் உண்டு. இன்னும் இந்தப் பெண் சின்னஞ்சிறு பெண் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள். நாள்தோறும் பார்த்துக் கொண்டிருப்பவர்களின் வளர்ச்சி நமக்குத் தெரிவதில்லை. சில ஆண்டுகள் பாராமல் பிறகு பார்க்கிறவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். புறவளர்ச்சியே பழகியவர்களுக்குத் தெரியாதபோது, அகவளர்ச்சி எப்படித் தெரியப் போகிறது? ஆதலால், செவிலித் தாய்க்கு, இந்த இளம் பெண்ணுக்கும் மன வளர்ச்சி உண்டு, காதல் அரும்பும் பருவம் எட்டிப் பார்க்கிறது என்ற உண்மை புலனாகவில்லை. அதனால் தான் தோழி சொன்னது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்போது செவிலிக்குத் தெளிவு பிறந்தது. அந்தப் பெண், வீட்டில் யாராவது ஏதாவது சொன்னால் வெறுப்புடன்

பேசுகிறாள்; எப்போதும் ஆரூர்ப் பெருமானைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாள்; ஊண் இல்லை; உறக்கம் இல்லை; எப்போதும் தனிமையையே விரும்புகிறாள். இந்த நிலைக்குக் காரணம் இப்போது நன்றாக விளங்கியது.

யாரோ ஒரு மாது, செவிலித் தாய்க்குத் தெரிந்தவள், அந்த வீட்டுக்கு வந்தாள். வீட்டுப் பெண்ணைப் பார்த்தாள். ''ஏன் இவள் இப்படிச் சோர்ந்திருக்கிறாள்?'' என்று கேட்டாள்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்? நன்றாக இருந்த பெண், இப்போது தவ மகளைப்போல ஆகிவிட்டாள்'' என்றாள் செவிலி.

''ஏன்? என்ன செய்கிறாள்?''

''நாங்கள் ஏதாவது சொன்னால், இவள் கேட்பதில்லை. எங்களையெல்லாம் அயலாரைப்போல எண்ணிப் பல பல பேசுகிறாள். இந்த மாதிரி சில காலமாகத்தான் பேசத் தொடங்கி யிருக்கிறாள். தனியாக இருக்கும்போது திருவாரூர்ப் பெருமானே, திருவாரூர்ப் பெருமானே என்று சொல்லி ஏங்குகிறாள்.''

''ஏன் அப்படி இருக்கிறாள்?''

''ஒருநாள் திருவாரூருக்குப் போனாள். அப்போது திருவிழாக்காலம். வீதிவிடங்கப் பெருமான் திருவீதியிலே பவனி வந்தான். அவனைத் தரிசித்தாள். அவனுடைய அழகிலே மயங்கிப் போனாள். அங்கிருந்து வந்தது முதல் இப்படி இருக்கிறாள். சோறு இல்லை, தண்ணீர் இல்லை; அழகு இல்லை, அலங்காரம் இல்லை; தவம் செய்கிற பெண்ணைப் போல ஆகிவிட்டாள். இது என்ன ஆச்சரியம்! இந்தச் சிறிய பெண்ணுக்கு இவ்வளவு காதல் எப்படி வந்தது?'' என்று செவிலித்தாய் விரித்து உரைத்தாள்.

அவள் கூறியதைத் திருநாவுக்கரசர் பாடலாகத் தருகிறார்.

இவள்ந மைப்பல பேசத் தொடங்கினாள்;
அவணம் அன்றுஎனில் ஆரூர் அரன்எனும்;
பவனி வீதி விடங்கனைக் கண்டுஇவள்
தவனி ஆயின வாறுஎன்றன் தையலே;

(இந்தப் பெண் நம்மைப் பல வார்த்தைகள் வெறுப்புடன் பேசத் தொடங்கினாள்; அப்படி இல்லாவிட்டால், தனியே இருக்கும்போது திருவாரூரில் உள்ள அரனே என்று சொல்லி ஏங்குகிறாள். திருவீதியில் பவனி கொண்டருளிய வீதிவிடங்கப் பெருமானைத் தரிசித்து என் இளம் பெண்ணாகிய இவள் தவ மகளாக ஆனது என்ன வியப்பு!

அவணம் - அவ்வண்ணம். ஒன்று எங்களை வெறுத்துப் பேசுகிறாள், இல்லாவிட்டால் திருவாரூர் அரனை விரும்பி அழைக்கிறாள் என்றபடி. எனும் - என்று பலகால் கூறுவாள். பவனி - திருவுலா. வீதிவிடங்கன்: திருவாரூர்த் தியாகராஜர் திருநாமங்களில் ஒன்று. தவனி - தவமகள்: தபஸ்வினி என்ற வடமொழியின் திரிபு. ஆயினவாறு என்னே என்று ஒரு சொல் கூட்டிப் பொருள் செய்க. பெரும்பாலும். 'ஆயினவர், ஆயினவாறு, இருந்தவர், இருந்தவாறு' என்று வருபவை வியப்பினாலும் இரக்கத்தாலும் சொல்லப் பெறுவனவாதலின், முடிபுச் சொற்கள் இல்லாமலே நின்று விடும்; முடிபை வருவித்துக் கூட்டிப் பொருள் சொல்லவேண்டும். வியப்பில் ஆழ்ந்தவர்களும் உணர்ச்சிக்கு உட்பட்டவர்களும் தாம் சொல்ல வந்ததை முற்றும் கூறாமல் இப்படி நிறுத்துவது இயல்பு என்பதை இத்தகைய இடங்கள் தெரிவிக்கின்றன. தையல் - இளம் பெண்.)*

திருவாரூர்ப் பெருமானிடம் காதல் கொண்ட காதலியின் நிலையை அவளுடைய செவிலித்தாய் எடுத்துரைப்பதாக இருப்பது இந்தப் பாட்டு. நற்றாய் கூற்றாகவும் சொல்லலாம்.

'தன்னுடைய உடலுக்கு வேண்டியவற்றை நாடித்தேடி நுகர்ந்து, மற்ற மக்களோடு உலகியலில் ஈடுபட்டு வாழும் உயிர், இறைவனுடைய உண்மையை உணர்ந்தபோது, அது காறும் விரும்பிய பொருள்களையெல்லாம் விட்டு இறைவன் மேல் உள்ள அன்பு ஒன்றையே பெருக்கித் தவவாழ்வு வாழும்' என்ற கருத்தை இந்தப் பாடல் குறிப்பாகத் தெரிவிக்கிறது.

இது ஐந்தாந் திருமுறையில் ஏழாம் பதிகத்தின் எட்டாவது திருப்பாட்டு.

★

---

* *புள்ளிருக்கு வேளூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்குப் பாலாம்பிகை என்பது வடமொழிப்பெயர்: தமிழில் தையல்நாயகி என்பர். இரண்டு திருநாமங்களையும் கொண்டு பார்த்தால் தையல் என்ற சொல்லுக்கு இளம் பெண் என்பது பொருளென்று தெளிவாகிறது என என் ஆசிரியப் பிரானாகிய ஐயரவர்கள் சொல்வார்கள்.*

எல்லாம் அவன்

''இறைவன் எங்கே இருக்கிறான்? எப்படி இருக்கிறன்?'' என்று கேட்பவர்களுக்கு அவனுடைய முழு உருவத்தையும் சுட்டிக் காட்ட இயலாது. அவன் சுட்டலாகாத பரம்பொருள். 'அவன் பெரியவன்; எல்லா உயிர்களுக்கும் ஆதாரமானவன்; எல்லாப் பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பவன்' என்று சொல்லிக் கொண்டே போகலாம். அந்த வார்த்தைகள் ஒலியளவிலே காதில்படுமே ஒழியக் கருத்திலே பதியா. ஒரு பெரியவரது பெருமையைச் சொல்லும் போது அவர் குணங்களால் மிகப் பெரியவர் என்று தெரிவிக்க நினைக்கிறோம். அப்படியே சொன்னால் மனத்தில் பதியாது. அதனால் அந்தப் பெருமையை உருவமுள்ள பொருள் ஒன்றினுடைய பெரிய அளவோடு ஒப்பிட்டுச் சொல்கிறோம். ''மலை யோன்றவர்'' என்று சொல்கிறோம். பெரியவர்களும் அப்படிச் சொல்கிறார்கள்.

> *''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
> *மலையினும் மாணப் பெரிது''*

என்ற குறளில் மலையைக் கொண்டு அடக்கமுடையவரது பெருமையை அளந்து காட்டுகிறார் வள்ளுவர். சிறுமையைக் கூட, ''அவன் கிடக்கிறான், சுண்டைக்காய்'' என்று காட்சிப் பொருளைக்கொண்டு குறிப்பிடுதல் வழக்கமாகி விட்டது. மலையென்றதனால் கல்லும் கரடும் உள்ள தன்மையை நினைக்காமல், 'அளக்கலாகா அளவும்பெருமையும்' ஆகிய இயல்பை நினைக்கவேண்டும்.

நமக்கு எந்த எந்தப் பொருள் பெரியதாக இருக்கிறதோ, அந்த அந்தப் பொருளைக் கொண்டு பின்னும் பெரிய பொருள்களின் இயல்பை அளக்கிறோம். பெரிய பொருள்களாக நாம் கண்டவை பல. மலையைப் பெரிது என்கிறோம். ஆனால்

இன்னும் பெரியது ஒன்றை நாம் பார்க்கிறோம். பல மலைகளைத் தன்னுள்ளே கொண்டிருக்கிற நிலம் மலையைக் காட்டிலும் பெரிது.

இறைவனைப் பற்றிச் சொல்லவரும் அப்பர் அவனுடைய இயல்புகளை நினைக்கிறார். அவன் உயிர்களுக்கெல்லாம் ஆதாரமாகித் தாங்குகிறான். பெரிய பொருள்களுக்கெல்லாம் பெரிய பொருளாக இருக்கிறான். பூமி பெரியது; உயிர்கள் வாழ இடம் கொடுப்பது; பெரிய மலைகளைவிடப் பெரியது. ஆகவே இறைவனை ஞாலமாகவே சொல்லிவிடலாம். அவன் ஞாலத்தைப்போல இருக்கிறான்; ஞாலமே தன் திருவுரு வாகவும் திகழ்கிறான். எனவே,

ஞாலமே!

என்ற பாடத் தொடங்குகிறார். பூமியின் சிறப்பைப் பற்றிச் சொல்லவந்த இலக்கண நூலாசிரியர் ஒருவர்,

''தெரிவுரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவம் முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்புஆ கும்மே''

என்றார். இறைவனிடம் இந்த மாண்புகள் யாவும் பெரிய அளவில் இருக்கின்றன. நிலத்தின் அளவு தெரிவதற்கு அரியதுதான்; ஆனால் அதன் அளவையும் விஞ்ஞானிகள் ஒருவாறு தெரிந்து காட்டுகிறார்கள். இறைவனோ இன்னும் அளக்கப்படாதவனாகவே இருக்கிறான்.

நிலம் திண்மையுடையது. இறைவன் எதனாலும் சலன மின்றி.த் திண்ணிய பொருளாக இருப்பவன். அதனால் அவனுக்கு நிச்சலன் என்ற திருநாமம் வழங்குகிறது. பூமி பொறையிற் சிறந்தது என்பர். தன்னை அகழ்பவரையும் அது தாங்குகிறது. இறைவனுடைய பொறுமையை நோக்கினால் வேறு யாருடைய பொறுமையும் அதற்கு ஒப்பாகாது. அவன், கடவுள் இல்லையென்று சொல்வாரையும், கடவுளுக்கு கண் இல்லை என்று இகழ்வாரையும் தாங்குகிறான். அவன் அளித்த உடம்பை வைத்துக்கொண்டு அவனை வணங்காமல் வாழும் மக்களையும் தாங்குகிறான். எத்தனைதான் தவறு இழைத் திருந்தாலும் தன்னிடம் உண்மையான அன்புகொண்டு ஒருவன்

சரண் புகுந்தால், அவன் செய்த தீங்குகளை மறந்து உடனே அவனை ஏற்றுக் கொள்கிறான். இவ்வளவு பொறையையும் உடைய அவனை ஞாலமே என்று சொல்வதுகூடப் போதாது. ஆனாலும் நமக்குத் தெரிந்த பொறையையுடைய பொருள்களுள் அதுதான் சிறந்தது.

நிலம் தக்க பருவத்தில் மக்களின் முயற்சிக்கு ஏற்றபடி விளைபொருள்களைத் தருகின்றது. இறைவன் ஆருயிர்களின் இருவினை ஒப்பு முதலிய பக்குவங்களை அறிந்து அவர்கள் செய்யும் சாதனங்களுக்கு ஏற்பப் பயனைத் தருகின்றான்.

பூமிக்கு வசுந்தரா என்பது ஒரு பெயர். தன் வயிற்றில் பொன் முதலிய அரும் பொருள்களை அது சுமந்து கொண்டிருக்கிறது. இறைவனும் தன்னிடம் இணையிலாச் செல்வமாகிய அருளை வைத்திருக்கிறான். பூமி தனக்கு அடியிலே மக்களுக்கு வேண்டிய நீரை உடையது. இறைவன் கருணை நீரை உடையவன். பூமி, உணவையும் நீரையும் தந்து உடம்பை வளர்க்க உதவுகின்றது. இறைவன் போக போக்கியங்களைத் தந்து மக்களைக் காப்பாற்றுகிறேன். எல்லாப் பொருளும் தோன்றித் தன்னுள்ளே மடிந்து போகும்படி விரிந்து நிற்கிறது நிலம். இறைவனும் எல்லா உயிர்களும் தோன்றி ஒடுங்குவதற்கு இடமாய் நிற்கிறான். பூமி தான் மற்றப் பொருள்களுக்கு ஆதாரமாக நிற்பினும் தனக்கு ஆதாரம் வேண்டாமல் இருக்கிறது. இறைவன் யாவருக்கும் ஆதாரமானவன்; தனக்கொரு சார்பு இன்றியே நிற்பவன்.

நிலமும் நீரும் வேறாகவும் நிற்கும்; ஒன்றுபட்டும் நிற்கும். சிவமும் அவனுடைய அருளாகிய சக்தியும் வேறாகவும் நிற்பது உண்டு; ஒன்றுபட்டும் நிற்பது உண்டு. எந்த உலகத்தில் இருந்தாலும் நிலவுலகத்துக்கு வந்தால்தான் தவம் செய்து பிறவித் துன்பத்தினின்றும் மீளலாம்; யாரைப் பற்றினாலும் இறைவனைப் பற்றினால்தான் தவம் பலிக்கப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கலாம்.

இவ்வாறு பலவாறு இறைவன் இயல்புகளையும் ஞாலத்தின் இயல்புகளையும் ஒப்பிட்டுச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஞாலம் பெரிதுதான்; ஆனால் அதைக் காட்டிலும் பெரியது இல்லையா? உண்டு. ஞாலத்தையும் மற்ற அண்டங்களையும் கிரகங்களையும் கொண்டு அகன்று விளங்கும் வானம் இருக்கிறது. ஐம்பெரும் பூதங்களில் முதலில் தோன்றியது அது. மற்ற எல்லாப் பூதங்களையும் தன்னுள்ளே அடக்கியது அது. அதனால் அதை இரு விசும்பு, அகல் விசும்பு என்று சொல்வார்கள். * அது விஞ்ஞானிகளாற்கூட அளக்க ஒண்ணாதது.

"நிலன்ஏந்திய விசும்பும்... போல...
சூழ்ச்சியது அகலமும்" (புறநானூறு, 2)

என்று விரிவுக்கு விசும்பைக் கூறுவது மரபு. இறைவனும் எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு அகன்று விரிந்தவன்; தன் அகல நீளம் யாராலும் அறியொணாதவன்.

ஆகவே ஞாலமே என்று சொன்னாற் போதாது என்று தோன்றியது அப்பருக்கு; மறுபடியும் ஞாலத்தினும் விரிந்த விசும்பாகச் சொல்கிறார்.

ஞாலமே! விசும்பே!

விசும்பு நுட்பமானது; எங்கும் வியாபித்திருப்பது. இறைவனும் நுண்ணியன்; சர்வவியாபகன்; நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவன், விசும்பு உயர்ந்தது.

"வானினும் உயர்ந்தன்று"**

என்று ஒருவர் அதை உயர்வுக்கு அளவுகோலாகச் சொல்கிறார். இறைவன் தன்னினும் உயர்ந்த பொருள் ஒன்று இன்றி உயர்ந்தவன்; 'உயர்வற்ற உயர்நலம் உடையவன்.' இத்தனை வகையாலும் இன்னும் பிறவற்றாலும் இறைவனை விசும்பே என்று அழைப்பது சாலவும் பொருந்தும். கீழே நிலமும் இதனைச் சூழ விசும்பும் உள்ளன. இவற்றினிடையே எல்லாம் அடங்கி நிற்கின்றன. இறைவன் இவ்விரண்டைப் போல இருப்பது மாத்திரமன்று; இவ்விரண்டாகவும் நின்று தன்னுள் யாவற்றையும் அடக்கி வைத்திருக்கிறான்.

---

* 'அகலிரு விசும்பு - தன்னை ஒழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்' (பெரும்பாணாற்றுப்படை, 1. நச்சினார்க்கினியர் உரை.)

** குறுந்தொகை

இப்படியே இறைவனுடைய பெருமை முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு முடிவே இராது. மக்களுக்கு எவை எவை சிறந்தன, எவை எவை அழகியன, எவை எவை தம் உள்ளத்திலே இன்பத்தையும் மதிப்பையும் புகுத்துவன, அவை யாவுமே இறைவனுடைய நினைப்பை உண்டாக்கும் பொருள்களாக, இறைவனுக்கு உவமையாகச் சொல்லும் பொருள்களாக, கொள்ள வகை உண்டு. ஆனால் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா?

அப்பர் சுவாமிகள் ஞாலமே என்று தொடங்கினார்; விசும்பே என்று தொடர்ந்து கூறினார். அவற்றுடன் அவருக்கு மன நிறைவு உண்டாகவில்லை. மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போகலாம் என்று தோன்றியது. எவ்வளவுதான் சொல்ல முடியும்?

ஆனால், இப்படிச் சொல்லத் தக்க பொருள்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான ஒன்றைச் சொல்லிவிடலாமா என்று எண்ணினார். பெருமை, பொறுமை, உயர்வு, அகலம் முதலிய யாவுமே நல்லவை; பலவகை நலங்கள் அவை. அவற்றை உடைய பொருள்களைத் தனித்தனியே எடுத்துச் சொல்வதைவிட எல்லா நலங்களுமே இறைவன்தான் என்று சொல்லிவிட்டால் போதுமே. ஆகவே அவனை நலம் பல உடைய பொருள்களாகச் சொல்வதை விட அந்த நலமாகவே சொல்லிவிடலாம் என்று ்ள்ளங் கொண்டார் அப்பர்.

மலர்களை நெடுங்காலம் வைத்திருக்க இயலாமையின் அதன் மணத்தை அத்தராக்கித் தொகுத்து வைப்பது போலவும், இன்சுவைக் கனிகளின் சாற்றைப் பிழிந்து அதன் சாரத்தை விஞ்ஞான முறையில் சுருக்கி வைத்துக் கொள்வது போலவும் ஞாலமென்றும் விசும்பென்றும் பிறவென்றும் இறைவனைச் சொல்லிக்கொண்டே போவதை விட்டு, அப் பொருள்களுக்குச் சிறப்ஃபத் தருகிற எல்லா நலங்களும் நீயே என்று சொன்னார்.

ஆனால் அவருக்கு உடனே மற்றொரு நினைவு வந்து விட்டது. நலம் என்பது என்ன? ஒருவன் இனிப்பை விரும்பி அதை நலம் என்கிறான்: மற்றொருவன் புளிப்பை விரும்பி அதை நலம் என்கிறான். வெப்பம் ஒருவனுக்கு நலமாகிறது;

தண்மை மற்றொருவனுக்கு நலமாகிறது. ஆகவே நலம் என்று வரையறையாக ஒன்றைச் சுட்ட இயலாது. அது கிடக்கட்டும். நலம் என்ற சொல் நலமல்லாததை விலக்குவது; நலம் அல்லது நன்மைக்கு எதிர் தீமை, நலமுள்ள பொருள், தீமையுள்ள பொருள் என்று இரண்டு வகைகளை உலகத்தோர் காண் கிறார்கள். உண்மையில் எல்லாப் பொருள்களிலும் நன்மை, தீமை என்ற இரண்டும் கலந்தே உள்ளன. மலையின் பெருமை முதலியவை மனிதனுக்கு மதிப்புடையனவாக இருந்தாலும், அதில் உள்ள கொடிய விலங்குகள் தீமையை விளைவிப்பன என்று கருதுகிறான்.

இறைவன் எங்கும் இருக்கிறான்; எல்லாமாகி இருக்கிறான். மலையாக இருக்கிறான்; அதில் உள்ள பெருமையும் அருவியும் மலரும் கனியும் மாத்திரம் அவன், மற்றவற்றில் அவன் இல்லை என்று சொல்ல இயலுமா? அதில் உள்ள வன விலங்குகளாகவும் இருக்கிறான். ரோஜா மலரில் நமக்கு நலமுள்ளதாகத் தோன்றும் மலர் அவன்தான்; ஆயினும் நமக்குத் தீமை உள்ளதாகத் தோன்றும் முள்ளும் அவனே. பொய்கையில் நமக்கு நலத்தைத் தருவதாக எண்ணும் நீர் அவனே; தீமையைத் தருவதாக நினைக்கும் சேறும் அவனே. நீரும் சேறும் சேர்ந்ததே பொய்கை. பொய்கை அவனுடைய உருவம் என்றால், அதில் உள்ள இரண்டும் அவன் என்று சொல்வதே முறை. எங்கும் நிறைந்தமையால் இறைவனுக்குப் பரிபூரணன் என்ற பெயர் அமைந்திருக்கிறது. மலரில் இருக்கிறான்; முள்ளில் இல்லை. நீரில் இருக்கிறான்; சேற்றில் இல்லை' என்று சொன்னால் அவனுடைய பூரணத்துவத்தில் - முழுமைத் தன்மையில் - குறைபாடு உண்டாகிறது. ஆகவே நாம் நலமென்றும் தீமை என்றும் நினைக்கின்ற இரண்டும் அவனே என்று சொல்வதுதான் அவன் முழுமைக்கு ஏற்றது.

அப்பர் முதலில் இறைவனை 'நலமே' என்று விளிக்க எண்ணினவர், பிறகு தீமையும் அவன் என்ற எண்ணம் வரவே இரண்டையும் சேர்த்தே சொல்கிறார்.

நலம் தீமையே!

இவ்வாறு நன்மையும் தீமையும் அவனே என்ற எண்ணம் வந்தவர்களுக்கு நன்மையின்பால் விருப்பும், தீமையின்பால்

வெறுப்பும் உண்டாவதில்லை. விருப்பு வெறுப்பற்ற இன்ப நிலை அவர்களுக்கு உண்டாகிவிடும். ஞான சம்பந்தப் பெருமானும்,

''குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்!''

என்று சொல்கிறார். அப்பர் சுவாமிகள் வேறு ஓரிடத்தில்,

''பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
...ஆகி, நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே''

என்று பாடுகிறார்.

★

இடம், காலம் என்ற இரண்டும் எல்லை காண முடியாதவை மனிதன் இந்த இரண்டு எல்லைக்குள் இருக்கிறான். இடவெல்லையும் காலவெல்லையும் கடந்தவன் இறைவன். அவற்றுக்குள் அடங்கியவை உயிர்கள். காலமாகிய எல்லையாகவும் இடமாகிய எல்லையாகவும் இறைவன் இருக்கிறான். இடத்தின் பகுதிகளாகிய ஞாலமும் விசும்பும் அவன் என்றார்; அவை இரண்டுமாக நிற்கும் இறைவன் காலமாக்வும் விளங்குகிறான்.

ஞால மே!நலம் தீமையே!
காலமே!

நுட்பமாகிய பொருள்களும் அவனே. புலன்நுகர்ச்சிக்கு உட்பட்ட பொருள்களைக் காட்சிப் பொருளென்றும், பிறவற்றைக் கருத்துப் பொருளென்றும் வகைப்படுத்துவர். கருத்தால் உணரும் நுண்பொருள்களும் இறைவனுடைய உருவங்களே; அந்தக் கருத்தே அவனுடைய உருவம். அந்தக் கருத்திலே தோன்றும் அன்பு முதலியவையும் அவனே. கடல் வேறு, அதில் தோன்றிய அலை வேறு என்று சொல்லுவது ஒரு வகை, இரண்டும் ஒன்றே என்று சொல்வது ஒருவகை. கடல் என்றால் அலையும் அடங்கும்; அலை என்றால் கடல் அடங்காது.

கருத்து என்றால் மட்டும் போதாது என்று எண்ணிய அப்பர், அதில் எழும் நினைவுகளும் அவன் என்று சொல்ல வந்தார்; அந்த நினைவு செயலாகப் பரிணமிக்கும் போது .அச் செயலும் அவன்தான் என்ற நினைப்புத் தோன்றியது.

இறைவனிடம் அன்பு உண்டாக வேண்டுமானால் அவன் நம் உள்ளத்தே இருந்து அருள் செய்தால்தான் அந்த அன்பு உண்டாகும்.

"அவன் அருளாலே அவன்தாள் வணங்கி"

என்று மாணிக்கவாசகர் சொல்கிறார். கருத்துள் இறைவன் இருந்து அதனைத் தன் மயமாக்கிவிட்டால் அதில் எழும் நினைவுகள் அவன் மயமாகவே இருக்கும். அந்த நினைவு களால் விளையும் செயல்களும் அவன் மயமாக இருக்கும். 'கருத்தும் அதன் கண்ணே தோன்றும் நினைவுகளும் அந்த நினைவுகளின் விளைவாக உன்னைத் தொழும் சிறந்த ஒழுக்கமும் நீதான்' என்று அப்பர் கூறுகிறார்.

காலமே!கருத் தே!கருத் தால்தொழும்
சீலமே!

★

ஞாலமாகவும், விசும்பாகவும், நலமாகவும், தீமை யாகவும், காலமாகவும், கருத்தாகவும், கருத்திலே எழும் நினைவுகளாகவும், அந்நினைவுகள் காரணமாக எழுந்த தொழுகையாகவும் உள்ள இறைவனை அந்த நிலைகளில் யாவரும் உணர இயலாது. அறிவிலும் அன்பிலும் சிறந்தவர்களே அவன் எங்குமாய் இருப்பவன், எல்லாமாயும் இருப்பவன் என்பதைத் தெளிவார்கள். மற்றவர்களும் அன்பு செய்யும் வண்ணம் இறைவன் அருள் பாலித்திருக்கிறான். திருத்தலங்களில் அழகிய கோலங்களோடு எழுந்தருளி யிருக்கிறான். அளவிட முடியாதவனும், நுட்பமான வனுமாகிய இறைவனே பல கோலங்களோடு திருத்தலங்களில் கோயில் கொண்டிருக்கிறான். திருவீழிமிழலை என்பது அத்தகைய தலங்களில் ஒன்று. சோழநாட்டில் உள்ளது. அங்கே இறைவன் மணவாளத் திருக்கோலம் கொண்டு, காண்பதற்கு அழகிய வனாக எழுந்தருளி யிருக்கிறான்.

அப்பர் அங்கே சென்று இறைவனைத் தரிசித்தார். ''அடி யேனை நினைவில் வைத்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

திருவீழி மிழலையுள்
கோல மே, அடி யேனைக் குறிக்கொள் நீ,

திருவீழிமிழலையில் மணவாளத் திருக் கோலங் கொண்ட இறைவனைத் தரிசித்தபோது அப்பர், ''இறைவன் ஒரு கோயிற்குள்ளே அடங்கிய உருவமுடையவனாகத் தோன்றுகிறானே! இது நம்மைப் போன்றவர்களிடம் கருணையினால் வந்த நிலை அல்லவா?'' என்று வியந்தார். அவன் எல்லைக்குள் அடங்காத வன் என்ற நினைவு வந்தது. நுட்பமானவன் என்பதையும் நினைத்துக் கொண்டார். இத்தகைய நினைவுகளெல்லாம் சேர்ந்து இந்தப் பாடலைப் பாடும்படி செய்தன.

ஞால மே!விசும் பே!நலம் தீமையே!
கால மே!கருத் தே!கருத் தால்தொழும்
சீல மே!திரு வீழி மிழலையுள்
கோல மே!அடி யேனைக் குறிக்கொள் நீ.

(பூமியாக இருப்பவனே! வானமே! நன்மையும் தீமையுமாக இருப்பவனே! காலமாகி நிற்பவனே! கருதும் உள்ளமாக இருப்பவனே! அதன்கண் தோன்றும் நினைவினால் தொழுகின்ற ஒழுக்கமாக இருப்பவனே! திருவீழிமிழலையுள் திருவுருவங்கொண்டு விளங்குபவனே! நீ அடியேனைத் திருவுள்ளத்திலே கொண்டருள வேண்டும்.

ஞாலம் - பூமி. விசும்பு - ஆகாயம். நலம் - நன்மை. கருத்து, இங்கே உள்ளம். கருத்தால் - நினைவினால். சீலம் - ஒழுக்கம்; செயல். கோலம் - உருவம். குறிக்கொள் - திருவுள்ளத்தில் நினைத்துக்கொள்; என்னை மறவாமல், இவன் நம் அருளுக்காக ஏங்கி நிற்கிறவன் என்று நினைத்துக் கொள்ள வேண்டுகிறேன் என்றபடி.)

இந்தத் திருப்பாட்டோடு,

"மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மே!எனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞால மேவிசும் பே!அவை வந்துபோம்
கால மே!உனை என்றுகொல் காண்பதே?"

என்ற திருவாசகப் பாடல் ஒப்புநோக்குவதற்கு உரியது.

''ஞாலமே விசும்பே'' என்ற அப்பர் திருப்பாசுரம் ஐந்தாம் திருமுறையில் பதின்மூன்றாம் பதிகத்தில் மூன்றாம் பாடலாக அமைந்திருக்கிறது.

இனியன்

பூம்பொழில் நிரம்பிய ஊர் அது, எங்கே பார்த்தாலும் மரங்கள். மலர் மரங்கள் மாத்திரம் அல்ல; திருவள்ளுவர் சொல்லுகிறாரே, அந்தப் 'பயன் மரங்கள்' மிகுதியாக இருக்கின்றன. கனி வளர் மரங்கள் அவை. அந்த ஊரில் உள்ளவர்களின் வீட்டுக்குப் போனால் விருந்தினர்களைப் பழங் கொடுத்து உபசரிப்பார்கள்.

அயல் ஊரார் ஒருவர் அங்கே வந்து தம் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கினார். பிறகு விடை பெற்றுக் கொண்டு தம் ஊருக்குச் செல்லப் புறப்பட்டார். அப்போது உள்ளூர்க்காரரர் ஒரு தாறு வாழைப் பழமும், நூறு மாம்பழமும், பலாப்பழம் ஒன்றும் கொடுத்தனுப்பினார். ''இந்த மாம்பழம், மிகவும் உயர்ந்த சாதிப் பழம். அதிக இனிமை உடையது. குழந்தைகளுக்குக் கொண்டுபோய்க் கொடுங்கள்'' என்று சொல்லி அனுப்பினார். அவர் அன்புடையவர்; இனியவர். அவருக்குக் கிடைத்த பொருள்களிலே மிகவும் இனிய பொருள்கள் அவர் தோட்டத்தில் பழுத்த பழங்கள். ''கனியே கனிரசமே!'' என்று பாராட்டுகிறவர்கள் எல்லோருக்குமே கனிகளின் இனிமை தெரியாது, ஆனால் தம் உறவினருக்குப் பழங்களைக் கொடுத்து அனுப்பினாரே, அவருக்கு நன்றாகத் தெரியும்.

★

வேறு ஓர் ஊர். அங்கே நன்செய் அதிகம். நீர்வளம் நிரம்ப உடைய ஊர்; ஆதலால் எங்கே பார்த்தாலும் நெல்லும் கரும்பும் பயிர் செய்தார்கள். நெல்லைவிடக் கரும்பு பணம் தரும் பண்டம்; அருமைப் பண்டம்; இனிமையையுடைய பொருள்.

பழத் தோட்டம் நிறைந்த ஊருக்குப் போன அன்பர், இந்த ஊருக்கும் வந்தார். இங்கும் அவருக்கு உறவினர்

இருந்தார். அந்த உறவினர் நல்ல பணக்காரர்; பெருநிலக் கிழவர். அங்கே ஒரு வாரம் தங்கியிருந்தார். அவரை உறவினராகிய செல்வர் நெடுக அழைத்துக் கொண்டு போனார். அறுவடைக்கு ஏற்ற நிலையில் கதிர் முற்றியிருக்கும் நெல் வயல்களைக் காட்டினார்; கரும்புத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். பல காணிகளில் கரும்பைப் பயிர் செய்திருந்தார் அச்செல்வர். உயர்ந்தவகைக் கரும்பை இனம் பிரித்துத் தனித் தனியே பயிர் பண்ணியிருந்தார். அவற்றின் சிறப்பை விருந்தினருக்கு அவர் எடுத்துரைத்தார்.

அருகில் ஆலையும் போட்டிருந்தார். கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கும் ஆலை இருந்தது, அந்தச் சாற்றைக் காய்ச்சி வெல்லமாக்கினார்கள்; சர்க்கரை ஆக்கினார்கள்; கற்கண்டு செய்தார்கள். ''அதோ உள்ளனவே, அந்தக் கரும்புகள் வெல்லம் காய்ச்சப் பயன்படுபவை. இதோ இருக்கின்றனவே, இவை பின்னும் இனிமையானவை; உயர்ந்த வகை. இவை சர்க்கரை செய்யத் தகுதியானவை. இதோ இந்தப் பகுதியில் உள்ளவை மிகமிக உயர்ந்த சாதிக் கரும்பு. இதிலிருந்துதான் கற்கண்டு உற்பத்தி செய்கிறோம்'' என்று செல்வர் விளக்கினார்.

''இந்தக் கரும்புதான் எல்லாவற்றினும் சிறந்ததோ?'' என்று உறவினர் கேட்டார்.

''ஆமாம்'' என்றார் செல்வர்.

''பழங்களைவிட இதற்கு இனிமை அதிகமோ?''என்று மறுபடியும் விருந்தாளி கேட்டார்.

செல்வர் சிரித்தார்; ''என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? பழம் இனியதுதான். பழத்தில் உள்ள சாறு இனியது. அதில் இனிமை இருக்கிறது. ஆனால் கருப்பஞ்சாறே இனிமையன்றி வேறு இல்லாதது. இனிமையின் திரவ உருவம் கருப்பஞ்சாறு. அதன் கட்டி உருவம் கற்கண்டு'' என்றார்.

''ஓ, இப்போது தெரிகிறது. கனிதான் இனியது என்று நினைத்தேன். அதனினும் இனியது கரும்பு; அந்தக் கரும்பிலும் இனியது, கற்கண்டை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற கரும்பு,''

''அதைத்தான் கட்டிக் கரும்பு என்று சொல்வது வழக்கம்.''

''அப்படியா? கனியே, கனிரசமே, கட்டிக் கரும்பே என்று பாராட்டுவதற்கு இப்போதுதான் பொருள் தெரிந்தது.''

கரும்புத் தோட்டத்தின் சொந்தக்காரர் கட்டிக் கரும்புச் சாற்றையும் கொண்டுவந்து குடிக்கச் சொல்லிக் கொடுத்தார்.

''நன்றாக இருக்கிறது; இனிமையாக இருக்கிறது'' என்று அதன் சுவையைச் சுவைத்துக்கொண்டே அதைக் குடித்தார் விருந்தினர்.

★

கனியும் கட்டிபட்ட கரும்பும் நாவுக்கு இனிய பொருள்கள். இனிமை என்று சொன்னவுடனே எல்லோருக்கும் நாவுக்கு இனிய பொருள்தான் நினைவுக்கு வருகிறது. மற்றப் புலன் நுகர்ச்சிகளைவிடச் சுவையுணரும் தன்மைதான் மனிதனை அதிகமாகப் பற்றிக் கொண்டிருக்கிறது. அதனால் பொறிகளின் வாயிலாக அநுபவிக்கும் இன்பங்களில் அதையே மற்றவற்றிற்கும் உவமையாக எடுத்துச் சொல்லும் வழக்கம் அமைந்திருக்கிறது.

★

ஒரு பொறிக்கு இன்பம் தருவதைக் காட்டிலும் ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் பொருள் ஒன்று இருந்தால் அது இனியவற்றுள் இனிய பொருள் என்று மக்கள் நாடு வார்கள்.

''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள''

என்பது திருக்குறள். ஐம்புலன்களுக்கும் இன்பம் தருவார் மங்கைமார். கனியினும் கட்டிபட்ட கரும்பினும் காதல் மங்கையர் மிக மிக இனியர்.

இனிய பொருள்களையெல்லாம் பெற்று வாழப் பொருள் வேண்டும். பொருளால் உயர்ந்தவர்கள் செல்வர்களேனும், ஆணையும் செல்வமும் ஒருங்கே உடைய அரசர்கள் அவர் களினும் உயர்ந்தவர்கள். அவர்கள் எதை நினைத்தாலும் பெற்று இன்புறலாம். சிறந்த இன்ப வாழ்வுக்குத் தலையளவு அரச

போகம். ராஜபோகம் என்று சொல்வது வழக்கு. ஆதலின் ஒருவனுக்கு அரசுரிமை கிடைத்தால் எல்லா வகை இன்பங் களையும் பெறலாம்.

ஆதலால் கனியையும் கரும்பையும் மங்கையரையும் தனித்தனியே தேடிச் செல்வதைவிட அரசுரிமை கிடைத்து விட்டால் இருந்த இடத்திலிருந்தே எல்லா வகை இன்பப் பொருள்களையும் தன்பால் வரும்படி செய்து நுகரலாம்.

இப்படி அமைந்த பொருளும் பதவியும் ஆகிய எல்லாம் புலனுக்கு உரிய இன்பத்தைத் தருவன. இறைவனுடைய அருளிலே ஆழ்ந்து இன்புறும் தொண்டர் ஒருவரை நாடிக் கேட்டுப் பாருங்கள். அவருக்கு இனிய பொருள் இன்னதென்று சொல்வார். புலனுக்குரிய இன்பம் தருவதற்கு மேற்பட்டது அறிவுக்கு இன்பம் தரும் பொருள். அதனினும் மேம்பட்டது உயிருக்கு இன்பம் தருவது. இறைவன் உயிருக்கே இன்பம் தருபவன். உயிரிலே கலந்து கனியாக இனிப்பவன்; கரும்பாக இனிப்பவன்; அவற்றைக் காட்டிலும் மிகுதியாக இனிப்பவன்.

கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்குஇடை மருதனே.

(பழங்களைக் காட்டிலும், கற்கண்டை உற்பத்தி செய்ய உதவும் கரும்பைக் காட்டிலும், குளிர்ச்சியையுடைய மலரை அணிந்த கூந்தலையுடைய பாவையைப் போன்ற மங்கையரைக் காட்டிலும், பிறருக்கு நிலம் பொதுவின்றித் தான் ஒருவனே அரசனாக இருந்து முடிசூடி ஆட்சிபுரியும் அரசபதவியைக் காட்டிலும் தன்னை அடைந்த அன்பர்களுக்குத் திருவிடைமருதூரிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் இனிமையை உடையவனாக இருக்கிறான்.

கட்டிபட்ட - கற்கண்டு உண்டான. பனி - குளிர்ச்சி. நல்லார் - மகளிர். தனிமுடி - ஏக சக்கராதிபதியாகச் சூடும் முடி. தன் அடைந்தார்க்கு - தன்னை அடைந்தவர்களுக்கு.)

இறைவனுடைய திருவருளை உணர்கிறவரையில் உலகத்துப் பொருள்கள் எல்லாம் இனியவையாகத் தோன்றும். அவன் திருவருளால் இன்பம் பெற்ற பிறகோ அவை இனிப்பதில்லை.

''பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னால்மெல்ல
மெல்லஉள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம் தித்தித்
தறிந்தஅன்றே
கரும்பும் துவர்த்துச்செந்தேனும் புளித்தறக்
கைத்ததுவே''

என்று அந்த நிலையிலிருந்து பாடுகிறார் அருணகிரியார்.

மேலே சொன்ன ''கனியினும்'' என்ற பாசுரம் ஐந்தாந் திருமுறையில் 14 ஆம் பதிகத்தில் வரும் பத்தாவது பாடல்.

★

தெய்வக் குடும்பம்

திருக்கடம்பூர் என்ற தலத்துக்கு எழுந்தருளினார் அப்பர் சுவாமிகள். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தார். உற்சவ மூர்த்திகளைத் தரிசிக்க வந்தார். சந்திரசேகரர், நடராஜர் ஆகிய மூர்த்திகளைத் தரிசனம் செய்தார். சோமாஸ்கந்த மூர்த்தியை அணுகினார். அருகிலே உமா தேதவியார் வீற்றிருக்க, தனக்கும் அத் தேவியாருக்கும் இடையிலே சின்னஞ் சிறு குழந்தை முருகன் எழுந்தருளியிருக்க, அமர்ந்திருந்தான் இறைவன். உமையும் கந்தனும் ஒருங்கிருக்கும் இந்தக் கோலத்தைச் சோமாஸ்கந்தர் என்று பாராட்டுவர். (ஸா உமா ஸ்கந்த:) இவ்வழகிய திருக்கோலத்திலே சிந்தையைப் பறிகொடுத்து நின்றார் அப்பர். இறைவன் அப்பனாகியும் அம்மையாகியும் பிள்ளையாகியும் இருந்து ஆருயிர்களுக்கு அருள்புரியும் வண்ணத்தை நினைந்து நினைந்து உருகினார்.

உலகத்து மக்கள் மனைவியை மணந்து பிள்ளைகளைப் பெற்று வாழ்கிறார்கள். உலகம் என்பது உயிர்க் கூட்டம். உயிர்கள் உடம்போடு உலவுகின்றன. எல்லாப் பிராணிகளும் மனைவிகளோடும் மக்களோடும் வாழ்கின்றன. மனைவி இல்லையேல் மக்கள் இல்லை. மக்கள் இல்லையேல் உலகம் தொடர்ந்து நிகழாது; இனப் பெருக்கம் இல்லை. ஆதலின் மனிதன் தனியாக வாழாமல் மனைவியோடு வாழ்கிறான்; பிறகு மகனைப் பெறுகிறான். கணவன், மனைவி, பிள்ளை என்ற மூவரும் சேரும்போது குடும்பம் முழுமையை அடைகிறது; உலகம் வழி வழி நின்று இயங்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்குகிறது.

இப்படி அமையும் குடும்பத்தின் உருவத்துக்குக் கருவாக இருப்பது இறைவனுடைய திருவருள். மனிதன் மனைவியோடு இணைந்து இன்புற்று மக்களைப் பெற்று வாழும் வகையை

இறைவனே உலகத்தினருக்கு வகுத்தருளினான். இந்தக் குடும்ப வாழ்க்கையை அவன் அமைத்துத் தராவிட்டால் உலக வாழ்வில் இன்பம் இல்லை; உலகம் தொடர்ந்து நிகழ்வதும் இல்லையாகி விடும்.

மனிதக் குடும்பத்துக்குத் தானே மூலக் கருவை அருளியவன் என்பதை இறைவனும் குடும்பியைப் போல இருந்து காட்டுகிறான். தானும் மனைவியையும் மகனையும் உடையவனாகத் திருக்கோலம் கொண்டு எழுந்தருளி யிருக்கிறான்.

ஒருவன் பிரமசாரியாக இருந்து மக்களுக்குரிய தொண்டு களைச் செய்கிறான். அவன் திருமணம் செய்து கொண்டால், அவனுடைய மனைவிவும் அவன் செய்யும் தொண்டிலே ஈடுபடுவாள். இதனால் அவர்கள் செய்யும் தொண்டு பெருகும்; முன்பைவிட இப்போது அத்தொண்டினாற் பயன் பெறுபவர் பலராவார். பிறகு அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தால் அவர்கள் தொண்டு பின்னும் பெருகும்.

இறைவன் தனி நின்றபோது இயக்கமின்றி இருப்பான். அவனிடத்து அருள் வெளிப்பட்ட போது மாதிருக்கும் பாதியனாவான். அருள் நன்கு வெளிப்படுவதைக் காட்டுவது உமாபாகனாக இருக்கும் நிலை, அவ்வருள் பின்னும் மலர்ந்து முழுவிரிவோடு நிற்பதே சோமாஸ்கந்தருடைய திருக்கோலம். நம்முடைய குடும்பம் மருட் குடும்பம். இதை அன்புக் குடும்பமாக மாற்ற வேண்டும். இறைவனுடைய குடும்பம் அருட் குடும்பம். அவன் குடும்பியாக இருப்பதனால்தான் உலகம் பிழைக்கிறது. நம் குடும்பம் வளர அவன் குடும்பியாக இருக்கிறான். தன்னைச் சார்ந்தவர்களைக் காப்பாற்ற வேண்டிக் குடும்பத்தை அமைத்துக் கொண்டு வாழ்கிற தலைவனைப் போன்றவன் அவன்.

அம்மையும் அப்பனும் குமரனுமாக எழுந்தருளிய இந்தத் தெய்வக் குடும்மத்தைக் கண்டார் அப்பர். மூவர் என்று தனித்தனியே பார்க்கும்படி தோன்றினாலும், மூவரும் ஒன்றின் சுவடுகளே; மூவரும் ஒருவரே. ஆதலின் மூவரையும் ஒன்றாக வைத்துச் சோமாஸ்கந்தர் என்று வழங்குவது மரபு. அப்பர் சுவாமிகள் தமிழர் தம்முடைய தெய்வம் என்று போற்றுகின்ற

முருகனைக் கண்டார். கடம்ப மாலையை அணிந்து விளங்கும் அப்பெருமானை, ''இதோ நம் கடம்பன்'' என்று அன்பு கூரக் கும்பிட்டார்.

கடம்பணியும் முருகனுக்கு அருகிலே அவனைப் பெற்றவள் வீற்றிருந்தாள். இறைவனுடைய அருளுருவாகிய அப் பெருமாட்டியை, ''இதோ நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்'' என்று கும்பிட்டார். இது கடம்பூர் என்ற தலத்தில் நிகழ்ந்தது. அந்த தலத்துக் கோயில் கரக்கோயில் என வழங்கும். கடம்பூரைக் கடம்பை என்றும் சொல்வதுண்டு. தாம் கண்ட காட்சியைச் சொல்லலானார் அப்பர்.

நம்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்.

★

இவ்வாறு தானும் ஒரு குடும்பி போல இறைவன் தோற்றுவானேன்? அவன் இன்பமும் உண்மையும் ஞானமும் ஒன்றாக இணைந்த சச்சிதானந்த மூர்த்தி. அவன் தன் அருளைச் சத்தியாக வெளிப்படுத்தினான்; அருளின் முழுக்கனிவை முருகனாக வெளிப்படுத்தினான். அவன் வேறு, அவள் வேறு, முருகன் வேறு என்று தோன்றினாலும் மூவரும் ஒருவரே. இப்படி யெல்லாம் கோலம் பூண்டு இறைவன் திரு விளையாடல் செய்வதற்குக் காரணம் ஆருயிர்களுக்குக் கருணை பாலிக்க வேண்டும் என்பது தான். உலகை யெல்லாம் தாங்கும் பொருட்டுக் குடும்பியாக இருக்கிறான். உலகம் முழுவதுமே பெரிய குடும்பம். இந்தக் குடும்பத்துக்கு அவன் தலைவன். அவன் தேவி தலைவி. அவன் குழந்தை இளவரசன். மூவரும் காப்பதனால் உலகம் வாழ்கிறது. உலகத்தில் உள்ள ஆருயிர் களைக் காப்பாற்றுவதைத் தன் கடமையாகப் பூண்டவன் இறைவன். அதைத் தெரிவிக்கவே அப்பனும் அம்மையும் பிள்ளையுமாய் எழுந்தருளியிருக்கிறான். இந்த நினைவு திருநாவுக்கரசருக்கு உண்டாயிற்று.

தன்க டன்அடி யேனையும் தாங்குதல்

என்று பாடினார். 'ஒன்றுக்கும் பற்றாத என்னையும் தன் அருளினால் பாலிப்பதைக் கடமையாக ஏற்றுக் கொண்ட பெருமான் அவன்' என்று நினைந்து உருகினார்.

அவனுக்கு நம்மைக் காப்பது கடமையானால் நமக்கு ஒரு கடமையும் இல்லையா? அவனுக்கு நாம் துணை செய்யலாம். ஆனால் நம் துணையினால் அவனுக்கு ஆவது ஒன்றும் இல்லை. சிற்றறிவும் சிறு செயலும் உடைய நம் துணை அவனுக்கு எம்மாத்திரம்?

அவனுக்கும் அவனுடைய குழந்தைகளாகிய ஆருயிர் களுக்கும் வேண்டிய தொண்டுகளைச் செய்துவிட்டு, நான் செய்தேன் என்ற அகங்கார முனைப்பு இன்றி அவன் அருளிலே கரைந்து கிடப்பதுதான் நாம் செய்ய வேண்டிய கடமை.

என்க டன்பணி செய்து கிடப்பதே.

★

இறைவன் பல திருக்கோலங்களைக் காட்டி, 'எப்படி யாவது இவன் உய்யமாட்டானா?' என்று மனிதனைப் பார்த்து ஏங்குகிறான். எல்லாரையும் தாங்கும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான். ஆதலால், 'நாம் எப்படி வாழ்வோம்! ஏது செய்வோம்!' என்று கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. 'நம்மைக் காப்பது அவன் தலைச்சுமை. நாம் தொண்டுகளைச் செய்து கொண்டு பொறுப்பு ஏதும் இன்றிக் கவலையும் இன்றி அவன் ஆட்டும்படி யெல்லாம் ஆடி நம்முடைய செயல் என்று ஒன்றும் இன்றிக் கிடப்பதுதான் முறை' என்கிறார் அப்பர். அதுதான் கர்மயோகம்; அதுதான் ஜீவபோதம் அழிவதற்கு உரிய வழி; அதுதான் உலகம் வாழத் தொண்டு ஆற்றும் நெறி.

நம்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்;
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

(நம்முடைய கடம்ப மாலையை யணிந்த முருகனைப் பெற்ற உமாதேவியைத் தன் பங்கிலே கொண்டவன்; தென்னாட்டிலே உள்ள திருக்கடம்பூர்க் கரக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமான்; அவனுடைய கடமை அன்பிற் சிறந்தார்களைப் பாதுகாப்பதோடு

ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் பாதுகாத்தல்; என் கடமை அவனுக்கு ஆகும் பணிகளைச் செய்து முனைப்பின்றிக் கிடப்பதே.

பங்கினனும் கோயிலானுமாகிய இறைவனுடைய கடன் என்றும் கூட்டலாம். கடம்பன் - முருகன். கடம்பை - கடம்பூர். கடன் - கடமை. தாங்குதல்: காப்பாற்றுதல்.)

'அவனுக்கு உகந்த பெரியவர்களைத்தான் பாதுகாப்பான்; நம்மளவும் அவனுடைய அருள் பாயாது' என்று நம்பிக்கை இழந்து நிற்பார் சிலர். அவரை நோக்கிக் கூறுவார் போன்று, ''ஒரு தகுதியும் இல்லாத அடியேனையும் தாங்குவான்'' என்று சொன்னார். பணி செய்தால், அவன் செய்ததுபோல் நானும் ஒன்று செய்தேன் என்ற நினைப்பு வரவும் இடம் உண்டு. ஆதலால், பணியைச் செய்து, அவற்றை நான் செய்தேன் என்ற நினைப்பும் இன்றி, அவன் அருளிலே கரைந்து ஜீவபோதம் இழந்து நிற்றலையே கிடத்தல் என்று குறிப்பிட்டார். நம்மாழ்வார், ''சின்னது வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'' என்ற கேள்விக்கு, ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று விடையிறுத்தாராம். இது இங்கே நினைவு கூர்தற்குரியது.

இத் திருப்பாட்டு, பத்தொன்பதாம் பதிகத்தின் ஒன்பதாம் பாட்டு.

★

இருவகைக் கணக்கு

செல்வர் ஒருவர் ஏழைகளுக்கு ஏதாவது வேலை கொடுத்து அதற்கு ஏற்ற கூலியை வழங்கலாம் என்று எண்ணினார். எல்லோரும் எளிதிலே செய்யக்கூடிய வேலை என்னவென்று ஆராய்ந்தார். நூல் நூற்கும் வேலையில் யாவரையும் ஈடுபடுத்தலாம் என்று திட்டமிட்டு நிறையப் பஞ்சு வாங்கினார். ராட்டினம், பஞ்சு அரைக்கும் மணை எல்லாம் வாங்கினார். ஏழைகளில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ராட்டினம் கொடுத்துப் பஞ்சும் கொடுத்து வாரத்துக்கு ஒரு முறை அவர்கள் நூற்ற நூலைக் கொண்டுவந்து கொடுக்கச் சொன்னார். நூற்ற நூலுக்கு ஏற்ற கூலியை வழங்கினார். பஞ்சு கொடுத்து வாங்கிக் கூலியைக் கணக்குப் பண்ணிக் கொடுக்க ஒரு கணக்கப் பிள்ளையையும் வைத்தார்.

ஏழைகள் தாம் நூற்ற நூலை வாரந்தோறும் கொடுத்து வந்தார்கள். ஆனால் ராட்டினம் வாங்கிக் கொண்டவர்கள் எல்லாரும் நூற்கவில்லை. அவர்கள் வீட்டு வழியே போய்ப் பார்த்தால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியும். சிலர் தங்கள் பொழுதை வீண் போக்காமல் வாங்கின பஞ்சை அரைத்துக் கொட்டை எடுத்து வில்லால் அடித்துப் பின்பு பட்டை போட்டு நூற்றார்கள். சோம்பல் இல்லாமல் ராட்டினத்துக்கும் தமக்கும் வேலை கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். அதனால் அவர்களுடைய கணக்கிலே கூலிப்பணம் ஏறிக்கொண்டே வந்தது.

ஆனால் வேறு ஒரு சாராரோ ராட்டினத்தை வாங்கிச் சென்றதுதான். வாங்கின பஞ்சைக் காற்றிலே பறக்க விட்டார்கள். வீணே அரட்டையடித்துப் பொழுது போக்கினார்கள். அவர்களுக்குத் தந்த ராட்டினத்தை அவர்கள் புறக்கணித்து மூலையிலே போட்டு விட்டார்கள். அந்த ராட்டினத்தின்மேல் சிலந்தி நூல் நூற்று வலை பின்னியது.

செல்வர் வீட்டில் ஒவ்வொரு நாளும் கணக்கு எழுதி வந்தான் கணக்கப்பிள்ளை. யார் அதிகமாக நூற்றார்களோ அவர்களைப்பற்றி அவன் தன் எசமானரிடம் சொல்லி வந்தான். பலர், கொடுத்த ராட்டினத்தை வாங்கிக் கொண்டு வீணே பொழுது போக்குவதையும் சொன்னான்.

எசமானருக்கு அந்த ஏழைகளின் சோம்பல் குணத்தைக் கேட்டுக் கோபம் வந்தது. 'அவர்களுக்கு ராட்டினம் கொடுத்தது பிசகு. மண் வெட்டியைக் கொடுத்து, கூட இருந்து வேலை வாங்கவேண்டும்' என்று எண்ணி அப்படியே ஏற்பாடு செய்தார்.

நூல் நூற்கிறவர்கள், சும்மா இருக்கிறவர்கள் என்ற இரண்டு வகையானவர்களுடைய கணக்கும் அந்தச் செல்வரிடம் இருந்தன. அந்தக் கணக்கை அவர் எழுதச் செய்தார். அவரவர் கள் நூலைக் கொடுத்தால், அவரவர்கள் கணக்கிலே அதன் அளவு தானே பதிவு ஆகிவிடும். அப்படி ஒரு கருவியை வைத்திருந்தார். எப்படியோ, வேலை செய்பவர்களுடைய கணக்கும், சோம்பேறிகளுடைய கணக்கும் அவரிடம் அகப் பட்டிருந்தன.

★

இறைவன் கைகால் முதலியவற்றோடுகூடிய இந்த உடம்பை நமக்குத் தந்திருக்கிறான். தன்னைத் தொழுது அன்பாகிய செல்வத்தை ஈட்டிக்கொள்ள வேண்டுமென்று தநு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை நல்கியிருக்கிறான். அவன் அளித்த கொடை பட்சபாதம் இல்லாதது. எல்லாருக்கும் வழங்கி யிருக்கிறான். ஆனால் அவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் எல்லோருமே அன்புச் செல்வத்தை ஈட்டவில்லை.

சிலர் இறைவன் முன் சென்று கையினால் தொழுதும் கீழே விழுந்து வணங்கியும் தூய மலர்களை அருச்சித்தும் அவனுடைய புகழை வாயாரப் பாடியும் அன்பு செய்கிறார்கள். முதலில் தொழுகிறார்கள்; பிறகு தூமலர் தூவுகிறார்கள்; அப்பால் துதிக்கிறார்கள்; அந்தத் துதியினால் உள்ளம் நைந்து அழுகிறார்கள். அழ அழ அவர்களுக்கு ஈசன்மேல் இருக்கும் அன்பு முறுகுகிறது. புலம்புகிறார்கள்; அரற்றுகிறார்கள்

இப்படி வரவரத் தம்முடைய வாழ்நாளை இறைவன்பால் அன்பு செய்யும் வழியிலே கழிக்கும் கூட்டத்தார் ஒருவகை.

மற்றவர்கள் யாவரும் ஏதேதோ வேலை செய்கிறார்கள். அவைகளெல்லாம் வேலையா? பைத்தியம் பிடித்தவன் என்ன என்னவோ செய்கிறான். ஆனால் அவன் செய்வனவற்றை யெல்லாம் பயனுள்ள செயலென்றா சொல்வார்கள்? பொழுது போய்க் கொண்டிருக்கிறது. இறைவனை மறந்து மற்ற வேலை களையே செய்கிறவர்கள் வீணே பொழுதைப் போக்குகிறவர் களுக்குச் சமானந்தான். இறைவன் எதற்காக உடம்பு முதலிய வற்றைத் தந்தானோ, அந்தக் காரியத்தைச் செயயாமல் வீண் பொழுதுபோக்கித் தம்முடைய கடமையைப் புறக்கணிப் பவர்கள் ஒரு சாரார்.

இப்படி உள்ள இரண்டு சாராருடைய செயற் கணக்கை யும் இறைவன் எழுதி வைத்துக் கொள்கிறான். நாம் செய்தது நமக்கே தெரியாவிட்டாலும் அவனுக்குத் தெரியும். அவனுடைய ஆணையினாலே நம் வினை ஒவ்வொன்றும் தானே பதிவாகிவிடுகிறது.

ஈசன் எழுதும் இந்தச் சின்னக் கணக்கில் நாம் நல்ல கூலி வாங்குவதற்குரிய கூட்டத்தோடல்லவா சேர வேண்டும்? தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுதும் காமுற்றும் அரற்றி நிற்பவர் கூட்டத்திலே சேர்ந்தால், இறைவன், ''இவன் நாம் தந்ததைத் தக்க வண்ணம் பயன்படுத்தி உழைத்தான். இவனுக்கு நல்ல கூலி கொடுக்க வேண்டும்'' என்று திருவுள்ளம் கொள்வான். இல்லையானால்-? அதை நினைத் தாலே பயமாயிருக்கிறது.

இறைவன் எழுதும் இந்தச் சின்னக் கணக்கைப்பற்றித் திருநாவுக்கரசர் சொல்கிறார். இறைவனுக்கு இது சின்னக் கணக்கு; கீழ்க்கணக்கு. நமக்கோ தலையின்மேல் உள்ள பெரிய கணக்கு; மேற்கணக்கு.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்,
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

(தன்னைத் தொழுது, தூய மலரைத் தூவி அருச்சித்து, துதிகளைச் சொல்லி நின்று, அன்பு மீதூர்ந்தமையால் அழுது, தன்பால் இடையறாத விருப்பத்தைப் பெற்றுப் புலம்பி நைகின்றவர்களையும், வீணே பொழுதைப் போக்கித் தாம் செய்யவேண்டிய கடமைகளைப் புறக்கணிப்பவர்களையும் அவரவர்கள் செயல்களோடு வேறு பிரித்துச் சிறு கணக்காக இன்னம்பரிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் எழுதுவான்.

தொழுதலும் மலர் தூவலும் உடம்பின் செய்கை; துதித்தல் வாக்கின் செய்கை; காமுறுதல் மனத்தின் செய்கை. அழுதலும் அரற்றுதலும் மனத்தில் உண்டான விருப்பத்தின் மெய்ப்பாடுகள். தொழுதல், மலர் தூவல், துதித்தல், காமுறுதல் என்பவை அன்பர்கள் நினைந்து செய்வன. அவர்களுடைய அன்பு முறுகுவதால் அழுதலும் அரற்றுதலும் அந்த அன்பின் விளைவாக அவர்களுடைய முயற்சி இன்றியே உண்டாவன. உண்மை யன்புடையார்களிடம் அவை தோன்றும். பயம் கொண்டவனுக்கு உடம்பு நடுங்குவது போல, அழுகையும் அரற்றுதலும் பக்தியின் விளைவாக எழும் மெய்ப்பாடுகள்.

கீழ்க்கணக்கு - சிறிய கணக்கு. பதினெண் கீழ்க் கணக்கு என்ற பெயர் தமிழ் நூல்களில் ஒரு வரிசைக்கு வழங்குகிறது. அங்கே கணக்கு என்பது நூலைக் குறிக்கும். இங்கே கணக்கு என்பது புள்ளிக் கணக்கையே குறிக்கும். கீழ்வாயிலக்கம், மேல் வாயிலக்கம் என்று கணக்கில் இருவகை உண்டு. அதுபோல் இந்தக் கணக்கைச் சிறு கணக்கு அல்லது கீழ்க்கணக்கு என்றார்.)

இன்னம்பர் என்ற தலம் சோழ நாட்டில் கும்பகோணத்திற்கு மேற்கே இருக்கிறது. இங்குள்ள இறைவனுக்கு எழுத்தறிநாதர் என்று பெயர். அந்தத் திருநாமத்திலிருந்து, அப்பர் சுவாமிகளுக்கு, 'இவர் அவரவர்கள் செயற் கணக்கை எழுதவும் அறிந்தவர்' என்ற நினைவு உண்டாகவே இந்தப் பாசுரத்தைப் பாடியருளினார்.

இது ஐந்தாந் திருமுறையில் 31-ஆம் பதிகத்தின் எட்டாவது பாட்டு.

★

அழுக்குப் போக்கும் வழி

மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையும் திரிகரணங்கள் என்று சொல்வார்கள். இந்த மூன்றும் தூயவையாக இருந்தால் தூயவனாகிய இறைவன் திருவருள் புரிவான்.

அழுக்கு ஏறின துணியை வெளுத்துத் தூயதாக்குகிறோம். அதில் சேர்ந்த அழுக்கை உவர் மண்ணாகிய மற்றோர் அழுக்கைக் கொண்டு போக்குவது வண்ணார் தொழில். பல செயல்களைச் செய்து செய்து உடம்பில் அழுக்கு ஏறி இருக்கிறது. நீராடிப் போக்குகின்ற அழுக்கை இங்கே சொல்ல வில்லை. செய்யாத செயல்செய்து அந்தப் பழக்கத்தினால் உடம்பிலே ஒட்டிக் கொண்டிருக்கும் இயல்பாகிய அழுக்கைச் சொல்கிறேன். அந்த அழுக்கு எப்படி வந்தது? பல செயல்களைச் செய்து வந்தது. மறுபடியும் செயல்களைச் செய்தே அழுக்கைப் போக்கவேண்டும், அழுக்கைப் போக்குவது உவர்மண் என்று அறிந்து வண்ணார் அதைக் கொண்டு துணியை வெளுக்கிறார். உடம்பை வெளுக்கப் பண்ணும் உபாயம் அறிந்தவர்கள், என்ன செய்யவேண்டு மென்பதை அநுபவத்தால் உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள். செயல்களால் வந்த அழுக்கைச் செயல்களால் போக்க வேண்டும். இறைவனை மறந்து செய்த செயல்களால் படலம் படலமாகச் சேர்ந்த அழுக்கை அவனை வணங்கிப் போக்க வேண்டும். மனத்திலே வஞ்சகம் இல்லாமல் உண்மை அன்போடு வணங்கித் தொழுது பணியவேண்டும்.

உடம்பிலே அழுக்குச் சேர்ந்ததுபோலவே நாவிலும் நிரம்ப அழுக்குச் சேர்ந்திருக்கிறது. நாக்கை வழித்துக் கொண்டால் அதன் புற அழுக்குத்தான் போகும். அதனோடு ஒட்டிக் கிடக்கும் இயல்பாகிய அழுக்குப் போகாது. இன்னாத சொல், பொய், புறங்கூறல், பயனில்லாதன சொல்லுதல்

ஆகியவற்றைச் சொல்லிச் சொல்லி அது அழுக்கேறிக்கிடக் கிறது. வெம்மையான சொற்களைச் சொல்லாமல் பழக வேண்டும். அத்தகைய சொல் உலவும் இடத்திலிருந்தே விலகித் தண்ணிய அன்புச் சொல்லாகச் சொல்லவேண்டும். என்ன பேசவேண்டுமென்று அறிந்து பேசுவதைக் காட்டிலும் வெஞ் சொல் பேசாமல் விலகுதல் அவசியம். அவ்வாறு நாவைக் காத்தால் நமக்கு வீடு கிடைக்கும்.

அடுத்தது உள்ளம். அதில் சேர்ந்த அழுக்குக்கு அளவே இல்லை. பிறவிதோறும் அழுக்குச் சேர்ந்துகொண்டே வருகிறது. அதைக் கரைத்துப் போக்கவேண்டும். அந்த அழுக்கு இறுகிக் கல்லாகக் கட்டி தட்டிப் போய்விட்டது. இறைவனிடம் அன்பு உண்டானால் நெஞ்சு நெகிழும். அன்பு என்னும் நீரிலே நெஞ்சு ஊற ஊற') பல காலமாகக் கட்டி தட்டிப்போன அழுக்குக் கரையத் தொடங்கும்; நெகிழும். அந்த நெஞ்சமும் தன் திண்மையை இழந்து உருகும். அழுக்கால் மூடியிருந்த நெஞ்சு அன்பினால் நைய நைய அழுக்குக் கலைந்து அன்பீரம் நெஞ்சுக்கு உள்ளேயும் புகுந்து குளிரவைக்கும். நெஞ்சின் உள்ளிடம் தண்ணென்று குளிரும்.

உடம்பினால் வணங்கி உடலழுக்கைப் போக்கியும், நாவினால் வெஞ்சொல்லை நீக்கி இன்சொல்லைப் பேசி நாவழுக்கை நீக்கியும், நெஞ்சினால் அன்பு செய்து நைந்து நெஞ்சழுக்கைக் கரைத்து மூன்று கரணங்களும் தூய்மை யுடையனவாக அமைய நிற்கும்போது இறைவன் வருவான்; நெஞ்சிலே இடங்கொள்வான்; எத்தகைய துன்பத்துக்கும் அஞ்ச வேண்டாம் என்று அருளி இன்பம் பெற வைப்பான்.

> வஞ்சம் இன்றி வணங்குமின் வைகலும்;
> வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடுற;
> நைஞ்சு நைஞ்சுநின்று உள்குளிர் வார்க்கெலாம்
> அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே.

(வஞ்சகம் இல்லாமல் நாள் தோறும் உடம்பால் வணங்குங்கள். முத்தியின்பம் பெறும்பொருட்டு வெம்மையான சொற்கள் பேசுதலின்றி நீங்குங்கள். அன்பினால் நைந்து நைந்து அந்த இயல்பிலே மாறாமல் நின்று உள்ளம் குளிரும் அன்பர்கள் யாவருக்கும், எந்தத் துன்பம் வந்தாலும் அஞ்ச வேண்டாம் என்று திருவாய் மலர்ந்தருளுவான், திருவானைக்காவில் உள்ள சிவபெருமான்.

வஞ்சம் - பொய்ம்மை; மனத்திலே வேறு ஒன்று வைத்துச் செய்யும் நிலை. வைகலும் - நாள்தோறும். வெஞ்சொல் - இன்னாச்சொல்; உபலட்சணத்தால் பொய், குறளை, பயனில்லாத சொல் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். விலகுமின் - அகன்று செல்லுங்கள். வெஞ்சொல் இன்றி விலகுமின் என்றது இன்சொல் சொல்லுக என்பதையும் குறிப்பித்தது. வீடு - முத்தி, வீடு உற நைஞ்சு என்று கூட்டிப் பொருள் செய்வதும் பொருந்தும். நைஞ்சு - நைந்து; உருகி; இது அன்பினால் உண்டாவது. நின்று - அன்பினின்றும் மாறாமல் நின்று. குளிர்தல், அன்பு முறுகும்போது உண்டாகும் சாந்த நிலையைச் சுட்டியது. உடம்பால் வணங்குமின், நாவால் இன்சொல் சொல்லுமின் என்று இரண்டையும் அறிவுரையாகச் சொன்னவர், நெஞ்சு நைந்து குளிர்மின் என்று சொல்லாவிட்டாலும் உள்குளிர்வாருக்கு அஞ்சல் என்பான் என்று சொன்னதில் அந்த அறிவுரை அடங்கியிருக்கிறது. இதை உடம்படு புணர்த்தல் என்று சொல்லுவார்கள். அஞ்சல் - அச்சத்தைக் கொள்ள வேண்டாம். என்றிடும்- என்று சொல்வான். அண்ணல் - பெருமையையுடைய தலைவன்.)

உடம்பு, வாக்கு, நெஞ்சு என்ற மூன்றையும் இறைவன் வழி நிற்கச் செய்வதனால் அவை தூய்மை பெறும் என்றும், அப்போது இறைவன் அருள் கிடைக்கும் என்றும் இப்பாட்டால் புலப்படுத்தினார் நாவுக்கரசர்.

இது முப்பத்தோராம் பதிகத்தின் ஐந்தாம் பாட்டு.

★

பணிசெய்

"அதோ அந்த எசமானிடம் வேலைக்குப் போகிறாயா?"

"அவரிடமா? அவர் பக்கத்தில் சதா நாய் இருந்து கொண்டே இருக்கிறதே!"

"இருந்தால் குறை இல்லை."

"அவர் ஓட்டை வண்டி ஒன்றையல்லவா வைத்திருக் கிறார்? சரியானபடி சம்பளம் தருவாரா?"

"அவருடைய நாயையும் வண்டியையும் பார்த்து ஏமாந்து போகாதே. அவர் நல்லவர். வேண்டிய அளவுக்குச் சோறு போட்டுக் காப்பாற்றுவார்."

"அவரைப் பார்த்தாலே நன்றாகச் சாப்பிடுகிறவராகத் தோன்றவில்லையே!"

"அதைப் பற்றி உனக்கு என்னை கவலை? அவரிடம் போய் வேலை செய்கிறவர்களுக்கு அவர் தக்கபடி சம்பளம் தருகிறாரா, சோறு போடுகிறாரா என்பதை மாத்திரம் நீ தெரிந்து கொண்டால் போதுமே!"

"சாமானிய உடையைத்தானே அவர் அணிந்திருக்கிறார்?"

"அவர் இயல்பு அது. அவரிடம் வேலை பார்க்கிறவர்கள் எல்லாம் பட்டும் சரிகை வேட்டியும் அணிந்து கொண்டிருப்பார்கள். அவர் மட்டும் எப்போதும் சாதாரண உடையைத்தான் அணிவார். அவர் வாகனம், உடை, அணி இவற்றைக் கண்டு அவருடைய குணத்தையும் பெருந் தன்மையையும் தெரிந்துகொள்ளாமல் ஏமாந்தவர்கள் பலர்."

★

இந்தச் சம்பாஷணையைப் போலவே வேறு ஒரு சம்பாஷணை நடக்கிறது. சிவபெருமானுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று ஒரு பெரியவர் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார்.

''நெஞ்சமே, நீ இத்தனை காலமும் யார் யாருக்கோ பணி செய்து வந்தாயே; அதனால் கண்டது என்ன?''

''அவரவர்கள் தங்கள் நன்மையைப் பார்த்துக் கொண்டார்களே ஒழிய எனக்கு ஒன்றும் ஊதியம் இல்லை. அவர்களால் வேதனையும் கவலையும் உண்டானதுதான் கண்ட பலன்.''

''செல்வம், கல்வி, ஆற்றல் என்றவற்றை மிகுதியாகப் பெற்றவர்களை அணுகிப் பணி செய்தாயே; அவர்களால் உனக்குச் செல்வமோ, கல்வியோ, ஆற்றலோ கிடைத்ததா?''

''என் வாழ்நாள் வீணாள் ஆனதன்றி ஒன்றும் கிடைக்க வில்லை. அவர்களிடமே அவை நிலையாக நிற்கவில்லையே!''

''இவ்வளவு அநுபவப்பட்ட உனக்கு வேறு ஒரு பிரபுவைக் காட்டுகிறேன். அவரிடம் சென்று பணி புரிகிறாயா?''

''யார் அவர்? எந்த ஊர்க்காரர்?''

''சோழ மண்டலத்தில் ஓர் ஊரில் இருப்பவர். திருவையாற்றுக்கு அருகில் திருச்சோற்றுத்துறை என்ற அழகான ஊர் இருக்கிறது. அங்கே வாழ்கிறவர் அவர்.''

''இவ்வளவு அருகில் இருப்பவரா? அவர் யார்? சொல்லுங்கள்.''

''அவரை முன்பே உனக்குத் தெரிந்திருக்கலாம். அவரை நீ பார்த்திராவிட்டாலும் பிறர் அவரைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கலாம்.''

''இன்னார் என்று சொல்லுங்கள்.''

''சிவபெருமான்.''

''அட! அவரா? அவரைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன். மாட்டின்மேல் ஏறி வருவார் என்று சொல்கிறார்களே, அவர்தாமே?''

''ஆம். பெற்றம் ஏறும் பெருமானைத்தான் சொல்கிறேன்.''

''குதிரையும் யானையும் விமானமும் தேரும் இருக்க, அவருக்கு இந்தப் பெற்றந்தானா கிடைத்தது? நல்ல பேர் வழியாகப் பார்த்துச் சொன்னீர்களே! அவரைப் பற்றி நிறையக் கேட்டிருக்கிறேனே! அவரைச் சுற்றி எப்போதும் பேய்கள் சுற்றிக்கொண்டிருக்குமாமே?''

''ஆம். அவர் அடையாளத்தை நீ நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே! பேயைப் படையாகக் கொண்ட பேராளரே அவர்.''

''எல்லோரும் பொன்னும் மணியும் பூண்டிருக்க அவர் பாம்பை அணிந்திருக்கிறார் என்று சொல்கிறார்களே! பாம்பு போல மாலையைக் கட்டி அணிந்திருப்பாரென்று முதலில் நான் நினைத்தேன். உண்மையான பாம்புதானாம்; புற்றிலே வாழ்கிறதே அந்தப் பாம்புதானாம்; படம் எடுத்து ஆடுகிற அதே பாம்பைத்தான் அவர் கையிலும் கழுத்திலும் தலையிலும் அணிந்துகொண்டிருக்கிறாராம். இப்படி ஒரு பைத்தியக்காரர் உண்டோ?''

''புற்றில் ஆடும் அரவைப் பூண்ட புண்ணிய மூர்த்தியையே நான் சொல்கிறேன். அவரைச் சுற்றி உள்ளவற்றை நீ தெரிந்து கொண்டாயே ஒழிய அவரைப்பற்றி நீ ஒன்றும் அறிந்துகொள்ள வில்லை போலும்!''

''இன்னும் என்ன அறிந்துகொள்ளவேண்டும்? வாகனம் ஒன்றும் கிடைக்கவில்லையோ, அல்லது புத்திக் கோளாறே அவர் மாட்டில் ஏறி வருகிறார். மனிதர்கள் அவர் பக்கத்திலேயே போக இயலாது; பேய்களே அவரைச் சுற்றி இருக்கின்றன. போதாக்குறைக்குத் தம்மை அணுகுவார் அஞ்சும்படி உடம்பெல்லாம் பாம்பை அணிந்திருக்கிறார். முட்டுகிற மாட்டையும் ஆளையே சாப்பிட்டு விடுகிற பேயையும் கடிக்கிற பாம்பையும் படைத்த அவரிடம் போகவே முடியாதே. அவரை அணுகி அவருக்குப் பணி செய்கிறது என்பது நடக்கிற காரியமா?''

''அட மட நெஞ்சமே! புறத் தோற்றத்தைக் கண்டு மயங்கி மயங்கித்தான் நீ ஏமாந்துபோகிறாய். எந்தப் பொருள்

எப்படித் தோன்றினாலும் அதனுடைய உண்மையைத் தெரிந்துகொள்ளும் அறிவை நீ படைக்கவில்லை. அந்த அறிவு இல்லாத உனக்கு அவரைச் சுற்றியிருக்கும் பொருள்களைக் காணக் கண் இருக்கிறதே ஒழிய அவரைப்பற்றி எண்ணக் கருத்து இல்லை. அவர் வாழ்கிற இடத்தைச் சொன்னேனே; அதைக் கருத்தில் வாங்கிக் கொண்டாயா?''

''தெரியுமே; சோற்றுத் துறை என்ற ஊரிலே அவர் இருக்கிறார்.''

''சோற்றுத்துறை என்ற ஊருக்கு எப்படிப் பேர் வந்தது தெரியுமா?''

''சொல்லுங்கள், கேட்கிறேன்.''

''அடியவர்கள் பசித்திருக்கப் பாராத பரமதயாளு அந்தப் பெருமான். அந்த ஊரில் அருளாளன் என்ற அடியவனுக்கு எடுக்கக் குறையாதபடி சிவபெருமான் சோறு அளித்தார். அதனால்தான் அந்தத் தலத்துக்குச் சோற்றுத்துறை என்ற பெயர் வந்தது.''

''யாருக்கோ எப்போதோ சோறு அளித்ததாகச் சொல்வதை நம்பலாமா?''

''உனக்குப் புண்ணியம் இருந்தால் நம்பு. சோறு அளித்ததற்கு அடையாளமாகத்தானே அந்த ஊருக்குப் பெயரே வந்திருக்கிறது? அப்பெருமானுடன் உறைகின்ற பெருமாட்டிக்கு அன்னபூரணி என்று பெயர். அந்த ஊரில் சோறுபடைத்த வயல். சோறுடையான் வாய்க்கால் என்ற பெயர்களோடு உள்ள வயலும் வாய்க்காலும் இந்த வரலாற்றுக்குச் சாட்சி சொல்கின்றன.''

''இன்று நமக்கு அவர் சோறு தருவாரா?''

''பைத்தியமே! மனிதனாக இருந்தால், 'அன்று பணக்காரராக இருந்தார்; சோறு போட்டார். இன்று பணம் போய்விட்டது; போடுகிறதில்லை' என்று சொல்லலாம். அவரோ பரம்பொருள்; நித்தியர்; என்றும் மாறாத செல்வத்தை உடையவர். அவர் என்றுமே சோறு அளிக்கவல்லவர். அவர் நமக்கு உணவு தராவிட்டால் நாம் உண்ண முடியாது. நாம்

முயன்று பொருள் ஈட்டி உண்ணும்படியாக வைத்த அருளாணை யினால் இவை நிகழ்கின்றன. எல்லாம் அப்பெருமானுடைய திருவுள்ளப்படியே நிகழ்கின்றன. இந்தத் தத்துவத்தைப் பார்த்தால் உலக முழுவதுமே சோற்றுத்துறைதான். ஒவ்வொரு வாய்க்காலும் நீரினால் நெல் முதலியவற்றை விளைவித்து மக்கட் குலத்துக்குச் சோறு உண்டாகக் காரணமாதலால் எல்லா வாய்க்கால்களுமே சோறுடையான் வாய்க்கால்களே. வயல் என்றாலே உணவை விளைவிப்பதாதலால் உலகிலுள்ள வயல் கள் யாவுமே மனிதர்களுக்குச் சோறு படைக்கும் வயல்களே. இவற்றை நின்று உணர்ந்து, இறைவர் திருவுள்ளத்தால் நமக்குச் சோறு கிடைக்கிறது என்பதை அறியும்படியாக அந்தச் சோற்றுத்துறை விளங்குகிறது. ஓர் ஊருக்குள்ளே புகும்போது அந்த ஊரின் பெயரை எழுதியிருக்கும் பலகையைப் பார்க்கிறோம். அதை ஊரின் ஓரத்திலேயோ, நடுவிலேயோ நட்டிருப்பார்கள். அது நட்டிருக்கிற இடம் மட்டும் அந்த ஊர் என்று நினைக்கக் கூடாது; ஊர் விரிவாக இருந்தாலும் ஏதோ ஓர் இடத்தில் அதன் பெயரை நினைப்பூட்டும் பலகை இருக் கிறது. அப்படி உலக முழுவதும் சோற்றுத்துறை ஆனாலும் அதை நினைப்பூட்ட ஓரிடத்தில் அந்தப் பெயர் வழங்குகிறது.''

''அவர் சோறு வழங்கும் அன்ன தாதாவாக இருந்தால் எதற்காக அவர் பெற்றம் ஏறுகிறார்? ஏன் பேயைப் படையாகக் கொள்கிறார்? பாம்பை ஏன் பூணாக அணிகிறார்?''

''அவர் பெற்றம் ஏறினால் என்ன? பேய் அவருக்குப் படை ஆனால் என்ன? புற்றில் ஆடும் அரவையே அவர் பூணில் என்ன? உனக்கு வேண்டியது சோறு. அதை அவர் தருகிறார். அவர் விலாசமே அதைத் தெரிவிக்கிறது. யார் யாரையோ சுற்றிச் சுற்றி என்ன பயனைக் கண்டாய்? இந்தப் பெருமானைச் சுற்றிவா; வலம் செய்து வணங்கு; மனமாரப் பற்றிக் கொள்; தொண்டு செய். உனக்கு எத்தனை இன்பம் உண்டாகும், தெரியுமா?''

''அவர் எதற்காகத்தான் அந்தக் கோலம் புனைந் திருக்கிறார்?''

''பெரியவர்கள் புறத் தோற்றத்திலே எளியவரைப் போல இருப்பார்கள். அவர்கள் செயல் பித்தர் செயல்போல

இருக்கலாம். அவர்களோடு பலகாலம் பழகினால்தான் அவர் களின் தோற்றத்துக்கும் செயல்களுக்கும் காரணம் தெளிவாகும். அந்தக் காரணங்கள் அவர்களுடைய நற்பண்பைச் சிறப்பிக்குமே ஒழிய, அவற்றிற்கு மாறாக இரா.''

''அப்படியானால் -''

''அவருடைய தோற்றத்துக்கு என்ன காரணம் என்றுதானே கேட்க வருகிறாய்?''

''ஆம்.''

''சொல்கிறேன் கேள். அவர் ஏறுவது பட்டியிலே அடைபடும் காளை அன்று. அறத்தையே விடையாக்கி அதில் ஊர்ந்து வருகிறார். மனிதர்கள் தம்முடைய வாழ்க்கையில் அறத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தால் அவர் களுக்கும் பிறருக்கும் நன்மையே உண்டாகும். இறைவர் தாமே அறத்தை வாகனமாக்கிக் கொண்டிருப்பது, அந்த அறத்தை அவர் நடத்துகிறார் என்பதைக் காட்டுவதற்கு. மனம் போனபடி போகும் காளையை அதன் மேல் ஏறித் தன் மனம்போல ஒருவன் ஓட்டுவதைப்போல, அறத்தைச் சிவபெருமான் இயக்குகிறார். விடையேறும் விமலராக அவர் காட்சி அளிப்பதன் கருத்து அதுதான். ஆகவே கயிறு உருவிவிட்ட காளையைக் கண்டால் முட்டிவிடுமே என்று அஞ்சலாம். இந்தப் பெற்றத்தைக் கண்டு அஞ்சவேண்டியதே இல்லை.''

''அது சரிதான். பேய்ப் படையைக் கண்டு அஞ்சாமல் இருக்க முடியுமா?''

''மனிதர்களிலேயும் பேய் இருப்பது உனக்குத் தெரியாதா? மற்ற இடங்களில் வாழும் பேய்களே அச்சத்தைத் தருவன. இறைவருடன் உள்ள பேய்கள் கட்டுப்பாட்டுக்கு அடங்கின படையாக இருக்கின்றன. கண்டதை உண்டு கண்டபடி திரியும் அவை இப்பெருமானிடம் வந்து அவருக்கு ஏவல் செய்கின்றன. வடிவத்தால் பேயேயன்றிப் பண்பினால் அந்தக் கூட்டம் அத்தனையும் அடியார் கூட்டமே ஆகும். பேய்களும் திருந்தி வந்தால் இறைவர் அடியார்களாக்கிக் கொள்வார். அதுமட்டு மல்ல; பேய்கள் அவரை அடைந்தால் தம் பேய்க்குணம் மாறிப்

பணிவாக நடந்து அன்புகொள்ளும் என்பதையும் இதனால் அறியலாம். ‘சிவபிரானுக்குப் பணி செய்யும் தகுதி நமக்கு இருக்கிறதா? நாம் பொல்லாக் குணம் படைத்த பாவி அல்லவா?’ என்ற எண்ணம் தோன்றினால், ‘பேயானாலும் அதன் இயல்பை மாற்றிப் பணி கொள்ளும் பெருங் கருணையாளர் அவர்’ என்ற நினைவும், அதனால் ‘நம்மையும் ஆட்கொள்வார்’ என்ற நம்பிக்கையும் உடனே உண்டாகும் படியாக அந்தப் பேய்ப்படை நிற்கிறது.''

''பாம்பைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?''

''பாம்பு வழுவழுப்பாக இருக்கிறது. குளிர்ச்சியாக இருக்கிறது. அதன் படம் பளபளப்பாக இருக்கிறது. இத்தனை பெருமை இருந்தும் அதைக் கண்டு அஞ்சுவதற்குக் காரணம் அதனிடம் நஞ்சு இருப்பதுதான். நஞ்சணிகண்டராகிய சிவ பெருமானோ ஆலகால நஞ்சத்தையே உண்டு அமுதாக்கியவர்; ஆதலின் பாம்புக்குப் பயப்படாதவர். பாம்பையும் நஞ்சு இல்லாததாக ஆக்குகிறவர். தன்னிடத்திலே உள்ள நஞ்சு காரணமாக, கண்ட மாத்திரத்திலே பிறர் கொல்லுவார்களே என்று அஞ்சிப் புற்றுக்குள்ளே ஒளிந்து கொள்ளும் இயல் புடையது பாம்பு. இறைவர்பால் அடைந்த பிறகு ஒளிய வேண்டிய அவசியம் இல்லாமற் போயிற்று. அதனிடம் இப்போது நஞ்சு இல்லை. யாரோனும் தொட்டால் புஸ் ஸென்று சீறிப் படமெடுத்துக் கொத்துவது பாம்பின் இயல்பு. இங்கேயோ எப்போதும் படம் எடுத்துக் கொண்டே இருக்கிறது. சீறுவதில்லை; கொத்துவதில்லை. ஆன்மாக்களிடத் தில் உள்ள நஞ்சாகிய பாசத்தைப் போக்கித் தம்மோடு இணையச் செய்யும் அருள் படைத்த பெருமான் அவர். பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால் இந்தப் பாம்பைக் கண்டு நடுங்கவேண்டியது இல்லை. இது நஞ்சிழந்த பாம்பு. கருணை வடிவமான கடவுளுடைய திருமேனியில் தவழும் பாம்பு. பாம்பின் நஞ்சுக்குப் பயந்து நாம் அதைக் கொன்று விடுகிறோம். இந்தக் கருணைப்பிரானோ அந்த நஞ்சின் கொடுமையை மாற்றிப் பாம்பை அணியாகப் பூண்டிருக்கிறார். அவர் அச்சம் அற்றவர். பிறரை அச்சுறுத்தும்

பொருள்களை அவரை அச்சுறுத்த இயல்வதில்லை. அவை அவரைச் சார்ந்தால் அச்சுறுத்தும் இயல்பையே இழந்து இனமாகக் கூட்டிக்கொள்ளும் இயல்பும், அணியாகப் பூட்டிக்கொள்ளும் இயல்பும் பெறுகின்றன.''

''இந்த உண்மையை உணரும்போது அந்தப் பெருமான், பணி செய்தால் நலம் அருள்வார் என்றே தோன்றுகிறது.''

''மட நெஞ்சமே, உன்னிடத்தில் பிறரைப் புண்படுத்தும் எருதின் தன்மை இருக்கிறது. நீ அவரை அண்டினால் உன்னையே வாகனமாக்கி, உன்மேல் அவர் வீற்றிருப்பார். பிறரை அச்சுறுத்திப் பிறர் பொருளால் வாழும் எண்ணம் படைத்த பேய் நீ. உன்னை அவர் தம் அருளாட்சியிலே இழுத்துக்கொண்டு ஞான வீரப் படையிலே சேர்த்துவிடுவார். பிறரைக் கண்டால் சீறிக்கொடுமை செய்யும் பாம்பாகவும் நீ இருக்கிறாய். உன் கொடுமையை மாற்றித் தமக்கு அணியாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றலும் அருளும் உடையவர் அவர். ஆதலால் நீ யார் யாரையோ சுற்றித் திரியாதே. யார் யாரையோ பற்றாதே. சுற்றி நீ என்றும் சோற்றுத் துறையர்க்கே பற்றி நீ பணி செய்.''

பெற்றம் ஏறில்என்? பேய்படை ஆகில்என்?
புற்றில் ஆடர வேயது பூணில்என்?
சுற்றி நீஎன்றும் சோற்றுத் துறையர்க்கே
பற்றி நீபணி செய்மட நெஞ்சமே.

(அறியாமையை உடைய நெஞ்சே! சோற்றுத் துறையிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் எருதிலே ஏறினால் உனக்கு என்ன? பேய் அவருடைய படை ஆகின் அதனால் உனக்கு வரும் தீங்கு என்ன? புற்றிலே ஆடும் இயல்பையுடைய அரவையே பூண்டால்தான் என்ன? அவரையே சுற்றியும் பற்றியும் நீ தொண்டு செய்வாயாக.

பெற்றம் - மாடு; பசுவுக்கும் எருதுக்கும் பொதுவான பெயர். இங்கே எருதுக்கு ஆயிற்று. என் - உனக்கு என்ன தடை. புற்றில் ஆடரவு என்றது பாம்பு என்ற இனத்தை நினைந்து சொன்னது. தாருகாவனத்து முனிவர் செய்த யாகத்தில் தோன்றிய பாம்புகளை அவர்கள் சிவபெருமான் மேல் ஏவி விட்டார்கள். அவற்றைப் பெருமான்

பற்றி அணியாக அணிந்து கொண்டார். ஆடரவேயது; அது என்பது பகுதிப் பொருள் விகுதி; அதற்குத் தனியே ஒரு பொருள் இல்லை. ராமனானவன் என்று சொல்வது போல அரவது என்றார். முதலில் சுற்றிவந்து ஆளின் தன்மையையும் இடத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டு பின் பற்றுவது இயல்பு. அதனை நினைந்து சுற்றி என்று முன்னே சொல்லிப் பின் பற்றி என்றார். சுற்றிப் பற்றித் துறையர்க்குப் பணி செய் என்று கூட்ட வேண்டும். பணி செய்தலாவது அப்பெருமானை நின்னைந்தும் வாழ்த்தியும் வழிபட்டும் காலம் கழித்தல்.)

திருச்சோற்றுத்துறை என்ற பெயரைக் குலைத்து இப்போது திருச்சத்துறை என்று வழங்குகிறார்கள். இதன் வடமொழிப் பெயர் ஓதனவனம். இங்குள்ள சிவபெருமானுடைய திருநாமம் வடமொழியில் ஓதனவனேசுவரர் என்று வழங்கும். சோறுடையான் என்பது தமிழ்ப் பெயர்.

இது ஐந்தாம் திருமுறையில் 33-ஆம் திருப்பதிகத்தில் உள்ள எட்டாவது திருப்பாட்டு.

★

ஓது பைங்கிளி

தோழி சொல்கிறாள்; திருமருகலிலே எழுந்தருளி யிருக்கும் மாணிக்க வண்ணப் பெருமானிடம் காதல் கொண்ட காதலி செய்யும் செயலைச் சொல்கிறாள்:-

அழகான பச்சைக்கிளி ஒன்றை அவள் எங்கேயோ சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாள். அது நன்றாகப் பேசும் சக்தி உடையதென்று தோன்றுகிறது. நாம் சொல்வதை அதுவும் ஓதுகிறது. அதனிடம் அவளுக்கு எத்தனை அன்பு தெரியுமா? முதலில் கிளிக்கு என்ன உணவு வேண்டுமோ அதைக் கவனித்துக் கொடுக்கிறாள். அவள் பால் குடிக்கிறதே இல்லை; தன் காதலன் அருள் கிடைக்காதபோது பாலும் சரி, அமுதமே ஆனாலும் சரி, அவளுக்குச் சுவை தருவதில்லை.

நல்ல சுவையுள்ள ஒண்பாலை அந்தப் பைங்கிளிக்கு அமுதாக ஊட்டுகிறாள். அதற்கு மெத்தென்ற படுக்கையைக் கூட்டுக்குள் அமைத்திருக்கிறாள். தன்னுடைய உயிரிலும் மேலாக அதைப் பாதுகாக்கிறாள்.

ஓது பைங்கிளிக்கு ஒண்பால் அமுது ஊட்டிப்
பாதுகாத்து.

பாலை உண்டு நன்றாக வளர்கிறது கிளி. அழகாகப் பேசுகிறது. அதற்கு இயல்பாகப் பேசவா தெரியும்? கிரீச் கிரீச் என்று போடுகிற சத்தந்தான் அதன் பாஷை. இப்போது மனித பாஷை பேசுகிறது. இனிய தமிழிலே என்ன என்னவோ வார்த்தைகளைப் பேசுகிறது. ''மாணிக்க வண்ணப் பெருமானே!'' என்று சொல்கிறது; ''மருகல் வாணரே!'' என்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறது. ''மாலை வேண்டும்'' என்று பேசுகிறது. இப்படி ஒன்று அல்ல; பல சொற்களைக் கற்றுக்கொண்டிருக்

கிறது. அதற்கு அப்படியெல்லாம் பேசுவது இயற்கை அன்று. அவள்தான் ஓது பைங்கிளிக்குப் பல பல கற்பித்திருக்கிறாள்.

அந்த மாது இவ்வாறு கிளியை ஊட்டிப் பாதுகாத்துப் பேச்சுக் கற்றுக்கொடுக்கிறாளே! உணவினால் அது இன்புறு கிறது. மற்றப் பாதுகாப்பினாலும் அது இன்பத்தை அடைகிறது. அது கற்றுக்கொள்ளும் இந்த வார்த்தைகளால் அதற்கு என்ன பயன்?

சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையாக அது இருப்பது பார்க்கிறவர்களுக்கு வியப்பை உண்டாக்குகிறது. மற்றக் கிளிகள் மரத்தின் பொந்திலே வாழ்ந்து பழங்களைக் கொத்தித் தின்று வித்துக்களையும் தின்று புழுவையும் தின்று வாழ்கின்றன. அவை பாலுணவை அறியாதவை. கூட்டு வாழ்க்கையை விரும்பாதவை; சொன்னதைச் சொல்லத் தெரியாதவை.

இந்தக் கிளியோ தூய பாலை உண்ணுகிறது. நல்ல பழங்களைத் தின்னுகிறது. தூய கூட்டிலே வாழ்கிறது. இதன் காலுக்குத் தண்டைகூடப் போட்டிருக்கிறாள். மடமங்கை யருக்கும் வராத இனிமையுடன் இந்தக் கிளி கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறது.

இவ்வளவு தூரம் காதலி இதை வளர்த்துப் பேசக் கற்றுக் கொடுப்பதனால் இதற்கு ஏதேனும் பயன் உண்டோ இல்லையோ அறியேன். ஆனால், அவளுக்குப் பயன் உண்டென்று தெரிகிறது. அவள் தன்னுடைய காதலனாகிய மருகற் பெருமானுடைய திருநாமங்களைப் பைங்கிளிக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறாள். அவற்றை இது சொல்லும் போது, கேட்டுக் கேட்டு இன்புறுகிறாள். இது அவள் நாள்தோறும் பெறும் பயன்.

தன் காதலனுடைய நாமத்தையும் புகழையும் பிறர் சொல்லக் கேட்பதில் காதலிக்கு இன்பம் உண்டாவது இயல்பு. இந்தக் கிளியோ பாலுண்ட வாயால் அமுதம் போன்ற சுவை உண்டாகும்படி இனிமையாக அவற்றைச் சொல்கிறது. இது எதைச் சொன்னாலும் இனிமையாக இருக்கிறது. காதலன் பெயரைச் சொன்னால் உண்டாகும் இன்பத்துக்கு அளவு சொல்ல முடியுமா?

காதலி இந்த இன்பத்தோடு நிற்கவில்லை. வேறு ஒரு பெரிய பயனை எண்ணியே இந்தக் கிளியைப் பாதுகாத்து வருகிறாள் என்பது இப்போது தெரிந்துவிட்டது. தன்னுடைய குறைகளையெல்லாம் மருகலிலே வாழும் பெருமானுக்குச் சொல்லியனுப்பி, அவனுடைய மாலையைப் பெற்று, அவன் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அடைந்து இன்புற வேண்டும் என்பது அவளுடைய ஆசை; தன் காதலை வேறு யாரிடம் சொல்வது? நாணம் மிகுதியாக உடையவளாதலால் வேறு யாரிடமாவது சொல்லி அனுப்புவதற்கு மனம் வரவில்லை. அதனால் இந்தக் கிளியையே தூது விடலாம் என்ற நினைவோடு இதற்கு இத்தனை உபசாரங்களும் செய்து பேச்சும் கற்றுக் கொடுத்திருக்கிறாள். நாம் சொல்வதை அப்படியே சொல்வதற்கு நம்பிக்கை உள்ளவர்கள் வேண்டும். மனிதர் களிடம் தன் கருத்தைச் சொல்ல அவளுக்கு நாணமாக இருக்கிறது. நாணத்தை விட்டுச் சொன்னாலும் அவர்கள் அவள் சொல்வதை அப்படியே சொல்வார்கள் என்பது என்ன உறுதி? கூட்டியும் குறைத்தும் சொல்லலாம். சொன்னதைச் சொன்ன படியே சொல்லுபவர் யாராவது கிடைத்தால் தூதாக அனுப்பலாம். அப்படி யாரும் கிடைக்கவில்லை.

தூது அனுப்பாமல் இருந்துவிடலாம் என்றால், அவளுடைய காதலை இறைவன் அறிந்துகொள்ளுவது எப்படி? 'அழுதபிள்ளை பால் குடிக்கும்' என்பார்கள். எத்தனையோ பேர்களுக்கு அருள் செய்யும் இறைவன் அவளை நினைந்து வருவது எளிய காரியமா? ஆதலால் அவள் தன் விருப்பத்தைச் சொல்லி அனுப்பத்தான வேண்டும். தூதாகச் செல்ல யாரும் இல்லை என்பதை உணர்ந்தாலும் அவள் நம்பிக்கையைக் கைவிடவில்லை. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை ஒன்றைத் தூது விடுவது என்று நிச்சயித்து, இத்தனை காலமாக அந்த எண்ணத்தைச் செயலாக்க வேண்டியவற்றைச் செய்து வந்திருக்கிறாள்.

இப்போது இந்தப் பைங்கிளி நன்றாகப் பேசுகிறது. தான் நினைத்தது இனி எளிதிலே நிறைவேறும் என்ற உறுதி அவ ளுக்கு வந்துவிட்டது. ''இனி இதை மருகற் பெருமானுக்குத் தூது சொல்ல விடலாம் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொடங்கிவிட்டாள்.

ஓது பைங்கிளிக்கு ஒண்பால் அமுதுஊட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே.

[(சொன்னதைக் தெரிந்துகொண்டு) சொல்லும் பச்சைக் கிளிக்கு, இந்த மாது நல்ல பாலாகிய உணவை ஊட்டி, (தங்கும் இடம், வேறு வகை உணவு முதலியவற்றை அளித்துப்) பாதுகாத்து, (இறைவனுடைய திருநாமம், அவனிடம் விண்ணப்பிக்கும் முறை முதலிய) பலவற்றைக் கற்பித்து, மருகலிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு (அக்கிளியைத்) தூது சொல்லும் படியாக அனுப்பத் தொடங்குவாள்.

ஓதுதல் - ஒருவர் சொல்ல மற்றொருவர் அதைச் சொல்லுதல். ஒண்மை - நன்மை: அமுது - உணவு. ஊட்டி - உண்ணச் செய்து. பாதுகாத்து - காப்பாற்றி. தான் இரண்டும் அசைநிலைகள். தூது சொல்ல - இறைவனிட்த்திலே தூதாகச் சென்று தான் வந்த தூதின் செய்திகளைச் சொல்லுவதற்கு. விட - அனுப்ப. தொடங்கும்: இன்னும் அனுப்பவில்லை: என்ன சொல்லவேண்டும் என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கும் நிலை இது.)

திருமருகல் என்னும் தலம் சோழநாட்டைச் சார்ந்தது; நன்னிலத்திலிருந்து செல்லவேண்டும்.

இந்தத் திருப்பாட்டு ஐந்தாம் திருமுறை, எண்பத் தெட்டாம் பதிகத்தில் நான்காவதாக அமைந்திருக்கிறது.

குறிகளும் அடையாளமும்

பல காலமாக வறுமையினால் வருந்தி நிற்பவன் ஒருவன், யாரேனும் ஒரு வள்ளலை அடைந்து தன் துன்பங்களை நீக்கிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறான். பலரிடம் விசாரித்து விசாரித்துக் கடைசியில் ஒரு வள்ளலைப் பற்றித் தெரிந்துகொள்கிறான். அவரிடம் சென்றால் அவனுடைய வறிய நிலை அடியோடு மாயும் என்று பலர் அவனிடம் சொல்கிறார்கள்.

அந்த ஏழை, வள்ளலைப் பற்றிய செய்திகளை எப்படித் தெரிந்துகொள்கிறான் என்பதைக் கவனிப்போம். முதல் முதலில் ஏழையின் காதில் அந்தச் செல்வருடைய பெயர் விழுகிறது. இன்ன பெயருடைய வள்ளல் ஒருவர் இருக்கிறார். அவர் இவ்வளவு உயர்ந்த குணமுடையவர் என்று பிறர் சொல்லச் சொல்ல அந்த வள்ளலுடைய பெயரை நன்றாகத் தெரிந்துகொள்கிறான். பிறகு அவருடைய அங்க அடையாளங்களை விசாரிக்கிறான். 'அவர் குட்டையாக இருப்பாரா? நெட்டையாக இருப்பாரா? கறுப்பாக இருப்பாரா? சிவப்பாக இருப்பாரா?' என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்கிறான். அவரைக் கண்டவர்கள் அவருடைய உருவத்தைப்பற்றிச் சொல்கிறார்கள்.

இனி அடுத்தபடி, அவர் எங்கே இருக்கிறார் என்ற கேள்வி தோன்றுகிறது. அதையும் ஏழை கேட்டுத் தெரிந்து கொள்கிறான். இன்ன ஊரில் இன்ன வீதியில் இன்ன எண்ணுள்ள இல்லத்தில் அவர் வாழ்கிறார் என்று திண்ணமாகத் தெரிந்துகொள்கிறான். ஊரும் இடமும் தெரிந்த பிறகு அதற்குப் போகிற வழியையும் அறிந்துகொள்கிறான். தான் இருக்கும் இடத்துக்கும் வள்ளலுடைய இருப்பிடத்துக்கும் நெடுந்தூரம் இருந்தாலும் சிறிது தூரம் இருந்தாலும், எப்படிப் போனால்

நிச்சயமாக அவர் இருக்குமிடத்தை அடையலாம் என்ற ஆவலுடன் விசாரித்துத் தெளிகிறான்.

எல்லாவற்றையும் தெரிந்துகொண்டாகி விட்டது. அடுத்தபடி மற்றொரு கேள்வி தோன்றுகிறது. ''அவரைப் போய்ப் பார்க்கவேண்டுமானால் எங்கே எப்படிப் பார்க்கிறது?'' என்பதே அக் கேள்வி. அதற்குத் துணையாக எழும் கேள்விகள் சிலவற்றை அவன் நண்பர்களிடம் கேட்கிறான். ''காலையில் அவரைப் பார்ப்பதானால் எங்கே பார்க்கலாம்? அவர் என்ன செய்து கொண்டிருப்பார்? மத்தியான்ன வேளையிலே அவர் படுத்துக் கொண்டிருப்பாரா? அப்போது அவரைப் பார்க்க முடியுமா? மாலை நேரத்தில் அவர் உலாவப் போவாரா? அல்லது வீட்டிலே இருப்பாரா?'' - இப்படிப் பல கேள்விகளைக் கேட்டு, எந்த எந்தச் சமயத்தில் எப்படி எப்படி இருப்பார் என்பதையும் அவன் தெரிந்து கொள்கிறான்.

★

பொருட் செல்வத்தை வழங்கும் வள்ளலைப் பற்றியே இத்தனை செய்திகளைத் தெரிந்துகொண்டு அவரை அணுக முற்படுகிறான் ஏழை என்றால், எல்லாச் செல்வத்துக்கும் மேலான அருட் செல்வத்தை வழங்கும் பெருவள்ளலாகிய இறைவனைப் பற்றி எத்தனை விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்!

முதலில் இறைவன் பெருஞ் செல்வன் என்பதை மனமாரத் தெரிந்துகொள்ளவேண்டும். நமக்கு உள்ள துன்பங்களை நீக்குவது அவனை அன்றிப் பிறர் யாராலும் இயலாது என்ற உண்மையையும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தன்னை அணுகினால் நம்முடைய துயரங்களை யெல்லாம் போக்கி இன்பத்தைத் தரும் பெருங்கருணையாளன் இறைவன் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். இத்தனையும் இருந்தால்தான் அவனைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்ளும் ஆவல் பிறக்கும்.

ரெயில் பிரயாணம் செய்கிறவர்கள் வண்டி செல்லும் நேரம், எந்த எந்த வழியாகப் போகிறது என்ற விவரங்களை விளக்கும் கால அட்டவணைப் புத்தகத்தை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். தாம் போகும் ஊருக்கு எந்த வழியாகப்

போகவேண்டும் என்றும், எந்த வண்டியில் போகவேண்டும் என்றும், எப்போது போகவேண்டும் என்றும் அந்த அட்ட வணைப் புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்கிறார்கள். பிரயாணம் செய்ய நினைக்காத ஒருவன் கையில் அந்த அட்ட வணைப் புத்தகத்தைக் கொடுத்தால் அவன் அதை எதற்குப் பார்க்கிறான்? அப்படி அதை ஏதோ பொழுதுபோக்காகப் பிரித்துப் பார்த்தாலும் அவன் மனம் அதில் பதியாது.

இறைவனுடைய பெருமையையும் அவனை அடையும் முறைகளையும் பற்றிச் சொல்லுகின்ற நூல்கள் பல இருக்கின்றன.

வேதங்கள் முதலியவற்றில் வேறு பல செய்திகள் இருந்தாலும் அவையெல்லாம் முக்கியமானவை அல்ல. பெரிய மரம் பல கிளைகளும் இலைகளும் உடையதாகிப் பரந்திருந்தாலும் அதன் உச்சியிலே பழுத்திருக்கும் பழந்தான் நமக்கு வேண்டும். 'இவ்வளவு பெரிய மரத்திலே நிறைய இருப்பவை இலைகள்; அவற்றையே நாம் பறித்துக்கொள்ள வேண்டும்' என்று நினைப்பவர் அந்த மரத்தினால் ஆகும் சிறந்த பயனை அடைய முடியாது. ஆதலின், அடிபருத்துக் கிளைபரப்பித் தழை அடர்ந்து பரந்திருக்கும் அந்த மரத்தின் பயன் அத்தனையும் அதன் கனிகளால் அமைவது என்று தெரிந்துகொண்டவர்கள், கனிகள் வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்துப் பறித்து உண்பார்கள். அந்த உண்மை தெரியாதவர்களும் பழத்தினிடம் ஆசை இல்லாதவர் களும் நாளெல்லாம் மரத்தின் நிழலில் இருந்தாலும் அதன் கனியை நுகரமாட்டார்கள்.

ஆரணங்களும் பிற நூல்களும் இறைவனை உணர்த்த வந்த நூல்கள். அவற்றை ஓதுவதன் பயன் அவனை உணர்வதே. மற்றவையெல்லாம் அதற்குச் சார்பாக உள்ளனவே.

அவை இறைவனுடைய திருநாமங்களைச் சொல்கின்றன. பெயர், நாமம், குறி என்பவை ஒரே பொருளை உடையவை. நூல்கள் இறைவனுடைய குறிகளைச் சொல்கின்றன; அடை யாளத்தைச் சொல்கின்றன; அவன் எழுந்தருளியிருக்கும் இடமாகிய கோயில்களைச் சொல்கின்றன; அவனை அணுகு வதற்குரிய நெறிகளைச் சொல்கின்றன; அந்த மார்க்கங்களில்

எல்லாம் அவன் எவ்வாறு நிற்கிறான் என்பதையும் அவை உணர்த்துகின்றன.

தன்னுடைய துன்பங்களைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று ஏங்குபவன், இறைவனுடைய திருவடிகளில் ஈடுபட்டு இன்புறவேண்டும் என்ற ஆவலுடையவன், அவனுடைய குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் நின்ற நேர்மையும் எத்தகையன என்று ஆர்வத்தோடு அறிய முற்படுவான். அத்தகைய ஏக்கமும் ஆவலும் இல்லாதவன் ஆயிரமுறை வேதத்தைப் புரட்டினாலும், ஆயிரக்கணக்கான நூல்களைப் படித்தாலும் அவன் மனத்தில் உண்மை புகாது. பிராயாணம் செய்ய வேண்டாதவன் ரெயில்வே கால அட்டவணையைப் பார்த்தும் மனம் பதியாததுபோல, இவனும் ஆயிரம் ஆரணம் ஓதினும் மனம் புகாது.

இறைவனுடைய அருளுக்காக ஏங்கி நிற்கும் உண்மை யன்பருக்கு ஒரு நூலின் ஒரு பாட்டே போதும், இறைவனது உண்மையைத் தெரிந்து கொள்ள. ஆனால், இறைவனுடைய குறிகளையும் அடையாளங்களையும் கோயிலையும் நெறி களையும் அவன் நின்ற நேர்மையையும் தெரிந்து கொள்வது தான் அவற்றைப் படிப்பதனால் உண்டாகும் பயன் என்பதை மறந்து நூல்களைப் படிப்பவர்களுக்கு வெறும் நூலறிவு கிடைக்கலாம்; அவர்களுக்கு உண்மை புலப்படாது. அவர்கள் ஆயரக்கணக்கான நூல்களைப் படித்தாலும் ஒரு பயனும் இராது. அவர்கள் தலையெழுத்து அத்தகையது. அதற்கு என் செய்வது?

★

வேதம் படித்தவர்கள் பலரைத் திருநாவுக்கரசர் கண்டார்; ஆகமங்களில் பேரறிவு படைத்தவர்களையும் கண்டார்; சாத்திரங்களின் எல்லை கண்டவர்களையும் கண்டார்; பலபல நூல்களில் தேர்ச்சி பெற்ற புலவர்களையும் பார்த்தார். இறைவனுடைய பெருமையை உணர வழிகாட்டுவன அந்த நூல்கள் என்பதை அப்பெரியார் அறிவார்; ஆனால் அந்த நூல்களைப் படித்தவர்களிற் சிலர் அந்த நூல்களிலுள்ள மற்றப் பகுதிகளை விரித்து விரித்துப் பேசினார்கள்; இறைவனைப் பற்றிப் பேசவே இல்லை, அதுமாத்திரம் அன்று. இறைவனுக்குத் திருநாமங்களும் அடையாளங்களும்

கோயில்களும் உண்டென்று வழிபடும் அன்பர்களைக் கண்டு எள்ளி நகைத்து, ''வேதத்தில் இவைகள் எல்லாம் இல்லை'' என்றுகூடச் சொன்னார்கள்.

அவர்களைக் கண்டு அப்பர்சுவாமிகளுக்கு இரக்கந்தான் உண்டாயிற்று. கனியிருக்கும் இடத்தை நாடியறியாத சோம்பேறி களுக்கு வெறும் இலைப் பரப்பே தோன்றுவது போல, அவர்களுக்கு உண்மை விளங்கவில்லை என்று கண்டார். ''இறைவனை அறியும் நல்லூழ், நல்ல எழுத்து, பொறி இவர்களுக்கு இல்லைபோலும்!'' என்ற முடிவுக்கு வந்தார். பாடுகிறார்.

குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்!மனம் என்கொல் புகாததே?

(எம்பெருமானுடைய திருநாமங்களையும், திருவுருவம் ஆடையணிகள் படைகள் முதலிய அடையாளங்களையும், திருக்கோயில் களையும், அவரை அடையும் நெறிகளையும், அவர் அங்கங்கே எழுந்தருளியிருக்கும் நுட்பமான உண்மையையும் அறியும்பொருட்டு, ஆயிரம் வேதங்களை ஓதினாலும், அதற்கு ஏற்ற நல்லூழ் இல்லாதவர்களே! அந்த உண்மையைக் கண்டு பிடித்து அறியும் அளவு உங்கள் மனம் புகாதது என்ன வியப்பு?

குறிகள் - பெயர்கள். அடையாளம் - திருமேனி, மாலை, அணி முதலியவை. கோயில் என்றது இருப்பிடமாக உள்ள எல்லாவற்றையும். கட்டிய கோயில் மாத்திரம் அன்று; உள்ளம், வேதத்தின் முடி, இயற்கைச் சூழல்கள், கோயில்கள் எல்லாவற்றையுமே கோயில் என்பதனாற் குறிப்பித்தார். நின்றது ஓர் நேர்மை - எழுந்தருளி யிருக்கின்றதாகிய நுட்பம். நெறி என்பது சமயம். பலவகைச் சமயங்களிலும் பலவகை இடங்களிலும் இறைவன் எவ்வெவ்வாறு எழுந்தருளி யிருக்கிறான் என்பது நுட்பமான செய்தி, கடவுள் ஒருவரே ஆயினும் பல பெயர்களோடும் பல திருவுருவங்களோடும் பல இடங்களிலும் பல சமயத்திலும் நிற்பதை முரண்பாடாகக் கொள்ளாமல் சமரச அறிவோடு காண்பதற்கு நுட்பமான ஆராய்ச்சி வேண்டும். அது எல்லோருக்கும் விளங்குவது அன்று. ஆதலின் அதனை நேர்மை என்றார். நேர்தல் - நுணுகுதல்; நேர்மை - நுட்பமாந் தன்மை.

ஆயிரம் ஆரணம் என்றார், வேதத்தைப் பல என்று சொல்லும் வழக்கு நோக்கி. ''அநந்தாவை வேதா:'' என்று சொல்வார்கள்.

சாகைகளாற் பலவாதலின் வேதங்கள் பல ஆயின. இங்கே ஆயிரம் என்றாலும் பல என்ற பொருளையே தந்தது. ஆரணம் என்றாலும் உபலட்சணத்தால் மற்ற நூல்களையும் கொள்ளவேண்டும்.

பொறி - தலை எழுத்து. மனம் புகாதது என்கொல் - அவற்றின் நுட்பத்தை அறியுமளவுக்கு மனம் ஆழ்ந்து செல்லாதது என்ன வியப்பு? மேலெழுந்தபடியே எழுத்தையும் சொல்லையும் நூலமைப்பையும் மற்றவற்றையும் ஆராயும் அறிவோடு நிற்கறீர்களேயன்றி, இறைவனுடைய நுட்பமான தத்துவத்தைத் தெரிந்துகொள்ளும் வகையில் அவற்றினூடே ஆழ்ந்து பதிந்து உணர்ச்சி பெற்றீர் களில்லையே என இரங்கினார்.)

★

குறியும் கோலமும் கடந்த இறைவன் தன் திருவருளால் குறியும் கோலமும் கோயிலும் கொள்கிறான். எல்லாம் கடந்த அவன் இவற்றோடு இசைந்து நிற்பதன் தத்துவம் நுட்பமானது. வெறும் நூலறிவைக்கொண்டு இந்த நுட்பத்தை அறிய இயலாது. அவன் அருளிலே இடையீடில்லாத நாட்டத்துடன் ஆழ்ந்து நுழைபவர்களுக்கு இந்த உண்மை புலனாகும். குறிகளும் அடையாளமும் கோயில்களும் இருந்தும், அவற்றை அறிய ஆயிரம் ஆரணம் இருந்தும், அவற்றை ஓதியும் உண்மை புலப்படாததற்குக் காரணம் ஓதுவாருக்கு இறைவன் அருள் இன்மையே ஆகும். அவனுடைய அருட்கண்ணால் நோக்கு வாருக்குத்தான் உண்மை புலப்படும். ''அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே'' என்று அப்பரே சொல்வதுபோல அந்தப் பார்வை இல்லாதார் நல்ல பொறியில்லாத அல்லாதார்.

> ''நூல்அறிவு பேசி நுழைவிலா தார்திரிக;
> நீல மணிமிடற்றான் நீர்மையே - மேல்உவந்தது;
> எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
> அக்கோலத் தவ்வுருவே ஆம்''*

என்று காரைக்காலம்மையார் சொல்கிறார்.

''குறிகளும் அடையாளமும்'' என வரும் இந்தத் திருப்பாட்டு ஐந்தாம் திருமுறையில் 90-ஆம் பதிகத்தில் உள்ள ஆறாம் பாட்டு.

★

அற்புதத் திரு அந்தாதி, 33.

ஈசன் எனும் கனி

உண்ணுவதற்கு இனிய பண்டங்கள் பலவற்றை நாம் அறிவோம். சர்க்கரைப் பண்டங்கள் விருந்திலே சிறப்பாக இருப்பதையும், அவற்றை மக்கள் விரும்பி உண்பதையும் பார்த்திருக்கிறோம். அவை பல பண்டங்களைக் கொண்டு, முயற்சி செய்து பண்ணிய செயற்கைப் பொருள்கள். சர்க்கரை கூடச் செயற்கைப் பொருள்தான்.

ஆனால் இயற்கையிலே இனிமையான பொருளாக, மனிதன் உண்டு சுவை காணும் பொருளாக, இருப்பது கனி. நன்றாகக் கனிந்த கனியின்பால் விருப்பம் இல்லாதவர்கள் யார்? ''கனியே, கனி ரசமே'' என்று அன்புடையாரைப் பாராட்டும் வழக்கத்தை ஆராய்ந்தால், கனி மனிதனுடைய விருப்பத்துக்கும் மதிப்புக்கும் உரிய பொருள் என்பது நன்கு தெளிவாகும்.

பழுத்த பழமாகிய திருநாவுக்கரசர் ஒரு கனியைப் பற்றிச் சொல்கிறார். அதைக் கொஞ்சம் கேட்கலாம்.

★

திருநாவுக்கரசர்: மனிதர்களே! இங்கே வாருங்கள்.

மனிதர்கள்: எதற்குச் சுவாமி கூப்பிடுகிறீர்கள்?

திருநா: சும்மா உங்களை அழைப்பேனா? காரியம் இருந்துதான் அழைக்கிறேன். இங்கே வாருங்கள். ஒன்று சொல்கிறேன், கேளுங்கள்.

மனிதர்கள்: எங்கள் வேலையே எங்களுக்குப் பெரிதாக இருக்கும்போது நீங்கள் சொல்வதைக் கேட்டுச் செய்வதற்கு எங்களுக்கு நேரம் ஏது? பொழுது விடிந்தால் இந்த வயிற்றை நிரப்ப வழி தேடுவதே வேலையாக அலைகிறோம். ஒரு சாண் வயிற்றுக்கு உலகம் படும் பாடு நீங்கள் அறியாததா? இந்த

நெருக்கடியில் நீங்கள் சொல்வதைக் கேட்டால் எங்கள் வயிறு நிரம்புமா?

திருநா: உங்கள் இயல்பை அறிந்துகொண்டுதான் அழைக்கிறேன். வயிற்றுக்கு உண்ணுவதுதான் வாழ்க்கையில் உத்தியோகம் என்று இருக்கும் உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். வயிற்றுக்கு உண்ணுவதிலேகூட விலங்கினங்கள் உண்பதற்கும் மனிதன் உண்பதற்கும் வித்தியாசம் உண்டு என்பதும் நான் அறிவேன். விலங்குகள் பசிக்காக உண்ணு கின்றன. மனிதனோ பசிக்கும் உண்ணுகிறான்; ருசிக்கும் உண்ணுகிறான். பசியைத் தீர்க்க எந்த உணவானாலும் சரி என்று அவன் உண்ணுவதில்லை; ருசியாக இருக்குமா என்று ஆராய்ந்தே உண்ணுகிறான். மனிதனுடைய உணவிலே ருசி தலைமை பெறுகிறது. ருசியுள்ள உணவை நாடும் உங்களுக்கு ருசியான ஒரு பொருளைப் பற்றித்தான் சொல்லப்போகிறேன். இங்கே வாருங்கள்.

மனிதர்கள்: அப்படியா! இதை முன்பே சொன்னால் மறுமொழி பேசாமல் வந்திருப்போம். நீங்கள் எந்த ருசியுள்ள பண்டத்தைப்பற்றிச் சொல்லப்போகிறீர்கள்?

திருநா: சொல்வது மாத்திரம் அல்ல: நான் அதை உங்களுக்குத் தரலாம் என்றும் நினைக்கிறேன்.

மனிதர்கள்: அது என்ன பண்டம்? சோறா, சிற்றுண்டியா, பட்சணமா?

திருநா: அவற்றைவிட ச் சிறந்தது. இனிமையானது.

மனிதர்கள: தேனா? சர்க்கரையா?

திருநா: இயற்கையாகவே இனிமையைப் பெற்றது.

மனிதர்கள்: கனியா?

திருநா: ஆம், கனிதான்; கனியைத் தந்தால் உங்களால் உண்ண முடியுமா?

மனிதர்கள்: அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் என்று சொல்வார்கள். பழம் என்றால் அழுகிற குழந்தைகூட வாயைப் பிளக்குமானால் எங்கள் ஆவலைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

திருநா: அப்படியானால், கனி தந்தால் அக் கனியை உண்ண வல்லீர் நீங்கள்.

மனிதர்கள்: ஆம்; அதில் யாதோர் ஐயமும் இல்லை. ஆனால் கனியென்றால் எல்லாம் கனியாகுமா? எட்டிக் கனியும் கனிதான். அதை உண்ண முடியுமா? நெருஞ்சி முள்ளைக்கூட வள்ளுவர் ''நெஞ்சிப் பழம்'' என்று சொல்கிறார். அது தின்னும் பழமாகுமா? தின்னக்கூடிய நல்ல பழமாக இருந்தால் அதை உண்ணுவோம்.

திருநா: புனிதமான கனி அது; நன்றாகக் கனிந்த கனி; நெகிழ்ச்சியுள்ள கனி.

மனிதர்கள்: அது எப்படி இருக்கும்? அதன் பேர் என்ன?

திருநா:அதற்குக் காம்பு உண்டு. அதன் அடியில் உள்ள அந்தக் காம்பு பளபளக்கும்; பொன்னாகவே தோற்றும்.

மனிதர்கள்: இது என்ன புதிய பழமாக இருக்கிறதே! பொற்காம்பு உள்ள பழமானால் அது உண்மையான கனிதானா? அல்லது அதுவும் பொற்கனியாக இருக்குமா?

திருநா: இல்லை, இல்லை; அது இனிக்கும்; மிக இனிக்கும்; சால இனிது.

மனிதர்கள்: அதன் பெயர் என்ன?

திருநா: அதை ஈசன், ஈசன் என்று சொல்வார்கள். அது சால இனிது.

மனிதர்கள்: அதை உண்டவர்த்ுள் யாரையும் நாங்கள் பார்த்ததில்லையே. அவ்வளவு இனிதாக இருந்தால் ஊரெல்லாம் இருக்குமே!

திருநா: அந்தப் பழம் எல்லாராலும் உண்ண முடியாதது: எல்லோருக்கும் கிடைப்பது அரிது; அதன் பெருமையைத் தெரிந்து அது கிடைக்காதா என்று ஏங்கிக் கிடப்பவர்களுக்கே அது கிடைக்கும்; அதை உண்டால் சால இனிக்கும்.

மனிதர்கள்: தேன்கூடத்தான் சால இனிக்கிறது.

திருநா: அப்படி அன்று. மற்றக் கனிகள் உடம்பில் மிக மெல்லிய உறுப்பாகிய நாவுக்கு இனிக்கும்; அதுவும் நுனி

நாக்கில்தான் இனிக்கும். ஈசன் எனும் கனியோ நாவுக்கு இனிக்கும்; உடம்புக்கு இனிக்கும்; உயிருக்கே இனிக்கும்.

மனிதர்கள்: அது கனிந்த பழந்தானா?

திருநா: ஈசன் என்னும் கனியிலே கருணை யென்னும் சாறு பூரித்து நிற்கிறது. அதனால் அது நெகிழ்ச்சி பெற்றுக் கனிந்து நிற்கிறது. பார்க்க அழகாக இருக்கிறது. உண்ணச் சுவையாய் இருக்கிறது. புனிதமான கனியாதலால் உண்ட பிறகும் நல்ல பயனைத் தருவதாக இருக்கிறது. ஏசற்ற வர்களுக்கு அழகாகவும் இனிதாகவும் புனிதமாகவும் இருக்கும் அந்தக் கனி உங்களுக்கு வேண்டுமா? நீங்கள் அது வேண்டு மென்று ஆசைப்பட்டு ஏங்கி நிற்பீர்களா? அந்தத் தகுதி உங்களுக்கு உண்டானால் நான் தருகிறேன்.

★

''கடவுளாகிய கனியைத் தருகிறேன்: தந்தால் உண்பீர்களா!'' என்று கேட்கிறார் அப்பர் சுவாமிகள். இறைவனை உணரமுடியாது என்று சொல்லுகிறவர்களே பலர். அவனை உணர்ந்து கொண்டேன் என்று சொல்பவரோ மிக மிகச் சிலர். ஆனால், நான் உணர்ந்து கொண்டது போல நீயும் உணரும்படி செய்வேன் என்று சொல்லுகிறவர்கள் மிகவும் அரியர். சுவாமி விவேகானந்தர் தமக்கு எதிர்ப்பட்ட சந்நியாசிகளை யெல்லாம், ''நீ கடவுளைக் கண்டாயா?'' என்று கேட்டாராம். அந்தக் கேள்விக்கு நேர்மையான விடையை யாரும் கூறவில்லை. இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் அவர் போன போது அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டார். அதைச் செவியுற்ற அந்த மாஞானி புன்முறுவல் பூத்தார். மற்றவர்கள் சொல்லாத விடையை அவர் சொன்னார். ''நான் கடவுளைக் கண்டேன்'' என்று மாத்திரம் அவர் சொல்ல வில்லை. அதற்கு மேலும் ஒரு படி போனார். ''உனக்கும் காட்டுவேன்'' என்றார். விவேகானந்தர் பிரமித்துப் போய்விட்டார். அவர் அடியே புகல் என்று அடைந்து இராமகிருஷ்ணர் கூறியது எவ்வளவு உண்மை என்பதை விவேகானந்தர் தம் அநுபவத்தினால் உணர்ந்தார்.

அப்பர் சுவாமிகளும் அந்த நிலையிலிருந்து பேசுகிறார். ''தேடிக் கண்டு கொண்டேன்'' என்று சொன்ன அப்பெருமான்

மனித குலத்தின்பால் உள்ள இரக்கத்தால், ''உங்களுக்கும் தருகிறேன்'' என்று சொல்கிறார். அப்படிச் சொல்லுவதற்குத் தைரியம் வேண்டும். உண்மை அநுபவம் வேண்டும். அப்பர் சுவாமிகள் அவற்றைப் படைத்தவர்.

மனிதர் காள்இங்கே வம் ஒன்று சொல்லுகேன்.
கனிதந் தால்கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன், பொற்கழல் ஈசன் எனும்கனி;
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.

(மனிதர்களே! இங்கே வாருங்கள்; உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். பழம் கொடுத்தால் அந்தப் பழத்தை உண்ணவும் உங்களுக்குத் திறமை உண்டா? புனித முடையவன், பொன்னாலாகிய கழலை அணிந்த ஈசன் என்னும் கனி, அது கிடைக்குமா என்று ஏங்கி நிற்பவர்களுக்கு மிகவும் இனியது.

வம் - வாரும். சொல்லுகேன் - சொல்லுவேன். வல்லிரே - வல்லீர்களா. புனிதன் - தூயவன். ஏசற்றவர் - விருப்ப மிகுதியால் ஏங்கி நிற்பவர்.)

கனிக்குக் காம்பு போல ஈசனுக்குக் கழல் இருக்கிறது. சாறு நிரம்பின கனி நிறமும் நெகிழ்ச்சியும் பெற்றுநிற்பது போல இறைவன் கருணை நிரம்பிக் கோலமும் உயிர்களுக்கு அருளும் நிலையும் உடையவனாக விளங்குகிறான். அவனை உணர்ந்து 'நுகர்வது எல்லார்க்கும் எளிய செயல் அன்று; ஆதலின் 'வல்லிரே' என்று கேட்டார்.

இது 91-ஆம் பதிகத்தில் 7-ஆம் பாட்டு.

★

உள்ளும் புறம்பும்

மனிதன் உடம்பிலே அழுக்கு ஏறினால் அதை அவனால் கூடப் பொறுக்க முடியாது; அப்படியானால் அருகில் இருக்கிறவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இந்த உடம்பிலே எந்தப் பொருள் பட்டாலும் அழுக்கு ஏறிவிடுகிறது. சலவைத் தொழிலாளர்கள் யாவரும் மனிதனுடைய அழுக்கை மறைக்கப் பாடுபடுகிறார்கள். தோட்டிக் குலத்தினரெல்லாம் அப்படியே வேறோர் அழுக்கை மறைக்கப் பாடுபடுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் தண்ணீர் உதவி செய்கிறது. எந்த மனிதனும் தன் அழுக்கைப் போக்கிக் கொள்ளத் தண்ணீரை நாடுகிறான்.

''புறந்தூய்மை நீரான் அமையும்''

என்பது வள்ளுவர் வாக்கு.

தன் உடம்பைத் தானே அழுக்குப் போகத் தேய்த்துக் குளிப்பவனுக்கு உண்டாகும் இன்பம் தனி வகையானது. அந்தப் பழக்கம் உள்ளவனுக்குக் குளிக்காமல் உண்டால் ஏதோ அழுக்கான உணவை உண்பது போல ஓர் அருவருப்பு உண்டாகும். ''கூழானாலும் குளித்துக்குடி; கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்ற பழமொழி, நீரினால் உண்டாகும் தூய்மையை நினைந்து வந்ததுதான்.

பொதுவாக, நீர் மனிதனுடைய புற அழுக்கைப் போக்கினாலும் ஓடுகிற நீருக்கு அதிக ஆற்றலுண்டு. எத்தனை பேர் படிந்தாலும் ஆற்று நீர் அழுக்காவதில்லை. அதன் ஓட்டத்தில் ஒரு விதமான சக்தி இருக்கிறது. அது சிலவகை நோய்களைக்கூட நீக்கிவிடும்.

சில இடங்களில் உள்ள தீர்த்தங்களுக்கு மகிமை அதிகம். இந்தக் காலத்தில் தீர்த்தங்களைப் பாதுகாக்கும் வழக்கத்தை

அளவளவாகக் கவனிப்பதில்லை. பழங் காலத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்று மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்வார்கள். கோவில் குளம் என்பார்கள். கோவிலைப் பாதுகாப்பது போலக் குளங்களையும் பாதுகாத்தார்கள். சில சில இடங்களில் உள்ள மண்ணின் வாகினால் அங்குள்ள நீரில் ஆடுபவர்களிடமுள்ள சிலவகையான நோய்கள் தீரும்.

அது மாத்திரம் அல்ல; மனிதனுடைய வாழ்நாளில் அவன் செய்கிற காரியங்களும் நுகரும் அநுபவங்களும் இறைவனுடைய நினைவோடு அமைந்தால் அவனுக்கு அமைதி உண்டாகும்; துன்பம் உண்டானால் அதனைப் பொறுக்கும் வன்மையும், இன்பம் உண்டானால் செருக்கு அடையாமல் அடங்கி நிற்கும் பணிவும் ஏற்படும். அதனால் இந்த நாட்டில் எல்லாச் செயல்களிலும் இறைவனுடைய நினைப்புக்கு இடம் வைத்திருக்கிறார்கள்.

மனிதன் பசிக்கு உணவு உண்ணவேண்டும்; அதை இறைவனுக்கு நிவேதனம் செய்து பிரசாதமாக உண்ணும்படி வகுத்திருக்கிறார்கள். அவனுக்கு உறையுள்வேண்டும்; அதில் இறைவனைப் பூசிக்கும் இடம் ஒன்று வகுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அவன் நீராடவேண்டும்; அதற்குரிய நீரைத் தீர்த்தமென்று சொன்னார்கள். இறைவனோடு தொடர்புடையன வாக்கியும், அவனைப் பூசித்த அன்பர்களுடைய தொடர்புடையனவாக்கியும் நீர் நிலைகளின் மதிப்பை ஓங்கச் செய்தனர். எப்போதும் ஓரிடத்தில் நீராடுவானை வேறு இடங்களில் உள்ள தீர்த்தங்களுக்குச் சென்று ஆடச் சொன்னார்கள். தலயாத்திரை, தீர்த்த யாத்திரை ஆகியவற்றால் மக்களுக்கு யாத்திரையால் அமையும் இன்பமும், பிற இடங்களில் உள்ள மக்களோடு உறவு கொள்ளும் நலமும், விரிந்த மனப் பான்மையும் உண்டாயின. இவ்வாறு யாத்திரை செய்பவனுக்கு உடம்பு தூயதாவதோடு, அவனுடைய மனமும் விரிவுற்றுத் தூய்மை அடையும் என்பதை அநுபவத்தால் உணர்ந்தார்கள்.

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்பார் தாயுமானவர்.

★

தலங்களுக்குச் செல்வது, தீர்த்தங்களில் ஆடுவது, மூர்த்தி களைத் தரிசிப்பது ஆகிய காரியங்களில் நம்பிக்கையும் பக்தியும் இருந்தாலன்றி அவற்றால் பயன் உண்டாகாது. வெறும் நீர் புறத்தூய்மையை உண்டாக்கும். அதுவே தீர்த்தமானால் அகத் தூய்மையையும் உண்டாக்கும். வெறும் உணவு பசியைப் போக்குகிறது. இறைவனுடைய பிரசாதமாக இருந்தால் அவ் விறைவனுடைய நினைவும் சேர்கிறது. அதனால் உள்ளத்தில் அமைதி உண்டாகிறது. பிறர்தரும் உணவிலே பசி ஆறுகிறது என்பது உண்மை. ஆனால் தன் மனையாட்டி அளிக்கிற உணவினால் பசி ஆறுவது மட்டும் அன்று; அதற்குமேலே மனத்துக்குள் ஒருவகை இன்பம் உண்டாகிறது. அதற்குக் காரணம் மனைவியினிடம் அவனுக்கு இருக்கும் காதல். அவ்வாறே இறைவனிடம் அன்புடையவர்களுக்கு அவனது தொடர்புடைய பொருள்களால் உண்டாகும் இன்பம் அதிகமாக இருக்கும்.

பல தீர்த்தங்களில் நீராடும்போது உடம்பின் அழுக்குப் போவதோடு உள்ளத்திலும் தண்மை புகவேண்டுமானால் அந்த உள்ளத்தே பக்தி இருக்க வேண்டும். அந்த அன்பு இல்லாதவன் வீட்டுக் கிணற்றில் குளித்தாலும் ஒன்றுதான்; கங்கையில் ஆடினாலும் ஒன்றுதான். அவன் உள்ளத்துக்குள்ளே புகுவதற்கு ஒன்றும் இல்லை, அங்கே அன்பென்னும் வாயில் திறந்திருந் தால்தான் தீர்த்தங்களில் நீராடியதனால் உண்டாகும் தண்மை உள்ளத்துக்குள்ளே புகும்.

செம்பிலே நீர் எடுத்துக் குடிக்கிறோம். அதைச் சுத்தமாக வைத்திருந்தால்தான் நீரும் தூயதாக இருக்கும். வெளியிலே மாத்திரம் நன்றாகத் தேய்த்துக் கழுவிப் பளபளவென்று வைத்திருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்; அவ்வளவு தான். உள்ளேயும் நன்றாகத் துலக்கிச் சுத்தம் பண்ணினால்தான் அதில் நீர் மொண்டு சாப்பிடலாம்.

தீர்த்தத்தில் ஆடுகிறவன் புறத்தூய்மை பெறுகிறான். அவன் உள்ளம் அன்பென்னும் நீரில் ஆடினால்தான் உள்ளும் புறமும் தூயனவாகும். கோடி தீர்த்தங்களுக்குச் சென்று நன்றாக மூழ்கி ஆடினாலும் புறத் தூய்மையோடு நிற்க வேண்டியதுதான். அதற்கு அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமே இல்லை.

ஒருவன் ஒரு குடத்தில் தண்ணீர் நிரம்ப ஊற்றி மூடி வைத்து விடுகிறான். ''இந்தத் தண்ணீரில் தூசி விழாது; மூடி வைத்திருக்கிறேன்'' என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அந்தக் குடம் ஓட்டையா அல்லவா என்று அவன் பார்க்கவில்லை. ஓட்டைக் குடந்தான் அது. சிறிது நேரத்தில் அதில் இருந்த தண்ணீர் ஒழுகிப் போய்விடுகிறது. அவன் தண்ணீர் விட்டதில் குறையில்லை; தூசி விழாமல் மூடியதிலும் குறையில்லை. ஆனால் நீர் குடத்துக்குள் தங்காதபடி அதில் ஓட்டை இருக்கிறது. அதனால் அது ஒழுகிவிடுகிறது.

''தண்ணீர் நிரப்பினேன்; மூடியும் வைத்தேன். ஆனால் தண்ணீர் எனக்குப் பயன்படவில்லை'' என்று அவன் சொன்னால் அதன் வியப்பு ஒன்றும் இல்லையே!

மனம் பலவாறு திரிந்து, அரனுக்கு அன்பு அற்ற ஓட்டையாக இருந்தால், எத்தனை தீர்த்தத்தில் நீராடினாலும் அதன் பயன் அவனிடம் தங்காது. மனத்தில் இறைவனிடம் ஒன்றுபட்ட அன்பு நிறைந்திருந்தால் ஒரு தீர்த்தத்தில் ஆடினாலும் உடனே அகத்தில் அதன் தண்மை உறைக்கும்.

அப்பர் சுவாமிகள் இதைச் சொல்கிறார்.

கோடி தீர்த்தம் கலந்து குளித்து, அவை
ஆடி னாலும் அரனுக்குஅன்பு இல்லையேல்,
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்துஅட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே.

(ஒருவன் கோடிக் கணக்கான தீர்த்தங்களுக்குச் சென்று பொருந்தி உடம்பெல்லாம் நனையக் குளித்து அமிழ்ந்து ஆடினாலும், அவன் மனத்தில் சிவபெருமானுக்கு அன்பு இல்லாவிட்டால், அவன் ஓடுகிற தண்ணீரை ஓட்டைக் குடத்தில் சேமித்து மூடி வைத்த பேதையை ஒப்பான்.

கலந்து என்றது அந்தத் தீர்த்தத்தில் இறங்குதலாகிய முதல் நிலையையும், குளித்து என்றது உடம்பு நனைய அமிழ்வதாகிய இரண்டாவது நிலையையும், ஆடி என்றது முழுகி ஆழ்ந்து நீராடும் மூன்றாவது நிலையையும் குறிப்பித்தன.

அட்டி - ஊற்றி. மூர்க்கன் - பேதை; பிடிவாதக்காரன். ஒக்கும் - ஒப்பான். ஒருவன் என்ற எழுவாயை வருவித்துக் கொள்ள வேண்டும்.)

இது 99-ஆம் பதிகத்தில் உள்ள 9 - ஆவது திருப்பாட்டு.

★

கூவல் ஆமையும் கடல் ஆமையும்

கடலுக்கு அருகே ஓர் இடத்தில் ஒரு கிணறு இருந்தது. அதில் நெடுங்காலமாக ஓர் ஆமை வாழ்ந்து வந்தது. அதற்கு அந்தக் கிணறுதான் பிரபஞ்சம். கிணற்றிலுள்ள மீன்கள், தவளைகள், நண்டுகள் இவைகளே உலகத்துப் பிராணிகள். எப்போதாவது யாராவது பையன் கல்லைக் கிணற்றிலே எறிந்தால் இடி விழுந்ததுபோல இருக்கும்.

கடலிலேயும் ஆமைகள் உண்டு அல்லவா? அவற்றில் ஓர் ஆமை மெல்லக் கரைக்கு வந்தது. தரையில் நடக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. சிறிது நேரம் தரையிலே இருந்துவிட்டு மறுபடியும் கடலுக்குள்ளே போய்விடும். நாளாக ஆக அதற்குத் தரையிலே மெல்ல ஊர்ந்து போவதில் பயமே தோன்றவில்லை. முதலில் சிறிது தூரம் அது ஊர்ந்தது. கடலி லிருந்து மணலுக்கு வந்து மணலைத் தாண்டிக் கெட்டியான தரைக்குக்கூட வந்தது. வரவர அதற்குத் தரையில் நடமாடும் ஆசையும் தைரியமும் அதிகமாயின. மெல்ல மெல்லக் கடலை விட்டு அதிகத் தூரம் போய் மறுபடியும் திரும்பி வந்துவிடும்.

ஒரு நாள் இப்படியே தரையில் போய்க்கொண்டிருந்த போது ஒரு நாய் அதைக் கண்டுவிட்டது. அதன் பக்கம் வந்து மோந்து பார்த்தது. அதன் மோப்பத்தைச் சகிக்காமல் கடல் ஆமை தன் கழுத்தை உள்ளுக்குள்ளே இழுத்துக் கொண்டது.

அப்போதுதான் அதற்கு அச்சம் முதல் முதலாகத் தோன்றியது. மறுபடியும் கடலுக்குப் போனால் போதும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால் நாயினிடமிருந்து தப்பி யல்லவா கடலுக்குப் போக வேண்டும்? நெடுநேரம் தலையை வெளியில் நீட்டாமல் கிடந்தது. பிறகு மெதுவாகத் தலையை நீட்டியது. நல்ல வேளை, நாய் போய் விட்டது! அவசர

அவசரமாக அது கடலை நோக்கிப் புறப்பட்டது. என்னதான் அவசரமாக வந்தாலும் ஆமை வேகம் ஆமை வேகந்தானே? அதற்குத் திகில் அடித்துக் கொண்டது. அந்த அச்சத்தால் வழி தவறிவிட்டது.

திக்குத் திசை தெரியாமல் வந்து கொண்டிருந்தபோது மற்றொரு நாய் அதைப் பிடிக்க வந்தது. அப்போது கடல் ஆமை முன்னே சொன்ன கிணற்றுக்கு அருகில் வந்திருந்தது. நாய்க்குத் தப்ப வேண்டும் என்று அது மெல்லக் கிணற்றுக்குள் இறங்கியது. கீழே ஏதோ தண்ணீர் மாதிரி தோன்றவே ஆமை தலை தப்பியது. தம்பிரான் புண்ணியமென்று கீழே இறங்கித் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

கடல் நீர் மாதிரி அது இல்லாவிட்டாலும் தனக்கு இடையூறு ஒன்றும் நேராத இடம் என்று தெரிந்து தண்ணீர்க்குள் அமிழ்ந்தது. அங்கே வாழ்ந்திருந்த ஆமையை அது பார்த்தது.

கிணற்றில் வாழ்ந்த ஆமைக்குக் கடலாமையைப் பார்த்தபோது மிகவும் வியப்பு உண்டாயிற்று. கடலாமை பெரிதாக இருந்தது. அந்த மாதிரி ஒன்றை இதுவரையில் கிணற்றிலே பார்த்ததே இல்லை. அதை உற்று உற்றுப் பார்த்தது. மெல்ல அதை அணுகி, ''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டது. தன் இனம் ஒன்று அங்கே இருப்பது கண்டு ஆறுதல் பெற்ற கடலாமை, ''நான் கடலிலிருந்து வருகிறேன்'' என்று கூறியது.

''கடலா! அப்படியென்றால்-?'' கிணற்றுக் கூர்மம் கேட்டது. அதற்குத்தான் கிணற்றைத் தவிர வேறு ஒன்றும் தெரியாதே!

''அதுவும் நிறைய நீர் உள்ள இடம்'' என்றது புதிய ஆமை.

''அப்படியா? அந்தக் கடல் இந்தக் கிணறு மாதிரி இருக்குமா? இதைப் பார்த்தாயா? எவ்வளவு பெரிதாக இருக்கிறது. இதன் ஆழத்தை நீ பார்த்தால் தெரியும். உங்கள் கடல் இவ்வளவு ஆழமாக இருக்குமோ?'' என்று கேட்டது.

இந்த இரண்டு ஆமைகளும் பேசிக்கொண்டிருந்ததை ஒரு தவளை கேட்டுக்கொண்டிருந்தது. ''நானும் எவ்வளவோ இடங்களைப் பார்த்திருக்கிறேன். இத்தனை ஆழம் எங்கும் இருந்ததில்லை'' என்று அந்தக் கிணற்றுத் தவளை முந்திரிக் கொட்டை போலத் தன் கருத்தை வெளிப்படுத்தியது.

கடலாமை சற்றே திரும்பி அந்தச் சின்னப் பிராணியை அலட்சியமாகப் பார்த்தது. கிணற்று வாசிகளுக்குக் கடல் என்றால் இன்னது என்று தெரியாது என்பது கடலாமைக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

''கடல் எவ்வளவோ பெரியது. அதற்கு ஒரு பக்கந்தான் கரை. அதன் ஆழத்தை அளவிடவே முடியாது.'' என்று புதிய ஆமை கடலின் பெருமையைச் சொல்லியது.

கிணற்று ஆமை அதன் வார்த்தைகளை நம்பவில்லை. ''அது எப்படி இருக்க முடியும்? கரை இல்லாமல் தண்ணீர் நிற்குமா? ஆழம் தெரியாதபடி ஒரு கிணறு இருக்குமா?'' என்று பரிகாசத் தொனியோடு கேட்டது. அதற்குக் கடலும் ஒரு கிணறுதான்.

''கடலைப்பற்றி உங்களுக்குச் சொன்னாலும் விளங்காது. கிணற்றுக்கும் அதற்கும் நெடுந்தூரம்'' என்று கடலாமை கூறக் கூற அந்தப் பழங் கூர்மம் நம்பவே இல்லை. ''பொய்; முழுப் பொய்; அப்படியும் ஒன்று இருக்குமா?'' என்றே சொல்லிக் கொண்டிருந்தது.

★

சிவபெருமானுடைய கருணையையும் பராக்கிரமத்தையும் கேட்டறிந்தார் ஒரு பக்தர். அவருடைய உள்ளம் பக்தி மயமாயிற்று. பல தலங்களுக்குச் சென்றார். தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய மகாதேவனுடைய திருவுருவத்தைத் தரிசித்தார். மங்கலத் திருவுருவனாகிய சிவபெருமான் புகழைப் பாடினார். மனத்தை அடக்கி அவனைத் தியானித்தார். வரவர அவர் உள்ளத்தை அதுவரையில் அலைத்த தீய குணங்கள் மங்கின. ஐம்பொறிகள் தம்முடைய ஆற்றலை இழந்தன.

உள்ளமென்னும் திருக்கோயிலிலே ஞானமென்னும் விளக்கை யேற்றி இறைவனை எழுந்தருளச் செய்து அன்பென்னும் நீரால் ஆட்டினார்.

இப்போது அவர் இறைவன் திருவருளைப் பெற்று விட்டார். அவனுடைய பெருங்கருணையைக் கண்டு கொண்டார். தம்முடைய சிறுமையைப் பாராமல் ஆண்டு கொண்ட அவனது அருமைப்பாட்டை உணர்ந்து உணர்ந்து வியந்தார். அப்பெருமான் தன்னை நினையாத மக்களுக்கும் வேண்டியவற்றை வழங்கிப் பாதுகாக்கும் பெருந்தன்மையை எண்ணி எண்ணிப் பூரித்தார்.

முன்பெல்லாம் அவரிடம் இருந்த படபடப்பு இப்போது சிறிதும் இல்லை. அவர் புது மனிதராக மாறிவிட்டார்.

பொருள் ஈட்டுவதுதான் மனித வாழ்க்கையின் பயன் என்றும், எந்த வகையிலாவது பொருளைச் சேமிப்பதே காலத்தைக் கழிக்கும் வகை என்றும் எண்ணி வாழும் ஒருவர் இந்தப் பக்தரைக் கண்டார்.

''இப்போதெல்லாம் ஏதோ ஒரு மாதிரி இருக்கிறீர்களே! உங்கள் முகத்தில் புது மலர்ச்சி இருக்கிறதே! ஏதாவது புதையல் உங்களுக்குக் கிடைத்ததா?'' என்று கேட்டார்.

பக்தர் என்ன விடை கூறுவார்? ''ஆம். புதையல்தான் கிடைத்தது'' என்றார்.

பணத்தாசை பிடித்தவருக்கு வியப்பாக இருந்தது. ''அப்படியா? பொருளாகக் கிடைத்ததா? பொன்னாகக் கிடைத்ததா? எவ்வளவு கிடைத்தது?'' என்று படபடப்பாகக் கேட்டார்.

''பொருள்தான் கிடைத்தது'' என்று பக்தர் கூறினார்.

பணப்பித்தர், பாத்திரமோ பண்டமோ கிடைத்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டார்.

''என்ன பொருள்?'' என்று கேட்டார்.

''பரம்பொருள்?'' என்றார் பக்தர்.

''என்ன?'' என்று மறுபடியும் கேட்டார், பணப்பித்தர்.

''சிவபரம்பொருள்'' என்று விளக்கமாகக் கூறினார் பக்தர்.

''அப்படியும் ஒரு பொருள் உண்டா, என்ன?''

''ஆம்; உண்டு. உங்களுக்குத் தெரியாமலே உங்களுக்கு அது பயன் தருகிறது.''

''எப்படி?''

''சிவபரம்பொருள் தன்னுடைய பெருந்தன்மையால் தன்னை நினைக்காதவர்களையும் காப்பாற்றுகிறது. உடம்பு முதலியவற்றை வழங்குகிறது'' என்றார் அன்பர்.

''நீங்கள் யாரோ ஒரு மனிதரைப் பற்றிச் சொல்கிறீர்கள் போல் இருக்கிறதே!''

''மனிதர் அல்ல; மனிதர்களையெல்லாம் காப்பாற்றியரு ளும் பெருமான்.''

''அப்படியானால் தேவனோ?''

''தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவன்; தேவதேவன்; மகாதேவன்.''

''அவனால் நமக்கு என்ன பயன்? நம்முடைய கைகால் கள் பலமாக இருந்தால் நாம் உழைத்துச் சம்பாதிக்கிறோம்.''

''அந்தக் கைகால்களை நமக்குக் கொடுத்தவனே அவன் தான். அதை மறந்து விட்டால், 'இவன் நம்மை நினைக்க வில்லை; இவனிடமிருந்து கைகால்களை வாங்கிக் கொள்ளலாம்' என்று அவன் நினைப்பதில்லை. தன் பெருந் தன்மையால் நாம் செய்யும் குற்றங்களை அவன் பொருட் படுத்துவதில்லை.''

பணப் பித்தருக்குப் பக்தர் கூறுவது ஒன்றும் விளங்க வில்லை. அதற்கு ஏற்ற புண்ணியம் அவருக்கு இல்லை.

''அந்தத் தேவன் எல்லோரையும்விடப் பெரியவனோ?''

''ஆம்; அளந்தறிய வொண்ணாத பெருமான்.''

''அவனை நான் பார்க்க முடியுமா?''

''அவனிடம் ஆராத அன்பு கொண்டு வழிபட்டால் பார்க்கலாம்'' என்று பக்தர் சொன்னார். அன்பு நெறியையும், சிவபெருமானுடைய பெருமையையும் விளக்கினார்.

பணப் பித்தரின் பாவம் அவர் அறிவைத் திரை போட்டு மறைத்தது.

''இதெல்லாம் சுத்தப் பொய். அப்படி ஒருவனைப் பார்க்கவே முடியாது'' என்று அழுத்தந் திருத்தமாக முடிவு கட்டினார், பணப் பேய்க்குப் பக்தர்.

சிவபெருமானுடைய அன்பர் மேலே அவரிடம் பேசவில்லை. கல்லால் ஆன பசுவினிடம் பால் கறக்க முடியுமா? கிணற்று ஆமைக்குக் கடலின் பெருமையை உணர்த்த முடியுமா? ''ஐயோ பாவம்! இவர் செய்த தீவினை இவர் அறிவுக்குச் சிவபிரானுடைய பெருந் தன்மை புலப்பட வொட்டாமல் மறைக்கிறது!'' என்று இரங்கினார்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் நினைப்பூட்டுகிறது. பின் வரும் திருப்பாட்டு.

கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவலோடு ஒக்கு மோகடல் என்றல்போ
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே.

(கிணற்றிலுள்ள ஆமை ஒலிக்கின்ற கடலில் உள்ள ஆமையை, ''கிணற்றோடு ஒக்குமோ கடல்?'' என்று அதன் பெருமையை அறியாமற் கேட்பதுபோல, பாவம் செய்தவர்கள், தேவ தேவனாகிய சிவனுடைய பெரிய அருட் குணத்தை நேரே காண அரியது என்று சொல்வார்கள்.

கூவல் - கிணறு. குரை - ஒலிக்கின்ற. பாவகாரிகள் - பாவத்தைச் செய்பவர்கள். பார்ப்பு அரிது - பார்த்தல் அரிது; என்றது பொய்யென்ற நினைவுடன் கூறியது. பெருந்தன்மை - குற்றத்தை மறந்து உதவும் சால்பு; பெரிய குணங்கள் என்பதும் ஆம்.

தனக்குத் தெரியாத ஒன்றை இல்லை என்று சொல்லும் இயல்பு ஆமைக்கும், பாவகாரிகளுக்கும் பொது.)

★

இது ஐந்தாம் திருமுறையின் நூறாவது பதிகமாகிய ஆதிபுராணத் திருக்குறுந் தொகையில் உள்ள ஐந்தாம் பாட்டு.

★

பேசாத நாள்

முன்னுரை

திருநாவுக்கரசர் தேவாரங்களின் கடைசித் திருமுறையாகிய ஆறாந் திருமுறையிலிருந்து எடுத்த பதின்மூன்று பாசுரங்களுக்குரிய விளக்கக் கட்டுரைகளை இந்தப் புத்தகத்தில் காணலாம். ஆறாந் திருமுறையில் 99 பதிகங்களும் 981 பாடல்களும் இருக்கின்றன. இந்தப் பதிகங்கள் யாவும் திருத்தாண்டகங்கள்.

திருத்தாண்டகம் என்பது யாப்பினாற் பெற்ற பெயர். தாண்டகம் என்பது ஒரு வகைச் செய்யுளுக்குரிய பெயர். அது குறுந்தாண்டகம் என்றும், நெடுந்தாண்டகம் என்றும் இரு வகைப்படும். அறுசீர் அடிகள் நான்கு அளவொத்து முடிவது குறுந்தாண்டகம் என்றும், எண்சீர் அடிகள் நான்கு அளவொத்து அமைவது நெடுந்தாண்டகம் என்றும் பெயர் பெறும்.

''மூவிரண் டேனும் இருநான்கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம்; அவற்றுள்
அறுசீர் குறியது; நெடியதுஎண் சீராம்''
''அறுசீர் எண்சீர் அடிநான் கொத்தங்கு
இறுவது தாண்டகம்; இருமுச் சீரடி
குறியது; நெடியது இருநாற் சீரே''

என்று இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் என்னும் இலக்கண நூல் கூறுகிறது.

'இருபத்தேழ் எழுத்து முதலாக உயர்ந்த எருத்தடியினவாய் எழுத்தும் குரு லகுவும் ஒத்து வருவன அளவியற்றாண்டகம், எழுத்து ஒவ்வாமை, எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித் தாண்டகம்' என்று யாப்பருங்கல விருத்தி உரை யாசிரியர் இலக்கணம் எழுதுவார் (சூ. 95, உரை.)

முன்னுள்ள இலக்கணத்தின்படி இத் திரு முறையில் உள்ள பாடல்கள் நெடுந் தாண்டகத்தின் பாற்படும். பின்னுள்ள இலக் கணத்தின்படி அவை அளவியற்றாண்டக மாகும்.

யாப்பருங்கலக்காரிகைப்படி இவை எண்சீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தத்துள் அடங்கும். அரையடிக்குக் காய்ச்சீர் இரண்டும் மாச்சீர் இரண்டும் வந்த விருத்தங்கள் இவை. சில பாடல்கள் இந்த வரையறையினின்று மாறுபட்டும் இருக்கும். எண்சீர் விருத்தம் என்ற சட்டத்துக்குள் அடைக்க வேண்டு மென்று கருதித் திருத்தாண்டகப் பாடல் களைத் திருத்துவது முறையன்று. ஆன் றோர்கள் வாக்கை அப்படி அப்படியே வைத்துப் பாதுகாத்து, இலக்கணத்தில் அதற்கு அமைதி உண்டா என்று தேடிப் பார்த்துப் பொருத்திக் கொள்ளவேண்டும். இல்லை யெனில் அதற்கு அதுவே இலக்கணமாகக் கொள்ள வேண்டும். ''இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்'' என்பது எவ்வகை இலக்கணங்களுக்கும் ஏற்புடைய விதி. பண்டை இலக்கணங்களில் ஆன்றோர்

இலக்கியங்களைக் கண்டு விதிகளை வகுத்தார்கள் புலவர்கள். அந்த விதிகளில் அடங்காதவற்றுக்குப் புறநடை வகுத்தார்கள். அவை போதா என்று ஆரிடம், ஆரிடப் போலி என்பன போலச் சில போக்குகளைக் காட்டியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் காரணம் முந்தையோர் இலக்கியங்கள் இலக்கணத்துக்குப் புறம்பானவையென்று தள்ளிவிடக் கூடாது என்பதுதான்.

★

தாண்டகம் பாடுவதில் அப்பர் சுவாமிகள் மிகச் சிறந்தவர். அதனால் அவருக்குத் தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் என்ற திருநாமங்கள் வழங்கலாயின. திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கை மன்னன் பாடியுள்ள நெடுந்தாண்டகப் பாக்களைத் திரு நெடுந் தாண்டகத்தில் காணலாம். திருநாவுக் கரசருடைய தாண்டகப் பாக்கள் மனத்தை உருக்குவன. அவர் பாடிய பலவகைப் பாடல்களில் தாண்டகம் இறைவனுடைய பெருமையை விரிவாகச் சொல்ல இடந் தருவது. அதனால் மனமுருக்கும் வகையில் அடுக்கடுக்காகத் தொடுத்துச் சொல்லுகிறார் வாகீசர்.

ஆறாம் திருமுறையில் 64 தலங்களைப் பற்றிய பாடல்கள் வருகின்றன. திருவாரூருக்குப் பதினொரு பதிகங்கள் இருக்கின்றன. திருவ திகைக்கு ஐந்தும், திருவீழிமிழலைக்கு நான்கும், திருக்கயிலாயத்துக்கு மூன்றும் உள்ளன. இரண்டு பதிகங்களைப் பெற்ற தலங்கள் எட்டு. க்ஷேத்திரக் கோவை, அடைவு திருத்தாண்டகம் என்ற இரண்டும் பல தலங்களைச் சொல்லுகின்றன. எந்தத்

தலத்தைப் பற்றியும் இன்றிப் பொது வகையில் அமைந்த தாண்டகங்கள் ஆறு இத்திருமுறையில் அமைந்துள்ளன.

இந்தப் புத்தகத்தில் விளக்கம்பெறும் பதின் மூன்று பாடல்களில் பதினொரு தலங்கள் வருகின்றன. ஆரூரைப்பற்றிய மூன்று பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

பாடல்களில் பொருளை வெவ்வேறு வகையில் வெளிப்படுத்த எண்ணி, வினா விடையாக வும் காட்சி வருணனையாகவும் வேறு வகையாகவும் இந்தக் கட்டுரைகளை எழுதினேன். அன்பர்கள் இந்த வரிசையை ஆதரித்து எழுதும் கடிதங்களும், ஊக்க மளித்துக் கூறும் வார்த்தைகளும் இறைவன் திருவருளை நினைக்கச் செய்கின்றன.

கி.வா. ஜகந்நாதன்

பேசாத நாள்

மனிதராகப் பிறந்தவர்கள் பேச்சு என்னும் பெரு வரத்தைப் பெற்றிருக்கிறார்கள். பெற்ற அதைத் தக்க வண்ணம் பயன்படுத்த வேண்டும். அறிவுடையவன் என்று பெருமை கொள்ளும் மனிதன் தனக்கு அகப்பட்ட எல்லாவற்றையும் நன்கு பயன்படுத்திக் கொள்வதுதான் முறை. வேறு பிராணி களுக்குக் கிடைக்காத வாக்கை நன்முறையிலே பயன் படுத்தினால் அவர்கள் மனிதர்களாக வாழ்ந்தார்கள் என்று சொல்லலாம். காலுடையவன் நடந்தால்தான் காலுடையவன் என்பதற்கு உரியவன் ஆவான். வாயுடையவன் மனிதன்; மற்றப் பிராணிகள் எல்லாவற்றையும் வாய் இல்லாத பிராணிகள் என்று சொல்லுகிறோம்.

பேசுகிறவன்தான் மனிதன்; நல்லதைப் பேசுவதுதான் பேச்சு; ஆகையால் நல்லதைப் பேசுபவன்தான் மனிதன் என்று சொல்லவேண்டும்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய"

என்று குறள் கூறுகிறது.

நல்லதைப் பேசுகிற நாளை, மனிதப் பிறவியை நன்கு பயன்படுத்திய நாள் என்று சொல்லலாம். அப்படிப் பேசாத நாளைப் பயன் பெறாத நாள் என்னலாம். அதையே இன்னும் அழுத்தமாகச் சொன்னால் பிறவா நாள் என்று சொல்லி விடலாம். அப்பர் சுவாமிகள் அப்படித்தான் சொல்கிறார்.

பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே

என்கிறார்.

முன்னால் ஒன்றும் சொல்லாமல், பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே என்று சொல்லியிருந்தால், எப்போதும் வழவழ

வென்று பயனில்லாத வார்த்தைகளைப் பேசுகிறவர்களை யெல்லாம் உயர்ந்த மனிதர்களாகக் கொள்ள வேண்டி வரும். திருநாவுக்கரசர் அப்படிச் சொல்லுவாரா? இன்னவாறு பேசவேண்டும் என்று தெரிந்து கொண்டவர் அவர்.

எதை எதையோ பற்றிப் பேசுகிறோமே, அந்தப் பேச்சினால் பெரிய பயன் ஒன்றும் இல்லை. ஆனால் இறைவனைப் பற்றிப் பேசும் பேச்சு நல்ல பயனைத் தரும்; விருப்பு வெறுப்பு இல்லாத இன்ப நிலையைத் தரும். அதைச் சொல்ல வருகிறார்.

★

சிதம்பரமாகிய பெரும்பற்றப் புலியூருக்குப் போய் நடராசப் பெருமாளைத் தரிசித்து இன்புற்றார் நாவுக்கரசர். அப்போது அவருக்கு இந்த எண்ணம் தோன்றியது. 'என்ன என்னவோ பேசிப் பொழுது போக்குகிறார்களே மனிதர்கள். பேசப் பெரிதும் இனிய பெருமானாகிய இறைவனுடைய புகழைப் பற்றிப் பேசத் தெரியவில்லையே! பேசப் பேசக் குறைவு படாமல் எல்லையின்றிப் பெருகும் புகழ் அல்லவா அவன் புகழ்? அவனைப் பேசாத பேச்சும் ஒரு பேச்சா? அவனைப் பேசாத நாளும் ஒரு நாளா?' என்று எண்ணினார். இறைவனுடைய இயல்புகளைச் சற்றே சிந்திக்கப் புகுந்தார். அவன் அறிவதற்கரிய நுண்ணிய பொருளாக இருப்பதை எண்ணிப் பார்த்தார்; அவ்வாறு இருந்தாலும் அன்புடையாருக்கு இன்பம் தரும் அநுபவப் பொருளாக இருப்பது நினைவுக்கு வந்தது; பலவகைத் தேவர்களாக இருக்கும் இயல்பையும் நினைவுக்குக் கொண்டு வந்தார்; உலகில் உள்ள ஐம் பெரும் பூதங்களாக இருப்பதைச் சிந்தனை செய்தார். இன்னும் எண்ண எண்ண விரியும் இயல்புகளையெல்லாம் அவர் உள்ளம் முகந்து உணர்ந்து மகிழ்ந்தது; அவற்றைப் பாடத் தொடங்கினார்.

★

இறைவன் அரிய பொருள்; நுட்பமான பொருள். இந்த இயல்பை ஐந்து வகையாகச் சொன்னார். அவன் புலன்களால் அறிவதற்கு அரியவன்; அந்தணருடைய சிந்தையிலே கருத்துப்

பொருளாக நிற்பவன்; பொருள் அறிவதற்கரிய வேதத்தினுள்ளே இரகசியப் பொருளாக இருப்பவன்; நுட்பப் பொருளாகிய அணுவாக இருப்பவன்; யாருக்கும் தெரியாத இயல்பை உடையவன். இவ்வாறு பாடினார்.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனை

★

இறைவன் அரிய பொருளாக இருந்தால் நமக்குப் பயன் என்ன? அவன் அரிய பொருளேயன்றி இல்லாத பொருள் அன்று. தன்னைத் தொழுது அன்பு செய்வார் நுகரும் இன்பப் பொருளாகவும் அவன் இருக்கிறான். எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கும் பொருள் ஒருவனுக்குக் கிடைத்ததானால் அது பெரிது அன்று. மிக மிக அரிய பொருள் சிலருக்குக் கிடைக்கும் பொருளாக இருந்தால் மற்றவர்களுக்கும் அதைப்பெற வேண்டும் என்ற ஆவல் உண்டாகும். யார்க்கும் தெரியாத தத்துவனாகிய அவன் அன்புடையாருக்குத் தேனாக இனிக்கிறான்; பாலாக இனிக்கிறான். அவனுடைய அருள் பெற்ற பின் உலகத்துப் பொருள்களின் உண்மை புலனாகிறது. சூரியனது ஒளியினால் இருளில் சிறிதும் தெரியாமல் இருந்த பொருள்களெல்லாம் தெளிவாகத் தெரிவதைப்போல, இறைவனுடைய திருவருள் பெற்ற பிறகு காணும் காட்சியே வேறாக இருக்கிறது. இறைவன் அந்தக் காட்சிக்குரிய ஒளியாக விளங்குகிறான்.

தேனைப் பாலைத் திகழ்ஒளியை.

★

கடவுள் அரியவனாகவும் இனியவனாகவும் இருப்பதோடு பல மூர்த்திகளாகவும் இருந்து உலகைக் காப்பாற்றுகிறான். தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனாகவும் கரிய திருமாலாகவும் பிரமனாகவும் இருக்கிறான்.

தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனை.

தெரிவதற்கு அரிய பொருளாக இருத்தல், அன்புடை யாருக்குத் தேனும் பாலுமாக ஒளியாக இருந்தல், மூர்த்திகளாக இருத்தல் என்ற மூன்று நிலையும் யாவராலும் எளிதிலே காணமுடியாதவை. அவ்வாறின்றி எல்லோருமே கடவுளின் இருப்பை உணர வகை உண்டு. உலக வாழ்க்கையில் மனிதனுக்கு இன்றியமையாத கனலாகவும் காற்றாகவும் இருப்பவன் அவனே; கடலாகவும் மலையாகவும் இருப்பவன் அவனே; ஐம்பெரும் பூதங்களாக நிற்பவன் அவன். கனல் தேயு; காற்று வாயு; கடல் அப்பு; மலை பிருதிவி; பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரமோ இறைவன் வெளியாகி விளங்கு வதைக் காட்டும் தலம். இந்த ஐந்து பூதங்களும் இயற்கையின் மூலப் பொருள்களாகும்.

கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானை.

★

அரிய பொருளாகவும் அநுபவப் பொருளாகவும் மூர்த்தியாகவும் இயற்கையாகவும் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பேசும் பேச்சே பேச்சு. அந்தப் பேச்சைப் பேசும் நாளே வாழும் நாள். அல்லாத நாள் வாழாத நாள்; பிறவாத நாள்.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ்ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே.

(உணர்வதற்கு அருமையானவனை, அந்தணருடைய சிந்தனையில் தியானப் பொருளாய் இருப்பவனை, அரிய வேதத்தின் உட்பொருளாய் உள்ளவனை, எத்தகைய வன்மை உடையவருக்கும் தெரியாத இயல்புடையவனை, தன்னை அடைந்தவர்களுக்குத் தேனைப் போலவும் பாலைப் போலவும் இனிய பொருளாய்

இருப்பவனை, விளங்குகின்ற சோதியை, தேவர்களுக்கு அரசனாக உள்ளவனை, கரிய நிறமுள்ள திருமாலாக இருப்பவனை, நான்முகனாக விளங்குபவனை, கனலாகவும் காற்றாகவும் ஒலிக்கின்ற கடலாகவும் பெருமையையுடைய மலையாகவும் எங்கும் கலந்து நிற்கும் பெரிய பெருமானை, பெரும்பற்றப் புலியூராகிய தில்லையில் உள்ளவனைப் பேசாத நாட்கள் எல்லாம் பிறவாத நாட்களே ஆகும்.

(மற்ற - மேலே சொன்ன பொருளன்றி வேறாகிய. கரியான் - திருமால். கனை - ஒலிக்கும்.)

கனல் முதலிய நான்காலும் நான்கு பூதங்களை உணர்த்திப் பெரும் பற்றப் புலியூரான் என்பதனால் ஆகாசத்தையும் பெற வைத்தார்.

இப்பாடல் ஆறாம் திருமுறையின் முதல் பதிகத்தில் உள்ள முதல் திருத்தாண்டகம்.

★

திருவடிச் சிறப்பு

சிவபெருமானுடைய அடியைப் பாடுவதில் அடியவர் களுக்கு ஆனந்தம் அதிகம். அவனுடைய திருவடியே பற்றுக் கோடென்று கிடப்பவர்களாதலின் அதன் அழகையும் ஆற்றலையும் பெருமையையும் நினைந்து நினைந்து இன்ப ஊற்றெழக் களித்திருப்பார்கள். திருநாவுக்கரசர் ஒரு திருத் தாண்டகப் பதிகம் முழுவதிலும் திருவதிகை வீரட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய திருவடியைப் பாராட்டி யிருக்கிறார். அப் பதிகத்துக்குத் திருவடித் திருத்தாண்டகம் என்று பெயர் வைத்து வழங்குவர்.

சிவபெருமானுடைய திருவடியை நினைக்கும்போதே இன்பம் மல்குகிறது. அதன் மணம் உள்ளத்தே மணக்கிறது.

நறுமலராய் நாறும் மலர்ச் சேவடி

என்று ஆர்வத்தோடு சொல்கிறார் அப்பர். 'நறுமலர்' என்றாலே மணமும் மலரும் இருக்கின்றன. அவருடைய அன்பு பெருகுகிறது. அப்படிச் சொல்வதோடு நில்லாமல் 'நாறும் மலர்ச் சேவடி' என்று பின்னும் வற்புறுத்திச் சொல்கிறார். தலையால் வணங்குவார் முடிமிசையே திகழும் மலர் அது; சிந்தையால் நினைப்பார் உள்ளே மணக்கும் நறுமலர் அது.

நறுமலர் போல மணமல்கும் அந்தத் திருவடி அன்பர்கள் உள்ளக் கமலத்தில் மெத்தென்று எழுந்தருளியிருந்தாலும் அதன் வல்லபத்தை என்னவென்று சொல்வது! உலகத்தையெல்லாம் இயங்கும்படி செய்கிறது அந்த அடி; தான் நடந்து உலகத்தை நடத்துகிறது. எந்த எந்தக் காலத்தில் எவ்வெப் பொருளாக எவ்வெவ்வாறு தோன்றி இயங்க வேண்டுமோ அவ்வவ்வாறு நடைபெறும்படி செய்யும் ஆற்றலை உடைய அடி அது. உலகத்தை நடத்தும் அரசன் நடுநிலையில் நின்று, நலம்

செய்தாரை நாட்டியும் தீமை செய்தாரை வீட்டியும் ஆட்சி புரிவது போல, இறைவன் திருவடியும் நடுநிலையில் நின்று எல்லாவற்றையும் நடத்துகிறது.

நடுவாய் உலகம் நடாய அடி.*

உலகத்தை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டதாதலால் உலகம் விளங்குவதற்கு வேண்டிய பொருள்களை அமைக்கும் ஆற்றலும் அதற்கு உண்டு. உலகத்தைத் தம் ஒளியால் விளக்கும் கதிரவனும் திங்களுமாக நிற்பது இறைவன் திருவடிதான்.

செறிகதிரும் திங்களுமாய் நின்ற அடி.

சுடர்கள் மூன்று. அவை சூரியன் சந்திரன் அக்கினி என்பவை. சூரியனும் சந்திரனும் பூமிக்குப் புறம்பே நின்று ஒளி தருகின்றன. அக்கினியோ நிலத்தின் எல்லைக்குள்ளே நெருப் பாகவும், விளக்காகவும் இருந்து பயன் தருகிறது. கதிரும். திங்களும் நிலத்துக்கு வெளியே திகழும் ஒளிகள். தீத்திரளோ உள்ளே திகழ்வது. அப்படித் திகழும் தீயும் இறைவனுடைய திருவடிதான்.

தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி.

சூரியசந்திராக்கினிகளாக நிற்கும் திருவடி அக்கதிர்களின் மாசினைப் போக்கும் தன்மை உடையது. வீட்டில் விளக்கை ஏற்றுபவன் அதைத் துடைத்துச் சுத்தமாக்குவதுபோல் மூன்று கதிரில் களங்கத்தையுடையதாகிய சந்திரனை இறைவன் தன் திருவடியால் மாசு நீக்கினான். தக்ஷயாக சங்கார காலத்தில் மதியைத் தன் திருவடியால் தேய்த்தான். திருவடியின் தொடர்பு எந்த வகையில் கிடைத்தாலும் மாசு தீர்வது உறுதியாதலால் சந்திரனுக்கு இருந்த குறை போயிற்று. அது இறைவனுடைய திருமுடிக்கண் அணியாக விளங்குகிறது.

மறுமதியை மாசு கழுவும் அடி.

---

* 'நடுவாய் உலகம்நா டாய அடி' என்பது ஒரு பாடம். 'எல்லாவற்றிற்கும் நடுநிலையில் இருந்து உலகமாகவும் அதில் உள்ள நாடுகளாகவும் ஆன அடி' என்று பொருள் கொள்ளவேண்டும்.

புறத்தே தோன்றும் இருளைப் போக்க மூன்று சுடர்களாகத் திருவடி இருக்கிறது என்றார். இந்தச் சுடர்களால் போகாத இருள் வேறு ஒன்று உண்டு. அது அகவிருளாகிய அறியாமை; அஞ்ஞானம். அதனைப் போக்க வேதமும் ஆகமமும் உதவுகின்றன. வேதத்தை மந்திரமென்றும் ஆகமத்தைத் தந்திர மென்றும் கூறுவது வழக்கம். புற இருளை நீக்கும் முச்சுடராக நிற்பது போலவே அகவிருளைப் போக்கும் வேதாகமங்களாக நின்று நிலவுகிறது இறைவன் திருவடி.

மந்திரமும் தந்திரமும் ஆய அடி.

இப்படியெல்லாம் விளங்கும் திருவடியை உடையவன் சிவபெருமான். அவன் கெடில நதியின் கரையிலே திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கிறான். வளஞ்செறிந்த கெடில நதி பாயும் நாட்டுக்குத் தலைவனும், திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வனுமாகிய சிவபெருமானுடைய திருவடி அழகும் ஆட்சியும் ஒளி தரும் ஆற்றலும் உடையது என்று பாடுகிறார் திருநாவுக்கரசர்.

நறுமலராய் நாறும் மலர்ச்சே வடி
　　நடுவாய் உலகம் நடாய அடி
செறிகதிரும் திங்களுமாய் நின்ற அடி
　　தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி
மறுமதியை மாசு கழுவும் அடி
　　மந்திரமும் தந்திரமும் ஆய அடி
செறிகெடில நாடர் பெருமான் அடி
　　திருவீரட் டானத்தெம் செல்வன் அடி.

(நறிய மலராகிய மணம் வீசும் மலரைப் போன்ற சிவந்த திருவடி; நடுநிலையில் நிற்பதாய் உலகத்தை நடத்திய திருவடி; கிரணங்கள் செறிந்த கதிரவனும் திங்களுமாகி நின்ற திருவடி; தீப்பிழம்பாய் நிலப்பரப்பினுக்குள்ளே விளங்கிய திருவடி; களங்கத்தையுடைய சந்திரனை மாசு நீக்கும் திருவடி; வேதமும் ஆகமுமாகிய திருவடி; வளம் செறிந்த கெடில நாட்டுத் தலைவன் திருவடி; திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் எம்முடைய செல்வனது அடி.

பெருமானடி, செல்வன் அடி இத்தகையது என்று கூட்டிப் பொருள் செய்யவேண்டும்.

மலர்ச் சேவடி - பொலிவையுடைய சிவந்த அடி என்றும் பொருள் கூறலாம். நடாய - நடத்திய; "நடப்பன நடாஅய்" என்பது திருவாசகம். கதிர் - சூரியன். தீத்திரள் - தீப்பிழம்பு. மறு - களங்கம். கழுவும் - போக்கும். மந்திரம் - வேதம். தந்திரம் - ஆகமம். செல்வன் - அருட் செல்வத்தை உடையவன்; எல்லாச் செல்வத்தையும் உடையவன் என்றும் சொல்லலாம்.)

மலராய் அடியார் உள்ளத்தே மலர்ந்து மணந்து, நடுநின்ற ஆணைப் பொருளாய் உலகை நடத்தி, சுடர்களாய் ஒளி தந்து புறவிருளை நீக்கி, வேதாகமங்களாய் நின்று அகவிருளைப் போக்குவது இறைவன் திருவடி என்பது இதன் திரண்ட பொருள்.

இது ஆறாம் திருமுறையில் ஆறாம் திருப்பதிகத்தில் எட்டாவது பாட்டு.

★

கண்ணில் உள்ளவன்

''இறைவன் எங்கே இருக்கிறான்? அவனைக் காண முடியுமா?'' என்று கேட்கிறது மனம்.

''உன்னிடத்திலே இருக்கிறான். உனக்குத் தெரியாமலே ஒளிந்து நிற்கிறான்'' என்கிறார் அப்பர்.

''எனக்குத் தெரியவில்லையே! எனக்குள்ளே உள்ளதைக் காண்பது அரிதுதான். எனக்கு அயலாக உள்ள இடத்தில் இருந் தால் காண்பது எளிது. அப்படி எங்கேயாவது இருக்கிறானா?'' என்று உசாவுகிறது மனம்.

''எத்தனையோ இடங்களில் இருக்கிறான். உனக்கு அண்மையில் இருக்கிறான். வணங்குவதற்குரிய தலையின் மேல் இருக்கிறான். தலை வணங்கினாலும் வணங்கா விட்டாலும் அதன்மேல் நின்று தலைவனாக என்றும் விளங்கு கிறவன் அவன்தான்.''

மனம் அதையும் தெளிந்து கொள்ளவில்லை. ''இன்னும் எனக்கு அருகில் உள்ள எங்காவது இருக்கிறானா?'' என்று கேட்கிறது.

''பேசும் வாக்கில் உள்ளான்'' என்று விடை வருகிறது. மனம் வாக்குக் காயம் என்னும் மூன்று கரணத்திலும் கலந்து நின்று யாரையும் இயக்கும் இறைவனுடைய சிறப்பை அப்பர் சுவாமிகள் அறிவுறுத்தினார்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்.

''உன்னில் இருக்கிறான்; உன்னைச் சார்ந்த இடங்களில் இருக்கிறான்'' என்று சொல்லியும் தெரிந்து கொள்ளாத மனத்துக்குப் பின்னும் சொல்லுகிறார்.

''அருகில் இருக்கிற பொருளின் அருமை தெரியாதது உலகத்தின் இயல்பு. புழைக்கடை மூலிகை மருந்துக்கு உதவாது. அதுவே காட்டில் இருந்தால் அரியது என்று எடுத்து வருவார்கள். உனக்கு அருகில் இறைவன் இருப்பது புலப்பட வில்லை என்பது உலகத்தோடு ஒத்த இயல்புதான். இனி அவன் இருக்கும் வேறு இடங்களை, உனக்கு அயலாகிய இடங்களைச் சொல்கிறேன், கேள்'' என்று தொடங்குகிறார்.

''எப்போதும் இறைவனுடைய திருவடிப் புகழை வாய் நிரம்ப வஞ்சகமின்றி நாணமின்றிப் பாடுகிற தொண்டர்களை நீ பார்த்திருக்கிறாயா? அந்தத் தொண்டர் கூட்டத்திலே அவன் கலந்திருப்பான். அவர்கள் கூட்டத்துக்குள்ளே இருப்பான்.''

வாய்ஆரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்.

''இந்த இனத்தினரும் நம்முடனேதானே இருக்கிறார்க ளென்று நீ நினைத்துப் புறக்கணிக்கலாம். இந்த உலகத்துக்கு அப்பாலே அவன் இருக்கும் இடத்தைச் சொல்கிறேன். தேவலோகம் தெரியுமா, உனக்கு? அதைப்பற்றிக் கேட்டிருப் பாயே. அங்குள்ள தேவர்களுக்கு இடுக்கண் தீர்க்கும் பெருமான் அவன். அவர்கள் எப்போதும் இறைவனை வணங்கி வழி பட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களுடைய தலையின் மேல் நிற்கும் தலைவன் அவன்.''

இமையவர்தம் சிரத்தின் மேலான்.

மனம் மயங்கி நின்றது. ''உன்னிடம் இருக்கிறான். நீ உள்ள வீடாகிய உடம்பில் வேறு பகுதிகளில் இருக்கிறான். உடம்பு பழகும் ஊரில் உள்ள தொண்டர் கூட்டத்தில் இருக் கிறான். நீ உள்ள உலகத்துக்கு அப்பாலுள்ள தேவலோகத்தில் தலைவனாக இருக்கிறான்'' என்று இறைவன் வர வரத் தூரத்தில் இருப்பதை உணர்த்தியும், மனம் இன்னும் தூரம், இன்னும் தூரம் என்று எட்டிப் பார்த்தது.

ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போவதற்கும் அளவு இல்லையா? அடுத்தபடி இவ்விடம், அடுத்தபடி இவ்விடம் என்று சொல்லிக்கொண்டே வந்தவர், ''உனக்குத் தெரிந்த இடங்களுக்கெல்லாம் அப்பால் இருக்கிறான்'' என்று

சொல்லி விடுகிறார். ''உன்னுடைய கணக்கிலே அகப்பட்டவை ஏழு உலகம்; அண்டம் ஏழு. இறைவன் அவற்றிற்கும் அப்பால் இருப்பவன். அந்த அப்பால் என்பதை எப்படி நீட்டிக் கொண்டாலும் அங்கெல்லாம் அவன் இருக்கிறான்'' என்று மனத்தின் யாத்திரைக்கு முடிவு கட்டிவிடுகிறார்.

ஏழ்அண்டத்து அப்பாலான்.

''ஏழண்டத்துக்கும் அப்பாற்பட்டவன்'' என்று சொன்னவுடன் மனம் தான் அளப்பதற்குரிய அண்டங்களை யெல்லாம் சிந்தித்துப் பார்த்தது. அவற்றிற்கும் அப்பால், அவற்றிற்கும் அப்பால் என்ற இந்தச் சிந்தனை யாத்திரையை முடிவின்றி நடத்திக்கொண்டே இருக்கலாம் அல்லவா?

இப்போது மனத்துக்கே சலிப்பு வந்துவிட்டது. அப்பால், அப்பால் என்று போய்க்கொண்டிருப்பதில் பயனில்லை என்று கண்டுகொண்டது. வெளியே திரியத் திரிய முயற்சி விரிகிறது; இடம் விரிகிறது; காலம் விரிகிறது; லட்சியமும் கைக்கு எட்டாமல் எட்ட எட்டப் போகிறது. உள்ளே நுழைய நுழைய முயற்சி ஆழ்கிறது; இடம் சுருங்குகிறது; காலம் நழுவுகிறது; லட்சியத்துக்குள்ளே ஆழும் நிலை வருகிறது. அப்பால், அப்பால் என்று அகன்று செல்வதில் பயன் இல்லை. இப்பால், இப்பால் என்று ஆழ்ந்து செல்வதில்தான் பயன் உண்டு.

மனத்துக்கு ஓரளவு தெளிவு பிறந்தது. அப்பர் சுவாமிகள் காட்டிய வழியில் மீண்டு வந்தது. இறைவன் ஏழண்டத்துக்கு அப்பாலானான்; ஆனாலும் கருணையினால் இமையவர் தம் சிரத்தின் மேல் இருப்பவன்; பின்னும் இறங்கி வந்து தொண்டர் இனத்து அகத்தே இருப்பவன்; அதனிலும் அணிமையனாகி வாக்கில் வருவான்; பின்னும் அணியனாகித் தலைமேல் இருப்பான்; பின்னும் அருகே வந்து மனத்தையே கோயிலாகக் கொள்வான். அவ்வளவு சேய்மையில் உள்ளவன் இவ்வளவு அணிமையிலும் இருப்பதற்கு அவன் கருணையே காரணம் என்பதை மனம் உணர்ந்துகொண்டது.

அப்பால் அப்பால் என்று தாண்டிச் சென்றதை மாற்றி, இப்பால் இப்பால் என்று நெருங்கி வருவதை விரும்பியது. ''இப்பால் எங்கெங்கே இருக்கிறான்?'' என்று கேட்டது.

''இப்பால் இருக்கும் இடம் ஒன்றா, இரண்டா? நிலத்தில் அழகான இடங்களில் எல்லாம் அவன் இருக்கிறான். நிலத்திலே சிறந்த குறிஞ்சியில் அவன் இருக்கிறான். பொன்போன்ற நிறம் படைத்த தினையை விளைவிக்கும் புனத்திலே இருக்கிறான். பொன் நிறம் படைத்த அழகிய கொன்றைப் பூவில் இருக்கிறான். மலையிலே இருக்கிறான்; நெருப்பிலே இருக்கிறான்; காற்றிலே இருக்கிறான்; மழை பொழியும் மேகத்தில் இருக்கிறான்'' என்கிறார் வாசீகர்.

இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான்; நறுங்கொன்றைப் போதின் உள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான்.

''பொதுவாக இப்படிச் சொன்னால் அவனுக்கு என்று ஒரு விலாசம் இல்லையா?''

''உண்டு. அவனைக் கைலாசபதி என்று சொல்வார்கள். அவன் கைலாச மலையின் உச்சியில் இருக்கிறான்.''

''கைலாசம் எளிதிலே சென்று தரிசிக்கும் இடமா? மனிதர்கள் நினைத்தால் போய்க் காணுகின்ற இடம் ஒன்றிலும் அவன் இருப்பதில்லையா?''

''உண்டு. வடக்கே உள்ள கைலாசத்துக்குச் சமானமாகத் தெற்கேயும் ஒரு தலம் இருக்கிறது. அதற்குத் திருக்காளத்தி என்று பெயர். அதற்குத் தக்ஷிண கைலாசம் என்ற திருநாமமும் வழங்கும்.''

''மனம் முதலிய கரணங்களில் இருப்பதையும் அடியாரிடம் இருப்பதையும் இன்னும் பல இடங்களிலும் இருப்பதையும் எடுத்துச் சொன்னீர்களே. நீங்கள் அவனை எங்கே கண்டீர்கள்?'' என்று மனம் கேட்டது.

''நான் அவனை எங்கும் காண்கிறேன். எதைப் பார்த்தாலும் எங்கே பார்த்தாலும் அதுவாக அங்கே இறைவன் எழுந்தருளி யிருக்கிறான்.''

''எல்லோருக்கும் அப்படி அவன் புலப்படுவ தில்லையே!''

''அவன் என் கண்ணில் இருக்கிறான். அதனால் கண் காணும் இடங்களில் எல்லாம் அவனையே காண்கிறேன்.''

கைலாயத் துச்சி உள்ளான்,
காளத்தியான், அவன்என் கண்ணு ளானே.

★

அப்பர் சுவாமிகளின் கண்ணிலே இருக்கும் இறைவன் அவருக்கு எல்லாமாய்த் தோன்றுகிறான். அப்பாலைக்கும் அப்பாலாக இருக்கும் அவன் இப்பாலும் இருக்கிறான் என்று உணர்த்தியவர் தம் கண்ணுளான் என்று முடிக்கிறார்.

மனத்தகத்தான், தலைமேலான், வாக்கின் உள்ளான்;
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்; இமையவர்தம் சிரத்தின் மேலான்;
ஏழண்டத்து அப்பாலான்; இப்பால் செம்பொன்
புனத்தகத்தான்; நறுங்கொன்றைப் போதின் உள்ளான்;
பொருப்பிடையான்; நெருப்பிடையான்; காற்றின்உள்ளான்;
கனத்தகத்தான்; கயிலாயத்து உச்சி யுள்ளான்;
காளத்தி யான்; அவன்என் கண்ணு ளானே.

(மனத்தின் உள்ளே இருப்பவன், தலைக்குமேல் இருப்பவன், பேசும் பேச்சில் உள்ளவன், வாய் நிரம்பத் தன் அடியையே புகழ்ந்து பாடும் அடியார்களுடைய கூட்டத்தினுள்ளே இருப்பவன், தேவர்களுடைய தலையின்மேல் அவர்கள் வணங்குவதற்குரிய தலைவனாக இருப்பவன், ஏழு உலகங்களுக்கும் அப்பால் நிற்பவன்; இவற்றையன்றி நமக்கு அணியனவான இந்தப் பகுதிகளில் சிவந்த பொன் போன்ற தினையை விளைக்கும் புனத்தினுள்ளே இருப்பவன், நறுமணம் வீசும் கொன்றை மலரில் இருப்பவன், மலையிடையே உள்ளவன், தீயிடையே இருப்பவன், காற்றில் இருப்பவன், மேகத்திடையே இருப்பவன்; கைலாய மலையின் உச்சியில் எழுந்தருளியிருப்பவன்; திருக்காளத்தியாகிய தலத்தில் கோயில் கொண்டவனாகிய அப்பெருமான் என் கண்ணில் இருக்கிறான்.

ஆர - நிரம்ப. இனம் - கூட்டம். அண்டம் - உலகம். புனம் - தினைப்புனம். கனம் - மேகம்.)

இது ஆறாந் திருமுறையில் 8-ஆம் பதிகத்தில் உள்ள ஐந்தாவது திருப்பாட்டு.

வந்து போனார்

தோழி கேட்டாள்; ''நீ இப்படி யாரையோ எண்ணி எண்ணி நைந்து புலம்புகிறாயே; உன்னிடம் உண்டான இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டாள். அந்த அழகிய இளம் பெண் உடனே விடை சொல்லவில்லை; சொல்லவும் முடியவில்லை. தன்னுடைய உள்ளம் கொள்ளை கொண்ட கட்டழகனை முதல் முதலிற் கண்ட காட்சியை நினைத்துப் பெருமூச்சு விட்டாள். முதற் காட்சி என்ன? அன்று பார்த்ததுதான்; அதற்குப் பிறகு பார்க்கவே இல்லை. அவனைக் கண்டது முதல் அவள் ஒரு வண்ணமாக மயங்கியிருக்கிறாள். தோழி இதை அறிந்துதான் கேட்டாள். சிறிது நேரம் கழித்துக் காதல் பூண்ட பெண் பேசத் தொடங்கினாள்.

''ஆமாத்தூர் என்ற ஊர் உனக்குத் தெரியுமா?'' என்று அவள் பேச்சும் ஒரு கேள்வியாக வந்தது.

''தெரியும். நடு நாட்டில் உள்ள தலம் அது. அந்த ஊரைப்பற்றி இப்போது என்ன யோசனை?''

''அந்த ஊருக்குத்தான் அவர் போயிருக்கிறார்.''

''அவரா? அவர் யார்?''

''என்னை இந்தக் கோலம் செய்தவர்.''

தோழி விழித்துப் பார்த்தாள். ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

அந்த இளம் பெண் கூறத் தொடங்கினாள்.

★

நான் அன்று வீட்டுக்குள்ளே ஏதோ வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது என் காதில் ஓர் இனிய இசை

விழுந்தது. யாரோ உள்ளத்தை இழுக்கும்படி பாடினார்கள். பாட்டென்று ஒரு சமயம் தோன்றியது; வீணையென்று ஒரு சமயம் தோன்றியது; இரண்டும் இழைந்து ஒன்றுபட்டு ஒரு சமயம் காதில் ஒலித்தன. இத்தகைய இன்னிசையை நான் அதுவரையிலே கேட்டதில்லை. அந்த இசை வீதியிலே கேட்டது. நெடுந்தூரத்திலே கேட்டு வர வர அண்மையிலே கேட்டது. யாரோ வீணையோடு பாடுகிறாரென்று தெளிந்தேன். அற்புதமான காந்தாரப் பண்ணைப் பாடினார். இவ்வளவு அழகாகப் பாடுகிறவர் யார் என்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அந்த ஆவல் வர வர வளர்ந்தது. அந்த இசையோ, வா, வா என்று என்னை வலை போட்டு இழுத்தது.

நான் வெளியில் வந்தேன். வீதியிலே பார்த்தேன். ஒருவர் வீணையைக் கையில் ஏந்திக்கொண்டு பாடிச் சென்றார். அழகாகப் பாடுகிற அவரைப் பார்த்தேன். உடம்பெல்லாம் தூய வெண்ணீறு பூசி இருந்தார். தலையின்மேல் வெள்ளை மாலையை அணிந்திருந்தார். வெண் சோதி வீசச் சிறிய வெள்ளிக் குன்று போல அவர் சென்று கொண்டிருந்தார்.

முதலில் அவர் பாட்டைக் கேட்கலாமென்றுதான் வந்தேன். பிறகு அவரைப் பார்த்தேன். பார்த்த பிறகு அவர் அழகும் என் உயிரை இழுத்தது. அவரோ மெல்ல மெல்லப் பாடிக்கொண்டே சென்றார். வெண்பொடியாடிய மேனியைக் கண்டேன். அந்த வெண்மையின் நடுவே கழுத்தில் ஒரு கறுப்பு. அது எத்தனை அழகாக இருந்தது, தெரியுமா? அவரிடம் என் உயிரையே பணயம் வைத்து விடலாம் என்று தோன்றியது. அவரை அணுகி இரண்டு வார்த்தையாவது பேசாவிட்டால் என் வாழ்வே பயனற்றுவிடும் என்ற நினைவு ஒன்று முளைத்தது. 'பெண்ணாயிற்றே; ஆடவரிடம் வலியப் பேசலாமா?' என்று மனம் தடுமாறியது. அவரிடம் என்ன பேசுவது? என் உள்ளம் அவரைக் கண்ட பிறகு அடைந்த தடுமாற்றத்தைச் சொல்வதா? நாணத்தை இழந்து பெண்மையை உதறித் தள்ளினால் அதைச் சொல்லலாம். நான் அந்த நிலைக்கு வரவில்லை; பேசாமல் இருக்கவும் முடியவில்லை. ஒருவிதமாக மனத்தில் அமைதியை ஏற்படுத்திக் கொண்டேன். நாணத்துக்கு அழிவு நேராமலும் என் ஆசைக்கு ஏமாற்றம் உண்டாகாமலும் பேசத் துணிந்தேன்.

விருந்தினரிடம் யாரும் கேட்கும் கேள்வியைக் கேட்டேன். ''சுவாமி, உங்கள் ஊர் எது?'' என்று மாத்திரம் கேட்க எண்ணி வாய் திறந்தேன். அவருடைய வெண் திருமேனியில் உள்ள வெண்மைக்கிடையே பளிச்சென்று விளங்கிய அவருடைய அழகிய கழுத்தைப் பார்த்துக் கொண்டே பேசினேன். என்னையும் அறியாமலே, அந்த அழகில் மயங்கி நின்ற மயக்கத்தால், ''கறை சேர் மணி மிடற்றீர், ஊர் எது?'' என்று சொல்லிவிட்டேன். சொன்ன பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

அதைக் கேட்டதுதான் தாமதம்; அவர் உடனே என் வீட்டுக்குள்ளே வந்து விட்டார். நெடுந்தூரம் அலைந்து வந்து நொந்துபோய், ''யாராவது நம்மைத தம் வீட்டுக்கு அழைக்க மாட்டாரா?'' என்று ஏங்கினவர் போலத் தோன்றியது.

அவர் வருகை எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது. ''எங்கள் வீட்டுக்கு வரலாமே!'' என்று நான் சொல்லவில்லை; நாணந்தான் காரணம். எப்படியோ அவர் என் உள்ளத்தை உணர்ந்து கொண்டார் போலும்! நான் வருந்தி அழைத்து நொந்து கிடந்து தவம் செய்தாலும் வரக்கூடியவர் அல்ல அவர். அவரைப் பார்த்தால் அப்படித் தோன்றியது. ஆனால், தோழி, அவருடைய கருணையை என்னவென்று சொல்வேன்! தாம் மிகவும் நொந்தவரைப் போலக் காட்டிக்கொண்டு, நான் அவருக்கு நலம் செய்கிறதாக எண்ணி என் வீட்டுக்குள் வந்தார்.

வந்தது மாத்திரமா? அவர் என்னோடு பேசினாரடி தோழி! ஆம், பேசினார். அந்த ஒரு கணத்திலே என் உள்ளத்தைத் தொடும்படி பேசினார். என்னை அவர் விளித்தாரே அந்த அழகு ஒன்றே போதுமே. நான் இடைநுடங்க நின்றேனாம்.

அவர் கழுத்தைப் பற்றி அணைத்துக் கொள்ளவேண்டு மென்ற எண்ணம் என் உள்ளத்தின் அடித்தளத்திலே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் நான் கறை சேர் மணி மீடற்றீர் என்று அவரை அழைத்தேன். அது மாத்திரம் அல்ல. அவர் பாடினாரே, அந்த இன்னிசையைத் தரும் கழுத்து அல்லவா அது? அதனால் அதனிடம் என் மனம் சென்றது.

இப்போது அவர் என் இடையைப் பற்றி அணைக்க எண்ணினாரா, என்ன? என் ஆசை அப்படி நினைக்கச் செய்தது. ''நுடங்கு ஏர் இடை மடவாய்'' என்று என்னை அவர் அழைத் தார். அவர் தம் திருக்கரத்தால் என்னை அணைக்கவில்லை. ஆனாலும் அவர் என்னை அழைத்தாரே அந்த அன்புச் சொல் என்னை அணைத்தது. அது என் காது வழியே புகுந்து அமுத தாரையைப் பாய்ச்சியது.

''நம்முடைய ஊரையா கேட்கிறாய்? சொல்கிறேன் கேள். அங்கே எல்லோருமே வீணையும் யாழும் வாசிக்கிறவர்கள். நான் பாடுவதைக் கேட்டு நீ மகிழ்ச்சி அடைகிறாயென்று தோன்றுகிறது. எங்கள் ஊருக்கு வந்தால் எங்கும் இன்னிசை தான் கேட்கும். அழகிய தாமரை மலர்களின் மேல் அன்புடைய வண்டுகள் யாழைப் போலப் பாடிக் கொண்டிருக்கும். அந்த ஊருக்குப் பேர் ஆமாத்தூர். அதுதான் நம்முடைய ஊர்'' என்றார்.

அவர் பேசப் பேச நான் பாவை போலச் சமைந்து போய்க் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் பாட வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. அவர் பேசினாலே போதும்; இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம். அவர் பேச்சிலே என்னை மறந்து கேட்டிருந்தேன். ''ஆமாத்தூர்தான் நம்முடைய ஊர்'' என்று சொன்னவர் மேலே ஒன்றும் சொல்லாமல் உடனே போய்விட்டார்.

போன பிறகு பார்க்கிறேன்; அவரைக் காணவில்லை. சுவாமி வந்தார், போனார் என்பதைத் தவிர நான் வேறு என்ன சொல்வது? அவரிடம் நான் இன்னும் நாலு வார்த்தைகள் பேசியிருக்கக் கூடாதா? சற்றுத் தங்கிச் செல்லுங்கள் என்று சொல்லி யிருக்கலாகாதா? அவர் தாம் இன்னும் கொஞ்சம் இருந்து, நீ யார் என்று என்னைக் கேட்டிருக்கக்கூடாதா?

இன்று நான் இவ்வாறு எண்ணி எண்ணி ஏங்குகிறேன். ஆனால் அன்று அவரைக் கண்டேனே, அது என் தவப் பயன் அல்லவா? அவரோடு துணிந்து பேசினேனோ, அது என் பாக்கியம் அல்லவா? அவர் என் வீட்டுக்கு வந்தாரே, அது பெறாப் பேறு அல்லவா? வந்ததோடு, என்னை நுடங்கேரிடை

மடவாய் என்று அழைத்தாரே, அது ஒன்றே போதுமே என் உயிரில் இனிமையை ஊட்ட! தம் ஊர் இன்னதென்று சொன்னாரே, அதை வைத்துக்கொண்டு மேலே முயற்சி செய்து அவர் இன்னருளைப் பெறலாம் அல்லவா?

★

ஆமாத்தூர்ப் பெருமானைக் கண்ட இளம் பெண் தன் உள்ளத்திலும் உயிரிலும் ஊடுருவிப் புக்க அந்தக் காட்சியை எண்ணி எண்ணி இன்புற்றும் ஏங்கியும் நிற்கிறாள்.

வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேல் தாம்சூடி வீணை ஏந்திக்
கந்தாரம் தாம்முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீர் ஊர்ஏது என்றேன்;
நொந்தார்போல் வந்தெனது இல்லே புக்கு,
நுடங்குஇடை இடைமடவாய் நம்ஊர் கேட்கில்,
அந்தா மரைமலர்மேல் அளிவண் டியாழ்செய்
ஆமாத்தூர் என்று அடிகள் போயி னாரே.

(நன்றாக வெந்து வெண்மை நிரம்பிய வெள்ளிய திருநீற்றைப் பூசி, வெள்ளை மலர் மாலையைத் தம்முடைய விரிந்த சடையின் மேல் அணிந்துகொண்டு, வீணையைக் கையில் ஏந்திக் காந்தாரப் பண்ணைப் பாடியபடியே திருவீதியில் போக, அவரை அணுகி, "கறுப்பு வண்ணம் சேர்ந்த அழகிய கழுத்தை உடையவரே, தேவரீருடைய ஊர் எது?" என்று கேட்டேன்; பல இடங்களுக்குச் சென்று வருந்தியவரைப் போல வந்து என் இல்லத்திற் புகுந்து, "தளரும் அழகையுடைய இடையைப் பெற்ற பெண்ணே, நம்முடைய ஊரைக் கேட்டால், அழகிய தாமரை மலர்களின் மேல் அன்பையுடைய வண்டுகள் யாழைப் போன்ற இசையை ஒலிக்கும் ஆமாத்தூர் ஆகும்" என்று கூறி அப்பெரியார் போய்விட்டார்.

வெந்து ஆர் - வெந்து நிறம் நிரம்பிய. வெந்தாருடைய வெண்பொடி என்று கொண்டு, மயானத்தில் வெந்தவர்களுடைய வெண்பொடியை என்றும் பொருள் சொல்லலாம். வெள்ளை மாலை - தும்பை முதலிய மலர்களால் அமைந்த மாலை; வெண்டலை மாலையுமாம். கந்தாரம் - காந்தாரம்; எதுகையை நோக்கிக் குறுகியது.

முரலா - பாடி. போகா நிற்க - போய்க் கொண்டிருக்க. கறை - கறுப்பு. மணி - அழகு. மிடறு - கழுத்து. நுடங்கு - தளரும். ஏர் - அழகு. அளி - அன்பு. அளியும் வண்டுமாகிய வண்டினங்களை என்றும் சொல்லலாம். அடிகள் - சுவாமி; பெரியார்; துறவிகளையும் கடவுளரையும் மதிப்புடைய பெரியோரையும் அடிகள் என்பது வழக்கு.)

இறைவன் திருக்கரத்தில் வீணை ஏந்திய நிலை ஒன்று உண்டு. வீணா தட்சிணாமூர்த்தி என்ற கோலத்தில் அவன் வீணையை ஏந்தியிருக்கிறான்.*

இந்தப் பாட்டு ஆறாந் திருமுறையில் 9-ஆம் திருப்பதிகத்தில் இரண்டாம் பாடலாக அமைந்தது.

★

---

* *"தங்கையின் யாழும் வைத்தார்" (4.30:1), "எம் இறை நல்வீணை வாசிக்குமே" (4. 112:7) என்று பிற இடங்களிலும் அப்பர், இறைவன் வீணை வாசித்தலைச் சொல்கிறார்.*

கருகாவூர் எந்தை

சோழ நாட்டில் பாபநாசம் என்னும் ஊருக்கு அருகில் வெட்டாறு என்ற ஆற்றின் கரையில் திருக்கருகாவூர் என்ற தலம் இருக்கிறது. இப்போது திருக்களாவூர் என்று அதை வழங்குகிறார்கள். அத் தலத்தில் அம்பிகை கருவுற்றிருந்த பெண்மணி ஒருத்தியைப் பாதுகாத்து அவள் கருவைக் காத்து மருத்துவம் செய்ததாக ஒரு வரலாறு உண்டு. கருவைக் காத்த ஊராதலின் கருகாவூர் என்ற திருநாமம் அதற்கு உண்டாயிற்று. அம்பிகைக்குக் கருக்காத்த நாயகி என்றும், கர்ப்ப ரக்ஷகியம்பிகை என்றும் திருநாமங்கள் அமைந்தன.

கருகாவூருக்குத் திருநாவுக்கரசர் சென்று இந்த வரலாற்றையெல்லாம் கேட்டார். இறைவி கருவைக் காத்த ஊர் என்பதைக் கேட்டபோது அவருடைய சிந்தை இறைவனுடைய திருவருட் பெருமையிலே ஆழ்ந்தது. அம்பிகை இறைவ னுடைய திருவருளின் உருவந்தானே? கருத்தோன்றி வளர்ந்து உருவாகி மேலும் அவ்வுரு வளர்கிறது. எல்லா நிலைகளிலும் இறைவனே காப்பாற்றுகிறான். உலகமெல்லாம் உருவாவதற்கு முன்னே அது இறைவனுடைய திருவுள்ளத்திலே கருவாய் இருக்கிறது. அந்தக் கரு இறைவனிடத்திலே தோன்றி வளர்ந்து உலகாகிறது. உலகம் தோன்றுவதற்கு முன்னே, தான் அருளுடன் வெளிப்பட்டு உலகை வெளிப்படுத்துகிறான். அதனால் உலகுக்கு அவனையே கரு என்று சொல்லிவிடலாம். உலகுக்கு முன்னே தோன்றும் கருவாகிய எம்பெருமான் அவ்வுலகம் வளர வளர உயிர்களுக்கெல்லாம் வாழ வழி காட்டுகிறான்.

கருகாவூர் என்ற ஊரின் வரலாற்றோடு இந்த எண்ணங்கள் நாவுக்கரசர் கருத்திலே தோன்றின.

கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே

என்ற அடி உருவாயிற்று.

★

உலகம் தோன்றுவதற்கு முன்னே உள்ளவன் இறைவன். அதனால் அவன் மிகப் பழையவன். பழைய பொருள்கள் காலம் ஆக ஆகப் பயனற்றுப் போவது உண்டு. இறைவன் பழைய பொருளாதலால் பயனற்ற பொருளாகி விட்டானோ? இல்லை, இல்லை. அவன் அன்றும் பயனுள்ளவனாக இருந்தான்; இன்றும் பயன் தரும் பொருளாக இருக்கிறான்; இனியும் இருப்பான். பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் இருக்கும் நித்தியப் பொருள் அஃவன்.

"முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே"

என்று மணிவாசகர் பாடினார்.

இறைவன் காலம் கடந்தவன்; காலத்தைத் தந்தவன்; காலமாகவே இருப்பவன். பழமையும் அவன்தான்; புதுமையும் அவன்தான். இந்த இரண்டும் அவனிடம் உள்ளன. அது எப்படி?

பழைய ஆலமரம் ஒன்று பல ஆண்டுகளாக வளர்ந்து படர்ந்து வேரோடி வீழ்து இறங்கி நிற்கிறது. அது பழையது தான். ஆயினும் அதில் புதுமை இல்லாமற் போகவில்லை. அது வளர்ந்துகொண்டேயிருக்கும் மரமாதலின் ஒவ்வொரு நாளும் அதில் புதுமை தோன்றுகிறது. அதனிடத்தே தோன்றும் தளிர் புதுமையின் அறிகுறி. மரத்தினூடே உள்ள வயிரம் பழமையின் அறிகுறி; நாட்பட நாட்பட மரத்தில் வயிரம் பாயும். ஆல மரத்தில் தளிரின் வடிவத்தில் புதுமையும் வயிரத்தின் வடிவத்தில் பழமையும் இருக்கின்றன. இறைவன் தளிர் அல்லது குருத்தாகவும் இருக்கிறான்; வயிரமாகவும் இருக்கிறான். வயிரம் காலத்தின் ஓர் எல்லைக் கோட்டுக்கு அடையாளம்; குருத்து

மற்றோர் எல்லைக் கோட்டுக்கு அடையாளம். இரண்டு எல்லையாகவும் இருக்கிறான் இறைவன். ஆதலால் அவனைக் குருத்தென்றும் வயிரமென்றும் கூறுகிறார் அப்பர் சுவாமிகள்.

குருகாம், வயிரமாம்.

அப்பர் உணர்ச்சியிலே மிதந்து பாடுகிறார். அவர் பெரிய அன்பராக இருப்பதோடன்றிச் சிறந்த கவிஞராகவும் இருக்கிறார். பழைய பொருள், புதிய பொருள் என்றால் உள்ளம் கவ்வாது. அதையே உருவுள்ள பொருளோடு ஒட்டிக் காட்டினால் மனத்திலே நன்கு பதியும். அவ்வாறு பதிய வைக்கிறது கவிஞனுடைய கலையின் ஆற்றல். அப்பர் என்ற கவிஞர் காலமென்னும் மரத்தின் ஓர் எல்லையை, ''இதோ பார் குருத்து; இது இறைவன்'' என்று காட்டிவிட்டு, மற்றோர் எல்லையை, ''இதோ உள்ளே ஊடுருவிப் பார்; வயிரம்; இதுவும் இறைவனே'' என்று காட்டுகிறார்.

இந்த இரண்டு எல்லைக்கும் இடையே காலத்தைத் துண்டு போட்டுக் கணக்கு வைத்துக் கொள்கிறோம். கணம், விநாடி, நாழிகை, முகூர்த்தம், நாள், பக்ஷம், மாதம், ஆண்டு, யுகம் என்று வருவது பழைய கணக்கு. செகண்டு, நிமிஷம், மணி, தேதி, மாதம், ஆண்டு, நூற்றாண்டு என்று வருவது புதிய கணக்கு, இந்தக் காலப் பகுதிகள் அவ்வளவும் இறைவன்தான்.

''ஞால மேபிற வேஅவை வந்துபோம்
காலமே''

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

அந்தக் காலக் கணக்கிற் சில அப்பர் சுவாமிகளுக்கு நினைவுக்கு வருகின்றன. முதலில் நாளை நினைக்கிறார். நாள் என்பது நட்சத்திரம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நட்சத்திரம் தலைமை பெற்று வானத்தில் தோன்றுகிறது. அதனால் நாளை நட்சத்திரத்தினால் குறிப்பது வழக்கம். இறைவன் அந்த நாளாக இருக்கிறான்.

ஏழு நாள் சேர்ந்ததை வாரம் என்று சொல்கிறோம். அதைப் பழங்காலத்தில் கிழமை என்று சொன்னார்கள். இப்போதும் யாழ்ப்பாணத்தில் வாரத்தைக் கிழமையென்றே குறிக்கிறார்கள். இறைவன் வாரமாகவும் இருக்கிறான்.

''மணி என்ன பார் அப்பா'' என்று கேட்டார் ஒருவர் ஒரு பையனைப் பார்த்து.

''பத்துக்கு மேல் ஆயிற்று'' என்றான் பையன்.

''சின்ன முள் எங்கே இருக்கிறது?'' என்று மறுபடியும் கேட்டார்.

''பத்தைத் தாண்டி'' என்று விடை வந்தது.

''பெரிய முள் எங்கே இருக்கிறது?'' என்று மறுபடியும் கேட்டார்.

''இரண்டைத் தாண்டி'' என்றான் பையன்.

''எத்தனை நிமிஷத்தில்'' என்று மீண்டும் கேட்டார்.

மறுபடியும் பையன் ஏதோ சொன்னான். அவர் பொறுமையை இழந்து, ''அந்தக் கடிகாரத்தையே இங்கே கொண்டு வா'' என்று கூவினார்.

இப்படித்தான் அப்பர் சொல்லுகிறார். புதுமையானவன் என்றார்; பழமையானவன் என்றார்; நாளாக இருக்கிறவன் என்றார்; கிழமையாக இருக்கிறவன் என்றார். இப்படியே சொல்லிக்கொண்டு போனால் அதற்கு முடிவு எங்கே? ஆகையால் காலத்தைக் காட்டுவதற்குரிய கருவிகளாக உள்ள கிரகங்களே அவன்தான் என்று சொல்லிவிட்டார்.

குருகாம், வயிரமாம்; கூறும் நாளாம்,
கொள்ளும் கிழமையாம், கோளே தானாம்.

(குருத்தாக இருக்கிறான்; வயிரமாக இருக்கிறான்; காலத்தை வகுத்துக் கூறும் தினமாக இருக்கிறான்; ஏழு நாட்களைத் தொகுத்துக் கொள்ளும் வாரமாக இருக்கிறான். காலக்கணக்குக்கு மூலக் கருவியான கிரகங்களே அவன்தான்.

குருகு - குருத்து. கிழமை - வாரம். கோள் - கிரகம்; இவை ஒன்பது.)

காலத்தின் எல்லையாகவும் காலத்தின் பகுதிகளாகவும் விளங்குகிறவன் சிவபெருமான் என்று இதனால் தெரிவித்தார் வாகீசர்.

★

காலமாக நிற்கும் பெருமானை, அநுபவிப்பதற்குரிய இன்பப் பொருளாகக் கண்டவர் அப்பர். அவனுடைய அருளினால் உண்டான அமைதியான இன்பத்தில் திளைத்த அவர், எங்கோ இருக்கும் ஒருவனைப் பற்றிச் சொல்வது போலச் சொல்லலாமா? அப்படிப் பெரிய பொருளாக இருக்கும் அவன் தன் அருளினால் அடியார்களுக்கு இன்பம் தரும் பொருளாக வருகிறான். அதை நினைக்கையில் தேனைச் சுவைத்தான் நாக்கைச் சப்புக்கொட்டுவது போன்ற உணர்ச்சி அப்பருக்கு வருகிறது.

இப்படிக் காலத்திற்குப் புறம்பேயும் உள்ளேயும் இருக்கும் எம்பெருமான் எப்படி இனித்திருக்கிறான் தெரியுமா? இனிமை என்றாலே அதற்கு உவமை அமுதந்தான் என்று உலகம் திட்டம் செய்துவிட்டது. அவன் அமுதமாக இருக்கிறான். ஆனால் தேவர் உண்ட அமுதமா அது? தேவரால் எள்ளளவும் அநுபவிக்கப் பெறாத அமுதம் அது; ''பருகா அமுதம்'' என்கிறார்.

''தேவர் பருகிய அமுதமே எங்களுக்குத் தெரியாதே; பருகாத அமுதம் எப்படித் தெரியப் போகிறது? எங்களுக்குத் தெரிந்ததாக ஒன்று சொல்லுங்கள்'' என்று அவரைக் கேட்டுப் பார்த்தால் உடனே, ''பாலில் நெய்யாம்'' என்று விடையிறுக்கிறார். ''பாலில் நெய் சாரமாக இருக்கும்; சுவையாக இருக்குமா?'' என்று சிறிதே ஐயத்தோடு நிற்பதைக் கண்டு, ''பழத்தின் ரசம்போல இருப்பான்'' என்கிறார்.

> பருகா அமுதமாம், பாலில் நெய்யாம்,
> பழத்தின் இரதமாம்.

(தேவர்கள் பருகாத அமுதம்போல இருப்பவன்; பாலில் உள்ள நெய்போல இருப்பவன்; பழத்தின் சுவைபோல் இருப்பவன்.

இரதம் - ரசம்; சுவை. பாலில் நெய்யாக இருக்கிறான், பழத்தின் சுவையாக இருக்கிறான் என்றும் பொருள் கொள்ளவும்.)

''இந்தப் பொருள்களெல்லாம் தெவிட்டிவிடுவன ஆயிற்றே. இறையின்பத்துக்குச் சமானமாகச் சொல்லலாமா?'' என்று யாராவது யோசிக்கலாம் அல்லவா? ஆதலால் இது வரைக்கும் சொன்னதில் திருப்தி பிறவாமல் பின்னும் மேற்பட்ட ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்

அப்பர். வாயாரப் பாடும் பாட்டுக்குப் பண் இனிமை தருகிறதே, அதைச் சொல்கிறார்.

பாட்டிற் பண்ணாம்.

(இசைப் பாட்டிலே இணைந்து இனிமை தருகின்ற பண்ணைப்போல இருக்கிறான்)

★

காலமே தானாக இருக்கும் கடவுள், அன்பர்களுக்கு நெய்யாகவும் ரசமாகவும் பண்ணாகவும் இனிக்கும் கடவுள், தன்னுடைய கருணையையே ஒரு பாகத்தில் மனையாட்டியாக ஏற்றிருக்கிறான். உமையாளை ஒரு கூற்றிலே அமைத்துக் கொண்டு, ''என்னிடமிருந்து கருணை விலகாதிருக்கும்'' என்பதைக் காட்டுகிறான்.

ஒருகால் உமையாள்ஓர் கூறனும் ஆம்.

(ஒரு சமயம் உமையம்மையை ஓர் கூற்றிலே ஏற்றிருப்பவனும் ஆவான். கூறு - பகுதி.)

இறைவனுடைய அருளையே சக்தியாக வழிபடுகிறோம். அவன் தன் அருளினால் அன்பர்கள் நுகரும் பொருளாக நிற்கிறான். அன்பு செய்யாதவர்களுக்குக்கூட அவன் அருள் நன்மையைப் புரிகிறது. இறைவனைப் போற்றுகிற மனிதனும் உலகில் வாழ்கிறான்; தூற்றுகிறவனும் வாழ்கிறான். இறைவன் யாவருக்கும் வேண்டியவற்றைக் கொடுத்தருளி மனிதன் காலில் இருந்துகொண்டு நடக்கச் செய்கிறான்; கையிலிருந்துகொண்டு செயல் செய்யச் செய்கிறான்; கண்ணிலிருந்து காணச் செய்கிறான்.

நன்றாகப் பேசுகிறான் ஒருவன்; மற்றொருவன் ஊமையாக இருக்கிறான். பேசுகிறவனைப் போலவே ஊமைக்கும் நாக்கு இருக்கிறது. ஆனால் ஊமை பேசுவதில்லை. வாயில் உள்ள நாக்கு மட்டும் பேசுவதற்குப் போதுமானதாக இருந்தால் ஊமை பேசவேண்டும். இந்த நாக்கைப் பேசும்படி இயக்குவதற்கு அகநாக்கு ஒன்று இருக்கிறது. அது மனத்தின் பகுதி. அகக் கண் என்று ஒன்று இருப்பது போல அக நாக்கும் உண்டு. நாம் சொல்லும் உள்நாக்கு அன்று அது. அந்த அக நாக்குப் பேசினால் புறநாக்குப் பேசும்.

அகநாக்குக்கூடத் தானே பேசாது. அதை இயக்குகிறவன் ஒருவன் இருக்கிறான். நாடகம் போடும்போது திரைக்குப் பின்னாலிருந்து, நடிப்பவர்களுக்கு அவர்களுடைய பேச்சை அவ்வப்போது சொல்லிக் கொடுக்கச் சிலர் இருப்பதுண்டு. அவர்களை உரையாடி (Prompter) என்று சொல்வார்கள். உள்ளே உள்ள அகநாக்குக்கு அப்படி ஓர் உரையாடி உண்டு. அவன்தான் இறைவன். அவன் உரைக்க, அதனை உள்நின்ற நாக்கு உரைக்க, அதையே வெளியே உள்ள நாக்குச் சொல்கிறது. இறைவன் உள்ளே நின்று உரைக்கும்படி தூண்டாவிட்டால் பேச்சே எழாது. ஆதலின் அவனே உள்ளே நின்ற நாவுக்கு உரையாடியாக இருந்து அருள் செய்கிறான்.

உள் நின்ற நாவுக்கு உரையாடியாம்.

(உள்ளே நின்ற அகநாக்குக்குச் சொல்லிச் தருகின்றவனாம்.)

உலகுக்கு முன்னே கருவாய்த் தோன்றி, அது வளர வளர யாவற்றையும் காட்டும் கண்ணாக உதவும் கருகாவூர்ப் பெருமான் காலமாகி நிற்கிறான்; அடைந்தார்க்கு இன்பப் பொருளாய் இழைகிறான்; அருளோடு இணைந்து விளங்குகிறான்; எல்லோருக்கும் உள் நின்ற நாவுக்கு உரையாடியாகவும் திகழ்கிறான். இப்படி இறைவனுடைய இயல்புகளை அமைத்துக் காட்டுகிறார் அப்பர்.

குருகாம், வயிரமாம், கூறும் நாளாம்;
கொள்ளும் கிழமையாம், கோளே தானாம்;
பருகா அமுதமாம்; பாலில் நெய்யாம்;
பழத்தின் இரதமாம்; பாட்டிற் பண்ணாம்;
ஒருகால் உமையாள்ஓர் கூறனும் ஆம்;
உள்நின்ற நாவுக்கு உரையா டியாம்;
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.

(கருகாவூர் எந்தை குருகு முதலியன ஆவான் என்று கூட்டுக. குருகு முதல் கோள் வரையில் உள்ளவை காலத்தைப் பற்றியவை.)

இது ஆறாந் திருமுறையில் 15-ஆம் திருப்பதிகத்தில் முதல் பாட்டு.

தொடர்ந்து நின்ற தாய்

அவர் எப்போதும் சிவபெருமானையே எண்ணிப் பேசி வாழ்கிறவர்; இனிய சொற்களையே பேசுகிறவர். 'அவருடைய வாக்கிலிருந்து மட்டும் அத்தகைய இனிய சொற்கள் வருவதற்குக் காரணம் என்ன?' என்று ஒருவன் யோசித்தான். அவனுக்கு நல்ல வார்த்தைகளையே பேச வேண்டுமென்று ஆசை. முயன்றும் பார்த்தான். அவனால் முடியவில்லை. ஐந்து நிமிஷம் பல்லைக் கடித்துக் கொண்டு இனிமையாகப் பேசுகிறான்; ஆனால் அடுத்த கணத்தில் கடுமையான சொல் வெடித்துக் கொண்டு புறப்பட்டு விடுகிறது.

சிவனடியாரின் இன்சொல்லைக் கேட்ட போதெல்லாம் அவனுக்குப் பொறாமை உண்டாயிற்று. ''எப்படி ஐயா இந்தப் பேச்சைக் கற்றுக் கொண்டாய்?'' என்று அந்தப் பக்தரையே கேட்டு விட்டான். அவர் சொன்னதைக் கேட்டபோது அந்த மனிதனுக்கு வியப்பாக இருந்தது. அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''நான் கற்றுக் கொள்வதாவது! எல்லாம் சிவபெருமானுடைய செயல்'' என்றார்.

''நீ பேசுகிறாய். சிவபெருமானுடைய செயல் என்கிறாயே!''

''நான் பேசவில்லை. அவன் பேச வைக்கிறான். இந்த வாய் பேசுகிறது. அவனருள் இல்லாவிட்டால் என் நாக்கு இயங்காதே.''

''அப்படியானால் சிவபெருமான் உன் வாயில் இருந்து கொண்டு ஒவ்வொரு வார்த்தையாக உனக்குச் சொல்லித் தருகிறானா?''

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை.''

பக்தர் சொன்னது அந்த மனிதனுக்கு விளங்கவில்லை. மேலே கேள்வி கேட்கத் தொடங்கினான்.

''அப்படியானால் நீயாக ஒன்றை நினைத்துப் பேசுவ தில்லையா?'' என்று கேட்டான்.

''நினைப்பதுண்டு. ஆனால் அந்த நினைப்பைக்கூட அவன்தான் தோற்றுவிக்கிறான்.''

''அப்படியா! சிவபெருமான் உன்னுடைய மனத்திலும் இருந்துகொண்டு உனக்கு நினைப்பை உண்டாக்குகிறான் என்றா சொல்கிறாய்?''

''ஆம். அவன் என் மனத்தில் தோன்றும் கருத்திலும் இருக்கிறான்.''

''சரி, சரி; அவன் உன் மனத்தில் இருக்கிறான் என்கிறாய்; கருத்தில் இருக்கிறான் என்கிறாய்; நீ கருதுவதே இல்லை யானால் காரியங்களைச் செய்து முடிப்பது எப்படி?''

''எவன் என் வாக்கில் இருந்து பேசச் செய்கிறானோ, எவன் என் மனத்தில் தோன்றும் கருத்தில் இருக்கிறானோ, அவனே எனக்குத் தோன்றும் கருத்தின்படி காரியங்களை யெல்லாம் நிறைவேற்றி வைக்கிறான்'' என்று அடியார் விடையிறுத்தார்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்துஅறிந்து முடிப்பான் தன்னை.

★

கேள்வி கேட்டவன் சற்றே சிந்தனையில் ஆழ்ந்தான். 'இப்படி ஒரு பேர்வழி பேச்சிலும் நினைப்பிலும் இருந்து உதவி செய்பவனாக இருந்தால் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்' என்ற விருப்பம் அவனுக்கு எழுந்தது.

''வாயில் இருப்பவன் ஏ்ன்றும், மனத்திலும் கருத்திலும் இருப்பவன் என்றும், கருத்தை அறிந்து காரியத்தை முடித்துக் கொடுப்பவன் என்றும் சொல்கிறாயே; அவன் உருவமே இல்லாத நுண்பொருளா? நம்முடைய கண்ணுக்குப் புலப்படுபவனா?''

அடியவருக்கு அவனுடைய உள்ளத்தே ஆராய்ச்சி பிறந்திருப்பது தெரிந்தது. இறைவன் அருள் திருமேனியை உடையவனாக இருப்பான் என்பதைச் சொன்னால் அவன் வணங்கிப் பயன் பெறககூடும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதற்கு ஏற்ற வகையில் இப்போது பேசலானார்.

''ஆம். அப் பெருமானைக் கண்ணாரக் காண இயலும். ஆர்வமும் அன்பும் உடைய அடியார்கள் தம் அகக் கண்ணாலும் புறக் கண்ணாலும் கண்டு களிப்பதற்கு ஏற்ற தூய வடிவத்தை அவன் மேற்கொள்வான். அவன் தூயவன், அவனுடைய திருக்கோலத்தில் தூய்மைக்கு உருவமாகிய வெண்மையான பொருள்களைக் காணலாம். அவனுக்கு ஒரு வாகனம் உண்டு. அது தூய வெள்ளை ஏறு. அவன் திருமுடியில் அணிந்திருப்பது வெண்திங்கள். கண்ணியை அப்பெருமான் சடையில் அணிந்தது போல அந்தச் சுடர்த் திங்கள் காட்சி அளிக்கும்.''

தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானை.

★

''அப் பெருமானுடைய இயல்புகளை இன்னும் சொல், கேட்கிறேன்'' என்றான் கேள்வி கேட்ட மனிதன். இப்போது பக்தரே கேள்வி கேட்கத் தொடங்கினார்.

''உனக்கு அன்னை இருக்கிறாளா?''

''இல்லை; இறந்து போய்விட்டாள்.''

''குழந்தையினிடம் எல்லா அன்னைமாரும் அன்பாக இருக்கிறார்களா?''

''குழந்தைப் பருவத்தில் பெரும்பாலோர் அன்பாக இருக்கிறார்கள். குழந்தை பெரியவனாகி விட்டல் அந்த அன்பு மாறிவிடுகிறது'' என்றான் அவன்.

''குழந்தை எப்போதும் தாயுடன் இருக்கிறது. அது வளர்ந்து பெரியவனானால் தாய் அந்தக் குழந்தையுடன் இருக்க முடிகிறதா?'' என்று பக்தர் கேட்டார்.

''அது எப்படி முடியும்? குழந்தைதான் தாயோடு வளரும், வளர்ந்த பிள்ளை வேலை செய்யப் போகும் இடங்களுக் கெல்லாம் தாய் போக முடியுமா?''

''ஆகவே, குழந்தையினிடம் எவ்வளவு அன்புடைய தாயானாலும் எப்போதுமே அந்தக் குழந்தையோடு இருக்க முடியாது. எல்லா இடத்துக்கும் தாய் போக முடியாது. தன் ஆயுட்காலம் முடிந்தால் அவள் நிரந்தரமாகத் தன்மகனைப் பிரிந்து விடுகிறாள். இவ்வளவும் உண்மைதானே?''

''ஆம்; உண்மை'' என்றான் அந்த மனிதன். அவனுக்கு இப்போது பணிவும் உண்டாயிற்று.

''எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தொடர்ந்து நிற்கும் தாய் யாரேனும் உண்டா?''

''எப்படி இருக்க முடியும்?''

''உலகத்துத் தாய்மாரால் அது முடியாத காரியம். ஆனால் எல்லா உயிர்களுக்கும் எப்போதும் எவ்விடத்திலும் தொடர்ந்து நின்ற தாயாக இருப்பவன் இறைவன்'' என்றார் பக்தர்.

''சற்றே விளக்கியருள வேண்டும்'' என்றான் புதிய அன்பன்.

''ஒரு பிறவியிலேயே ஒரு மகன் பெரியவனானால் அவனுடைய தாய் அவன் செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து செல்ல முடியாது. கடைசியில் அவள் அவனை இவ்வுலகில் விட்டுவிட்டு இறந்து மறு பிறவியை அடை கிறாள். அங்கே அவள் யாருக்கோ மகளாகப் பிறந்து அவளைத் தாய், தாய் என்று சொல்கிறாள்.* அவனுக்கும் அவளுக்கும் உள்ள உறவு அற்றுவிடுகிறது. இப்படி அறாமல் என்றும் எல்லா உயிர்கட்கும் எவ்விடத்திலும் தாய்போல் இருந்து அருள் புரிகின்றவன் இறைவன்தான். உண்மையான தாய் அவனே. குழந்தைக்குப் பசி உண்டானால் அழுகிறது. அவ்வழுகை கேட்டுப் பாலூட்டுகிறாள் தாய். அதனால் அவளுடைய அன்பு

---

* *''எனக்குத்தா யாகியாள் என்னைஈங்கு இட்டுத், தனக்குத்தாய் நாடியே சென்றாள்'' (நாலடியார்).*

தெரிகிறது. தன் உடம்பில் உள்ள குருதியே பாலாக மாற அதை ஊட்டுகிறாள் அவள். அதனால் அவளுடைய தியாகம் பெரிது என்று சொல்கிறோம். ஆனால், ஊர் செல்பவனுக்குப் போகிற இடத்திலே உணவை முன்கூட்டியே ஆயத்தமாக வைத்திருப் பவனைப் போலக் குழந்தை கருவிலே தோன்றி முதிர முதிர அதற்குப் பால் வேண்டுமென்று கருதி இறைவனல்லவா தாயினிடம் பாலை உண்டாக்கி வைக்கிறான்? தாய் தன் முயற்சியினால் பாலை உற்பத்தி செய்வதில்லையே! அந்தத் தாயைத் தாயாக்கிப் பாலூட்டும் வகையை அமைக்கும் அருளாளன் இறைவன் அல்லவா? ஆதலால் அவனைத் தான் உண்மையான தாயாகச் சொல்ல வேண்டும். ஒரு பிறவியில் சில காலம் தாயாக இருந்து இறந்துபோகும் தாய் போலன்றி எக்காலத்தும் எவ்விடத்தும் தொடர்ந்து நிற்கும தாய் அவன்.''

பக்தர் கூறியவற்றில் உள்ளம் ஆழ்ந்து நின்றான் அன்பன். ''அவன் எல்லோருக்கும் தாயானால் எல்லோருமே அவன் அருளாலே இன்பத்தை அடையலாமே!'' என்று அவன் ஒரு சந்தேகத்தைத் தெரிவித்தான்.

''எல்லோருக்கும் தாயாக இருந்து காப்பாற்றினாலும் மெய்யறிவு பெறுதல் முதலிய நன்மைகளை முயற்சி செய்பவர்களுக்கே அருள்பவன் அவன். தவம் செய்தால் நன்மை பெறலாம்.''* எவ்வளவுக்கெவ்வளவு தவத்திலே ஈடுபடு கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நன்மை உண்டாகும். இறைவனும் பொதுவாக யாவருக்கும் தனு கரண புவன போகங்களைத் தந்தாலும், தன்னை அணுகி அன்பு செய்து முயல்பவர்களுக்கு ஏற்ற வகையில் அருள் செய்வான். அந்தத் திறத்தில் தவத்தைப் போன்ற தன்மையை உடையவன் அவன்.''

தொடர்ந்து நின்ற
தாயானைத் தவமாய தன்மை யானை.

★

---

* *''தவமொக்கும் நலம்பயப்பில்'' (கம்ப ராமாயணம்)*

''உலகத்தில் அவனுடைய திருவருளைப் பெற்று இன்புறும் அடியார்கள் சிலரே இருக்கிறார்கள். ஆனால் மகா தேவனாகிய அவனை அணுகி அவனுடைய அருளை அமரர்கள் யாவரும் பெற்று இன்புறுகிறார்கள் போலும்!'' என்று தன் கருத்தை மெல்லச் சொன்னான் புதிய அன்பன்.

''அதுதான் இல்லை'' என்றார் பக்தர்

வியப்பில் ஆழ்ந்த அன்பன், ''ஏன்?'' என்றான்.

''தேவர்கள் தேவ லோகத்தில் இருக்கிறார்கள். பூவுலகத்தைவிடத் தேவலோகம் இறைவனுக்கு அருகில் உள்ளது என்று நினைப்பதற்கு இல்லை. தேவர்கள் புண்ணியப் பயனை நுகரும் பொருட்டுச் சொர்க்க லோகத்தில் வாழ் கிறார்கள். அவர்களுடைய புண்ணியக் கணக்குத் தீர்ந்து விட்டால் மறுபடியும் இந்தப் பூமியில் வந்து பிறப்பார்கள். சுகவாழ்வில் இருப்பதால் தேவர்களுக்குச் செருக்கு அதிகம். ஏதேனும் தமக்குக் குறை உண்டானால் இறைவனை அணுகுவார்கள். இறைவனிடம் காரணம் இல்லாத தூய அன்பு அவர்களிடம் இல்லை. அதனால் இறைவனும் அவர்களை நெருங்குவதில்லை. அவர்களுக்கு அரியவனாகவே இருக்கிறான்.''

''எல்லாத் தேவர்களுக்கும் அணுகுவதற்கரியவனா? அல்லது இந்திரன் முதலிய தலைவர்களுக்கு எளியவனாக இருப்பவனா?''

''தலைமைப் பதவி வகிக்கும் தேவாதி தேவர்க்கும் என்றும் சேய்மையில் இருப்பவன் அவன். ஆனால் பக்தர்களுக்கு அணிமையில் இருப்பவன்.''

''என் போன்றவர்கள் அவனைத் தரிசிப்பது எப்படி?''

''தென்றமிழ் நாட்டில் கூடல் என்னும் பெயரை உடைய மதுரை இருக்கிறது. அங்குள்ள திருக்கோயிலாகிய திருவாலவாய்க்குச் சென்று கண்டால் இறைவனுடைய உருவத் திருமேனியைக் காணலாம். அந்த உருவைத் தியானிக்கலாம். அவனடியையே பற்றுக்கோடாகக் கொண்டு சிந்திக்கலாம்.

எனக்கு அந்தப் பாக்கியம் கிட்டியது'' என்று கூறினார் சிவனடியார்.

தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவன்அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

★

இறைவன் அடியார்களின் வாக்கில் நின்று பேசச் செய்பவன்; மனத்தில் நின்று நினைக்கச் செய்பவன்; நினைப்பில் நின்று முயலச் செய்பவன்; முயற்சியில் நின்று கருதிய காரியம் கைகூடச் செய்பவன்; தன்னை வழிபடும் அன்பர்கள் அகத்திலும் புறத்திலும் காணும் வண்ணம் தூய உருவத் திருமேனி கொண்டு இடபவாகனனாகிச் சந்திரசேகரனாகி எழுந்தருள்பவன்; எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வுயிரையும் தொடர்ந்து நின்று உதவும் தாயாக விளங்குபவன்; முயற்சி செய்பவர்களுக்கு நன்மையைத் தரும் தவத்தைப் போன்ற தன்மையை உடையவன்; அடியார்க்கு எளியவனாக இருந்தாலும் தேவாதி தேவருக்கு அரியவன்; இத்தகையவன் திருவாலவாயில் எழுந்தருளி யிருக்கிறான்.

இந்தக் கருத்தை வைத்து அப்பர் சுவாமிகள் ஒரு திருத்தாண்டகத்தைப் பாடிய''ருளினார்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்ற
தாயானைத் தவம்ஆய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

(தூயான் - தூய்மையை உடையவன். சுடர் - நிலவு. தவம் ஆய தன்மையானை - தன்மையில் தவமே ஆக இருப்பவனை. தலை

ஆய - தலைவராகிய. சேயான் - அணுகுதற்கரியவன். கூடல் - மதுரை. திருவாலவாய் என்பது மதுரையில் உள்ள திருக்கோயிலின் திருநாமம். சிந்தித்தல் - தியானித்தல்.

'தொடர்ந்து நின்றென் தாயானை'' என்பது ஒரு பாடம். தொடர்ந்து நின்ற என் என்பதன் விகாரமாகக் கொண்டு, தன்னைத் தொடர்ந்து நின்ற எனக்குத் தாய்போல அருள் புரிகிறவன் என்று பொருள் கொள்ள வேண்டும்.)

திருநாவுக்கரசர் மதுரைப் பதிக்குச் சென்றபோது பாடிய பதிகத்தில் உள்ளது இது; ஆறாந் திருமுறையில் 19-ஆம் பதிகத்தில் எட்டாம் பாசுரமாக அமைந்திருப்பது.

★

அறிவிற் பெரியவன்

குழந்தையிடம் அம்மா இறைவனைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள். எல்லோரையும்விட இறைவன் அறிவிலே சிறந்தவன் என்பதை ஒருநாள் சொன்னாள். குழந்தைக்கு அறிவு என்றால் புத்தகமும் வாத்தியாரும் பள்ளிக் கூடமுமே நினைவுக்கு வரும். அது தன் தந்தையை மிகவும் நன்றாக படித்தவர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. அவர் அத்தனை நூல்களை வீட்டில் வைத்திருக்கிறார். அவருடைய அறிவைப் புத்தகங்களைக் கொண்டு குழந்தை அளந்து பார்க்கிறது.

இறைவன் மிகப்பெரிய அறிவுடையவன் என்பதைக் கேட்ட குழந்தை தனக்குத் தெரிந்த அளவு கோலால் அளக்கப் பார்க்கிறது. 'அப்பாவே இவ்வளவு நூல்களைப் படித்தவராயிற்றே. கடவுள் எத்தனை புத்தகங்களைப் படித்திருப்பார்! அவர் படித்த நூல்களையெல்லாம் குவித்தால் ஒரு மலையைப் போல் இருக்குமே!' என்று எண்ணுகிறது. அம்மாவிடம் கேட்கிறது. "அம்மா, அம்மா, கடவுள் படித்த புத்தகங்கள் ஒரு கோடி இருக்குமா?" என்கிறது. ஆனால் அம்மா கூறும் விடை அதற்கு வியப்பை உண்டாக்குகிறது.

"அவர் ஒரு நூல்கூடப் படித்ததில்லை" என்று அவள் சொல்கிறாள்.

குழந்தைக்கு ஒன்றும் புரிபடவில்லை. புத்தகம் படிக்காதவர் எப்படி அறிவுடையவராக இருக்க முடியும்?- அதற்கு யோசனை விரிகிறது. புத்தகம் படிக்காவிட்டால் அவருக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லையே! அம்மாவை மறுபடியும் கேட்கிறது குழந்தை. "அப்படியானால் கடவுளுக்குப் பல விஷயங்கள் தெரியாமல் இருக்குமோ?" என்று கேட்கிறது.

அம்மா அதற்கும் பதில் சொல்கிறாள். ''அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை'' என்று அவள் சொல்கிறதைக் கேட்ட குழந்தை பின்னும் வியப்பில் மூழ்குகிறது.

குழந்தை பச்சைக் குழந்தை அல்ல; சிறிது சிந்திக்கத் தெரிந்த குழந்தை. ஆதலின் அதற்குச் சிந்தனை ஓடுகிறது. புத்தகத்தைத் தானே படிப்பது ஒரு முறை, படித்தவர்களிடம் கேட்பது ஒரு முறை என்று அந்தக் குழந்தை அறிந்து கொண்டிருக்கிறது. ''கேள்வி முயல்'' என்ற ஔவையின் வாக்கைப் பொருளோடு தெரிந்துகொண்ட குழந்தை அது. 'பல அறிஞர்களுடைய உபதேசங்களைக் கேட்டு அறிவாளியாகி யிருக்கலாம்' என்ற நினைவு வந்தது. ''அவர் காதில் பல அறிவாளிகளுடைய பேச்சுக்கள் விழுந்திருக்குமோ?'' என்று குழந்தையிடமிருந்து அடுத்த கேள்வி எழுந்தது.

''அவர் காதில் மற்றவர்கள் ஓர் உபதேசமும் செய்ய வில்லை. அந்தக் காதில் அவர் யார் உரையையும் போட்டுக் கொள்ள வில்லை. சங்கினாலான குழையைத்தான் காதில் போட்டுக் கொண்டிருக்கிறார்.'' அம்மா சற்று வேடிக்கை யாகவே பேசினாள்.

பிறர் வாத்தியாராக இருந்து சொல்ல அதைக் காதில் வாங்கிக்கொள்ளும் வேலை அவருக்கு இல்லையாம்.

குழந்தைக்கு ஒரே குழப்பமாகிவிட்டடது. 'கடவுள் படித்தவர் அல்ல; படித்தவர்கள் சொல்வதைக் கேட்டதும் இல்லை. ஆனால் அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை.' இதை நினைக்க நினைக்கக் குழந்தைக்கு வியப்பாக இருக்கிறது. 'இது எப்படி முடியும்?'' என்று யோசிக்கிறது.

'படிக்காதவர்களும், படித்தவர்களை அணுகிக் கேட்காத வர்களும் வாழ வகை தெரியாமல் துன்புறுகிறார்கள். அறிவு இல்லாதவர்கள் எந்த விதமான நன்மையையும் பெற மாட்டார்கள்; எப்போதும் கவலையோடேயே இருப்பார்கள். கடவுளுக்கும் நிச்சயமாகக் கவலை பல இருக்க வேண்டும்' என்ற எண்ணங்களின் விளைவாகக் குழந்தை அன்னையை, ''அவருக்குக் கவலை நிறைய உண்டோ?'' என்று கேட்கிறது.

''கவலையா? அவரை நினைப்பவர்களுக்கே கவலை அணுகாதே. மிக மிகக் கவலைக்குக் காரணமான துன்பம் ஒன்று இருக்கிறது. அதை உலகில் யாராலும் போக்க முடியாது. அதைப் போக்கிப் பாதுகாக்கும் ஆற்றல் அந்தக் கடவுள் ஒருவருக்குத்தான் உண்டு.''

''அது என்ன கவலை அம்மா?''

''பிறப்பு என்பதுதான் துன்பங்களுக்குள் பெரிய துன்பம். அதை நினைத்தால் பெரியவர்களுக்கு உண்டாகும் கவலைக்கு எல்லையே கிடையாது. அந்தக் கவலையையே கடவுள் போக்கி அருளுவார்.''

''அவர் அறிவுடையவர் என்று சொல்கிறாய்; கவலை இல்லாதவர், கவலையை ஒழிப்பவர் என்கிறாய். ஆனால் அவர் படித்ததும் இல்லை, படித்தவர் சொல்லக் கேட்டதும் இல்லை என்று சொல்கிறாயே! அவருக்கு எப்படி அறிவு உண்டா யிற்று?''

தாய்க்கு விடை சொல்லச் சிறிது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ''அவர் இயற்கையாகவே அறிவு நிரம்பப் பெற்றவர். நூலறிவுக்கெல்லாம் மேம்பட்ட வாலறிவை உடையவர்'' என்று சொன்னால் குழந்தைக்கு விளங்காது.

அந்தக் குழந்தை நம்முடைய மரபுகளை ஓரளவு அறிந்த குழந்தை. வேதம், சாஸ்திரம் என்பவற்றைப் பற்றிக் கேட்டிருக்கிற குழந்தை. அதற்குத் தெரிந்திருக்கிறதைக் கொண்டே விஷயத்தை விளக்கலாம் என்று எண்ணுகிறாள் தாய்.

''உனக்கு என்ன என்ன புத்தகம் தெரியும்?'' என்று அம்மா கேட்கிறாள். குழந்தை தனக்குத் தெரிந்த பாட புத்தகங்களையும் ஆத்திசூடி முதலிய சில நூல்களையும் சொல்கிறது.

''நீ கேட்ட புத்தகங்களில் மிகவும் சிறந்ததாக ஏதாவது தெரியுமா?''

''வேதம், சாஸ்திரம்.''

''அந்த வேதங்களும் சாஸ்திரங்களும் பெரிய நூல்கள். அவற்றுக்கு முந்திப் புத்தகமே இல்லை. வேதந்தான் முதல்

புத்தகம். அதை இயற்றியவர் கடவுள். முதல் முதலில் புத்தகம் இயற்றியவரே அவர்தாம். அறிவு என்பதே அவரிடமிருந்துதான் தோன்றியது. அவர் அறிவுருவானவர். முதல் நூலும் அவரிட மிருந்துதான் எழுந்தது. அவருக்கு மிஞ்சின அறிவாளி இல்லை. வேதத்தையும் ஆறு சாஸ்திரங்களையும் சொன்னவர் அவர்.''

''அவ்வளவு பெரிய அறிவாளி என்கிறாயே; அவருக் கென்று தனியாக அடையாளம் உண்டா? படித்தவர்கள் எது எதையோ கழுத்தில் அணிந்திருக்கிறார்களே; அவருக்குக் கழுத்தில் ஏதாவது ஆபரணம் உண்டா?

அன்னை சிரித்துக்கொண்டாள். ''அவருக்குக் கழுத்தில் பிறர் அணிந்த அணி ஏதும் இல்லை. அவராக அணிந்து கொண்டது ஒன்று உண்டு. அந்த அடையாளம் வேறு யாருக்கும் இல்லை.''

''என்ன அடையாளம் அது?''

''அவரை நீல கண்டப் பெருமான் என்று தேவர்களும் மனிதர்களும் பாராட்டுவார்கள். அவர் கழுத்தில் விஷம் தங்கியிருக்கிறது. தேவர்களைக் காப்பாற்றும்பொருட்டு ஆலகால விஷத்தை அருந்தித் திருக்கழுத்தில் அடையாளமாக வைத்துக் கொண்டார். அது அவருடைய பேராற்றலையும் கருணையையும் புலப்படுத்திக்கொண்டு விளங்குகிறது. வேதமும் அந்தக் கண்டத்தின் வழியேதான் ஒலிக்கிறது.''

''முதல் நூல் வேதம் என்று சொல்கிறாயே; அப்படி யானால் அதைச் சொன்ன கடவுள் மிகவும் வயசு ஆனவரோ?''

''ஆம். அவர் மிகவும் பழையவர். ஒவ்வோர் ஊரிலும் ஒரு குடும்பத்தை ஆதிக் குடும்பம் என்று சொல்வார்கள். ஒவ்வொரு குலத்திலும் ஒருவரை ஆதி புருஷர் என்று சொல்வார்கள். இப்படியே தேவர்களிலும் சொல்வதுண்டு. பழமையைச் சுட்டிக் காட்டும்போது இன்னார் காலம் முதற்கொண்டு என்று சொல்வது வழக்கம். ஆனால் இப்படிச் சொல்லும் ஆதிகளெல்லாம் ஏதோ ஒரு வகையில் முதலாக நிற்பவைகளே அல்லாமல் அவற்றிற்கு முன்பு ஏதும் இல்லை என்று சொல்ல முடியாது. கிளைகளுக்கெல்லாம் முதற்கிளை என்று ஒன்றைச் சுட்டலாம். ஆனால் அது முதற்கிளையே ஒழிய அதற்கு முன்னே தோன்றியது ஒன்றும் இல்லை என்று சொல்ல

முடியாது. அதற்கு முன்னே தோன்றியது அடிமரம். அதற்கும் ஆதி வேர்; அதற்கும் ஆதி விதை. அதற்கும் ஆதி அது தோன்றிய மரம். இப்படி ஆதியை ஆராய்ந்துகொண்டு போனால் எல்லாவற்றிற்கும் மூலமாகிய ஆதியாக இருப்பது எதுவோ அந்தப் பொருளே கடவுள். ஆதிக்கு அளவாக இருக்கிறவர் அவர்.''

''கடவுளை நாம் காண முடியுமா?''

''அவரை இந்தக் கண்ணால் காணமுடியாது. ஆனாலும் அவருடைய நினைப்பை ஊட்டும் உருவங்களைக் காணலாம். கோயில்களில் அந்த மூர்த்திகள் எழுந்தருளியிருக்கிறார்கள்.''

''ஏதாவது ஒரு கோயிலைச் சொல், அம்மா.''

''இதோ சோழ நாட்டில் ஆக்கூர் என்ற தலம் இருக்கிறது. அங்கே கடவுள் எழுந்தருளியிருக்கிறார். அவருக்குத் தான்தோன்றியப்பர் என்று பெயர். அதுவே கடவுளுடைய பழமையைக் காட்டுகிறது. அவர் பிறரால் உண்டாக்கப் பட்டவர் அல்ல. அவருக்கு முன் யாரும் இல்லை. அவரே ஆதிக்கும் ஆதிக்கும் ஆதியானவர்; தாமே தோன்றினவர்; சுயம்பு மூர்த்தி; எல்லோரையும் தோற்றுவித்த தந்தை, தான்தோன்றியப்பர் என்ற திருநாமம் இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றது.''

குழந்தை அறிவுமயமான கடவுளை, ஆதிக்கு அளவாக நிற்கும் தான்தோன்றியப்பரைத் தியானிக்கப் புகுந்து விடுகிறது.

★

இறைவனுடைய தன்மைகளைக் குழந்தைக்குத் தாய் சொல்வதுபோல அழகாகச் சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

ஓதிற்று ஒருநூலும் இல்லை போலும்;
உணரப் படாதது ஒன்று இல்லை போலும்;
காதில் குழைஇலங்கப் பெய்தார் போலும்;
கவலைப் பிறப்புஇடும்பை காப்பர் போலும்;
வேதத்தோடு ஆறங்கம் சொன்னார் போலும்;
விடம்சூழ்ந்து இருண்டமிடற்றர் போலும்;
ஆதிக்கு அளவாகி நின்றார் போலும்;
ஆக்கூரில் தான்தோன்றி அப்ப னாரே.

(படித்தது ஒரு நூலும் இல்லை; தம்மால் அறியப்படாதது ஒன்றும் இல்லை; தம் திருச்செவியில் சங்கினாலான அணியை விளங்கும்படி அணிந்தவர்; கவலைக்குக் காரணமான பிறவியாகிய துன்பத்தை அடியார்கள் அடையாமல் பாதுகாப்பவர்; வேதத்தோடு ஆறு சாஸ்திரங்களையும் திருவாய் மலர்ந்தருளினவர்; ஆலகால விடம் சேர்ந்து கறுத்த திருக்கழுத்தை உடையவர்; ஆதி என்று குறிப்பதற்குரிய அளவாகி நின்றவர்; ஆக்கூரில் எழுந்தருளியிருக்கும் தான்றோன்றியப்பர்.

ஓதிற்று-படித்தது. குழை-காதணி. இலங்க-விளங்கும்படி. பெய்தார்-அணிந்தவர். கவலையைத் தரும் பிறப்பாகிய இடும்பை. ''தனக்குவமையில்லாதாள் தாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்றல் அரிது'' என்று குறள் கூறும். இறைவனை அணுகினவருக்குக் கவலை இல்லை. அங்கம்-சாஸ்திரம். மிடறு-கழுத்து. தான், தோன்றியப்பர்: சுயம்பு நாதேசுவரர் என்பது வடமொழித் திருநாமம்.

போலும் என்று வருபவை எல்லாம் அசைகள்; அவற்றிற்கு பொருள் இல்லை.

ஆக்கூர் என்பது மாயூரத்துக்கும் திருக்கடவூருக்கும் இடையே உள்ளது.)

இது ஆறாம் திருமுறையில் 21-ஆம் பதிகத்தில் இரண்டாம் பாட்டு.

★

உள்ளக் கிழி

நள்ளிருள். யாரோ வீட்டுக்குள் திருட்டுத்தனமாக வந்திருக் கிறது போலத் தெரிகிறது. காலடிச் சத்தம் கேட்கிறது. காதை நெரித்துகொண்டு கேட்கிறோம். மூச்சை வேகமாக விடாமல் கேட்கிறோம். காலடியோசை தெளிவாகக் கேட்கிறது. அதைக் கேட்பதற்காக மூச்சை அடக்கிக் கொள்கிறோம். ஒன்றை உற்றுக் கவனிக்கும்போது மூச்சை அடக்குவது இயற்கையாக இருக்கிறது.

உற்றுக் கேட்கும்போது மூச்சை அடக்கிக் கேட்பது போலவே, எதையேனும் ஒன்றை உற்றுப் பார்க்கும் போதும் மூச்சை வேகமாக விடாமல் நிதானமாக விடுவதுதான் இயல்பு, மனத்தை ஒருமுகப்படுத்தும் போதெல்லாம் மூச்சு மெதுவாக இயங்கும். யோகம் செய்பவர்கள் மூச்சை அடக்கி மனத்தை நிறுத்த முயல்கிறார்கள். மூச்சின் ஓட்டத்துக்கும் மனத்துக்கும் தொடர்பு உண்டு.

இறைவனைத் தியானிக்கையில் மனம் ஒருமுகப்படும் போது மூச்சுக் காற்று மெல்ல மெல்ல ஒடுங்கி இயங்கும்.

★

அப்பர் சுவாமிகள் இறைவனைத் தியானித்து இன்புறும் வகையைச் சொல்கிறார்.

மனம் ஒரு பொருளைத் தியானிக்க வேண்டுமானால் அது ஓர் உருவத்தைத்தான் தியானிக்க முடியும். உருவம் இல்லாத ஒன்றைப் பற்றுவது என்பது மனத்தால் முடியாத காரியம். ஆதலால்தான் இறைவனுக்கு உருவங்கள் அமைந்திருக் கின்றன. இறைவனுடைய திருவுருவத்தை உள்ளத்துக்குள்ளே தியானிப்பது எப்படி?

அப்பர் சுவாமிகள் தியானம் என்று சொல்லவில்லை. உள்ளத்தில் இறைவனுடைய உருவத்தை எழுதவேண்டும் என்று சொல்கிறார். அதுவும் தியானந்தான். ஆனாலும் தியானத்தின் முதிர்ந்த நிலை அது. அதனைத் தாரணை என்று கூறுவர் யோகியர்.

கிழியில் ஒவ்வோர் அங்கமாக ஓவியன் எழுதிக் கொண்டு வருகிறான். ஓர் அங்கத்தை எழுதிவிட்டால் அது மறையாமல் நின்றுவிடுகிறது. அவ்வாறே ஒவ்வோர் அங்கமாக எழுதி எழுதி உருவம் முழுவதும் நிரம்புகிறது. ஓவியம் முழுவதும் ஒரு கணத்தில் எழுதி முடிவது அன்று. சிறிது சிறிதாக எழுதி முற்றுப்பெறச் செய்ய வேண்டும்.

ஒன்றை எழுதிவிட்டால் மாறாமல் இருக்கும் கிழியில் எழுதுவதற்கே பல காலம் செல்லுமானால் ஒன்றை நினைத்தால் மறுகணமே மாறும் மனத்தில் ஓர் உருவத்தை எழுதுவது எவ்வளவு அருமை!

நடுத் தெருவில் ஒரு துணியைக் கட்டி அதில் ஓவியன் ஓவியம் தீட்டப் புகுகிறானென்று வைத்துக்கொள்வோம். காற்று அடிக்கும்போது ஓவியச் சீலை அசையும். அசைந்து கொண்டிருக்கிற கிழியில் எப்படிச் சித்திரத்தை எழுத முடியும்?

ஓவியம் தீட்டுபவர்கள் முதலில் கிழியை நன்றாக இறுக்கிக் கட்டி விறைப்பாக இருக்கச் செய்து அதன்மேல் எழுதுவார்க்ள்.

மனமோ காற்றால் அசையும் துணிபோலச் சலன முடையது. அதில் எதையாவது எழுத முடியுமா? அதன் சலனத்தைப் போக்கிவிட்டுப் பிறகே எழுதுவேண்டும். மூச்சுக் காற்று வீசாதபடி செய்து மனமென்னுங் கிழியை விறைப்பாக வைத்துப் பிறகு உருவை எழுதவேண்டுமாம். அப்படி எழுதும்போது வேறு ஒரு கவனமும் இன்றி உற்று நோக்கி எழுதவேண்டும்.

உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருஎழுதி.

(மூச்சு விடாதபடி இருந்து ஒருமைப்பாட்டுடன் பார்த்து உள்ள மென்னும் திரைச்சீலையில் உருவத்தை எழுதி.

உயிரா வணம் - மூச்சுவிடாத வண்ணம்; உயிர்த்தல் - மூச்சு விடுதல். உற்று நோக்குதல் - கூர்ந்து கவனித்தல். கிழி - சித்திரம் எழுதும் துணி. உரு - இறைவன் திருவுருவத்தை.)

★

இப்படி எழுதுவதற்கு நெடுநாள் பழக்கம் வேண்டும். எழுதினது மாறாமல் முழு உருவும் எழுதி அகக்கண்ணால் காண்பது ஆனந்தம்.

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"

என்று திருமூலர் கூறுகிறார்.

சிவபெருமான் உமாதேவியைத் தம் மனத்தகத்தே ஓவியமாக எழுதி அதனைப் பார்த்துப் பார்த்து இன்புறுவதாகக் குமரகுருபரர் பாடுகிறார்.

".........ஏறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிர்ஓ வியமே"

என்பது அவர் பாட்டு.

உள்ளமாகிய கிழியில் உருவத்தை எழுதிப் பார்க்கும் இன்பத்தை நுகர்ந்தவர் அப்பர் சுவாமிகள். தம் அநுபவத்தினால் சொல்லும் வார்த்தை இது.

★

உள்ளத்தே இறைவனுடைய திருவுருவத்தை, சலன மின்றி நிரந்தரமாகக் கிழியில் எழுதிய சித்திரத்தைப் போலப் பார்க்கிறவர்களுக்கு, உலக வாசனையே இராது. புறக் காட்சி சிறிதும் இராது. புறக் காட்சி உள்ளவர்களுக்கு அகக் காட்சி இல்லை. அகத்தே இந்த ஓவியத்தை உற்று நோக்குபவர் களுக்குத் தமக்கென்று ஒரு செயல் இல்லை. எல்லாவற்றையும் இறைவனிடத்தே அர்ப்பணம் செய்து இன்புறும் நிலை அது. 'யான் தான்' எனும் சொல் இரண்டும் அங்கே இல்லை. ஆத்ம

சமர்ப்பணம் செய்துவிட்டு நிற்கும் அந்த நிலையை அப்பர் சுவாமிகள் மேலே சொல்கிறார்.

உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி,
உயிர் ஆவணம்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி.

உள்ளக் கிழியில் உரு எழுதிய பிறகு அந்த உருவத்தையே நோக்கி உண்முகமானவர்கள் தம்முடைய உயிரையே விலைக்கு விற்றுவிடுகிறார்களாம். ஆவணம் என்பது ஓலை. ஓலை எழுதிக் கொடுத்து விற்றுவிடுவதை ஆவணம் செய்தல் என்று குறிக்கிறார். அப்படி முறியெழுதித் தம்மையே இறைவன் கையில் கொடுத்துவிட்டுத் தம்மை இழந்து நிற்கிறவர்கள் யாரோ அவர்களே மெய்ஞ்ஞான நிலை பெற்றவர்கள்; உணர்வு உடையவர்கள்; உணர்பவர்கள். அத்தகையவர்களோடு இறைவனும் பிரிவின்றி ஒன்றி ஒட்டி வாழ்வான்.

★

பணத்தாலும் பலத்தாலும் சிறந்தவர்கள் இறைவனோடு ஒட்டி வாழும் வாழ்வை மனத்தாலும் நினைக்க இயலாது. இன்பவாழ்வில் இணையற்று நிற்கும் அமரலோக வாசிக ளெல்லாம் போற்ற நிற்பவன் இறைவன். அவர்களுக்குள் தலைவனாகிய இந்திரன் ஐராவதத்தில் ஏறிப் பவனி வருகிறான். இறைவன் அந்தத் தலைமைப் பதவியை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு தானே அமரர் நாடு ஆளும் அதிபதியாய் ஐராவதமீதேறிச் செல்லலாம். அதை இறைவன் விரும்ப வில்லை. அமரர் தம் நலத்தையே எண்ணுபவர்கள். மன ஒருமைப்பாடு இல்லாதவர்கள். இறைவனுடைய உண்மை இயல்பை உணராதவர்கள். அவர்கள் ஆத்ம சமர்ப்பணம் செய்ய அறியாதவர்கள். இறைவனும் அவர்களும் ஒட்டி வாழ்வது இயலாது. இன்று தமக்குத் துன்பம் வந்தால் நீயே பெரியவன் என்பார்கள். நாளைத் துன்பம் நீங்கிவிட்டால் நானே பெரியவன், நானே பெரியவன் என்று செருக்குற்றிருப்பார்கள். அந்த இடத்தில் ஆண்டவன் தன் அதிகாரத்தைக் காட்டுவானே யன்றி அருளைக் காட்டமாட்டான்.

ஏழைக் குழந்தைகளாகிய மக்களிடந்தான் இறைவனுக்குக் கருணை பிறக்கும். அவர்களுக்காக அவன் இறங்கி வருவான். ஏழை மனிதர்கள் எத்தனை அறிவில்லாதவர்களாக இருந்தாலும் தன்னை எண்ணி ஏங்குபவர்கள் என்பதை அவன் அறிவான். மனிதர் கூட்டத்தில்தான் தன் உருவை உயிரா வண்ணம் இருந்து உள்ளக் கிழியில் எழுதும் அன்பர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அவன் உணர்வான். ஆதலால் தன்னுடைய அருள் விளையாடல்களை இந்த உலகத்திலே காட்டுவதுதான் அவனது திருவுள்ளக்கிடக்கை. அவனுக்கு விளையாட்டிடம் பூமி. அவன் இரக்கத்துக்குரியவர்கள் மனிதர்கள். அவன் இங்கே வந்து திருவிளையாடல் புரியும் இடங்களே தலங்கள்.

இந்த நிலவுலகில் வந்து விளையாடல் புரிந்த கதை ஒன்றா இரண்டா? பாண்டி நாட்டில் மதுரையிலே சுந்தர பாண்டியனாக வந்து அரசாண்டான். சோழ நாட்டிலே திருவாரூரில் அரசாண்டான். ஐராவதம் ஏறாமல் ஆனேற்றின் மேல் ஏறி வந்தான். அமரர் நாட்டை ஆளாமல் ஆரூரை ஆண்டான். அவன் ஆனை போன்றவன்; ஐராவதம் போன்றவன்; அருளாகிய மதம் பொங்க அன்பர்களைக் காக்க எழுந்தருள்பவன்.

அயிரா வணம்ஏறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிரா வணமேஎன் அம்மானே.

(அயிராவணம் - ஐராவதம்; யானை. சிவபெருமான் ஏறும் யானைக்கும் அயிராவணம் என்ற பெயர் உண்டு. அதற்கு இரண்டாயிரம் கொம்புகள் உண்டென்பர்.)

★

கருணைமிக்க இறைவன் இவ்வுலகுக்கு எழுந்தருளி வந்தும் யாவரும் அவன் பெருமையை உணர்வதில்லை. அவர்கள்மேல் இறைவனுடைய அருட்பார்வை விழுவதில்லை. தன்னை நினைந்து இரங்கும் குழந்தையினிடம் தாயின் அன்புப் பார்வை விழுவதைப் போல, இறைவன் தன்னையே நம்பி வாழ்கிறவர்களிடம் தன் அருட்கண் பார்வையைச் செலுத்து வான். நல்லவர்கள் என்று சொல்கிறவர்கள் அவர்களே. அவனுடைய அருட்கண் பார்வையைப் பெறாதவர்கள்

நல்லவர்கள் அல்லாதார். அவர்கள் இப்பிறவியைப் பெற்றும் பயன் பெறாதவர்கள்; மனிதராக இருந்தும் மனிதர் அல்லாதாரே.

...............நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே.

(அல்லாதார் - நல்லவர் அல்லாதார்; மனிதர் அல்லாதார்.)

இறைவன் அமரரைப் பார்ப்பதுண்டு; ஆயினும் அருட் கண்ணால் நோக்குவதில்லை. அவர்கள் அல்லாதார். ஆதலின் அமரர்நாடு ஆள்வதிலே இறைவனுக்கு விருப்பம் இல்லை.

உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி
உயிர்ஆ வணம்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரொடு ஒட்டி வாழ்தி;
அயிரா வணம்ஏறாது ஆனேறு ஏறி
அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிரா வணமே, என் அம்மா னே,உன்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே.

(உணரப்படுவார் - உணர்வார். படு என்ற சொல்லுக்குப் பொருள் இல்லை. போகப்பட்டகாலத்தில், ராமனாகப்பட்டவன் என்பவற்றிற் போலப் படு என்ற சொல் ஒரு பொருளுமின்றி வந்தது. ஒட்டி - வேறுபாடின்றி ஒன்றுபட்டு. வாழ்தி - வாழ்கிறாய். ஆனேறு - இடபம். அம்மானே - தலைவனே.)

★

'இறைவனை யார் ஒருமைப்பாட்டுடன் தியானித்துத் தாரணை செய்கிறார்களோ அவர்களோடு இறைவன் இரண்டறக் கலந்துவிடுவான். அத்தகையவர்கள் இங்கே இருப்பதால் இவ்வுலகத்தில் ஆரூருக்கு எழுந்தருளினான். அவன் அருட் பார்வை பெறுபவரே நல்லோர்; ஏனையோர் அல்லாதார்' என்று பாடினார் அப்பர்.

இது ஆறாம் திருமுறையில் 25-ஆம் பதிகத்தின் முதற்பாட்டு.

★

ஐந்து வஞ்சகர்

இன்பமும் துன்பமும் பிறரால் வருகின்றன என்று எண்ணிப் பிறரிடம் உறவும் நட்பும் பாராட்டி வாழ்கிறோம்; வெறுப்பு விருப்புகளைக் கொள்கிறோம். உண்மையில் நமக்குப் பகையாக ஐந்து பேர்கள் நம்முடன் இருக்கிறார்கள். அவர் களுடைய வசத்திலே அடிமைப்பட்டு நாம் வாழ்கின்றோம். நம்மை ஐந்து பேரும் ஐந்து விதமாகப் பற்றி அலைத்துத் துன்புறுத்துகிறார்கள். ஐந்து பேரும் ஐந்து வேறு தொழில்களை உடையவர்கள். ஒரு பேர்வழி பொருள்களின் நிறம் வடிவம் என்பவற்றை அறிவதில் வல்லவன். காட்சி முழுவதும் அவன் கையில் அடங்கியிருக்கிறது. ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யலாம் என்று நாம் நினைத்தால் எதையாவது ஒன்றைக் காட்டி அந்தக் காட்சியிலே நம்மை மயங்கப் பண்ணி நம்முடைய காரியம் நடவாமல் தடைசெய்துவிடுகிறான். பலவகை ஒலிகளையும் இசையையும் பேச்சையும் தெரிந்து உணர்த்தும் மற்றொருவன் இருக்கிறான். அவனோ ஏதாவது இனிய ஒலியோ பேச்சோ இருக்கும் இடத்துக்கு நம்மை இழுத்துச சென்றுவிடுகிறான். சந்தனம், மலர், ஊதுவத்தி முதலிய மணம் நிறைந்த பொருள்களைக் காட்டி அவற்றில் மயங்கி விழும்படி பண்ணுகிறான் மற்றொருவன். ஆறு வகையான சுவையுடைய பண்டங்களைத் தனக்குப் படையாகக் கொண்டு வெற்றி கொள்கிறான் பின்னும் ஒருவன். மெத்தென்ற பஞ்சணை, இனிய தென்றல், மெல்லியல்புடைய மங்கை என்றெல்லாம் ஆசை காட்டி அழைக்கிறான் ஒருவன்.

இப்படியாக ஐந்து பேரும் நம்மிடம் மூண்டு வருகின்ற ஐந்து வேறு தொழில்களை உடையவர்கள். அவர்களைப் பார்த்தால் சாதுக்களைப் போல, ஊமைகளைப்போல, இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் நடைபெறும் வஞ்சகச் செயல்களை என்னவென்று சொல்வது!

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒவ்வொரு கணமும் இந்த வஞ்சகர்களை மகிழ்விக்கும் காரியத்திலேயே ஈடுபட்டிருக்கிறான். உடன் வாழ்ந்து கெடுக்கும் அகப்பகைவர் இந்த ஐவரும்.

உலகம் முழுவதும் இவர்கள் ஓடுகிறார்கள். நம்மை ஓடச் செய்கிறார்கள். ஆயிரம் மைல் கடந்து சென்று அங்கே உள்ள காற்றை நுகரச் செய்கிறான் ஒருவன். பல நூறு மைல் கடந்து அங்குள்ள உணவை உண்ணச் செய்கிறான் ஒருவன். மற்றவர் களும் இப்படித்தான் செய்கிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுடைய செயலையும் அலசிப் பார்த்தால் இந்த ஐந்து பேர்களின் தூண்டுதலால் செய்யும் செயலாகவே முடியும். இது எப்போதோ நடைபெறுகிற செயல் அன்று. ஒவ்வொரு நாளும் இதுதான் நடக்கிறது. இந்த ஐந்து பேர்களுடைய அதிகாரமே உலகம் முழுவதும் நடை பெறுகிறது. எந்த ஊரானாலும் எந்தக் காலமானாலும் இந்த வஞ்ச முகரிகள் ஐவருடைய பிடிப்பிலே அடங்காத மனிதரே இல்லை; உயிரே இல்லை. இவர்களால் அலைப்புண்டதனால் உயிர்கள் மீட்டும் மீட்டும் உலகில் பிறந்து மறுபடியும் இந்த வஞ்சகர்களுடைய ஆணைக்கு அடங்கி வாழும்படி ஆகி விடுகிறது.

''உம்முடைய அதிகாரம் நம்மிடம் செல்லாது'' என்று சொல்லும் தைரியம் யாருக்கும் இல்லை. முதலில், அவர்களின் ஆணையினால் நாம் மயங்கி நிற்கிறோம்; அவர்களுடைய அதிகாரம் மயக்க நெறியிலே நம்மைச் செலுத்துகிறது என்று தெரிந்துகொள்பவரே இல்லையே!

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஐந்து பேருடைய ஆணைக்கும் அஞ்சாதவர்கள். அவர்களில் ஒருவர் திருநாவுக்கரசர். அவர் இந்த ஐவரையும் நோக்கி, ''வஞ்ச முகரிகளே, உம்முடைய அதிகாரம் என்னிடத்தில் பலிக்காது'' என்று அறைகூவுகிறார்.

''எப்போதும் உயிர்களிடத்தில் சூழ்ந்து செய்யும் தொழில் களையுடைய ஐந்து இந்திரியங்களாகிய வஞ்சகத்தையுடைய ஊமைகளே! உம்முடைய வஞ்சகச் செயலை நான் நன்கு

அறிந்துகொண்டேன். உயிரைச் சூழ்ந்துகொண்டு நீங்கள் செய்யும் தீங்குகளுக்கு நான் அஞ்சேன். இவ்வுலகு முழுதும் ஓடி நாள்தோறும் மயக்கத்தைத் தரும் அதிகாரத்தை நடத்து கின்றீர்; இனி அந்த அதிகாரம் நடக்காது'' என்று அவர் பேசுகிறார்.

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள்! முழுவதும்இவ் வுலகை ஓடி
நாள்வாயும் நும்முடைய மம்மர் ஆணை
நடாத்துகின்றீர்க்கு அமையாதே.

(உயிர்களிடத்தில் சென்று பொருந்துதலையுடைய தொழில் களையுடைய ஐந்து இந்திரியங்களாகிய வஞ்சக ஊமைகளே! இவ்வுலக முழுவதிலும் ஓடிச் சென்று எல்லா உயிர்களிடத்தும் ஒவ்வொரு நாளிலும் நும்முடைய மயக்கத்தைத் தரும் அதிகாரத்தை நடத்துகின்ற உங்களுக்கு, அந்த ஆணை என்னிடத்தில் நடத்தப் பொருந்தாது.

மூள்வ ஆய - மூளுதல் அமைந்த. முகரி - ஊமை. உலகை - உலகில்; உருபு மயக்கம். நாள் வாயும் - ஒவ்வொரு நாளிலும். மம்மர் - மயக்கம். ஆணை - அதிகாரம். அமையாது - பொருந்தாது. உங்கள் அதிகாரம் இனி நடக்காது என்றபடி.)

★

தம்முடைய அதிகாரத்தை மீறுவாரும் மறுப்பாரும் இன்றி ஆட்சி செலுத்திய அந்த ஐந்து பேருக்கும் ஆச்சரியம் உண்டாகிவிட்டது. 'இதென்ன வேடிக்கை! உலகம் முழுவதும் நம்முடைய ஆணை நடக்கிறதென்று இவன் தெரிந்து கொண்டிருக்கிறான். நம்முடைய வலிமையை அறிந்தும் இவன் மிரட்டுகிறானே; இவன் யாராயிருக்கலாம்?'' என்ற சிந்தனை பிறந்தது. ''நீர் யார் ஐயா?'' என்ற கேள்வி உடனே அவர்களிட மிருந்து எழுந்தது.

''என்னையா கேட்கிறீர்கள்? உலகமெல்லாம் உம்முடைய ஆணையை நீங்கள் நடத்துகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டதோடு அதற்கு மேலும் தெரிந்து கொண்டவன் யான். எல்லா உலகங்களையும் தாங்கிப் பாதுகாக்கும் உண்மையான அதிகாரம் யாருக்கு இருக்கிறதோ அந்தப் பெருமானை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன்'' என்றார் அப்பர்.

''வானோர்கள் எல்லாம் எங்கள் ஆணைக்கு அடங்கி வாழும்போது நீர் யார் ஐயா சிறு மனிதர், இப்படிப் பேசுகிறீரே?''

''ஆம்; வானவர்கள் உங்கள் மயக்கத்தில் வீழ்ந்திருக் கலாம். ஆனால் உண்மையில் அவர்களுக்கும் ஆதாரமாக நிற்கிற்வன் ஒருவன் இருக்கிறான். வானோர்கள் வாழும் தேவலோகமே அந்தப் பெருமானால் நிற்கிறது. அவன்தான் நெடுந்தூணைப் போல அமரருலகத்தைத் தாங்குகிறான். இந்திரன் அல்ல; முப்பத்து மூன்று தேவர்களும் அல்ல.''

வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணை.

(வானோர்களுக்குரிய உயர்ந்த தேவலோகமாகிய வீட்டின் முகட்டைத் தாங்கி ஆதாரமாக நின்ற உயர்ந்த தூண் போன்றவனை.

வானம் - அமரருலகம். முகடு - உச்சி. முகடு அதனை; அது, பகுதிப் பொருள் விகுதி; அதற்குத் தனியே ஒரு பொருள் இல்லை.)

''இது மாத்திரமா? கீழுலகங்களுக்கெல்லாம் உள்ளே கருவாகி மூலமாகி வேராகி இருந்து பாதுகாக்கும் பெருமானும் அவன்தான்.''

பாதாளக் கருவை.

(பாதாள உலகத்துக்கு மூலமாக நின்ற பொருளை. பாதாளம் என்றது கீழுலகம் அனைத்தையும் குறித்தது. கரு - மூலமான பொருள்.)

''வானவர்களைத் தாங்கும் தூணாக இருக்கட்டும்; பாதாளத்தின் கருவாக இருக்கட்டும்; இந்தப் பூவுலகில் வாழும் உமக்கும் அவனுக்கும் என்ன ஐயா தொடர்பு? வானோர் களையும் நீர் கண்டதில்லை; பாதாளத்தையும் கண்டதில்லை. உம்முடைய கண் காண இந்த உலகத்தில் வாழ்பவர் எல்லாம் எங்கள் வசப்பட்டு நிற்பதை நீர் தினந்தோறும் பார்க்கிறீர். இங்கே எங்கள் அதிகாரத்தை நடத்த யார் தடையாக இருக்க முடியும்?'' என்ற கேள்வி பிறந்தது.

''வானோருக்குத் தூணாகவும் பாதாளத்தாருக்குக் கருவாகவும் இருப்பதை நான் நேரே அறிந்ததில்லை. பிறர் சொல்லத்தான் கேட்டிருக்கிறேன். ஆனால் இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் எனக்குக் கண்கூடாக ஒன்று தெரியும். இவ்வுலகமெல்லாம் அந்தப் பெருமானுடைய ஆட்சிக்கு அடங்கி நிற்பது என்பதை அறிந்து கொண்டேன். திருவாரூரிலே இருந்து தன் அருளாணையாலே எல்லாவற்றையும் ஆளும் உண்மையான பிரபுவைத் தெரிந்து கொண்டபிறகு நான் சும்மா இருப்பேனோ? மிக மிக வேகமாக அவனை அடையப் புறப்பட்டுவிட்டேன். விரைவில் அவனை அடைந்தே விடுவேன். அவன்தான் எனக்குப் பற்றுக்கோடு என்று உணர்ந்து கொண்ட என்னிடம் உங்கள் தொழில் ஒன்றும் பலிக்காது. உம்முடைய ஆணைக்கு அடிமையாகி அலைய மாட்டேன். நீங்கள் வையாளிவிட்டு ஓடி என்னை அலைக்க முடியாது. இனி இந்தப் பக்கமே வராதீர்கள்'' என்று உறுதியுடன் பேசுகிறார் அப்பர் சுவாமிகள்.

ஆரூர்

ஆள்வானைக் கடுகச்சென்று அடைவேன்; நும்மால்
ஆட்டுணேன்; ஓட்டந்துஈங்கு அலையேன்மின்னே.

[*திருவாரூரில் இருந்து ஆட்சிபுரியும் தியாகராஜப்பெருமானை விரையச் சென்று (யான்) அடைவேன். ஆதலின் உம்மால் அலைக்கப்படமாட்டேன்; நீங்கள் வீணே இங்கே ஓடி என்னை அலைத்தலை ஒழியுங்கள்.*

கடுக - விரைய. ஆட்டுண்ணுதல் - அலைப்புண்ணுதல். ஓட்டந்து - ஓடி. ஈங்கு என்றது தன்மையிடத்தைக் குறித்து நின்றது. அலையேன்மின் - அலைக்காதிருங்கள்.]

★

இறைவனுடைய துணையைப் பெறும்வரையில் இந்திரிய வசப்பட்டு மயங்கித் திரிவதே உயிர்களின் கதியாக இருக்கும். இறைவனுடைய அருள் துணையைப் பெற்று விட்டால் அப்பால் அவ்விந்திரியங்களின் வசமாக நாம் இருப்பது போய் அவை நம் வசமாகிவிடும். அந்த நிலையைத் தான் பொறியவித்த புனித நிலை என்றும் ஜிதேந்திரியத்துவம் என்றும் பெரியோர் கூறுவர். 'பொறிவாயில் ஐந்தவித்த'

புங்கவராகிய திருநாவுக்கரசர் எத்தனை உறுதிப்பாட்டோடும் இறைவன்பால் நம்பிக்கையோடும் பேசுகிறார்!

மூள்வாயை தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள்! முழுதும் இவ் வுலகை ஓடி
நாள்வாயும் நும்முடைய மம்மர் ஆணை
நடாத்துகின்றீர்க்கு அமையாதே; யானேல், வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானைக் கடுகச்சென்று அடைவேன் நும்மால்
ஆட்டுணேன்; ஓட்டநந்தீங்கு அலையேன் மின்னே.

(யானேல், தூணை, கருவை, ஆள்வானை அடைவேன்; ஆட்டுணேன்; அலையேன்மின் என்று கூட்டுக. யானேல்: ஏல், அசை நிலை.)

இப்பாசுரம் ஆறாம் திருமுறையில் 27-ஆம் திருப் பதிகத்தில் ஒன்பதாம் பாட்டு.

★

இடர் கெடும் வழி

வயிற்றுவலி வந்து துடிக்கிறவர்களைக் கண்டிருக்கிறீர்களா? தெருவெல்லாம் கேட்கும்படி அலறி அழும் வண்ணம் அந்த வலி அவர்களைத் துன்புறுத்தும். வெறும் தலைவலி வந்தால்கூட, ''அம்மா, அப்பா'' என்று எத்தனை தடவை சொல்லிவிடுகிறோம்! நோய் வந்தவர்கள் முனகுவார்கள்; அந்த நோயின் கடுமை அதிகம் ஆக ஆக முனகலோடு நிற்கமாட்டார்கள்; வாய்விட்டு அரற்றுவார்கள்; புலம்புவார்கள்; அலறுவார்கள். இது மனிதர்களுக்கு இயல்பு.

குழந்தை தன் தாயைக் காணாவிட்டால் அழும். நேரம் அதிகம் ஆக ஆக யார் என்ன சமாதானம் சொன்னாலும் கேளாமல் கதறி அரற்றும்.

நாம் இந்த இருவகை நிலையிலும் இருக்கிறோம். நோய்களுக்குள் பெரிய நோயாகிய பிறவிப் பிணியினால் நலிவு பெறுகிறோம். என்றைக்கும் எவ்விடத்தும் நமக்குத் தாயாக இருந்து அருள் புரியும் இறைவனைக் காண முடியாமல் இருக்கிறோம். ஆனால் நாம் அரற்றுவதில்லை; அழுவதில்லை; முனகுவதுகூடக் கிடையாது.

நமக்கு நம்முடைய நோயினால் உண்டாகும் துன்பம் இன்னும் உறைக்கவில்லை. அதனால், ''பிறவி வேதனையைத் தாங்க முடியவில்லையே!'' என்று அழத் தெரியவில்லை. கை கால் குறையோ, உடம்பில் நோயோ உடைய பிச்சைக்காரன் அந்த நோயையே தனக்கு ஜீவனத்துக்குரிய கருவியாகக் கொண்டு, அதைக் காட்டிப் பிச்சை வாங்குகிறான். அதைப்போலவே இந்தப் பிறவி நோயினிடையே நாம் வாழ்ந்து வருகிறோம்; அழாமல் புலம்பாமல் வாழ்கிறோம். இந்த வேதனையை யார் தீர்ப்பார்கள்?

இறைவன் நம்முடைய தாய் என்ற உணர்ச்சியே இல்லை. அதனால் அவனைப் பிரிந்து வாழ்வதனால் என்ன என்ன இன்பங்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன என்ற எண்ணமும் உண்டாவதில்லை.

இந்த இரு வகையினாலும் நமக்குத் துன்பங்கள் பெருகுகின்றன. பிறந்து பிறந்து செத்துச் செத்து இடர்களிலே மூழ்கி வருந்துகிறோம். அந்த இடர் தீரவேண்டுமானால் நாம் பெற்றுள்ள தீரா நோயின் வேதனை உறைக்க வேண்டும்; உறைத்து அலறவேண்டும். நாம் தாயைக் கைவிட்ட குழந்தைகளாக இருக்கிறோமே என்ற துயரம் உறைக்கவேண்டும். அதனால், ''அம்மா, அம்மா!'' என்று அரற்றவேண்டும். அப்போதுதான் நோய் தீரும் வழி புலப்படும். நம்முடைய தாய் நம்மை அணைக்க ஓடி வருவாள்.

இந்த உண்மையைத் தம்முடைய நெஞ்சுக்குக் கூறுபவரைப் போலத் திருநாவுக்கரசு நாயனார் நமக்கு அறிவுறுத்துகிறார்.

நெஞ்சைப் பார்த்து, ''நெஞ்சமே, உனக்கு உண்டாகியிருக்கும் இடர்களெல்லாம் கெடவேண்டுமானால் இங்கே வா; ஒன்று சொல்கிறேன் கேள்; நீ அலறவேண்டும்; நமக்கெல்லாம் தாயாகிய இறைவனை நினைந்து அலறவேண்டும்'' என்று அவர் சொல்கிறார்.

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே! நீவா;

....

அலறா நில்லே

என்று சொல்கிறார்.

எம்பெருமானை நினைந்து அலறக்கூட நமக்குத் தெரியாது. நம்முடைய வேதனைகளைச் சொல்லத் தெரியும். அவற்றையும் முழுமையாகச் சொல்லத் தெரியாது. யாரிடம் முறையிட்டுக் கொள்ள எண்ணுகிறோமோ, அந்த இறைவனை எப்படி அழைக்க அலறுவது? இது நமக்குத் தெரியாது. இதை அப்பர் சுவாமிகள் சொல்லித்தருகிறார்.

''நெஞ்சே, நீ வா'' என்று தொடங்கினவர், இறைவனைப் பற்றிச் சொல்கிறார். ''அதோ பார் இறைவனை. அவனுடைய

திருமுடியிலே உள்ள சடை தெரிகிறதா? செஞ்சடையாகிய அது ஒளி விடுகிறது. அதில் நிலவும் இருப்பதால் ஒளி சேர்ந்த சடையாக இருக்கிறது. ஒளியென்ற மாத்திரத்தில் சூரியனைத் தானே நீ நினைக்கிறாய்? சூரியனிடம் ஒளியிருப்பது போலவே வெப்பமும் இருக்கிறது. அப்படி இந்தச் சடை சிவப்பாகத் தழல்போல் ஒளிவிடுவதால் இதிலும் வெப்பம் இருக்குமென்று அஞ்சாதே. இது தன்னிடத்திலே தண்மையை யுடைய கங்கையைத் தரித்த சடை. இறைவனுடைய புனிதத் தன்மையினால் புனிதமான கங்கை அது. உலகத்தில் மலப்பிணிப்பினால் மாசு ஏறிய உனக்கு இந்தப் புனிதன் அருள் கிடைத்தால் அந்த மாசெல்லாம் போய்விடும். ஆகையால் இந்தப் பெருமான் பெயரைச் சொல்லி அழைத்து அலறுவாயாக! நிறைந்த ஒளி சேர்ந்ததும் கங்கையை உடையதுமாகிய சடையையுடைய பெருமானே என்று கூவிப் போற்றுவாயாக!'' என்கிறார்.

ஈண்டுஒளிசேர் கங்கைச் சடையாய் என்றும்.

(நெருங்கிய ஒளி சேர்ந்த, கங்கையை அணிந்த சடையை யுடையவனே என்றும். அலறா நில்லே என்று முடிக்கப் போகிறார். ஈண்டுதல்-தொகுதல்; கூடுதல்.)

★

''இருள் நிரம்பிய உலகில் உன் பார்வையில் ஒளி இல்லை. சூரியன் ஒளிதர நீ பார்க்கும் பார்வை புறப்பார்வை. காணும் காட்சியளவிலே ஒரு பொருளைத் தெரிந்து கொண்டதாக எண்ணி ஏமாறுகிறாய். புறத்தே ஒளி இருந்தும் அகத்தே இருள் படர்ந்தமையால் பொருள்களை உள்ளவாறு அறியாத மயக்கம் உன்பால் இருக்கிறது. அந்த இடர்கெடுமாறு நீ எண்ணினால் அகத்தே உள்ள இருளைப் போக்கும் சுடரை நாடவேண்டும். இறைவன் சுடருகின்ற ஒளிப்பிழம்பாக, அகத்தே விளங்கும் சோதியாக நிற்பவன். அவனைக் கூவினால் அகவிருள் கெடும்; உண்முகப் பார்வையினால் பொருள்களின் உண்மையை உணரலாம்.''

சுடர்ஒளியாய் உள்விளக்கு சோதீ என்றும்.

(சுடர்கின்ற ஒளியாகி உள்ளத்தினுள்ளே விளங்கும் சோதியே என்று கூறியும்.)

''பொய்யான பொருள்களை யெல்லாம் மெய்யான பொருள்களாக எண்ணி மயங்குகிறாய் நீ. இந்த இடர்கெட வேண்டுமானால் எந்தப் பெருமானைக் கண்ட மாத்திரத்திலே நிலைமை புலப்படுமோ, அவனிடத்தில் முறையிட்டுக் கொள்ள வேண்டும். சிவபிரான் தன்னுடைய திருமேனியில் தூய வெண்ணீற்றை அணிந்திருக்கிறான். அந்த நீறு உலகம் நிலையாதது என்பதைக் காட்டுகின்றது. நீறணிந்த திருத்தோளா என்று அவனை அழைத்து அரற்ற வேண்டும்.''

தூநீறு சேர்ந்துஇலங்கு தோளா என்றும்.

(தூய திருநீறு சேர்ந்து விளங்குகின்ற திருத்தோள்களை உடையவனே என்று சொல்லியும்.)

★

''**ந**ம்முடைய இடர்கெடும்படி புகல் புகவேண்டுமானால் எந்த இடருக்கும் அஞ்சாத ஒருவனிடம் புகவேண்டும். நாம் ஒரு துன்பம் வரும்போது ஒருவனை அடைகிறோம். அவன் பின்னும் பெரிய துன்பம் வரும்போது வேறு ஒருவனை அடைபவனாக இருந்தால், நமக்குப் பயன் இல்லை. அமரரிடம் புகல் புகுவோம் என்றால் அவர்களும் அஞ்சி நடுங்கும்படி இடர்வந்த காலத்தில் அவர்கள் ஒருவனிடம் புகல் புகுந்தார்கள். அமுதத்தின் பொருட்டுத் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால நஞ்சு எழுந்தது. அதற்கு அஞ்சி அரற்றினார்கள். சிவபெருமான் அந்தக் கடல் விடத்தை எடுத்து நுகர்ந்தான். அதனுடைய காற்றுப் பட்டாலே பலர் இறந்து படுவார்கள். அத்தகைய நஞ்சை, இறைவன் அமரர்களைக் காக்கவேண்டும் என்ற கருணையால் எடுத்து நுகர்ந்தான். அதைத் தன் திருக்கழுத்திலே தங்கும்படி வைத்தான். அவனுடைய கண்டத்தில் இன்னும் அந்த நஞ்சு இருக்கிறது; அதனால் இறைவன் இருண்ட கண்டனாக, நீலமிடற்றுப் பெருமானாகக் காட்சியளிக்கிறான். ஆற்றலால் பெரியவர்களுக்கு வந்த இடரையே நீக்கும் பெருமான் அவன்; அவனைச் சரணடைந்தால் நின் இடர் போகும் என்று எடுத்துச் சொல்லவா வேண்டும்?''

கடல்விடமது உண்டு இருண்ட கண்டா என்றும்.

(பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டு கருநிறம் பெற்ற திருக்கழுத்தை உடையவனே என்று கூறியும்.

கடல்-பாற்கடல். விடமது: அது பகுதிப் பொருள் விகுதி. கண்டம்-கழுத்து.)

★

அவன் தன் கையில் மான்கன்றை ஏந்தியிருக்கிறான். மான் எப்போதும் துள்ளிக் குதிப்பது; எதைக் கண்டாலும் மருள்வது. அதைக் கையில் தாங்கி அதன் ஓட்டத்தையும் மருட்சியையும் மாற்றித் தன் திருக்கரத்திலே நிலையாக் இருக்கும்படி செய்திருக்கிறான். நெஞ்சமே, நீயும் எப்போதும் ஓரிடத்தில் நில்லாமல் உழன்று சுழன்று அதனால் இடர்ப் படுகிறாய். யார் யாரையோ கண்டு மருளுகிறாய். இந்த அலைச்சலையும் மருட்சியையும் அவன் போக்கிவிடுவான். அவனை நினைந்து நீ முறையிடு.''

கலைமான் மறிஏந்து கையா என்றும்.

(ஆண் மான்கன்றை ஏந்தியிருக்கும் திருக்கரத்தை உடையவனே என்று சொல்லியும்.)

★

தன்னை யார் யார் அழைக்கிறார்களோ அவர் களிடத்தில் போய் அருள் புரிய ஆயத்தமாக இருக்கிறான் அவன். தர்மத்தையே இடபமாக்கி அதன்மேல் ஏறி வருபவன் அவன். நினைத்த இடங்களுக்குப் போகத்தானே வாகனம் வேண்டும்? இறைவன் அன்பர்கள் அலறி அழைக்கின்ற இடங்களுக்குப் போகும் பொருட்டே இடபத்தை வாகனமாகக் கொண்டிருக்கிறான்.

''எத்தனையோ விதமான இன்ப நுகர்ச்சிகளை இவ் வுலகிலே நீ பெற்றிருப்பாய். ஆனால் அந்த இன்பங்கள் யாவும் இறுதியில் மரணத்திலே கொண்டுபோய் விடுகின்ற சிற்றின் பங்களே; குளிர்ந்து கொல்லும் நஞ்சைப் போன்றவை. இறைவனோ அமுதம் போன்றவன்; தெவிட்டாது இனிக்கும் அமுதம் அவன்; மரணமில்லாப் பெருவாழ்வை நல்கும் அமுதம் அவனைப்போல வேறு யாரும் இல்லை. அவன்தான் எல்லோருக்கும் ஆதி. ஆதலின் அவனை நினைந்து புலம்பு.''

அடல்விடையாய் ஆரமுதே ஆதீ என்றும்.

(ஆற்றலையுடைய இடபவாகனத்தை யுடையவனே, தெவிட்டாத அமுதம் போன்றவனே, எப்பொருளுக்கும் மூலகர்ரணமான முதற் பொருளே என்று கூறியும்.)

★

''இப்படி இருக்கும் பெருமான் தன்னை உலகில் உள்ளவர் மறவாமல் இருக்கும்படி அவ்வப்போது சில இடங்களில் அருள்விளையாட்டை நடத்தினான். அவற்றை மக்கள் நினைத்து வழிபடும்பொருட்டுத் திருக்கோயில்களை அன்பர்கள் நிறுவ, அவற்றில் திவ்யமங்கள மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கிறான். திருவாரூரில் தியாகேசனாகக் கோயில் கொண்டிருக்கிறான். ஆரூரா என்று சொல்லிச் சொல்லி நீ அலறிக்கொண்டிரு. உன் இடர்கள் கெடும்.''

ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

(திருவாரூரில் எழுந்தருளியிருப்பவனே என்று சொல்லிச் சொல்லி அலறி நிற்பாயாக, அலறா நில் என்றது இடைவிடாது புலம்புவாயாக என்ற பொருளையுடையது. என்று என்றே. அலறா-அலறி.)

'கங்காதரா, சடாதரா, சோதீ, நீறு பூசிய நின்மலா, நீலகண்டா, மிருக பாணி, இடப வாகனா, அமுதமே, ஆதியே, ஆரூரா' என்று இடைவிடாது புலம்பினால் இடர்கெடும் என்று உபதேசிக்கிறார் வாகீசர்.

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா;
ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடர்ஒளியாய் உள்விளங்கு சோதீ என்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்
கடல்விடமது உண்டுஇருண்ட கண்டா என்றும்
கலைமான் மறிஏந்து கையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

(நெஞ்சே, எண்ணுதியேல் வா; என்றும் என்றும் என்றும்... என்றென்றே அலறா நில் என்க. என்றென்றும் என்பது என்றென்று என நின்றது; விகாரம்.)

இது முப்பத்தோராம் பதிகத்தில் உள்ள முதற்பாட்டு.

புண்ணியனைக் கண்டேன்

திருவையாற்றுக்கு அருகில் திருப்பூந்துருத்தி என்ற தலம் இருக்கிறது. திருவையாற்றில் நடைபெறும் சப்த ஸ்தான உற்சவத்தில் கலந்துகொள்ளும் ஏழு மூர்த்திகளில் திருப்பூந் துருத்தியில் எழுந்தருளியிருக்கும் பெருமானும் ஒருவர். அத்தலத்தில் திருநாவுக்கரசருக்கு ஈடுபாடு மிகுதியாக உண்டு. அங்கே அவர் ஒரு திருமடம் அமைத்துக்கொண்டு பலகாலம் தங்கி இறைவனைப் பல பதிகங்களால் துதித்து வழிபட்டார்.*

திருப்பூந்துருத்திக்கு முதலில் வந்து திருக்கோயிலுக்குள் சென்றார். அவருடைய உள்ளத்தே அன்பு பொங்கியது. உணர்ச்சி விஞ்சியது. 'நேர்ந்த பரிவொடுந் தாழ்ந்து நிறைந் தொழியா அன்பு பொங்க, வார்ந்த கண்ணீர் மழை தூங்க அயர்வுறுந் தன்மையர் ஆனார்.'

உணர்ச்சி பொங்கும் பொழுது மனமுருகிக் கவிபாடும் வாகீசர் இறைவனைக் கண்ட பேரானந்தத்தை ஒரு திருத்தாண்டகத்தால் வெளியிடத் தொடங்கினார். ''திருப்பூந் துருத்தியில் நான் கண்டேன்'' என்று பெருமிதத்தோடு பாடினார். ''என்னை ஆட்கொண்டு, என்னுடைய மனத்தைப் பக்குவப்படுத்தி மெய்யான அருளின்ப அநுபவத்தை வழங்கிய பெருமானைக் கண்டேன்'' என்று ஆராமை மீதூரப் பத்துப் பாடல்களைப் பாடினார். முதற் பாசுரத்தை இங்கே பார்க்கலாம்.

★

நாவுக்கரசர் பேசுகிறார்:

என் மனம் காற்றாய்ச் சுழன்று பேயாய் அலைந்தது. அது பற்றாத பொருள் இல்லை; பற்றி ஒரு கணம் நின்ற இடமும்

---

*பெரிய புராணம், திருநாவுக்கரசர் புராணம், 388-390

இல்லை. ஒரு கணம் பற்றியதை மறுகணம் பற்றாமல், ஓரிடத்தில் நில்லாமல் அலைந்து திரிவதையே தன் இயல்பாகக் கொண்ட இந்த மனத்தை நிறுத்துவதென்பது என் ஆற்றலுக்குள் அடங்கியதாக இல்லை. அது போன வழியெல்லாம் நான் போயக் கொண்டிருந்தேன். அதனால் நான் கண்டது துன்பந்தான்.

இத்தகைய பேய்மனம் நின்றது. ஒன்றையே பற்றி நின்றது. இறைவனுடைய தியானத்திலே ஒன்றி நின்றது. அவனை நினைக்கும் நிலை என் நெஞ்சுக்கு உண்டாயிற்று. அந்த நிலையை அது தன் முயற்சியாற் பெறவில்லை. அது முன்பு என்றும் நினையாத நெஞ்சு ஆயிற்றே. நானும் முயன்றிலேன். இறைவனே தன் கருணைமிகுதியால் என் நெஞ்சை வழிப்படுத்தித் தன்னை நினைக்கச் செய்தான். **நினையா என் நெஞ்சை நினைவித்தான்.**

இந்த நிலையை நான் பெற்றபோது எனக்கே வியப்பாக இருந்தது. இதை எப்படி இறைவன் நிறுத்தினான் என்று ஆராய்ந்தேன். அவனுக்கு இதைப்போன்ற செயல்களே விளையாட்டாக இருக்கின்றன என்று உணர்ந்தேன். ஓரிடத்தில் நில்லாமல் ஓடி அலை கொந்தளிக்கப் பாய்ந்து வந்த கங்கையைத் தன் சடையிலே நிற்கச் செய்தான். ''என்னைத் தாங்குவார் யார்?'' என்று அது கொந்தளித்து வந்தது. அப்போது அதனைத் தன் சடையின்மேல் அடங்கி நிற்கும்படி செய்தான். **நில்லாத நீரைச் சடையின்மேல் நிற்பித்த** பெருமானாதலினால் நினையா என் நெஞ்சை நினைவித்தான்.

எப்போதும் திரிந்து உழன்ற மனத்தைத் தன் அருளால் நிறுத்தித் தன்னை நினைக்கச் செய்த அந்தப் பெருமானை நான் **பூந்துருத்தியில் கண்டேன்.**

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாஎன் நெஞ்சை நினைவித் தானை
....
பூந்துருத்திக் கண்டேன் நானே.

★

அவனை நினைக்கப் பண்ணியதனால் என்ன பயன்? எங்கும் சென்ற மனம் ஓரிடத்தில் நின்று இறைவனை நினைப்பது வியப்பான செயல்தான். அந்த வியப்பு ஒன்றுதான் கண்ட பயனா? அப்பர் சுவாமிகள் மேலே சொல்வதைக் கேட்போம்;

நான் எத்தனையோ கற்றேன். சமய நூல்களைக் கற்றேன். சமண நூல்களைக் கற்றுப் பலரும் வியக்கும் புலமை யுடையவனாக விளங்கினேன். இலக்கிய இலக்கணங்களையும் கற்றுத்தேர்ந்தேன். என் மனம் அலைந்திருந்த காலத்தில் அந்த அலைச்சலை அடக்கி அமைதிபெற வழிதெரியாமல் ஏதேதோ கற்றேன். ஆனால் நானாகக் கற்ற அப்போது உண்மையில் நான் ஒன்றும் கற்கவில்லை. என் மனத்தை நிறுத்தித் தன்னை நினைக்கச் செய்தானே, அப்போது நான் புதிதாக ஏதும் கற்க முயலவில்லை. ஆனால் அப்போதுதான் முன்பு கல்லாத கல்வியை யெல்லாம் கற்றுக் கொண்டேன். என் முயற்சி யின்றியே தன் கருணை மிகுதியால் எனக்கு அநுபவத்தின் மூலமாகக் கற்பித்தான். அதுகாறும் நான் கற்ற கல்வி பயனில்லாத கல்வியாக ஒழியக் கல்லாத கல்வியைக் கற்பித்து இன்புறுத்தினான் இறைவன். அவனை அல்லவா நான் பூந்துருத்தியில் கண்டு உருகிப் போனேன்?

கல்லா தனஎல்லாம் கற்பித் தானை...
பூந்துருத்திக் கண்டேன் நானே.

★

'மனம் நின்றது. அவனை நினைந்தது; கல்லாத கல்வியைக் கற்றேன்' என்ற அளவில் நின்றால் சருகு அரித்தபடிதானே ஆகிறது? இவைகளெல்லாம் சாத்தியநிலை அல்லவே? சாதனந்தானே? என்ன லாபம் கைமேல் கிடைத்தது?

இப்படிக் கேட்டுப் பார்க்கலாம். அப்பர் கூறும் விடையை இப்போது கேட்கலாம்:

ஆம், அவன் அருளே கற்பிக்க நான் கல்லாதன வெல்லாம் தெரிந்து கொண்டேன். அதற்குமேல் இதற்குமுன் அறியாத இன்பத்தை யெல்லாம் கண்டு கொண்டேன். அமைதி

பெறாத மனத்தை வைத்துக்கொண்டு கல்வி யென்னும் காட்டில் உழன்று திரிந்து மேலும் மேலும் கவலைக்கு ஆளாகி அநுபவத்தில் ஒன்றையும் காணாமல் நூலறிவோடு நின்ற எனக்குக் கல்லாக் கல்வியாலே வரும் வாலறிவைத் தந்தான்: அதன் பயனாகிய இன்ப அநுபவத்தைத் காட்டினான். காணாத இன்பங்களைக் காட்டி யருளினான். பூந்துருத்தியில் அத்தகைய அருட்கடலையே கண்டேன்.

காணா தனவெல்லாம் காட்டி னானை... ...
பூந்துருத்திக் கண்டேன் நானே.

★

இன்னும் என்ன அநுபவம் கிடைத்தது? - இந்தக் கேள்விக்கு நாவுக்கரசர் விடை கூறுகிறார்:

அவன் என்னோடு பேசினான். நானும் நீங்களும் பேசுவது போன்ற பேச்சா அது? சொல்லின் அளவைக் கடந்த இன்பச் சுழலிலே என் தனி நாயனாகிய ஐயனுடைய பேச்சு, பேசாத பேச்சு அல்லவா? அங்கே மற்ற யாரும் சொல்ல முடியாதவற்றைச் சொன்னான்; என்னை உணர வைத்தான். வாய் படைத்தார் சொல்லும் சொற்கூட்டத்துக்குள் அடங்காத சொல்லை அவன் சொன்னான்; சொல்லாமற் சொன்னான்.

அப்படிச் சொன்னதை நான் முதலில் கவனிக்கவில்லை. காது கேட்க, வாயாலே சொல்வதைக் கேட்டுக் கேட்டுப் பழகிய எனக்கு அவன் பாஷை புரியவில்லை, ஆனாலும் அவன் என்னை விடவில்லை. என்னைத் தொடர்ந்து வந்தான்; சொல்லாதன வெல்லாம் சொன்னான்.* அடியேனை ஆட்கொண்டான்.

அவனுக்கு ஆளாகிய அப்பொழுதே என் நோய் கழன்றது. மணிமந்திர ஔஷதங்களால் தீராத பொல்லாத நோய் அது. அதைத் தீர்த்தான் புனிதனாகிய எம்பெருமான்.

---

*''சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி'' என்பர் தாயுமானவர்.

அவன் மாசற்றவன்; தூயவன்; புனிதன். என் மாசை அறுத்து நோய் நீக்கிய பெருமான். பாவத்தால் துன்புற்று அலையும் என்போலியரை ஆட்கொண்டு இன்பூட்டும் புண்ணியன் அவன். அந்தப் புண்ணிய மூர்த்தியைத்தான் நான் திருப்பூந்துருத்தியிற் கண்டேன்.

சொல்லா தனஎல்லாம் சொல்லி என்னைத்
தொடர்ந்திங்கு அடியேனை ஆளாக் கொண்டு
பொல்லாஎன் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

★

'இறைவன்பால் மனம் ஒன்றி அவனை எப்போதும் நினைக்கும் திருவுடையாருக்கு உயிருக்குள் இன்பம் ஊட்டுகின்ற கல்வியும் காட்சியும் கிடைக்கும், எங்கும் பரந்து நிறைந்துள்ள இறைவன் அவர் தம் உள்ளத்துள்ளே இருந்து யாவற்றையும் குறிப்பாற் புலப்படுத்துவான். தன்னை உண்மையன்போடு பற்றினவரை அவன் என்றும் பிரியாமல் அருள்புரிந்து அவர்களுடைய இடர்களைப் போக்கியருள்வான்' என்ற கருத்துக்களை நாவுக்கரசர் இப்பாடலால் புலப்பட வைக்கிறார்.

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாஎன் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனஎல்லாம் கற்பித் தானைக்
காணா தனஎல்லாம் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாம் சொல்லி என்னைத்
தொடர்ந்திங் கடியேனை ஆளாக் கொண்டு
பொல்லாஎன் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

(நில்லாத நீர் - கங்கை. நினைவித்தானை - நினைக்கும்படி செய்தவனை. புனிதனை - தூயவனை.)

இந்த அருமைப் பாசுரத்தோடு மாணிக்கவாசகப் பெருமான் அருளிய பின்வரும் திருப்பாட்டும் ஒப்பு நோக்கு தற்கு உரியது.

கேட்டுஆரும் அறியாதான், கேடொன் றில்லான்,
　　கிளைஇலான், கேளாதே யாவும் கேட்டான்,
நாட்டார்கள் விழித்திருக்க ஞாலத் துள்ளே
　　நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனஎல்லாம் காட்டிப் பின்னர்க்
　　கேளா தனஎல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்;
　　எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே!

(திருச்சதகம்)

முன் உள்ள நாவுக்கரசர் பாசுரம் ஆறாம் திருமுறையில் 43-ஆம் பதிகத்தில் முதற்பாட்டாக அமைந்திருக்கிறது.

★

ஊழ்வினை வந்தால் என்ன?

உடம்பில் கடுமையான நோய் வந்து மருத்துவரிடம் காட்டுகிறார் ஒருவர். மருத்துவர் 'ஆபரேஷன்' செய்ய வேண்டும் என்று சொல்கிறார். கருவிகளால் கீறியும் அறுத்தும் தைத்தும் மருத்துவர்கள் 'ஆபரேஷன்' செய்கிறார்கள். அந்தச் சிகிச்சையைச் செய்யும்போது நோயாளிக்குத் துன்பம் தெரியாத படி மயக்க மருந்து கொடுத்துவிடுகிறார்கள். இப்போதெல்லாம் எந்தப் பகுதியிலே சஸ்திர சிகிச்சை செய்யவேண்டுமோ, அந்தப் பகுதி முழுவதும் உணர்ச்சி இல்லாமல் மரத்துப் போகும்படி ஊசியினால் ஒரு மருந்தை முதலில் ஏற்றுகிறார்கள்.

புண்ணைக் கீறும்பொழுதும் அறுக்கும் பொழுதும் இரத்தம் வெளியில் வருகிறது. ஆனால் நோயாளிக்கு அப்போது வேதனை தெரிவதில்லை. நோயாளி உயிரோடு இருக்கும் போதே அவன் உடலில் உள்ள உறுப்புக்களை அறுக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது உண்டாகும் வலி உறைக்காதபடி மயக்க மருந்து செய்துவிடுகிறது.

உலகில் பிறந்தவர்கள் யாவரும் ஊழினால் இயக்கப் படுகிறார்கள். ஊழ்வினை எப்படியாவது தன் வலிமையைக் காட்டிவிடும். அதை மாற்றவே முடியாது. ஆனால் அதனால் உண்டாகும் துன்பங்களை உணர முடியாத நிலையைப் பெறலாம். கருவிகளால் அறுக்கும்போது நோயாளியின் உடம்பில் இரத்தம் வந்தாலும் அவன் வேதனையை உணராமல் இருப்பது போல், அந்த நிலையில் ஊழின் விளைவு நிகழ்ந்தாலும் அந்த விளைவினால் துன்பம் உறாமல் இருக்கலாம்.

நோயாளிக்கு மரக்க அடிக்கும் மருந்து உதவுவது போல, அறிவுள்ள மக்களுக்கு இறைவன் திருவருள் உதவுகிறது. ''ஐயோ! தலைவிதியே!'' என்று துன்பம் வருவதற்கு முன்பிருந்தே மனம் நைந்து வருந்தத் தொடங்கும் பேதையரைப்

போலன்றி, வருவது வரட்டும் என்று தைரியத்தோடு இருந்து, இறைவனுடைய திருவடி நினைவோடு வாழ்பவர்களுக்கு ஊழினால் உண்டாகும் துன்பங்கள் உறைப்பதில்லை. மற்றவர் களெல்லாம் ஊழ்வினைக்கு அஞ்சுவார்கள். இறைவனுடைய மெய்யன்பர்கள் அஞ்சுவது இல்லை. அன்பர்களுக்கு ஊழ்வினை இல்லை என்று கொள்ளக் கூடாது. ஊழ்வினை வந்து ஊட்டுவதினின்றும் தப்புவார் யாரும் இல்லை. கத்தி மேலே பட்டுக் காயம் உண்டானால் துடித்துப் போகிற மனிதன், மருத்துவர் அறுக்கும்போது வேதனை தெரியாமற் கிடக்கிறான். அவ்வாறே அருள் பெறாதபோது சிறிய இன்னலையெல்லாம் கண்டு அஞ்சுபவனே இறைவன்பால் அன்புடையவனாகி அவனருளைப் பெற்றுவிட்டால், எது வந்தாலும் அஞ்சாமல் வேதனை உறாமல் வாழ்வான்.

அத்தகைய அன்பர்கள், ''ஊழ்வினை வந்து அடைந்தால் என்ன? அதற்கு நான் அஞ்சேன்'' என்று சொல்வார்கள்.

இத்தகைய நிலையை அடைந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

''சுவாமி, ஊழ்வினைக்கு நீங்கள் அஞ்சமாட்டீர்களா?''

''மாட்டேன். இந்த உலகில் யான் வாழுமளவும் ஊழ்வினை வந்தடையும் என்பதை அறிவேன். வந்தால் என்ன? எனக்கு அதுபற்றிக் கவலை இல்லை.''

சூழ்உலகில் ஊழ்வினைவந்து உற்றால் என்னே?

''உங்களுக்கு அத்தகைய தைரியம் வரக் காரணம் என்ன?''

''எனக்குத் துன்பம் என்பதே இல்லை. இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை.''

''எங்களுக்கு உள்ள துன்பங்களுக்கு அளவே இல்லையே! உங்களுக்குத் துன்பம் இல்லாமல் இருக்க என்ன செய்தீர்கள்?''

''நானும் உங்களைப் போலத் துன்பங்களால் அலைப் புண்டவன்தான். எத்தனைதான் துன்பத்தைப் போக்க வேண்டு மென்று முயன்றாலும் அவை என்னை விட்டு நீங்காமலே இருந்தன. அப்படித் துறவாமல் இருந்த துன்பங்களை நான்

துறந்துவிட்டேன். இந்த நிலையில் ஊழ்வினை வந்து உற்றால் எனக்கு ஒரு துன்பமும் வராது.''

''எப்படித் துன்பத்தைத் துறந்தீர்கள்? அதனை ஓட்டுவதற்கு என்ன படை உங்களுக்குக் கிடைத்தது?''

''துன்பத்தை நோக்கி நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் துன்பமே இல்லாத இன்ப மயமான இறைவனை வழிபட்டேன். அவனிடம் அன்பு முறுக முறுக இந்தத் துன்பம் கழன்று போயிற்று.''

''இறைவனை வழிபடும் வழி யாது?''

''நாள்தோறும் நீரில் மூழ்கி நறுமலர் கொய்து இறைவன் திருவடியைப் பூசித்து வாழ்த்தி அன்பு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் நம் உள்ளம் இறைவன் நினைவிலே தோய்ந்துவிடும். துன்பத்தை உணராத நிலைவரும்.''

''இறைவனை வழிபட்டால் துன்பத்தை நீங்கி நிற்கும் நிலை எங்களுக்கு வருமா? எந்தத் துன்பமானாலும் நீங்குமா?''

''தன்னிடம் யார் வந்து வேண்டினாலும் வாழ்த்தினாலும் அவர்களுடைய துன்பத்தை நீக்கும் தர்மமூர்த்தி அவன். இறைவனுடைய பெருமையை உள்ளபடி உணராதவர்கள் வானவர்கள். ஆனாலும் கடலில் நஞ்சு எழுந்தபோது அவர்கள் யாவரும் உறவாகி ஓடிவந்து வேண்டிக்கொண்டார்கள். அப்போது இறைவன் கருணை பூண்டு அந்த நஞ்சை உண்டு உய்யக்கொண்டான். அமரர்களுடைய துன்பத்தையே நீக்கின அறப்பெருஞ் செல்வனுக்கு நம்முடைய துன்பம் எம்மாத்திரம்? அவனை அடைந்தால் அவன் அஞ்சேல் என்று குறிப்பிப்பான். அவன் திருக்கோலத்தைக் கண்டால் அஞ்சேல் என்ற கரத்தை உடையவன் என்பது தெரியும்.''

''அப்படிக் கோலம் கொண்டு இறைவன் எழுந்தருளி யிருப்பான் என்றால் நாங்களும் அவனை அடைந்து நீரில் மூழ்கி மலர் கொய்து இட்டுக் கழலை வாழ்த்தலாமே. அவன் இருக்கும் இடம் எது?''

''அவன் இல்லாத இடமே இல்லை. ஆயினும் புறக் கண்ணால் கண்டு வழிபடுவதற்கு ஏற்றபடி தேவர்களைக்

காக்கும் தலைவனாகிய அவன் இந்த மண்ணுலகத்திலும் கரசரணாதி அவயங்களையுடைய திவ்விய மங்கள மூர்த்தியாகி, வழிபடுபவார்க்கு அருள் சுரக்கிறான்.''

''மண்ணுலகில் அவனுடைய திவ்விய மங்கள மூர்த்தத்தை எங்கே காணலாம்?''

''திருக்கோயில் தோறும் காணலாம். சோழ நாட்டில் உள்ள திருவாவடுதுறையிலே அமரர் ஏறாகிய அவனைக் கண்டு தரிசித்தேன். நீங்களும் தரிசியுங்கள். அஞ்சேல் என்று அருள்வாயாக என்று வேண்டிக் கொண்டு நான் தரிசித்தேன்.''

அப்பர் சுவாமிகள் இப்படியெல்லாம் வினாவுக்கு விடை கூறவில்லை. ஆனால் இத்தகைய வினாக்கள் எழுமானால், அவற்றிக்குத் தக்க விடைகளை அவர் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் பெருமானை நோக்கிப் பாடிய பாசுரம் சொல்கிறது.

நறுமா மலர்கொய்து நீரில் மூழ்கி
நாள்தோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந்து உற்றால் என்னே?
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரை நீர்க் கடல்நஞ்சுண்டு உய்யக் கொண்ட
அறவா! அடியேனை அஞ்சல் என்னாய்,
ஆவடுதண் டுறைஉறையும் அமரர் ஏறே!

(மணம் வீசும் பெரிய மலர்களைக் கொய்து நீரிலே மூழ்கித் தினந்தோறும் நின்னுடைய திருவடிகளையே துதிசெய்து வாழ்த்தி, அதனால் அதுகாறும் நீங்காத துன்பங்களையெல்லாம் விட்டொழிந்த என்னை இப்போது யாவரும் வினைகளைச் செய்யும் இவ்வுலகில் ஊழ்வினை வந்து அடைந்தால் எனக்கு உண்டாகும் துன்பம் என்ன? தேவர்கள் இறைவனிடத்தில் உறவுடையவராய் அனைவரும் வந்து வேண்ட, ஒலிக்கின்ற அலைகளையுடைய நீர் நிரம்பிய கடலில் எழுந்த நஞ்சை உண்டு அவர்களை உயிர் பிழைக்குமாறு செய்தருளிய அறமே உருவான அண்ணலே! அடியேனை அஞ்சாதே என்று சொல்வாயாக; திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் தேவர்கள் தலைவனே!

மா - பெருமை, அளவினாலன்றி மணத்தாலும் அழகாலும் உண்டான பெருமை. நீரில் மூழ்கி மலர் கொய்து என்று மாற்றிக்

கொள்ளவேண்டும். கழல் - வீர கண்டை; இங்கே அதை அணிந்த திருவடியைக் குறித்தது; ஆகுபெயர். ஏத்துதல் - ஒன்றன் சிறப்பை எடுத்துரைத்தல். வாழ்த்துதல் - வாழ்க என்று கூறுதல். துறவாத - முன்பு என்னை விட்டு நீங்காத. துறந்தேன் - விட்டொழித்தேன். சூழ்தல் - செய்தல்; சுற்றுதல் என்றும் கொள்ளலாம். என்னே - எனக்கு வரும் துன்பம் என்ன? எனக்கு என்ன கவலை என்றும் சொல்லலாம். உறவு - நட்பு. தேவர்கள் சில சமயங்களில் இறைவனுடைய பெருமையை எண்ணாமல் தக்கனுடைய யாகத்துக்குச் சென்றது போல் சில செயல்களை செய்து பகையாவதும் உண்டாதலால், உறவாகி என்றார். வானவர்கள் தனித்தனியே வந்து தங்கள் தங்கள் துன்பங்கள் போகும்படி வேண்டிக் கொள்வதுண்டு. ஆனால் இப்போது அனைவரும் வந்து வேண்டினார்களாதலின், 'முற்றும் வேண்ட' என்றார்.

அமுதம் கடைந்தது உப்புக்கடலில் என்பது ஒரு மரபு. ஆதலின் 'ஒலி திரை நீர்க்கடல் நஞ்சுண்டு' என்றார். ''அப்புறுத்த கடல்நஞ்சம் உண்டான் தன்னை'' என்று அப்பரும், ''காரூர் கடல் விடமுண்டு'' என்று சுந்தரரும், ''தாழி தரையாகத் தண்டயிர் நீராகத் தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ, ஆழி கடைந்தமுதம் எங்களுக்கே ஈந்தாய்'' (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம், 29) என்று கம்பரும் கூறுவது காண்க.

துன்பம் துறந்தேன் என்று சொன்னாலும் அந்த நிலையினால் செருக்கு அடையாது பின்னும் பணிவு பூண்டவராகி இறைவனை நோக்கி இரக்கின்றாராதலின் 'அடியேனை அஞ்சேல் என்னாய்' என்றார். ஆவடுதுறை, சோழ நாட்டில் காவிரிக்குத் தென் கரையில் உள்ளது; அம்பிகையின் பசு உருவை இறைவன் நீக்கிய தலமாதலின் ஆ அடுதுறை என்ற பெயர் பெற்றது. ஏறு - ஆண்சிங்கம்; இங்கே தலைவன் என்பதைக் குறிக்க வந்தது.)

இந்தப் பாடல் ஆறாம் திருமுறையில் 47-ஆம் பதிகத்தில் ஐந்தாவதாக உள்ளது.

★

கவிதா சமாதி

கவிதையைப் பாடுவதற்குப் பிறவியிலேயே அமைந்த ஆற்றல் வேண்டும் என்று அறிஞர்கள் சொல்வார்கள். புலமை உடையவர்கள் யாவருமே கவித்துவம் உடையவர்களாக இருக்க முடியாது. பழங்காலத்தில் கவித்துவம் உடையவர்களையே புலவர் என்று சொல்வது வழக்கம்.

கவியை நுகர்வதற்கும் தனிப் பண்பு வேண்டும். கவிதை வாழ்வதற்கு இன்றியமையாதவர்கள் அதை நுகர்பவர்களே. கவிஞர்களை ஊக்கம் கொள்வதும், மேன்மேலும் கவிமழை பொழிவதும் கவிதையை நுகர்பவர்கள் அளிக்கும் ஆதரவைப் பொறுத்தே அமையும்.

சொல் இல்லாமல் கவிதை இல்லை. ஆனாலும் கவிதை வெறும் சொற்குவியல் ஆகாது. கல்லைக் குவித்திருக்கிற இடத்தை நாம் பார்க்கிறோம். அந்தக் குவியலில் உள்ள கற்களே கோயில் ஆகின்றன. ஆனால் அவற்றை வெறும் குவியலாகக் கொட்டின அளவில் கோயில் உண்டாகி விடாது. அந்தக் கற்களையே சிற்பி ஒருவன் தன்னுடைய கற்பனையினால் அமைக்கும் முறையில் அமைத்துக் கட்டினால் கோயில் உருவாகிறது. கற்குவியலைப் பார்க்கும் கண்ணோடு கோயிலைப் பார்த்தால் அதன் அருமை தெரியாது. இத்தனை கற்களை அடுக்கியிருக்கிறான் என்றா அந்தக் கோயிலுக்குப் பெருமை கூறுவது? வெறும் கல்லை மாத்திரம் பார்க்கிறவர் களுக்குச் சிற்பியின் உண்மைத் திறமை தெரியவே தெரியாது.

இவ்வாறே கவிதையில் உள்ள சொற்களை மாத்திரம் பார்த்து மகிழ்பவன் கவிதையை நுகர்ந்தவன் ஆகமாட்டான். சொற்களின் குவியலைக் கண்டு மகிழ்வதுதான் கவிதை நுகர்ச்சியாகும் என்றால் வேறு வேறு காவியங்களைப் படிக்க

வேண்டாம். ஓர் அகராதியை வாங்கி வைத்துக்கொண்டு புரட்டலாம். எல்லாக் காவியத்திலும் உள்ள சொற்கள் யாவும் அகராதியில் இருக்கின்றன. அதனால் எல்லாக் காவியங் களையும் படிப்பதனால் உண்டாகும் இன்பம் அகராதி ஒன்றைப் படிப்பதனால் உண்டாகிவிடும் என்று சொல்லலாமா? அகராதியில் சொற்கள் இருக்கின்றன. ஆனால் கவிதை இல்லை.

சொற்களின் கட்டுக் கோப்பைக் கவிதையிலே காண் கிறோம். கல்லையெல்லாம் சேர்த்து ஒரு கட்டிட உருவமாக்கிக் கோயிலை அமைக்கிறான் சிற்பி. அதுபோலச் சொற்களைக் கூட்டி இணைக்கும் வகையில் இணைத்துக் கவிதையைத் தருகிறான் கவிஞன். ஆகவே சொற்கள் சேர்ந்து ஓர் உருவத்தைப் பெற்று நின்றால் கவிதையாகிவிடும் என்று சொல்லலாமா? அதுவும் அன்று.

கற்களையெல்லாம் இணைத்துக் கட்டிடமாகக் கட்டிவிட்டால் கோயில் ஆகிவிடாது; அதற்குள் கடவுளின் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். அப்போதுதான் அது கோயில் ஆகும். தனித் தனியே உடம்பின் அவயவங் களைத் துண்டாகப் போட்டிருந்தால்--அந்தக் குவியல் மனிதனாகாது. உறுப்புக்கள் அந்த அந்த இடத்தில் அமைந்து எல்லாம் இணைந்து நிற்கவேண்டும். அப்படி இணைந்து நின்றாலும் அந்த இணைப்பை உடம்பு என்று சொல்லலாமே ஒழிய மனிதன் என்று சொல்ல இயலாது. பிணத்தில் அங்கங்கள் அந்த அந்த இடத்தில் இருக்கின்றன; எல்லாம் இணைந் திருக்கின்றன. ஆனாலும் பிணம் மனிதன் ஆவதில்லை; அதற்கு உயிர் இல்லை.

அப்படியே வெறும் சொற்கூட்டம் கவிதை ஆகாது; உருவத்தோடு இணைந்த சொற்களும் கவிதையாகா. முன்னையது வெறும் சொற்குவியல்; பின்னையது செய்யுள்; அதாவது ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சொற்களின் கோவை. அந்தச் சொற்கோவைக்குப் பொருள் உண்டு. உரை நடையில் சொற்கள் தொடர்ந்து ஒரு பொருளைத் தருவதுபோல அந்தச் சொற்கோவையும் ஒரு பொருளைத் தரலாம். 'நான் பாட்டுக் கட்டினேன்' என்று சிலர் சொல்வதைக் கேட்டிருக் கலாம். அப்படிக் கட்டின சொற்கோவை அது. அதைக் கட்டிய

செய்யுள் என்று சொல்லலாம்; பாடிய பாட்டு என்றோ கவிதை என்றோ சொல்ல ஒண்ணாது.

பின்னே கவிதை என்பது என்ன? கவிதையின் உயிர் எங்கே இருக்கிறது? கவிதைக்குச் சொற்கள் வேண்டும்; சொல் இல்லாமல் கவிதை இல்லை. ஆனால் சொல்லளவிலே கவிதை நிற்பதில்லை. சொற்களின் கட்டுக்கோப்பாகிய உருவம் கவிதைக்கு இன்றியமையாதது; ஆனால் அந்த உருவத்தளவிலே கவிதை நின்றுவிடுவதில்லை. அதற்கு மேலே கவிஞன் தன் உள்ளத்தே தோன்றிய உணர்ச்சியைக் கவிதையிற் புலப்படுத்து கிறான். அதுதான் கவிதைக்கு உயிர். சொல்லும், சொல்லை இணைக்கும் திறமையும் படிப்பினாலே ஒருவனுக்குக் கிடைக்கலாம். ஆனால் உணர்ச்சிக்கு உருவங்கொடுத்துச் சொல்லில் வடிக்கும் ஆற்றல் கவிஞன் ஒருவனுக்குத்தான் கிடைக்கும். அது வெறும் புலமையினாலே வருவதன்று. கருவிலே அருள் உடையாருக்குத்தான் வரும்.

கோயிலுக்குச் செல்பவன் அதில் உள்ள கற்களையும் கட்டிட விசேஷத்தையும் கண்டு மகிழ்ந்து வந்தால் அவனைக் கோயிலுக்குப் போய்வந்தான் என்று நாம் எண்ணமாட்டோம். கட்டிடத்தை மேற்பார்வையிடுபவன் என்றுதான் சொல்வோம். கட்டிடக் கலையின் இலக்கணம் தெரிந்தவனாக இருந்தாலும் கூடக் கோயிலை வெறும் கட்டிடமாகப் பார்த்தவன் கோயிலைப் பார்த்தவன் ஆகமாட்டான். கோயிலை நன்றாகப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் உள்ளே புகுந்து அங்கே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியைத் தரிசித்தவனே கோயிலுக்குப் போனவன் என்று சொல்லும் தகுதியுடையவன். அவன்கூடப் பக்தன் ஆக மாட்டான். கோயிலுக்குப் போவதனால் உண்டாகும் பயனை நன்கு பெற்றவனே பக்தன். கடவுளைத் தரிசனம் செய்து அந்த மூர்த்தியின் தத்துவத்தை உணர்ந்து உணர்ச்சி விஞ்சிக் கண்ணீர் ஆறாகப் பொழியத் தன்னை மறக்கிறவனே கோயிலுக்குச் சென்றதன் முழுப் பயனையும் பெற்றவன் ஆவான்.

சுந்தரமூர்த்தி நாயனார் நடராஜப் பெருமானைத் தரிசித்த போது அவருக்கு உண்டான அநுபவத்தைச் சேக்கிழார் சொல்கிறார்.

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

கோயிலுக்குச் சென்று வருபவர்களில் இந்த நிலையில் இருந்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்பவர் எவ்வளவு பேர்? கோயிலில் சென்று தரிசிக்கும் முறையில் தரிசித்தால் இந்த மகிழ்ச்சியை யாவரும் அடையலாம் என்பதில் சந்தேகம் இல்லை. சென்று தரிசிப்பவனுடைய உள்ளத்தில் ஒருவகைப் பசி வேண்டும். அப்போது அவனுக்கு இறைவனுடைய மூர்த்தி தரிசனம் முழுப் பயனையும் கொடுக்கும்.

கவிதையை நுகர்வதிலும் இப்படி உச்சமான நிலை ஒன்று உண்டு. சொல்லை மாத்திரம் பார்த்து நிற்பதில் பயனில்லை; சொல்லுக்கு அப்பால் அதன் பொருளை உணர வேண்டும். பொருளைத் தெரிந்துகொள்ளும் அளவோடு நின்றால் போதாது; அதற்கும் அப்பாலே உள்ள கருத்தையும் உணர்ச்சியையும் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துகொண்டால்கூடக் கவிதையின் முழு இன்பத்தையும் அடைந்தவர்கள் ஆக மாட்டார்கள். அறியும் நிலை என்பது ஒன்று; உணரும் நிலை என்பது ஒன்று; நுகரும் நிலை என்பது ஒன்று. சொல்லிலே பரவிய பொருளைச் சிக்கறத் தெரிந்துகொள்வது அறியும் நிலை; சொல்லிலே பரவும் பொருளைத் தெரிந்துகொண்டு அதற்கு அப்பாலுள்ள தூய உணர்ச்சியை உணர்வது உணரும் நிலை; அந்த உணர்ச்சியைத் தெரிந்துகொண்டதன் விளைவாகத் தானும் அந்த உணர்ச்சியைச் சொந்த அநுபவத்திலே தேக்கும் நிலையே நுகரும் நிலை. அப்போது கவிதையை நுகர்பவன் அந்தக் கவிதையைப் பாடிய கவிஞன் எந்த அநுபவத்தில் நின்று பாடினானோ அந்த அநுபவத்தில் நிற்பான். பாடுவதற்கு முன் கவிஞன்பால் இருந்த அந்த அநுபவ நிறைவு அந்தப் பாட்டை உணர்ந்ததற்குப் பின் அவனிடம் உண்டாகிறது. அநுபவ

நிறைவில் எழுந்தது பாட்டு; அந்தப் பாட்டே அநுபவ நிறைவை உண்டாக்குகிறது. மரத்தில் விளைந்தது வித்து; அந்த வித்தே மரத்தை உண்டாக்குகிறது.

இந்தக் கவிதையநுபவம் உள்ளப் பண்புடையவர் களிடந்தான் உண்டாகும்; ஒருமைப்பாடும், உணரவேண்டும் என்ற பசியும், பரிவும் உடையவர்களிடந்தான் உண்டாகும். கவிதையை நுகர்ந்த இன்பத்தைப் பொறுத்தவரையில் கவிஞனே ஆகிவிடு கிறான் ரசிகன்; அநுபவத்தில் இருவரும் ஒத்து நிற்கிறார்கள். கவிதையிலுள்ள சொல்லும் பொருளும் எங்கோ அடித்தளத்தில் நின்று விடுகின்றன. அவற்றைத் தாண்டிய உச்சி மாடியிலே, அவற்றையெல்லாம் அஸ்திவாரமாகப் போட்டு மறைத்த உப்பரிகையிலே, இன்பத் தென்றலை நுகர்கிறான் ரசிகன்.

அந்த நிலையில் சொல்லை மறக்கிறான்; பொருளை மறக்கிறான்; பாடிய கவிகளை மறக்கிறான்; தன்னையே மறந்து விடுகிறான். தன்னை மறந்துபோகும் நிலைக்குத்தான் தூக்கம் என்று பெயர். தியானசமாதியிலே ஆழ்ந்தவரைப் போல, அஷ்டாங்க யோகம் செய்து ஒருமுகப்பட்டவரைப் போல, இந்தக் கவிதாநுபவ சமாதியிலே அவன் ஒன்றி விடுகிறான்.

அவன் உள்ளத்திலே அப்போது அமுது கொப்புளிக்கிறது. ஒளி பொங்குகிறது. இறைவனே நடனமிடுகிறான். இயற்கை யாக உள்ள இருள் இருக்குமிடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விடுகிறது.

இறைவன் கவிதா சமாதியில் ஆழ்கிறவனுடைய உள்ளத்திலே இருளே இல்லாமல் வாங்கிவிடுகிறான். நல்ல கவிதைகளையே தனக்குக் கோயிலாய்க் கொண்டவன் இறைவன். அழகிய பொருள்களெல்லாம் தானாக நிற்பவன் அவன். தம்மை மறப்பவரிடம் நான் என்று வந்து விளையாடு பவன் அவன். ஆகையால் கவிதையாகிய கலைப்படைப்பில் ஆழ்ந்து தம்மை மறப்பவரிடம் அவன் விளையாடுகிறான். அவர்கள் உள்ளத்தை ஒளி நிலையமாக்கி விடுகிறான்.

இதை எதிர்மறை முகத்தால் அப்பர் சுவாமிகள் சொல்கிறார்.

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்துஇருளை வாங்கா தானை.

(சொல்லிலே பரவியிருக்கும் பொருளை அறிந்து அதனூடே உள்ள தூய உணர்ச்சியை உணர்ந்து அதனால் விளையும் அநுபவத்திலே நின்று தம்மை மறந்து தூங்காதவர்களின் மனத்தில் உள்ள அறியாமையாகிய இருளை வாங்காதவனை.

பாவும்-பரவியிருக்கும். தூய்மை என்றது இங்கே உணர்ச்சியை. இருள்-அறியாமை. வாங்குதல்-நீக்குதல்.)

சொல்லியே பரவிய பொருளைத் தெரிவது அறிவு நிலை; உணர்ச்சியாகிய தூய்மையை நோக்குவது உணர்ச்சி நிலை; தூங்குவது நுகரும் நிலை.

இப்படி எதிர்மறையாகச் சொன்னாலும், 'சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்குவார் மனத்திருளை வாங்குவானை' என்ற கருத்தும் இதற்குள்ளே புதைந்து நிற்கின்றது. இருளை வாங்குவான் என்றாலும், ஒளியை நிறைப்பான் என்றாலும் ஒன்றுதான். நல்ல கவிதையிலே ஒன்றுபட்டு இன்பம் துய்க்கும் உள்ளம் இறைவன் திருவருளை ஏற்றுக்கொள்ளும் தூய்மையை உடையது என்ற கருத்தும் இதனால் பெறப்படும்.

★

சோழநாட்டில் கீழ்வேளூர் என்னும் தலத்துப் பெருமானைப் பாடப் புகுந்த அப்பர் உள்ளத்தில் கவிதா சமாதியைப் பற்றிய சிந்தனைகள் தோன்றின. அந்தச் சமாதியிலே ஒன்றினவர் அப்பர். முந்தையோர் கவிகளையும் அவற்றில் இறைவன் திறம் பேசும் மணியனைய கவிகளையும் கற்றுத் தேர்ந்து அவற்றில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்துத் தம்மை மறந்து நின்றவர். அதனால் அந்த இன்பத்தை அவர் சொல்லலானார்.

இளமையிலிருந்தே சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்கும் நிலை அவருக்கு வாய்க்கவில்லை. அதனால் இறைவனும் அவருடைய மனத்தில் இருந்த இருளை

வாங்கவில்லை. அறிவுமிடுக்கினால் சொல்லும் பொருளுமாகிய எல்லைக்குள்ளே நின்று வாதமிட்டு வெல்லும் பேராற்றல் இருந்தது. ஆனால் பல கற்றும் தூய்மை நோக்கித் தூங்காமலே இருந்தார் அவர். நல்ல பான்மை இது, தீய பான்மை இது என்று அறியாதபடி வாழ்ந்தார். இறைவன் அவரை ஆட் கொண்டான். நல்ல பான்மையை அறிந்து நல்ல நெறியிலே செல்லும் வண்ணம் அருள் பாலித்தான். அதனால் கவிதா சமாதி அவருக்குக் கைகூடியது. இதை நன்றியறிவோடு நினைக்கிறார் அப்பர்.

நற்பான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானை.

(நல்ல பகுதிகளை அறியாத நாய் போன்ற என்னை நல்ல நெறியிலே போகும்படி அருள் வழங்கியவனை.

பான்மை-குணமும் ஆம். பிறர் தீயது என்று கழித்தவற்றில் உள்ளம் செல்லுவதால் நாயினேன் என்று கூறினார். தான் வாந்தி பண்ணியதை மீட்டும் உண்ணும் இழிந்த இயல்பு உடையது நாய். உயிர்களும் தாம் பல் பிறவிகளில் துன்பமென்று அநுபவத்தில் உணர்ந்து வெறுத்தவற்றை மீட்டும் நாடிச் செல்லுவதால் நாயோடு ஒத்தனவாயின. நல்கினானை- கொடுத்தவனை; அருள் வழங்கினவனை.)

★

இறைவனுடைய புகழைப் பேசும் பாடல்களை நன்கு அறிந்து இன்புறுவது ஒரு வகை. அவற்றை வாயாரப் பாடி ஆடி இன்புறுவது ஒரு வகை. அன்பர்கள் இந்த இரண்டு வகைகளிலும் ஈடுபடுவார்கள். தனித்திருந்து பாடற் பொருளில் உள்ளத்தைச் செலுத்தித் தூங்குவார்கள். தொண்டர் கூட்டத்தில் இருந்தால் எல்லாரோடும் சேர்ந்து, பிறர் ஏசுவார்களே என்ற நாணத்தை விட்டு, வாயாரப் பாடி ஆடுவது அவர்கள் இயல்பு. பாரத நாட்டில் இவ்வாறு பாடும் பஜனைக் கோஷ்டிகள் இன்றும் உள்ளன. திருஞானசம்பந்தரும் வாகீசப் பெருமானும் எப்போதும் தொண்டர் கூட்டம் தம்மைச் சூழத் தலந்தோறும் சென்று சென்று எங்கும் சிவமணம் கமழச் செய்தார்கள். திருக்கூட்டத்தில் உள்ள பக்தர்கள் இறைவன் புகழைப் பாடி ஆடிக் கண்ணீர் மல்கத் தம் வசமிழந்து இன்புற்றார்கள்.

இறைவனுடைய புகழாக அன்பர்கள் பாடிய பாடல்கள் பல உண்டு. ஆதலின் பாடுவாருக்குப் பாட்டுப் பஞ்சம் இல்லை.

அன்பர்கள் பல வகையான பாடல்களையும் பாடி மெய்ம்மறந்து ஆடிக் கீழே விழுந்து எழுவார்கள். தாயைப் பிரிந்த கன்று போலப் புலம்புவார்கள். தம் குறைகளை யெல்லாம் இறைவன்முன் எடுத்துச் சொல்லிப் புலம்புவார்கள். மனம் பாகாய் உருகத் தம்மை எளியராகவும் பாவியராகவும் சொல்லி நைந்து அரற்றுவது பக்தி நிலைகளில் ஒன்று. அழுங் குழந்தையின் பசியைப் போக்கும் தாயைப்போல இறைவன் அவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்கி அருள் வழங்குவான்.

மேலும் மேலும் பாவத்தைச் செய்து சுமையாகச் சுமக்கும் இயல்பு உடையவை உயிர்கள். இறைவன் ஒருவனே அந்தப் பாவத்தைப் போக்கும் ஆற்றல் உடையவன். பாவத்தைச் செய்தவர்கள் அவற்றை உதறிவிட முயன்றாலும் போகா. உள்ளம் கரைந்து பாடியாடும் பக்குவத்தையுடைய அடியார் களிடம் உள்ள பாவங்கள் கரைந்து போகும் வண்ணம் தன் அருளாணையினாலே செய்யும் சக்திமான் இறைவன் ஒருவன் தான்.

பற்பாவும் வாயாரப் பாடி ஆடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானை.

(பலவகைப் பாக்களையும் வாய் நிரம்பப் பாடிக் கூத்தாடிக் கீழே விழுந்து பணிந்து எழுந்து, தம் குறைகளை எடுத்துச் சொல்லித் தன்னை அணுகினவர்களுடைய பாவத்தைப் போக்கும் ஆற்றலுடைய வனை.

பற்பா என்றது இறைவனைப்பற்றிய பாக்களை; தூய்மையான நினைவை உண்டாக்கும் தெய்வ மணம் கமழும் பாக்களை. பணிந்து - கீழே விழுந்து வணங்கி, குறைந்து - தம் குறைகளை எடுத்துச் சொல்லி; தம்மை மிக்க இழிந்தவர்களாகக் குறைத்துக் கூறி என்றும் சொல்லலாம். போக்ககிற்பான் - போக்கும் ஆற்றலை உடையவன். கில் என்பது ஆற்றலைக் குறிக்கும் இடைச்சொல்.)

பல பாக்களையும் தெரிந்து கொண்டிருந்தாலும் அவற்றை வெளிப்படையாகச் சொல்வதற்கு நாணம் தடையாக நிற்கும். இறைவனுடைய பெருமையையும் தம்முடைய சிறுமையையும் நன்கு உணர்ந்தவர்களுக்கு அந்த நாணம் தடையாக நில்லாது. அதிர்ந்து பேசாமல் இருக்கும் ஒரு பெண் வீட்டில் தீப் பற்றினால் தன் தொண்டை கிழியத் தீத்தீத்தீ என்று நாணத்தை விட்டுக் கதறுவதுபோல, தமக்கு அமைந்த பிறப்பு இறப்பு என்னும கடுந்துன்பங்களை உணர்ந்தவர்களுக்கு இறைவன்முன் வாயாரப் பாடுவதற்கு நாணம் உண்டாகாது. இந்த நிலை பக்தி முறுக முறுக உண்டாவது.

வாயாரப் பாடும் நிலைக்கு அடுத்தது ஆடும் நிலை. உடல் மறந்து கூத்தாடுவது அன்பர்களுக்கு இயல்பு. ஏதேனும் ஓர் உணர்ச்சி விஞ்சிவிட்டால் அது உடம்பிலே மெய்ப்பாடாகத் தோற்றும். பக்தி உணர்ச்சி விஞ்சின போது ஆடுவார்கள். ஆடியவர்கள் அவசமாகி விழுவார்கள். விழுந்து எழுந்து புலம்புவார்கள். இந்த நிலைகளை முறையாக அப்பர் சுவாமிகள் எடுத்துச் சொல்கிறார்.

★

கவிதா சமாதியிலே தூங்குகிறவர்களின் உள்ளிருளைவாங்கி ஒளியை நிரப்புபவனும், அப்பர் சுவாமிகளை ஆண்டு கொண்டவனும், வாயாரப் பாடி ஆடும் பக்தர்களின் பாவத்தைப் போக்குபவனும் ஆகிய சிவபெருமான் கீழ்வேளூர் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கிறான். மேல் திசையிலே வேறு சில வேளூர்கள் உண்டு. இது கீழ்த் திசையிலே இருப்பதால் கீழ் வேளூர் என்ற பெயரை உடையதாயிற்று. அங்கே இருந்து தன் அருளாட்சியை நடத்தும் பெருமானுக்குக் கேடிலியப்பன் என்பது திருநாமம்; அக்ஷயலிங்கம் என்பது வட மொழிப் பெயர். அவன் எக்காலத்தும் அழிவே இல்லாதவன்; கேடு இலி. அவன் தனக்கு ஒரு கேடும் இல்லாமல் இருப்பது பெரிதன்று. அவனை நாடி அடைகின்ற அன்பர்களும் கேடு இல்லாத நிலையை அடைவார்கள். காந்தத்திலே தேய்த்த இரும்பும் காந்தமாகிறது. மின்சாரக் கம்பியோடு இணைந்த வெறும் கம்பியும் மின்சாரக் கம்பி ஆகிவிடுகிறது. சிவனோடு இணைந்த சீவனும் அழியாத நிரதிசய இன்ப நிலையை

அடைகிறது. கேடிலியை நாடிச் செல்லும் அவர்களும் கேடு இல்லாதவர் ஆகிறார்கள்.

கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடும்அவர் கேடி லாரே.

(கீழ்வேளூரில் இருந்து அருளாட்சி புரியும் தலைவனை, கேடிலியப்பனை, மனத்தாலே நாடிச் சென்று அடைகின்ற அவ்வன்பர்கள் கேடு இல்லாதவராவர்.

கோ - தலைவன். கேடு என்றது பிறப்பும் இறப்பும் உடையராகி நிற்கும் நிலையை. கேடு இலார் என்றது, என்றும் அழியாத இன்ப வீட்டைப் பெற்று நிற்பர் என்றபடி.)

கவிதையிலே ஊறிநின்று அதன் வழியே இறைவன் பெருமையை உணர்வதும், கவிதையை வாயாரப் பாடியாடி இன்புறுவதும் இறைவன் அருளை நமது காணியாக்கும் காரியங்கள். அதனால்தான் சைவசமய ஆசாரியர்களும் ஆழ்வார்களும் இறைவனைப் புகழ்ந்து கவிதை வெள்ளத்தைப் பொழிந்தார்கள். அவற்றிலே ஊறின உள்ளம் அடையும் இன்பம் இறைவனுடைய அருளின் தொடர்பு உடையது; இறைவனோடு ஒன்றுபடும் பேரின்பத்துக்கு வாயிலாக உதவுவது.

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்துஇருளை வாங்கா தானை
நற்டான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானைப்
பற்பாவும் வாயாரப் பாடி ஆடிப்
பணித்துஎழுந்து குறைந்துஅடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடும்அவர் கேடி லாரே.

இந்தப் பாசுரம் ஆறாம் திருமுறையில் 67-ஆம் பதிகத்தின் இரண்டாம் பாடல்.

★

அருளாளன்

முன்னுரை

"சைவத் திருமுறைகளில் ஏழாவது சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளியது. இந்த ஏழு திருமுறைகளும் சேர்ந்து தேவாரம் என்றும், அடங்கன் முறை என்றும் வழங்கும். சுந்தரர் பாடிய ஏழாந் திருமுறையில் நூறு பதிகங்கள் உள்ளன. அவர் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்க ளென்றும், அவற்றில் செல்லால் அழிந்தவை போக எஞ்சியவையே இந்த நூறு என்றும் திருமுறை கண்ட புராணத் தால் அறிகிறோம்.''*

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயத்தில் சிவ பெருமானுடைய பிரதிபிம்பத்தினின்று தோன்றி அப் பெருமானுடைய திருத்தொண்டைப் புரிந்துவரும் ஆலால சுந்தரரின் அவதாரம் என்று பெரிய புராணம் சொல்கிறது. சுந்தரர் என்ற திருநாமம் இந்தப் பழைய நிலையைக் கருதியே வழங்குவது. அவருக்குத் தாய் தந்தையார் வைத்த திருநாமம் ஆரூரன் என்பது. அந்தப் பெயரையே அவர் பெரும்பாலும் தம்முடைய பதிகங்களின் இறுதிப் பாடல்களில் அமைத் திருக்கிறார்.

''ஆரூரனெம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.''

அதுவே ஊரன் என்றும் குறுகி வழங்கும்.

''ஊரன் உரைத்தசொல் மாலைகள் பத்திவை.''

இறைவன் முதியவர் வேடம் பூண்டு வந்தபோது வன்மை பேசியமையால் அவனே வன்றொண்டன் என்ற திருப் பெயரை வழங்கினான்

''வன்றொண்ட னாரூரன் உரைத்ததமிழ்.''

---

* *திருமுறை கண்ட புராணம், 16.*

இறைவனிடம் அன்பு செய்யும் முறைகள் பல. சுந்தரர் சிவபெருமானுடைய தோழராக அன்பு செய்தார். இந்தத் தோழமை நெறியைச் சக மார்க்கம் என்று சொல்வர். இதனால் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தம்பிரான் தோழர் என்ற திருப்பெயர் அமைந்தது. எம்பெருமானுக்கும் தமக்கும் உள்ள தோழமை உறவைச் சில இடங்களில் சுந்தரரே சொல்கிறார்.

"தோழமை அருளித் தொண்டனேன் செய்த
துரிசுகள் பொறுக்கும் நாதனை"
"என்னுடைய தோழனுமாய்
யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி"
"தூதனை என்றனை ஆள் தோழன்."

ஆதி சைவர் குலத்தில் பிறந்தமையால் நம்பி என்ற பெயர் இவருக்கு உரியதாயிற்று.

*"நாவலர்கோன் நம்பியூரன் சொன்ன
சந்தம்மிகு தண்டமிழ் மாலை."*

இதனால் பிற்காலத்தவர்கள் இவரை ஆளுடை நம்பி என்று வழங்கலாயினர்.

இறைவனுடைய தோழமை பெற்றதனால் இவர் பாடல்களில் ஏழை நண்பன் ஒருவன் செல்வனாகிய தன் நண்பனோடு பேசும் வகையில் பல இடங்கள் அமைந் திருக்கும். சில சமயங்களில் மிடுக்குடன் இன்னது வேண்டும் என்று கேட்பார்; இன்னும் சில சமயங்களில் மிக்க பணிவுடன் இரப்பார். இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பைக் கூறிப் பெருமிதம்கொள்வார்; சில இடங்களில் இறைவனைப் பரிகாசம் செய்வார். இறைவனுடைய பராமுகம் கண்டு சினம் மூண்டு பாடிய பாடல்களும் உண்டு. இவர் பாடல்களில் இவருடைய உணர்ச்சிகளோடும் வாழ்க்கையோடும் ஒட்டிய பாடல்களே மிகுதி.

சுந்தரர் தேவாரத்தில் திருத்தொண்டத் தொகை என்ற பதிகம் இருக்கிறது. சிவனடியார்களாகிய நாயன்மார்கள் பெருமையை இன்று நாம் எல்லாம் உணர்ந்து பாராட்டி உய்வதற்குரிய வழியைக் காட்டியது அத்திருப்பதிகமே. அது இல்லாவிட்டால் அறுபத்துமூவர் என்ற வரையறை இராது.

நம்பியாண்டார் நம்பி அதனை விரித்துத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். அதனைப் பின்னும் விரித்துச் சேக்கிழார் பெரிய புராணத்தை அருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நடுநாட்டில் உள்ள திரு நாவலூரில் பிறந்தவர். திருவெண்ணெய்நல்லூரில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர். சிவபெருமான் இவருக்குத் திருமணம் நிகழ விருந்த சமயத்தில் தடுத்தாட் கொண்டான். பதினெட்டு ஆண்டுகள் நிலவுலகில் இவர் வாழ்ந்தார் என்று ஒரு பழம் பாடல் தெரிவிக்கிறது. இறுதியில் இறைவன் அனுப்பிய வெள்ளை யானையின்மேல் ஊர்ந்து திருக்கைலாயம் சென்றார். ஆடி மாதம் சுவாதித் திருநாளில் இவர் கைலாயம் சேர்ந்தார் என்பர். சுந்தரமூர்த்தியார் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரென்று ஆராய்ச்சியினால் தெரிய வருகிறது.

★

சுந்தரமூர்த்தி நாயனார் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாட்டிலும் தம்முடைய பெயரை இணைத்துப் பாடுவார். இன்னதன் பொருட்டு இப் பதிகம் பாடப் பெற்றது என்ற குறிப்பையும் வைப்பது இவர் வழக்கம்.

கொல்லை வளம்புறவில் திருக்கோளிலி மேயவனை
நல்ல தரம்பரவும் திருநாவல ஊரனவன்
நெல்லிட ஆட்கள் வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைத்துலகின் அண்டர் வானுல காள்பவரே

என்பது போன்ற இறுதிச் செய்யுட்களில் இதைக் காணலாம்.

சுந்தரர் தேவாரத்தில் இந்தளம், தக்க ராகம், நட்ட ராகம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், பழம் பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்ட பாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கவுசிகம், செந்துருத்தி, பஞ்சமம் என்ற பண்களில் அமைந்த பாடல்கள் இருக்கின்றன. பல தலங்களை இவர் பாடியுள்ளார். இவர் பாடிய நூறு பதிகங்களில், மூப்பதுமில்லை, முடிப்பது கங்கை, நமக்கு அடிகளாகிய அடிகள், நம்பியென்ற பதிகம் என்ற நான்கும்

பொதுவானவை. திருத்தொண்டத்தொகை நாயன்மார்களைப் பற்றியது. திருநாட்டுத் தொகை, ஊர்த்தொகை என்னும் இரண்டும் பல தலங்களைத் தொகுத்துக் கூறும் பதிகங்கள். ஒவ்வொரு பாட்டிலும் இரண்டு தலங்களைப் பாடும் பதிகங்கள் மூன்று உள்ளன: அவை திருக்கோத்திட்டையும் திருக் கோவலூரும், திருவெண்ணெய் நல்லூரும் திருநாவலூரும், திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் என்பவை. மற்ற 90 பதிகங்களும் ஒவ்வொரு தலத்தைப் பற்றியவை. திருவாரூரைப் பற்றி எட்டுப் பதிகங்களும், திருவாரூர்ப் பரவையுண் மண்டளியைப்பற்றி ஒரு பதிகமும் இவர் பாடினார். திருவாரூரில் பல காலம் வாழ்ந்தமையால் அத்தலத்தைப்பற்றிப் பல பதிகங்கள் பாடும் வாய்ப்பு உண்டாயிற்று.

★

இந்தப் புத்தகத்தில் ஒன்பது திருப்பாடல்களுக்குரிய விளக்கங்களைக் காணலாம். திருவெண்ணெய்நல்லூர், திரு நெல்வாயில் அரத்துறை, திரு ஓணகாந்தன் தளி, திரு நாட்டியத்தான்குடி, திருக்கலயநல்லூர், திருக்கச்சி மேற்றளி, திருக்கழிப்பாலை, திருக்கருப்பறியலூர், திருப்புகலூர் என்ற தலங்களைப்பற்றிய பாடல்கள் அவை. தம்மைத் தடுத்தாட் கொண்டபோது ஆளுடையநம்பி பாடிய பதிகத்திலுள்ள முதற் பாட்டுக்குரிய விளக்கமே முதற் கட்டுரை. இறுதிக் கட்டுரை திருப்புகலூரில் இறைவன் திருவருளால் செங்கல் பொன்னாக மாறியது கண்டு பாடிய பதிகத்தின் முதற் பாட்டின் விளக்கம்.

இறைவனுடைய திருவருட்சிறப்பைத் தம்முடைய வாழ்க்கையோடு ஒட்டிக் கண்டு உருகும் இயல்புடையவர் நம்பியாரூரர். இந்தப் புத்தகத்தில் உள்ள பாடல்கள் இவருடைய உணர்ச்சி நிலையை நன்றாக வெளிப்படுத்துகின்றன. இறைவன் அடியார்களை ஆளும் திறத்தில் பித்தாக நிற்பதும், அவர்கள் தன்னை மறந்தாலும் அவர்களை ஆட்கொள்வதற்கு முந்துவதும், இம்மை மறுமைப் பயன்களை ஈவதும், அடியார்களை மறக் கருணையால ஒறுத்துத் திருத்துவதும் ஆகிய கருணைச் செயல்களை எடுத்துரைக்கிறார் சுந்தரர். உலகத்தில் மக்கள் வாழ்க்கை நிலையாமல் கழிவதையும், செல்வம் படைத்த

வர்கள் தம்மைப் பாடுவோருக்கு ஒன்றும் வழங்காமல் இருப்பதையும் குறிக்கிறார். புலவர்களை நோக்கி, ''எம்பெருமானைப் பாடுங்கள். அதனால் இருமையிலும் இன்பம் பெறலாம்'' என்று சொல்கிறார். இறைவனைப் பாடும் பணியில் இடைவிடாது ஈடுபட்டு இன்பம் காணும் இயல் புடையவராதலின், ''நீ என்னைப் புறக்கணித்தாலும் பாடுதலை ஒழியேன்'' என்று சொல்கிறார். ''உன்னைப் பாடும் பாடல் ஒவ்வொன்றும் புதிய புதிய சுவை பெற்று இனிக்கின்றது'' என்று மகிழ்கிறார்.

இயற்கையின் எழில் நலங்களைக் கண்டு அதனை எடுத்துச் சொல்லும் வகையிலும் சுந்தரர் சிறந்து நிற்கிறார். நிவா என்னும் ஆற்றைக் 'கல்வாய் அகிலும் கதிர் மாமணியும் கலந்து உந்தி வரும்' நதியாகக் காட்டுகிறார். அரிசில் என்னும் ஆறு, 'இரும்புனல் வெண்திரை பெருகி ஏலம் இலவங்கம் இருகரையும் பொருது அலைக்கும்' இயல்புடையதாகக் காட்சி தருகிறது. திருக்கலய நல்லூரில் உள்ள பொழிலில் வளரும் புன்னையை, 'கரும்புனை வெண்முத்து அரும்பிப் பொன் மலர்ந்து பவளக்கவின் காட்டும்' நிலையில் காட்டுகிறார். திருக்கருப்பறியலூரில், 'வேலிதோறும் கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன் சொரியும்' வளப்பமான காட்சி ஒன்றைச் சொல்லால் சித்திரிக்கிறார்.

பித்தன், பிறைசூடி, அத்தன், நிலவெண்மதி சூடிய நின்மலன், நம்பி, புனிதன், கண்ணுதலோன், மெய்ப்பொருள், ஏறு, கண்டம் கறுத்தவன், எந்தை என்ற இறைவன் திருநாமங்களை எடுத்தாளுகிறார். இறைவன் பிறை சூடியது, கங்கையைச் சடையில் தாங்கியது, அரவைப் பூணாகவும் நாணாகவும் அணிந்தது, புறங்காட்டில் ஆடியது, முருகனை அவதாரம் செய்யச் செய்தது, காமனை எரித்தது, விடம் உண்டது ஆகிய செயல்களைக் கூறுகிறார்.

விநாயகரைப்பற்றிய செய்தி ஒரு பாட்டிலும், முருகனைப் பற்றிய செய்தி இரண்டு பாடல்களிலும், அம்மையைப்பற்றிய செய்தி இரண்டு பாடல்களிலும் வருகின்றன.

★

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் முழுவதையும் குறிப்புரையுடன், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருவுள்ளப்படி 1949-ஆம் ஆண்டில் வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தேவாரத்தில் உள்ள சில செய்யுட்களுக்கேனும் இப்போது விளக்கம் எழுதும்படி திருவருள் கூட்டுவித்ததை எண்ணி இன்புறுகிறேன்.

'திருமுறை மலர்கள்' என்ற வரிசையில் இது ஏழாவது மலர். இதனுடன் தேவாரப் பாடல் விளக்கம் நிறைவேறுகிறது. இந்தப் புத்தகங்களைத் தமிழ் அன்பர்கள் மிக்க ஆவலோடு பெற்றுப் படித்து இன்புறுவதை அவர்கள் எழுதும் கடிதங்களிலிருந்து தெரிந்துகொள்கிறேன். சிறப்பாக இலங்கைத் தமிழர்கள் இவ் வெளியீடுகளுக்கு அளித்துவரும் ஆதரவு மிகப் பாராட்டு வதற்குரியது. அவர்களுக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவாரங்களுக்கு விளக்கம் கூற நிறைந்த புலமை வேண்டும்; இறைவன் திருவருள் அநுபவம் வேண்டும். இத் தகுதிகள் என்பால் இல்லையென்பதை நான் நன்கு உணர்வேன். ஆயினும் தேவாரப் பாடல்களைப் பலகால் படித்துப் படித்து இன்புறும் வழக்கத்தாலும், என்னுடைய ஆசிரியப் பெருமானாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் பல தேவாரப் பாடல்களில் உள்ள நுட்பங்களைச் சொல்லக் கேட்கும் பேறு பெற்றதனாலும் இந்த முயற்சியில் ஈடுபட்டேன். முழுவதும் திருத்தமாகச் செய்வது மனித இயல்புக்கு அப்பாற் பட்டது. அவரவர்களின் அறிவு எல்லைக்கு உட்பட்டே அவரவர்கள் மேற்கொண்ட செயல்கள் நிறை வேறும். இந்த மட்டிலேனும் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்படி முருகன் திருவருள் என்னைச் செலுத்தியதே என்று நினைந்து அப்பெருமானை வாழ்த்துகிறேன்.

மற்ற ஐந்து திருமுறைகளிலுமுள்ள பாடல்களின் விளக்கங்கள் அடுத்தடுத்து வெளிவரும்.

கி.வா. ஜகந்நாதன்.

அருளாளன்

கொட்டு மேள ஒலி இனியதாகக் கேட்கிறது. நாயனத்தின் ஒலியும் நெடுந்தூரம் வரைக்கும் கேட்கிறது. பெரிய ஆரவாரம்; ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரே ஆரவாரம் செய்கிறார்கள். இது ஏதோ ஒரு கல்யாண ஊர்வலம்போல இருக்கிறது. ஆம்! கல்யாண ஊர்வலந்தான்! பேரழகர், சிறந்த காளை, திருநாவலூரராகிய நம்பியாரூரர் தம் கல்யாணத்தின் பொருட்டு ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறார். அவர் குதிரையின்மேல் செல்கிறார்.

மாப்பிள்ளை அழைப்பு மிகவும் சிறப்பாக நடக்கிறது. ஊர்வலம் புத்தூர் என்ற ஊரை அணுகிவிட்டது.

அப்பொழுததான் அந்தக் கிழவர் எதிர்ப்பட்டார். ''என்ன கல்யாணம்?'' என்று கேட்டார்.

''இந்த ஊர்க் குருக்களையாவின் பிள்ளைக்குக் கல்யாணம்; நம்பி ஆரூரருக்குக் கல்யாணம்'' என்று சொன்னார்கள்.

''அப்படியா? நம்முடைய ஆரூரனுக்கா?'' என்று கேட்டார்.

''ஆமாம். அதே பிள்ளைக்குத்தான்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

''எங்கே, எந்த ஊரில் நடக்கிறது கல்யாணம்?''

''இந்த ஊரிலே சடங்கவி சிவாசாரியாருடைய பெண்ணுக்கும் நம்முடைய நாவலூர் நம்பிக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அதைக் கேட்டாரோ இல்லையோ, அந்தக் கிழவனாருக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது.

''அது எப்படி நடக்கலாம்? அவன் என்னுடைய அடிமை அல்லவா? இதோ நான் போய்க் கல்யாணத்தை நிறுத்தி விடுகிறேன். எனக்குக் கல்யாணப் பத்திரிகை கிடையாது. என்னுடைய வார்த்தையைக் கேட்காமல் என்னுடைய அடிமைக்கு எப்படிக் கல்யாணம் பண்ணலாம்?'' என்று அவர் மிகவும் சினந்து கூட்டத்துக்கு நடுவிலே எப்படியோ புகுந்துவிட்டார். புகுந்து நேராக அந்த ஒற்றைப் பிராம்மணர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முன்னாலே எதிர்ப்பட்டார். ''நில். நமக்கும் உனக்கும் ஒரு வழக்கு இருக்கிறது'' என்று சொன்னார். யாரோ ஒரு கிழவர் இப்படிக் கல்யாண ஊர்வலத்தை வந்து கெடுக்கிறாரே என்று நம்பி ஆரூரருக்குக் கோபந்தான் வந்தது.

''என்ன வழக்கு? அதைச் சொல்லும். அதைத் தீர்த்துவிட்டு மேலே செல்கிறேன்'' என்றார்.

''நீ என்னுடைய அடிமை. என்னுடைய உத்தரவு இல்லாமல் எப்படி நீ மணம் செய்து கொள்ளலாம்?'' என்று கிழவர் கேட்டார்.

''இது என்ன வேடிக்கையாக இருக்கிறது? அந்தணனுக்கு அந்தணன் அடிமையாவது! இந்த உலகத்தில் கேளாத செய்தியாக இருக்கிறதே! நீர் பித்தரோ?'' என்று சுந்தரர் சிரித்தார்.

''ஆம். நீ சிரிக்கத்தான் சிரிப்பாய். உன்னுடைய தாத்தா காலம் முதலே அடிமைத்தனம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது'' என்றார் கிழவர்.

''அதற்கு என்ன ஆதாரம்?'' என்று கேட்டார் ஆரூரர்.

''உன் பாட்டனார் எழுதி அளித்த ஒலை இருக்கிறது. வெறும் பேச்சுப் பேச வேண்டாம். எனக்குப் பணி செய்ய வேண்டும்.''

அவருடைய வடிவத்தைக் கண்டபோது சுந்தரருடைய உள்ளம் உருகியது. ஆனால் அவர் வார்த்தையைக் கேட்டபோது சினம் மூண்டது. ''எங்கே, அந்த ஒலையைக் காட்டும்; பார்க்கலாம்'' என்றார்.

''உனக்கு நான் ஓலை காட்டவேண்டுமோ? சபையினர் முன் காட்டி உன்னை வேலை செய்யச் செய்கிறேன்'' என்று அந்தணர் மிடுக்காகப் பேசினார்.

அப்போது நாவலாரூரர் வெகுண்டு வேகமாக அம் முதியவரைப் பற்றச் சென்றார். அவர் மணப் பந்தலுக்குள்ளே ஓட, சுந்தரர் அவரை விரைந்து சென்று பற்றி அவர் கையில் இருந்த ஓலையைப் பிடுங்கி, ''அந்தணர் அடிமை வேலை செய்வதாம்!'' என்று அதைக் கிழித்து விட்டார்.

அது கண்டு அருகில் உள்ளவர்களைப் பார்த்து அந்தணர் முறையிட்டார். அப்போது அயலில் நின்றவர்கள் சுந்தரரை விலக்கி, ''புதியதாக உலகில் இல்லாத செய்தியைச் சொல்லும் அந்தணரே, நீர் எங்கே இருக்கிறவர்? சொல்லும்'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், ''நான் இதோ அணிமையில்தான் இருக்கிறேன். வெண்ணெய் நல்லூர்தான் என் இருப்பிடம். அது கிடக்கட்டும் ஐயா; இவன் அக்கிரமமாக என் கையில் இருந்த ஓலையை வாங்கிக் கிழித்துவிட்டான். இதுவே இவன் எனக்கு அடிமை என்பதைக் காட்டவில்லையா? ஓலை இருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்று அதைக் கிழித்து விட்டான்'' என்றார்.

அப்போது ஆரூரர், ''உமக்கு வெண்யெய் நல்லூர் சொந்த ஊரானால், அந்த ஊரிலுள்ள சபையினரிடம் போய் இந்த வழக்கைப் பேசலாம், வாரும்'' என்றார்.

''நல்ல காரியம்! வெண்ணெய் நல்லூருக்கு வா. அங்குள்ள வேதியர்களின்முன் மூல ஓலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிக்கிறேன். நல்ல வேளை! நீ கிழித்தது படி ஓலைதான்'' என்று தம் கைத் தடியைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார் வேதியர்.

அவரைத் தொடர்ந்து சுந்தரரும் அவருடைய சுற்றத்தாரும் ஏனையோரும் சென்றார்கள். திருவெண்ணெய் நல்லூர்ச் சபைக்குச் சென்று அவையிலிருந்த அந்தணர்களிடம் தம் வழக்கை முறையிட்டார் முதிய வேதியர்.

சுந்தரரோ, ''எல்லாச் சாத்திரங்களையும் தேர்ந்த பெரியவர்கள் நீங்கள். நான் ஆதி சைவ அந்தணன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அந்தணர் என்னைத் தம் அடிமை என்று சொல்கிறார். இது முறையாகுமா?'' என்று கேட்டார்.

'இவர் உமக்கு அடிமை என்று வல்வழக்கு இடுகிறீரே! அதற்கு ஏதேனும் அநுபோக பாத்தியம் உண்டா? ஆவண ஓலை உண்டா? அல்லது வேறு சாட்சி உண்டா? இந்த மூன்றில் ஒன்றேனும் காட்ட முடியுமா?'' என்று அவையோர்கள் வேதியரைக் கேட்டார்கள்.

''இதோ மூல ஓலை வைத்திருக்கிறேன்.''

''எங்கே காட்டும்.''

''இவன் அதையும் கிழித்துவிட்டால்-?''

''நீர் அஞ்ச வேண்டாம். உமக்கும் உம்முடைய ஓலைக்கும் ஒரு தீங்கும் வரவொட்டோம்.''

அதன் பின், அடிமை கொண்ட ஐயர் ஓலையை எடுத்துக் கொடுக்க ஊர்க்கரணத்தான் வாங்கிப் படிக்கத் தொடங்கினான்.

''திருநாவலூர் ஆதி சைவனாகிய ஆரூரன் எழுதியது. திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்னுடைய பரம்பரையில் வருகிறவர்களும் அடிமை. இதற்கு இவ்வோலை எழுதினேன். இது என் எழுத்து.''

ஓலையிலுள்ள வாசகத்தைக் கேட்டு, அதில் சாட்சிக் கையெழுத்திட்டவர்கள் பெயர்களையும் யாவரும் கேட்டனர். அப்பால் அந்த எழுத்து, சுந்தரருடைய பாட்டனாருடையது தானா என்ற ஆராய்ச்சி பிறந்தது. ஆவணக்களரியிலிருந்து அவர் எழுதிய பழைய ஓலை ஒன்றை வருவித்து ஒப்பு நோக்கி னார்கள். எழுத்து இரண்டும் ஒத்திருந்தன.

வெண்ணெய்நல்லூர்க் கிழவர் கூறுவது உண்மையே என்று தீர்ப்புச் செய்தனர் அவையிலுள்ள பெரியோர். இந்த நிகழ்ச்சியைக் கண்டு அங்கிருந்த யாவரும் வியப்படைந்தனர். அந்தணர்கள் அவரை நோக்கி, ''நீர் இவ்வூர் என்று சொல்கிறீர்.

இங்கே நீர் இருக்கும் வீடு எது? எப்படி வாழ்க்கை நடத்துகிறீர்?'' என்று கேட்டார்கள்.

''என்னை உங்களுக்குத் தெரியாதா? அப்படியானால் வாருங்கள்; என் இருப்பிடத்தைக் காட்டுகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டார் அந்தணர். அவரைத் தொடர்ந்து நம்பி ஆரூரரும் மற்றவர்களும் சென்றார்கள். அவர் திருக் கோயிலுக்குள் சென்று மறைந்தார்.

ஆரூரர் கோயிலுக்குள் புகுந்து, 'எம்பிரான் கோயிலுக்குள் இவர் வந்தது எதற்காக?' என்று சுற்றும்முற்றும் பார்த்தபோது, இறைவன் உமாதேவியாரோடு விடையின்மேல் அமர்ந்த திருக்கோலத்தைக் காட்டியருளினான். ''முன்பு நீ நமக்குத் தொண்டன். பின்பு நம்முடைய ஏவலாலே பூவுலகில் பிறந்தாய். நாம் தடுத்தாட்கொள்வதாகச் சொன்னபடி இப்போது ஆட்கொண்டோம்'' என்று ஒரு தெய்வக் குரல் கேட்டது.

அந்த வாக்கைக் கேட்ட ஆரூரருக்கு உடம்பெல்லாம் புளகம் போர்த்தது. கீழே விழுந்து பணிந்து எழுந்து நின்றார். கண்ணீர் ஆறாய்ப் பெருகிறது. ''எளியேனை ஆட்கொள்ளும் பொருட்டுத் தேவரீரோ எழுந்தருளியது? இதனை அறியாத அசடனாகி விட்டேனே!'' என்று ஆராமை மீதூரக் கதறினார்.

''நீ நம்மை வன்மையாகப் பேசினாய்; ஆதலால் உனக்கு வன்றொண்டன் என்னும் பெயர் வழங்குவதாகுக! நீ மலரால் நம்முடைய திருமேனி தீண்டி அருச்சிக்கும் குலத்திற் பிறந்தாய். ஆயினும் நமக்கு மிக்க விருப்பமான அருச்சனை பாட்டேயாகும். ஆதலால் நம்மை நீ செந்தமிழ்ப் பாடலால் பாடுவாயாக'' என்று இறைவன் திருவாய் மலர்ந்தருளினான்.

''அந்தணத் திருக்கோலம் பூண்டு வழக்குப் பேசி வந்து உண்மையறியாத இந்தப் பேதையை ஆட்கொண்ட பெருமானே, தேவரீருடைய பெருங் கருணையை அறியாமல் நான் முரடனாக இருந்தேனே! தேவரீர் பெருமையை உணராத இந்த ஏழை எப்படிப் பாடுவேன்! தேவரீருடைய குணம் கடலைப் போன்றது. அதை எப்படி அறிந்து பாடப் போகிறேன்!''

''அப்பா, நீ என்னைப் பித்தன் என்று சொன்னாய் அல்லவா? அந்தச் சொல்லையே வைத்துப் பாடு. நீ என்னை முதல்முதலாக அறிந்த வகை அதுதானே? அப்படியே பாடு.''

இவ்வாறு இறைவன் கட்டளையிடவே, வன்றொண்டர் பாடலானார்.

பித்தாபிறை சூடிபெருமானே அரு ளாளா!

என்று பாடத் தொடங்கிவிட்டார். அதுமுதல் அவர் செந்தமிழ்த் தேவாரத் திருப் பாடல்களைப் பாடி இறைவனுக்குச் சொல் மலரால் அருச்சனை புரிந்து இன்புற்றார். இறைவனுடைய திருவருள் வழிகாட்ட, தமக்குள்ள இயற்கையான புலமையும் துணை செய்ய அழகிய தேவாரப் பதிகங்களைப் பாடலானார்.

★

இறைவனுடைய திருமுன்னர் நின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள், கன்றை இழந்த பசுவானது மீட்டும் கன்றை அடைந்தால் அக்கன்றுக்கு எப்படியிருக்குமோ அந்த உணர்ச்சி நிலையில் இருந்தார். இறைவன் தாய் போன்றவன். ஆருயிர்களெல்லாம் குழந்தைகள் போன்றவை. குழந்தைகள் தாயை மறந்துவிடுகின்றன. ஆனால் தாயோ குழந்தைகளை மறப்பதே இல்லை. தமக்குத் தாய் ஒருத்தி இருக்க வேண்டும் என்கிற தத்துவம்கூடக் குழந்தைகளுக்குத் தெரியாமல் இருக்கிறது.

தாய் தன் குழந்தையை என்றும் மறப்பதே இல்லை. மறக்காமல் இருப்பதோடுகூட அந்தக் குழந்தையுடன் என்று கூடப் போகின்றோம் என்று பித்துப் பிடித்து அலைகிறாள். அவளுக்கு எத்தனை பித்துப் பிடித்தாலும் குழந்தைக்கு அவளைச் சென்று சாரவேண்டும் என்னும் நினைவே இருப்ப தில்லை. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்' என்று ஒரு பழமொழி வழங்குகிறது அல்லவா? எத்தனைதான் தாய் அருகிலே வந்தாலும் அவளுடைய அருமைப்பாட்டை அறியாத பிள்ளை அவளைப் புறக்கணித்து உதறிவிடுகிறான். அப்பொழு தெல்லாம் தாய் வருந்து கிறாள்.மீட்டும் மீட்டும் அவனை எந்த வழியிலாவது தன்னோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நினைவோடு அவள் முயற்சி செய்கிறாள்.

அவ்வாறே, இறைவன் ஆருயிர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகிறான்; தன்னுடைய கருணைக் கரத்தினாலே அணைக்க வேண்டுமென்று முயல்கிறான். நாம் செய்கிற பக்தியிலேதான் அதிக ஆற்றல் இருக்கிறதென்று நாம் நினைக்கிறோம். அப்படி அன்று. நாம் செய்கிற பக்தியெல்லாம் வெறும் வியாஜ மாத்திரம். 'எப்படியாவது இவன் நம்மை அண்டவேண்டும். இவன் நம் பக்கம் திரும்புகிறானா?''என்று ஆண்டவன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். அவனை நோக்கி நாம் ஓர் அடி எடுத்து வைத்தால் அவன் நூறடி, ஆயிரம் அடி எடுத்து வைத்து வேகமாக வருகிறான்; ''அப்பா, வந்தாயா?'' என்று மிக்க ஆர்வத்தோடு நம்மை அணைந்துகொள்ள வருகிறான். நம் முடைய பக்தியின் வேகத்தைக் காட்டிலும் நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று எம்பெருமானுக்கு உள்ள கருணையின் வேகம் மிகுதியானது. அவனுடைய திரு அவதாரங் களுக்கும், அவன் செய்கின்ற பல திருவிளையாடல்களுக்கும், அவன் எடுத்துக் கொள்கின்ற உருவங்களுக்கும், முக்கியமான காரணம், ஆருயிர்களெல்லாம் உய்யவேண்டும் என்ற கருணைதான். அது ஒரு பித்து அல்லவா? குணம் குறி ஒன்றும் இல்லாத பரப்பிரம்மமாகிய கடவுள், எல்லாவிதமான காரியங்களையும், பராக்கிரமங்களையும், அவதூறுகளையும், புகழ்களையும் ஏற்றுக்கொள்வதற்குக் காரணம் ஆருயிர்களை மீட்டும் அருளினால் தனக்கு அடிமையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரே ஞாபகந்தான். அதையன்றி வேறு எதையும் நினையாமல் இருக்கிறான். அந்தக் கருணையினாலே பித்தாகித் திரிகிறான்.

★

சுந்தரமூர்த்தி நாயனார் முன்பு ,ஆண்டவனுடைய திருவருளை நிரம்பப் பெற்றவரானாலும், தடுத்தாட் கொள்ளுவேன் என்று அவன் சொன்னமையினாலே, இப் பிறவியில் சில காலம் அவனை மறந்திருந்தார். உலக வாழ்விலே இன்பம் பெறவேண்டும் என்று கருதித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தத் திருமணம் ஆகியிருந்தால், நாவல் ஆரூரர் ஆண்டவனுடைய அடிமையாக இல்லாமல் உலகத்தின் அடிமையாகியிருப்பார். அதை மாற்றுவதற்காகப் பித்தேறி நின்றான் எம்பெருமான்; நாவல்

ஆரூரரை ஆண்டு அவர் மூலமாக உலகத்துக்கெல்லாம் நல்லருளைக் காட்டவேண்டும் என்று கருதினான்.

இவற்றையெல்லாம் நினைத்தால், நாவலாரூரர் தம் சொல் அருச்சனையை, 'பித்தா' என்று ஆரம்பித்தது எவ்வளவு பொருத்தமாகத் தோன்றுகிறது! பித்தன் என்பதை இறைவன் சொன்னது மாத்திரம் அல்ல; நம்பி ஆரூரரே அவன் பித்தன் என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறார். அந்த உணர்ச்சியும் ஆண்டவனுடைய கட்டளையும் ஒன்று கூடவே, பாட்டு இயற்கையாக எழுந்தது.

பித்தன் என்பதைப் பிறரும் உணர்ந்துகொள்ளும்படி ஒன்றைச் சொல்கிறார் சுந்தரர். மற்றவர்களுக்கும் பித்தனுக்கும் என்ன வித்தியாசம்? எது நலலது, எது பொல்லாதது என்று பித்தனுக்குத் தெரியாது. சாப்பாட்டைக் கொடுத்தால் நாம் வாயிலே போட்டுக் கொள்கிறோம். பித்தனும் சில சமயங்களிலே போட்டுக் கொள்வான். இன்னும் சில சமயங் களிலே காலிலே போட்டுக் துகைப்பான்; அல்லது தலையிலே போட்டுத் தீற்றிக் கொள்வான். எந்தப் பொருளை எந்த இடத்திலே வைக்க வேண்டுமோ அந்த முறை தெரியாமல் பல பல வேடிக்கையான காரியங்களைச் செய்வான் பித்தன். இங்கே சிவபெருமான் அப்படிச் செய்கிறானாம். என்ன செய்கிறான்?

காலிலே போட்டு மிதித்த ஒரு பொருளைத் தலையிலே தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு சமயம் இறைவன் தன்னை அழைக்காமலே யாகம் செய்த தக்கனைத் தண்டித்தான். யாகத்துக்கு வந்திருந்த தேவர்களுக்கெல்லாம் தண்டனை அளித்தான். அப்படி வந்த தேவர்களுக்குள்ளே சந்திரன் ஒருவன். அவனைக் காலாலே தேய்த்தான். அது அவனுக்குரிய தண்டனை யானாலும், திருவடியின் சம்பந்தம் பெற்றமையினாலே இறைவன் தலைமேலே அவன் ஏறிக் கொண்டான். அவனைத் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டான் இறைவன். 'காலிலே மிதிபட்ட ஒன்றைத் தலையிலே தூக்கி வைத்துக்கொண்டான் ஒருவன்' என்று சொன்னால் அவனைப் பித்தன் என்று சொல்வதிலே என்ன தவறு?

ஒரு வகையில் பைத்தியக்காரனுடைய செயலாகத் தோன்றும். அதுவே, கருணையாகிய பித்துப் பிடித்தவன்

இறைவன் என்பதையும் காட்டுகிறது. எப்படி? ஆண்டவன் தன் காலடியிலே யாரேனும் வந்து விழுந்தால், முன்னாலே எத்தகைய அபராதத்தை அவன் செய்திருந்த போதிலும், அதை எண்ணாமல் உடனே அவனுக்கு உயர்ந்த நிலையைத் தந்துவிடுவான். இதனைத்தான் அந்தப் பிறை காட்டுகிறது. மற்றத் தேவர்களெல்லாம் தாங்கள் தாங்கள் செய்த காரியங்களுக்குத் தண்டனை பெற்றார்கள்; மிக்க துன்பத்தை அடைந்தார்கள். ஆனால் தண்டனையாக இருந்தாலும் இறைவனுடைய காலடியிலே புகுந்தமையினாலே பிறைக்கு நல்ல பயன் கிடைத்தது. தெரியாமல் நாக்கிலே தேன் துளி சொட்டிவிட்டாலும் இனிக்கிறது. தெரிந்து சாப்பிட்ட பொழுதுதான் இன்பம், மற்றச் சமயங்களில் இன்பம் இல்லை என்று சொல்ல முடியுமா? அதுபோலச் சந்திரன் தான் நினைக்காமலே ஆண்டவனுடைய திருவடி சம்பந்தம் பெற்றான். இறைவன் கோபத்தினாலேதான் தேய்த்தான். ஆனால் பெற்றது திருவடி சம்பந்தம். ஆகையினால் உடனே இறைவனுடைய தலையின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

அது மாத்திரம் அல்ல. இறைவனுடைய திருவடி சம்பந்தம் பெறுவதற்கு முன்னாலே அந்தப் பிறை வளர்ந்தது; மீட்டும் தேய்ந்தது. இறைவனுடைய திருமுடியிலே புகுந்த பிறகு அது தேய்வதும் இல்லை; வளர்வதும் இல்லை. உயர்ந்த இடம், நிலையான இருப்பு ஆகியவைக ளெல்லாம் இறைவ னுடைய திருவடித் தொடர்பினால் உண்டாயின.

பித்தா பிறை சூடீ!

★

இப்படிப் பித்தன் என்றும், பிறை சூடீ என்றும் சொன்னதால் இறைவனுடைய தன்மை குறைந்துவிடவில்லை. அவன் எப்பொழுதும் தன்னுடைய பெருமையினின்று சிறிதும் குறைவை அடைவதில்லை. அவன் பித்தனாக இருந்தாலும் பிறைசூடியாக இருந்தாலும், ஏனையோருடைய பித்துக்கும் ஏனையோருடைய செயலுக்கும் அவனுடைய இயல்புக்கும் வேறுபாடு உண்டு. பித்தன் காலிலே பட்ட பொருளைத் தலையிலே வைத்துக் கொண்டால் அதிலே ஒரு பயனும்

இல்லை. ஆனால் இங்கே காலிலே வைத்த பிறையைத் தலையிலே சூடிக்கொண்டதனால் இறைவனுடைய பெருமையையே உலகம் நன்கு உணர்கிறது.

மனிதனது அடிப்படையான பண்பு அவன் எந்த நிலையில் இருந்தாலும் தோன்றும். ஒரு தையல்காரன் பைத்தியக்காரன் ஆகிவிட்டான். அவன் என்ன செய்வான்? கத்தரிக்கோலால் கத்தரிக்கிற மாதிரியே கையைக் காட்டிக் கொண்டிருப்பான். எழுத்தாளனாக இருந்தால் சதா பேனாவைக் கையில் வைத்துக் கொண்டு ஏதோ எழுதுகிற மாதிரி இருப்பான். சொற் பொழிவாளனாக இருந்தால் எதையாவது உளறிக் கொண்டிருப் பான். பித்து நிலையிலும் அவரவர் களுடைய பழைய இயல்பு நன்றாகத் தெரியும். அதுபோல, இறைவன் பித்தனாகவும் பிறை சூடியாகவும் இருந்தாலும், அவ்வளவிலும் அவனுடைய பெருந் தன்மையே பின்பும் விட்டு ஒளிர்கின்றதே தவிர, அவற்றில் மற்றவர்களுக்குள்ள சிறுமை இல்லை. எப்போதும் பெருமா னாகவே இருக்கிறான். இதை நினைத்தார் சுந்தரமூர்த்தி நாயனார். 'பித்தா பிறைசூடி பெருமானே' என்று பாடினார்.

அவன் பித்தனாக வந்தாலும் பிறைசூடியாக வந்தாலும் உலகத்தார் போற்றும்படி இருக்கின்ற பெருமை எதனாலே உண்டாகின்றது? இத்தனை செயல்களுக்கும் மூல காரணமாக இருப்பது அவனுடைய அருள். அவன் பித்தனாகத் தோன்றினாலும் மணவாளப் பிரானாகத் தோற்றினாலும் கோவணாண்டியாகத் தோற்றினாலும் விடையில் ஏறினாலும் பூதங்களோடு சேர்ந்து கை தட்டிப் பாடினாலும் இன்னும் என்ன என்ன விதமான கோலங்களையோ திருவிளையாடல்களையோ உடையவனாக இருந்தாலும் அத்தனைக்கும் மூல காரணமா யிருப்பது அவனுடைய அருள். ஆதலின், ''பித்தா பிறைசூடி பெருமானே'' என்று மாத்திரம் சொல்லி நிறுத்தவில்லை. அதற்கு மேலே, இவ்வளவுக்கும் மூலப்பொருளாக உள்ள அருளைக் குறித்தார். ஆண்டவன் அருளை உடையவன்; அருளாளன். அவனுடைய திருவுள்ளத்திலே அருள் கொப்புளிப் பதனாலே அவன் பித்தனாகிறான்; பிறைசூடியாகிறான்; பெருமானாகிறான்.

பித்தாபிறை சூட பெருமானே அருளாளா!

என்று விளிக்கின்ற விளியிலே எத்தனையோ சாஸ்திரங்களின் உண்மைகளும், அவனுடைய திருவிளையாடல்களின் தத்து வங்களும் பொதிந்து கிடக்கின்றன.

அது மாத்திரம் அல்ல; அருளாளன் என்ற திருநாமம் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற எம்பெருமானுடைய பெயர். அங்கே உள்ள கோயிலுக்கு அருள்துறை என்று பெயர். சில இடங்களிலே ஊரின் பெயர் வேறாகவும், ஆலயத்தின் பெயர் வேறாகவும் இருக்கும். வெண்ணெய்நல்லூர் என்பது ஊரின் பெயர். அங்கே உள்ள திருக்கோயிலுக்கு அருள் துறை என்று பழைய காலம் முதற்கொண்டே ஒரு பெயர் வழங்குகிறது. அதனை வடமொழியில் கிருபாசிரமம் என்பர். அருளாளப் பெருமான் அங்கே அருள் துறையிலே இருக்கிறான்.

★

'பித்தா பிறைசூட பெருமானே அருளாளா' என்று முதல் அடி நிற்கிறது. அப்படி இறைவனை விளித்த பிறகு தம்மைப்பற்றிப் பேச வருகிறார் ஆரூரர். இறைவனைப் பார்த்த கண்ணைக்கொண்டு பிறகு தம்மைப் பார்த்துக் கொள்கிறார். பெரிய இன்ப அநுபவத்திலே இருப்பவருக்குத் தம்மை மறந்த நிலைதான் தோன்றும். இறைவனுடைய அருள் வெள்ளத்துக் குள்ளே புகுந்த சுந்தரமூர்த்தி நாயனார் ஒரே வியப்பில் மூழ்கினார். ஆண்டவனையன்றி வேறொன்றையும் பாராமல், 'பித்தா பிறைசூட பெருமானே அருளாளா!' என்று சொல்லி உருகினார். பிறகு தம்முடைய நினைவு அவருக்குத் தோன்றுகிறது. ''எத்தால் மறவாதே நினைக்கின்றேன்'' 'எதனாலும் உன்னை மறக்காமல் நினைக்கிறேன்'' என்கிறார். 'இறைவனே, இவ்வளவு சிறந்த கருணை உடைய உன்னை நான் எந்தக் காரணத்தினாலும் மறப்பதில்லை. துன்பம் உண்டானாலும் சரி; இன்பம் உண்டானாலும் சரி. உன்னை மறக்கிறது என்பது என்னிடம் இல்லை. வேகமாக ஓடினாலும் சும்மா நடந்தாலும் படுத்துக் கொண்டிருந்தாலும் பேசினாலும் ஒரு மனிதன் மூச்சு விட்டுக்கொண்டே இருக்கிறான். இருதயம் துடித்துக் கொண்டே இருக்கிறது. அந்த இருதயத் துடிப்பை

அவனுடைய துக்கமோ சுகமோ நிறுத்தாது. அது மாதிரி உலக வாழ்க்கையில் நான் எந்தவிதமான செயல்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் உன்னை நினைக்கிறதாகிற செயல் எந்தக் காலத்திலும் நிற்பதில்லை என்று சொல்கிறார். 'மற்றச் செயல்கள் கூடுதலும் ஊறை யாக நடத்தலும், அடியோடு நிற்றலும் ஆகிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. அப்படி இல்லாமல் எந்தத் தடை வந்தாலும், எது முன்னே நின்றாலும் எதனாலும் உன்னை மறப்பதில்லை; மறக்காமல் நினைக் கிறேன்' என்றார்.

எத்தால் மறவாதே நினைக்கின்றேன்.

★

இறைவனுடைய திருவருளை முதலிலே நினைவு படுத்திக்கொண்டார் சுந்தரர். பின்னாலே தம்முடைய பக்தியைச் சொன்னார். அதற்கு மேலே இன்னும் பக்குவம் எழுகிறது. சொல்லிக்கொண்டு வரும்பொழுதே அவருக்குப் பக்குவம் உயர்ந்துகொண்டு வருகிறது. 'அடடா! நான் நினைப்பதாவது? நான் நினைப்பதாயிருந்தால் முன்னாலே நினைத்திருக்க வேண்டுமே. நீயல்லவா என்னை நினைக்கச் செய்தாய்?' என்று எண்ணுகிறார்; ''நினைக்கின்றேன் மனத்து உன்னை வைத்தாய்'' என்று முடிக்கிறார்.

''நான் நினைக்கவில்லை; நீ நினைக்கச் செய்கிறாய்'' என்று சொல்கிறார்.

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா!
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத்து உன்னை
வைத்தாய்.

இறைவன் நம்மை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறானோ அந்தப்படிதான் நாம் ஆடுகிறோம். அவனை நினைக்கும் திறத்தில்கூட, நாமாக முயன்று அவனை நினைப்ப தாக எண்ணுகிறோம். உண்மை அது அன்று. இறைவன்தான் தன்னை நினைக்கும்படியாகச் செய்கிறான். ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது மாணிக்கவாசகர் வாக்கு. ஒருவன் தன்னை நினைக்க வேண்டும் என்று இறைவன் திருவுள்ளத்தில் அருள் தோன்றினால் அப்பொழுது அந்த

மனிதனிடத்தில் அவனைப் பற்றிய நினைப்புத் தோன்றுகிறது. இதை நம்பியாண்டார் நம்பி ஓர் இடத்தில் சொல்லுகிறார்:

> ''என்னை நினைந்தடிமை கொண்டுஎன் இடர்கெடுத்துத்
> தன்னை நினைக்கத் தருகின்றான்.''

அவன் தன்னை நினைக்க அருள் தராவிட்டால் நாம் அவனை நினைக்க இயலாது. சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைத் தாம் நினைத்ததாக முன்னாலே சொல்ல ஆரம்பித்தார், அதை மாற்றிக்கொண்டு, 'நினைத்தேன் மனத்து உன்னை வைத்தாய்' என்கிறார். 'எந்த வகையினாலும் உன்னை மறவாமல் நினைக்கிறேன்' என்று சொல்ல வந்தவர், அப்படி நினைப்பதற்கு மூலகாரணமாயிருப்பது தம்முடைய முயற்சி அல்ல என்று தெரிந்து கொண்டார். ஆதலால் அதோடு நிறுத்தாமல், 'உன்னை நினைக்கும்படியாக என்னுடைய மனத்திலே நீ வந்து அமர்ந்தாய்' என்று சொல்கிறார்.

> எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்து உன்னை
> வைத்தாய்.

★

இப்படியெல்லாம் பாடுவதற்கு இடமாக இருந்தது திருவெண்ணெய்நல்லூர் என்னும் தலத்தில் அருள் துறை என்ற தனிப் பெயருள்ள ஆலயம். இன்றைக்கும் அந்த ஆலயத்தில் சந்நிதிக்கு நேரே வெளியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கிறார். கோயிலின் மேல் தளத்தில் ஒரு சிறிய சந்நிதி இருக்கிறது. அதை, 'தடுத்தாட் கொண்டவர் கோயில்' என்று சொல்கிறார்கள். மேல் ஏறிப் போய்ப் பார்க்க முடியாது; படிக்கட்டு இல்லை. இறைவன், அங்கே தோன்றி மறைந்தான் என்ற ஒரு செய்தியை இப் பொழுதும் அங்குள்ள மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திருவெண்ணெய்நல்லூர் தென்பெண்ணையாற்றின் தென்கரையிலே இருக்கிறது.

''தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள் அத்தா'' என்று அங்குள்ள பெருமானை விளித்துச் சொல்லு கிறார். அத்தன் என்றால் தகப்பனார் என்று பெயர். இறைவன்

தம்மிடத்திலே தந்தையைப் போன்ற அன்பு கொண்டு, உரிமையோடு வந்து காத்தருளினான் என்ற நினைப்பினாலே, ''வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள் அத்தா'' என்கிறார்.

''உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே?'' என்று பாட்டு முடிகிறது. இறைவன் எப்பொழுதும் ஆண்டானாக இருக்கிறான். அதனாலே ஆண்டவன் என்ற பெயர் அவனுக்கு உரியதாக இருக்கிறது. உலகில் எத்தனையோ ஆண்டவர்களும் எஜமானர்களும் இருந்தாலும் அவர்களெல்லாம் வேஷ தாரிகளாகிய ஆண்டவர்களே ஒழிய, உண்மையாக உயிர்களுக் கெல்லாம் உரிமையுடைய ஆண்டவர்கள் ஆகமாட்டார்கள். இறைவன் ஒருவன்தான் ஆண்டான் அல்லது எஜமானன். உயிர்கள் அத்தனையும் ஆட்கள்; அவனுக்கு அடிமை. ''என்று நீ அன்று நான் உன் அடிமை யல்லவோ?'' என்று தாயுமானவர் பேசுகிறார்.

உலகிலுள்ள எல்லா அடிமைகளும் தம்முடைய தலைவன் இன்னான் என்பதை உணரும்பொழுது அவன்பால் பக்தி உண்டாகிறது. இறைவனுக்குத் தாம் அடிமை என்ற நினைவு உள்ளத்திலே முறுகி எழுந்தவுடன் அதற்கு ஏற்ற உணர்ச்சியும் அநுபவமும் உண்டாகின்றன. அந்த அநுபவந்தான் இறைவனுடைய அருளிலே புகும் அநுபவம் என்று பெரி யோர்கள் சொல்கிறார்கள். என்றைக்கு அவனை நன்கு தெரிந்து கொள்கிறோமோ, நம்முடைய நிலை எப்பொழுது நமக்குத் தெளிவாகப் புலனாகிறதோ அப்பொழுது தோன்றுவதுதான் சிவஞானம்.

இறைவனுடைய திருவருளினாலே ஆட்கொள்ளப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இப்பொழுது சிவஞானம் தோன்றி விட்டது. அப்படிச் சொல்வதைக் காட்டிலும், 'சிவஞானியாக இருந்த அவர் இறைவனுடைய திருவருளினாலே உலகத்தில் பிறந்தார்; நாம் தடுத்து ஆட்கொள்வோம் என்று அவன் சொல்ல, அதன்படியே இப்பொழுது ஆட்கொள்ளப் பெற்றார்; அப்படிப் பெற்ற சமயத்திலே சிவஞானம் தோன்றியது போன்ற ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது' என்று சொல்வது பொருந்தும்.

அந்த ஞானம் எத்தகையது? 'நீ எனக்குத் தலைவன் அல்லது ஆண்டான்; நான் உனக்கு ஆள். எனக்கும் உனக்கும்

உள்ள தொடர்பு அநாதி காலமாக வந்து கொண்டிருக்கின்றது; நான் அறியாவிட்டாலுங்கூட இந்தத் தொடர்பு மாறாது. இந்தத் தொடர்பை நான் உணராவிட்டாலும் நீ உணர்ந்து கொள்வாய். இந்தத் தொடர்பை நான் உணரவேண்டும் என்று எப்பொழுது உன் திருவுள்ளத்தில் தோன்றுகின்றதோ அப்பொழுது வந்து உணர்த்துவாய். அப்படி உணர்கின்ற காலம் எளியேனுக்கு இப்பொழுது கிடைத்தது. நீ என்னை ஆட்கொண்டாய். நான் உனக்கு ஆள் அல்ல என்று சொல்லிப் பார்த்தேன்; ஆனாலும் நமக்கிடையே உள்ள தொடர்பானது ஒருவரால் புதியதாக உண்டாக்கப்பட்டது அன்று; என்னுடைய முயற்சியினாலே உண்டானதும் அன்று. அப்படி இருந்தால் பிறராலேயோ என்னுடைய முயற்சியினாலேயோ மாற்றிக் கொள்ள முடியும். இந்தத் தொடர்பு உன்னாலே அமைந்தது. ஆதலால் நான் இப்பொழுது ஆள் அல்லேன் என்று சொன்னால் அந்தத் தொடர்பு முறிந்துவிடாது. உனக்கு ஆளாகிவிட்டு, இப்பொழுது அல்லேன் என்று சொல்லலாமா?''

★

பொருளைக் கடன் கொடுத்தான் ஒருவன், அந்தப் பொருளை மீட்டுக்கொள்ளும் வரைக்கும் எப்போதும் அதே நினைவாக இருப்பான். கடன் பெற்றுக்கொண்டவர்கள் அத்தனை நினைவோடு இருப்பதில்லை. தங்களுடைய வறுமையினாலோ, பொல்லாத தன்மையினாலோ தாம் கடன் வாங்கினதை மறந்துவிடுவதும் உண்டு. மறவாமல் இருந்தாலும் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று நினைப்பதில்லை. கடன் கொடுத்தவனோ ஒவ்வொரு கணமும் அது எப்பொழுது திரும்பிவரும், திரும்பிவரும் என்று நினைத்துக்கொண்டே இருக்கிறான். கடன் வாங்கினவன் இல்லை என்று சொல்லி விட்டாலும் கடன் கொடுத்தவன் தன்னுடைய உரிமையை வற்புறுத்துவான். இறைவனிடத்திலே அடிமை பூண்ட உயிர்கள் எல்லாம் அவனை மறந்துவிட்டாலும் இறைவன் அதை வற்புறுத்தும் சந்தர்ப்பம் சிலருக்கு நேர்கிறது. இறைவன் உன்னைத் தடுத்தாட்கொள்ளுவேன் என்று சுந்தரருக்கு முன்பு வாக்குறுதி அளித்திருக்கிறான். நாயனார் அதை மறந்து விட்டாலும், கடன் கொடுத்தவன் தன்னுடைய பொருளைக் கைப்பற்றுவதற்கு நினைந்து முயற்சி செய்வதுபோல இறைவன்

முயற்சி செய்தான்; வலியத் தடுத்து ஆட்கொண்டான். ''நான் உனக்கு முன்பே ஆளாகிவிட்டேன். அந்தப்படி ஆளான திறத்தை நான் மறந்தேனே ஒழிய, அதை விட்டு ஒழிந்தேன் அல்லன். ஆட்கொண்டவனாகிய நீதான் வந்து எனக்கு நினைவுறுத்தினாய். நான் மாட்டேன் என்று சொன்னாலும் நமக்குள் உள்ள உறவு அற்றுப்போகுமா?'' என்று கேட்கிறார் சுந்தரர்.

'வெண்ணெய் நல்லூரில் உள்ள அத்தனே, என்னுடைய அப்பனே, என்னை ஆட்கொண்டவனே, நான் உனக்கு அநாதி காலமாக ஆளாக அமைந்திருக்கிறேன். அப்படி இருக்கையில் இப்பொழுது எதையோ நினைத்துக் கொண்டு அல்லது அதை மறந்துவிட்டு, நான் உனக்கு ஆள் அல்லேன் என்று சொன்னால் அது முறையாகுமா? அது நடக்கக்கூடிய காரியமா? அதைக் காட்டிலும் பேதைமை ஒன்று உண்டா?. என்றெல்லாம் நினைந்து பாடினார் ஆளுடைய நம்பிகள்.

பித்தா!பிறை சூடி!பெரு மானே!அரு ளாளா!
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட் டுறையுள்
அத்தா! உனக்கு ஆளாய்இனி அல்லேன்எனல் ஆமே?

(பித்தனே, பிறையைச் சூடுபவனே, பெருமானே, அருளுடையனே, இப்போது எதனாலும் உன்னை மறவாமல் நினைக்கின்ற அடியேனுடைய மனத்தில் உன்னை வைத்தாய்; பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள வெண்ணெய் நல்லூரில் அருட்டுறை என்னும் ஆலயத்தில் எழுந்தளியிருக்கும் அப்பனே, உனக்கு அடிமையாகிவிட்டு, இப்போது நான் அடிமையல்லேன் என்று சொல்லலாகுமா?

எத்தால்: எ:தால் என்பதன் திரிபு; எத்தாலும் என்பதில் உள்ள உம்மை செய்யுள் விகாரத்தால் மறைந்து நின்றது. நினைக்கின்றேன் - நினைக்கின்றவனாகிய என்னுடைய. இனி - இப்பொழுது. அல்லேன் - ஆள் அல்லேன். ஆமே - ஆகுமா; ஏகாரம் வினாப் பொருளில் வந்தது.)

★

சொல்லாய்க் கழிகின்றது

ஒரு கனவான்; அவர் பலகாலம் தமக்குச் சொந்தமாக ஒரு வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார்; கட்டத் தொடங்கினார். அந்த வீட்டில் எல்லா விதமான வசதிகளையும் அமைக்க முயன்றார். அதன் முகப்பு மிகவும் அழகாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். முகப்பைப் பார்த்த மாத்திரத்தில் யாவரும் வியந்து பாராட்ட வேண்டும் என்பது அவருடைய அவா. அப்படியே நல்ல வாசலாகச் செய்து அற்புதமான சிங்காரங்களை அமைத்துத் தோரணங்களைக் கட்டினார். வீடு கட்டி நிறைவேறியது. நல்ல நாளில் வீட்டுக் குள்ளே புகுந்தார்; அதிலே வாழத்தொடங்கினார்.

அவர் நல்ல ஆடை ஆபரணங்களைப் புனைந்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நித்தம் ஓர் உடை உடுத்து எல்லா மக்களுக்கும் தம்முடைய வள வாழ்வின் பெருமையைக் காட்டிக் கொண்டிருந்தார். அவருடைய உடம்பு வரவரப் பருத்தது.

சில காலம் கழித்து அவருடைய இளமை மாறியது. கரு மயிர் நரைத்தது. உடம்பு மெலிவடைந்தது. யார் யாரோ மருத்துவர்கள் வந்து பார்த்தார்கள்; மருத்துவத்தினாலே தீராத நோய் என்று சொன்னார்கள். கடைசியில் அவர் இறந்து போனார்.

அந்த வீட்டில் அவர் நிரந்தரமாக இருக்கவில்லை. 'நல்ல மாளிகையை அமைத்து அலங்காரமான வாசலைக் கட்டி உள்ளே போய் வந்து நடந்தார். அழகான உடைகளை உடுத்தார். பின்பு இளமை மாறி நரைத்தார். இப்பொழுது இறந்து போனார்' என்று அவருடைய சரித்திரத்தை எல்லாரும் சொல்லிக் கொண்டார்கள்.

அவர் இருந்த காலத்திலே யாவரும் கண்ணாரக் காணும் படியாக நடந்தார்; உடுத்தார்; நரைத்தார். இறந்தபிறகு அவர் செய்தவற்றையெல்லாம் செய்திகளாகப் பேசிக் கொண்டார்கள் மக்கள். இப்பொழுது அவரைப் பற்றியவை எல்லாம் வெறும் வார்த்தைகளாகக் கழிகின்றன. உண்மையான நிகழ்ச்சிகளாக முன்பு இருந்தவை கண்ணிலே காண முடியாமல் இறந்த காலத்துச் செய்திகளாகி, இப்பொழுது வெறும் சொல்லாகி நிற்கின்றன. அந்தச் சொல்லாவது நிலைத்து நிற்கிறதா? அதுவும் இல்லை. இறந்த புதிதில் சில காலம் இறந்தவரைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ''அடடா! என்ன உயர்ந்த மாளிகை கட்டினார்! அந்த அலங்காரமான வாசலைத்தான் எவ்வளவு ஆசையோடு அமைத்தார்! அதற்கு எத்தனை பணம் செலவழித்தார்!'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். பின்பு சில காலம் கழிந்தால் அவருடைய நினைப்பும் மறந்து போகிறது. அவரைப்பற்றிப் பேசுவதும் நின்றுவிடுகிறது. மறுபடியம் புதிதாக இறந்தவர்களைப் பற்றிப் பேசுகிறோம்.

இப்படி அவர் கழிய, அவரைப்பற்றிய செய்திகள் சொல் லாய்க் கழிகின்றன. உலகத்தில் உள்ள எல்லா மக்களுடைய திறத்திலும் இதே நிலையைப் பார்க்கிறோம். இதுதான் வாழ்வு.

நல்வாயில்செய் தார்நடந் தார்உடுத்தார்
நரைத்தார்இறந் தார்என்று நானிலத்தில்
சொல்லாய்க்கழி கின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் இப்படி ஒரு பாட்டில் சொல்கிறார். 'இதனை நான் அறிந்தேன். உலக வாழ்க்கைச் செய்திகளெல்லாம் இறந்த காலத்தில் சொல்லும்படியாக அமைகின்றனவே ஒழிய, எதுவும் நிலையாகச் சொல்லும்படி இருப்பதில்லை. அவ்வாறு இறந்த காலத்தோடு சொல்லும் சொல்லாவது நிற்கிறதா என்றால், அந்தச் சொல்லும் கழிந்துவிடுகின்றது' என்று சொல்கிறார்.

★

உலக வாழ்வின் நிலையாமையைத் தெரிந்துகொண்ட போது, நிலைத்த விலாசத்தோடு நிலையாக வாழ்கிறவன் யார் என்று ஆராய்ச்சி பண்ணத் தோன்றுகிறது. அந்த

ஆராய்ச்சியிலே, யாரும் எளிதில் தட்டுப்படுவதில்லை. எல்லோரும் இப்படியே, 'நல்வாயில் செய்தார், நடந்தார், உடுத்தார், நரைத்தார், இறந்தார்' என்று சொல்லும்படியாகவே, பிறப்பதும் வளர்வதும் வாழ்வதும் இறந்து படுவதுமாகவே இருக்கிறார்கள். ஒருவரும் நிலையானவர் இல்லையா?- இறைவனுடைய அருள் துணை செய்யும்பொழுது, நீடு வாழ்வார் இன்னாரென்ற தெளிவு பிறக்கிறது.

சில காலம் ஓரிடத்தில் வாழ்ந்து பின்பு மறைகின்றவர்கள் மக்கள். அவர்கள் மலத்தோடு சம்பந்தம் உடையவர்கள். அதனால்தான் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். அப்படி இன்றி நீடு உறையும் நின்மலன் ஒருவன் இருக்கிறான். அந்த நின்மலனைத் தெரிந்து கொள்ளும்படி அவனுக்கு ஓர் அடையாளம் இருக்கிறது. அவன் தன் தலையிலே நிலாவைத் தரும் வெண்மதியைச் சூடியிருக்கிறான். மதியை அறிவுக்கு அடையாளமாகச் சொல்வது வழக்கம். இறைவனுடைய திருமுடியிலே சந்திரன் ஒளிர்கின்றான் என்பது, அவன் எப்பொழுதும் ஞானம் நிறைந்தவன் என்பதைக் காட்டுகின்றது. அவன் சூடிய மதியே தேய்வதும் வளர்வதும் இன்றி எப்போதும் இளம் பிறையாக இருக்கிறது. நிலாவை வீசும் வெள்ளை மதியைச் சூடிய நின்மலனாகிய இறைவன் நீடு உறைகின்றான்; தன்னுடைய விலாசத்திலே நெடுங்காலமாக வாழ்கின்றான். 'நல்வாயில் செய்தார், நடந்தார், உடுத்தார், இறந்தார்' என்று சொல்வது போலன்றி, எப்பொழுதும் இருக்கிறான் என்று சொல்லும்படியாக உறைகிறான். அப்படி உறைகிறவனுக்கு, கைலாசம் என்று குறிப்பிட்டுச் சொல்லும் விலாசம் ஒன்று மாத்திரமல்ல; மதுரை, சிதம்பரம் என்று சில விலாசங்கள் மாத்திரமும் அல்ல; அவன் எத்தனையோ இடங்களில் ஒரே சமயத்தில் உறைகிறான். ஒரே இடத்தில் சில காலமே மக்கள் வாழ்கிறார்கள். உயிர்கள் பல பல இடங்களில் மாறி மாறிப் பிறக்கின்றன; பின்பு இறக்கின்றன. இறைவனோ எல்லா இடத்தையும் தன்னுடைய விலாசமாகக் கொண்டு எல்லாக் காலத்திலும் இருக்கிறான்.

எல்லா இடங்களிலும் இருந்தாலும் அவன் மக்களுக்கு அருள் செய்கின்ற சில இடங்களைப் பெரியோர்கள் நமக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவற்றைத்தான் தலங்கள் என்று

சொல்லுகிறோம். ஒரு விலாசத்தை மிகப் பெரியவர்கள் சொன்னால் அது நாலு பேருக்குத் தெரிகிற ஊர் ஆகிவிடுகிறது. எல்லாக் கோயில்களிலும் இறைவன் எழுந்தருளியிருந்தாலும், பெரியோர்களாகிய சமயாசாரியர்கள் தங்களுடைய திரு வாக்காகிய தேவாரம் முதலியவற்றாலே இறைவன் வாழும் இடம் இது என்று ஒன்றைச் சுட்டிக் காட்டும்பொழுது, அந்த இடத்துக்குப் பெருமை அதிகம் ஆகின்றது. பெரியவர்கள் எந்த இடத்தில் அதிகமாகப் பழகுகிறார்களோ அந்த இடத்துக்கு மகிமை மிகுதியாக இருப்பதை உலகில் பார்க்கிறோம்.

சுந்தரமூர்த்தி நாயனாரைப் போன்ற பெரியவர்கள் ஏதேனும் ஒரு தலத்துக்குச் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பணிந்து வழிபட்டுத் தம்முடைய திருவாக்காலே மங்களாசாசனம் செய்துவிட்ட பிறகு அது பலருக்குத் தெரிகின்ற சிறப்பான இடம் ஆகிவிடுகிறது; பாடல் பெற்ற தலம் என்ற முத்திரையைப் பெறுகிறது.

இப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெல்வாயில் அரத்துறை என்ற இறைவன் திருமாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே இறைவன் நீடு உறைகின்றான் என்பதை அறிந்தார். அதற்கு முன்னாலே அவர் அறிந்தது என்ன? 'நல்வாயில் செய்தார், நடந்தார், உடுத்தார், நரைத்தார், இறந்தார்' என்று பிற மக்களைப்பற்றி நானிலத்தில் உள்ள எல்லோரும் சொல்லிச் சொல்லி, அந்தச் சொல்லும் அப்பால் கழிந்துவிடுகிறதை அறிந்தார். அதற்கு மேலே நெல்வாயில் அரத்துறையில் நீடு உறைகின்ற நிலா வெண்மதி சூடிய நின்மலன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும் நன்றாக அறிந்தார். 'அந்த விலாசத்தைத் தெரிந்து கொண்டாயிற்று; அந்த இடம் எத்தகையது என்று பார்க்க வேண்டாமா?

⋆

வீட்டின் விலாசம் தெரிந்துவிடுகின்றது. வீட்டை விசாரித்துக் கொண்டு வீதியிலே செல்கிறோம். அது வரைக்கும் அதனுடைய எண்ணை மாத்திரம் தேடிக் கொண்டு வந்த நாம், வீடு தெரிந்த பிறகு உள்ளே புகுந்து அங்கே இருக்கிற அழகான அறைகளையெல்லாம் பார்க்கிறோம். 'எவ்வளவு விசாலமான கூடம்! எத்தனை அறைகள்! அவற்றில் உள்ள அலங்காரங்கள்

என்ன!' என்று எல்லாவற்றையும் பார்த்து மாளிகையின் அழகைக் கண்டுகளிக்கின்றோம். அப்படியே சுந்தரமூர்த்தி நாயனார் நெல்வாயில் அரத்துறை என்னும் இடத்துக்கு வந்து ஆண்டவன் நீடு உறைகின்ற தலமென்று அறிந்து, பார்க்கிறார். நெல்வாயில் என்பது தலத்தின் பெயர்; அரத்துறை என்பது கோயிலின் பெயர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்தத் தலத்தின் அழகையெல்லாம் பார்க்கிறார்.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்"

என்று பாட்டி சொல்லியிருக்கிறாள். இந்தத் தலம் அழகுடைய ஊர்; ஆறு உள்ள ஊர்.

இங்கே வெள்ளாறு என்ற ஆறு ஓடுகிறது. அதை நிவா என்றும் சொல்லுவார்கள். அந்த வெள்ளாற்றின் கரையின்மேல் நெல்வாயில் அரத்துறை அமைந்திருக்கிறது.

வெள்ளாறு அந்த ஊரிலே தோன்றி நின்றுவிடுவதா? இல்லை. அது மலையிலே பிறந்து இடையிலே பல காடுகளை யெல்லாம் கடந்து நெல்வாயிலையுந் தாண்டிச் செல்கிறது. மலையிலிருந்து வருவதற்கு அடையாளமாக அதில் உள்ள ப்ண்டங்களை அது அடித்து வருகிறது; மலையிலே வளர்கிற பொருள்கள் பல; அவற்றில் அகில் ஒன்று. இயற்கையிலே மலையில் இருக்கின்ற பொருள்கள் பல; மணிகள், வைரங்கள் அங்கே நிறைந்திருக்கின்றன. கல்லுக்கு இடையிலே வளர்ந்திருக்கின்ற அகிலை அரித்துக் கொண்டு நிவா என்ற வெள்ளாறு வருகிறது. அது மாத்திரமா? ஒளி வீசக்கூடிய மணிகளையுங் கொண்டு வேகமாக வருகிறது.

கல்வாய் அகிலும் கதிர்மா மணியும் கலந்து உந்தி.

அத்தகைய நிவாவின் கரையின்மேல், நெல்வாயில் அரத்துறையிலே நெடுங்காலமாக உறைகின்ற நின்மலனாகிய நிலா வெண்மதி சூடியைப் பார்த்துச் சுந்தரர் பேசுகிறார். பிறைசூடியைப் பார்த்துப் பேசுவதிலே அவருக்கு எப்பொழுதும் விருப்பந்தானே? அவனிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறார். 'உலகத்தில் யார் யாரையோ போய்க் கண்டேன். அவர்களுடைய செய்தியைக் கேட்டேன். அவர்களெல்லாம் வாழ்ந்தார்கள்; செத்தார்கள் என்று

கேட்கிறேனே ஒழிய, வாழ்ந்து நிலையாக உறைகிறார்கள் என்று கேட்கவில்லை. நிலையாக உறையும் நின்மலன் நீ என்று அறிந்தேன். உன்னிடத்தில் இப்பொழுது வந்தேன். உன்பால் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். அடியேன் உன்னைத் தொடர்ந்தேன். நான் மற்றவர்களைப்போல் வாழ்ந்து இறந்து படாதவாறு உய்வதற்குரிய வழியை நீ சொல்லவேண்டும்' என்று கேட்கிறார்.

....அடியேன் தொடர்ந்தேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே.

★

இறைவன் ஒருவன்தான் நிலையாக இருப்பவன் என்பது முதலில் அவ்வளவு சிறப்பாகத் தெரியாது. உலகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையாதது என்பதே முதலில் கண்கூடாகத் தெரியும். அதன் பிறகே இறைவனைத் தொடரும் முயற்சி எழும். அவனைத் தொடர்ந்து உய்யவேண்டும் என்ற ஆர்வமும் உண்டாகும்.

கல்வாய்அகி லும்கதிர் மாமணியும்
கலந்துந்தி வரும்நிவ வின்கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுறையும்
நிலவெண்மதி சூடிய நின்மலனே!
நல்வாயில்செய் தார்நடந் தார்உடுத்தார்
நரைத்தார்இறந் தாரென்று நானிலத்தில்
சொல்லாய்க்கழி கின்றது அறிந்தடியேன்
தொடர்ந்தேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே.

(கல்லினிடையிலே வளர்ந்த அகிலையும் ஒளியை வீசும் பெரிய வைரம் முதலிய மணிகளையும் கலந்து தள்ளிக்கொண்டு வரும் வெள்ளாற்றின் கரைமேல் திருநெல்வாயில் அரத்துறையில் நெடுங்காலமாக எழுந்தருளியிருக்கும், நிலாவை வீசும் வெள்ளைச் சந்திரனைத் திருமுடியில் வைத்திருக்கும் தூய பெருமானே! 'நல்ல வாயிலை அமைத்தார்; வீட்டுக்குள் நடந்தார்; வேண்டிய உடைவகைகளை உடுத்தார்; பிறகு மயிர் நரைக்கலானார்; முடிவில் இறந்தார்' என்று உலகத்தில் வாழ்வானது வெறும் சொல்லாகிப் பின்பு அச் சொல்லும் கழிவதை அடியேன் அறிந்து நின்னைத் தொடர்ந்து

புகலாகப் புகுந்தேன். நான் உறுதி பெற்று உய்யப் போவதற் குரியதாகிய ஓரிடத்தைச் சொல்.

கல்-பாறை. மா-பெரிய. நிவா என்றது நிவவு என்று வந்தது, நிலா நிலவு என்று வந்தது போல. நீடு-நெடுங்காலம். நிலா என்பது நில என்று செய்யுளிற் குறைந்து வந்தது. நின்மலன்-மலம் அற்றவன்; இறைவனாகிய பதி இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கினவன். வாயில்-வீட்டு வாயில்; வாயில் செய்தார் என்றாரேனும் வீட்டைக் கட்டியதையே கருதினார். நானிலம்-உலகம்; நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகையாகப் பிரித்துச் சொல்வது தமிழ் மரபு. பாலை என ஒன்று இருப்பினும் அது இயற்கையான நிலப் பகுதி அன்று; சில காலத்தில் சில இடங்களில் பாலைத் தன்மை உண்டாகும். இயற்கையாக இருப்பவை பாலையைத் தவிர மற்ற நான்குமேயாகும். அதனால் நிலத்தை நானிலம் என்று சொல்வது தமிழில் ஒரு மரபாகிவிட்டது. சொல்லாய்க் கழிகின்றது. சொல்லாகி வீணாகின்றது. கழிகின்றது என்பதற்கு வாழ்க்கை என்ற எழுவாயை வருவித்துக்கொள்ளவேண்டும். சூழல்-இடம். இடம் என்றது நிலப் பகுதியை அன்று; 'யாரிடம் போவேன்?'' என்று கேட்பதுபோல, 'எவ்விடம் செல்வேன்' என்று கேட்கிறார்.)

'நான் உய்வதற்குரிய இடம் வேறு இல்லை' என்பது குறிப்பு.

திருநெல்வாயில் என்பது நடுநாட்டில் உள்ள தலம்.

இது ஏழாந் திருமுறையில் மூன்றாம் திருப்பதிகத்தில் உள்ள முதற்பாட்டு.

★

நம்மால் முடியாது

ஒரு கருத்தைச் சொல்லும்போது அழகாகச் சொல்வது கவிஞரின் இயல்பு. ஒன்றையே வெவ்வேறு வகையாகச் சொல்வார்கள். இறைவனைப் புகழும் துதிகள் தமிழில் எவ்வளவோ இருக்கின்றன. அவை யாவும் ஒரே மாதிரி இருந்தால் சுவை உண்டாகாது. நம்முடைய துன்பங்களை எடுத்து முறை யிடுவது, இறைவனுடைய பெருமையை எடுத்துச் சொல்வது, அவனுடைய திருவிளையாடல்களைச் சொல்வது-இப்படிப் பல வகையில் இறைவனுடைய துதிகள் இருக்கின்றன.

தேவாரத்திலும் பலவகையான துதிகளைக் காணலாம். இறைவனை முன்னிலைப்படுத்திச் சொல்வது, படர்க்கையாக வைத்துச் சொல்வது என்று வெவ்வேறு வகையில் அமைந்த பாடல்கள் உள்ளன.

சில இடங்களில் இறைவனை இகழ்வதுபோலத் தோற்றும் பாடல்களும் இருக்கின்றன; ஆனால் அவை மறை முகமாக அவனுடைய புகழைச் சொல்லுவனவேயாகும். அவற்றை நிந்தாஸ்துதி என்று வடமொழியிலும், பழிப்பது போலப் புகழ்தல் என்று தமிழிலும் சொல்வார்கள். அப்படிச் சொல்வது ஓர் அலங்காரம்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுக்குத் தோழராக இருப்பவர். தம்பிரான் தோழர் என்பது அவருடைய பெயர் களில் ஒன்று. இறைவனை மிக எளியவனாக எண்ணிச் சில பாடல்களைப் பாடியிருக்கிறார். இறைவனிடம் மிக நெருங்கிக் கூறும் முறையில் அவை அமைந்திருக்கும். தமக்கு வேண்டிய பொருள்கள் இன்னவையென்றும், அவற்றை உடனே தந்தருள வேண்டுமென்றும் பாடுவார். இன்னும் சில பாடல்கள் இறைவனைப் பரிகாசம் செய்வது போலவும் அமைந்திருக்கும்.

இவையாவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனிடத்தில் கொண்ட தோழமைக்கு அறிகுறிகள்.

வேடிக்கையாக அமைந்த பாட்டு ஒன்றை இப்போது பார்க்கலாம்.

★

ஒரு குடும்பத்தில் வேலை செய்வதற்காக ஒருவன் போகிறான். போய்ச் சில காலம் வேலை செய்கிறான். பிறகு அந்த வீட்டில் வேலை செய்யத் தன்னால் முடியாது என்று கருதி விட்டுவிட்டு வந்துவிடுகிறான். அவனை அவனுடைய நண்பன் கண்டு, ''ஏன் அப்பா, அந்த வீட்டை விட்டு வந்து விட்டாய்?'' என்று கேட்கிறான். ''நமக்கும் அந்த வீட்டுக்கும் சரிப்பட்டு வராது; நம்மால் அங்கே வேலை செய்ய முடியாது'' என்று அவன் சொல்லுகிறான். ''அதற்கு என்ன காரணம்?'' என்று அடுத்தபடி கேள்வி வருகிறது. அதற்கு அவன் விரிவாகத் தான் பட்ட அநுபவங்களைச் சொல்லுகிறான்.

''அந்த வீட்டிலே எஜமானருக்கு இரண்டு பெண்டாட்டிகள். இரண்டு பிள்ளைகள் வேறு. 'வேலைக்காரனுக்கு வயிறு இருக்கிறது; உணர்ச்சி இருக்கிறது; அவனுக்கும் வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டிய சுகங்கள் இருக்கின்றன' என்பதைக் கொஞ்சங்கூட நினைக்காமல் அங்கே இருக்கிறவர்களெல்லாம் வேலை வாங்கினார்கள். ஆனால் எனக்கு என்ன வேண்டுமோ அதைக் கவனிக்கவே இல்லை. ஒரு மனைவி வாயே பேசுவதில்லை; ஆனால் பெரிய ஆரவாரம் செய்வாள். ஒரு பையன் தனக்கு வேண்டியதை வேண்டிமட்டும் வாங்கி வாங்கிச் சாப்பிடுவான்; வேலைக்காரனுக்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டுமே என்கிற நினைவே இராது. மற்றொரு பிள்ளையோ பார்த்தாலே பயப்படும்படி கையிலே ஆயுதத்தை வைத்துக் கொண்டிருப்பான். அவருடைய முதல் பெண்டாட்டி, செய்த வேலைக்குத் தக்கபடி கூலி கொடுக்கமாட்டாள். மாத மாதம் சம்பளங் கொடுக்க வேண்டுமே, அதற்கே தகராறு.

''அந்த வீட்டில் இருக்கிற அத்தனை பேரும் என்னுடைய நன்மையைக் கவனிக்காமல் தங்கள் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். நான் அங்கே எப்படி

வேலை செய்வது? எனக்கு வேண்டிய பொருள்களை எப்படிப் பெறுவது? சம்பளமும் கிடையாது; சாப்பாடுங் கிடையாது; வேறு நன்மைகளும் இல்லை. ஆகையினாலேதான் நான் விட்டு வந்துவிட்டேன்'' என்று அவன் சொன்னான்.

இப்படிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப் பார்த்துப் பேசுகிறார்; ''சுவாமி, உங்களுக்கு நானும் என்னைச் சார்ந்த அடியார்களும் ஆட்செய்ய மாட்டோம்'' என்று சொல்லுகிறார். ஓணகாந்தன் தளி என்ற திருக்கோயிலுக்குச் சென்றபோது இறைவனைத் தரிசித்துத் தேவாரம் பாட ஆரம்பித்தார். அப்பொழுது அவருடைய உள்ளத்திலே பரிகாசமாகப் பாட வேண்டும் என்று தோன்றியது போலும்! பழிப்பது போலப் புகழும் துறையிலே பாட ஆரம்பிக்கிறார்.

'ஓணகாந்தன் தளிஉளீரே!
உங்களுக்கு ஆட் செய்யமாட்டோம்.

காஞ்சீபுரத்தில் இருப்பது ஓணகாந்தன் தளி. செய்ய மாட்டோம் என்று தம்மையும் தம்மைச் சார்ந்த அடியார்களையும் சேர்த்துச் சொல்லுகிறார். என்ன காரணம்?

★

உம்முடைய தலையின்மேல் ஒருத்தி இருக்கிறாள். அந்தப் பெருமாட்டி வாயே திறப்பதில்லை. ஆனால் அவள் வரும்போதே ஆரவாரம் பெரிதாக இருக்கும். அழகான உம்முடைய சடா பாரத்திலே ஒளி வீசுகின்ற திங்களை வைத்திருக்கின்றீர். அதற்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அந்தப் பெருமாட்டி அலைக் கரங்களை வீசி ஆரவாரஞ் செய்கிறாள். என்னைக் கண்டால், உனக்கு என்ன வேண்டும், சாப்பிட்டாயா என்று கேட்பதே கிடையாது. வாயை மூடிக் கொண்டிருக்கிறாள். அவளாலே எனக்கு ஒரு பயனும் இல்லை.

திங்கள் தங்கு சடையின் மேல்ஓர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய் திறவாள்.

அடுத்தபடியாக உம்முடைய பிள்ளை ஒருவர் வாசலிலே உட்கார்ந்திருக்கிறார். எப்பொழுது போனாலும் அவர் தம்முடைய

வயிற்றைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். எந்தப் பண்டம் வந்தாலும் சரி, தம்முடைய வயிற்றுக்குள்ளே போட்டு கொள்வதற்கு அவர் சித்தராக இருக்கிறார். அவருக்கு எத்தனை கொடுத்தாலும் போதாது. அவரிடமிருந்து நான் எதையாவது வாங்கிக்கொள்வது என்பது சாத்தியமா? அவர் வயிறு மிகப் பெரிது. தம் வயிற்றுக்குப் போடும் திறத்தில் அவர் மகா உதாரியாக இருக்கிறார். மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு மனம் வராதே ஒழியத் தம்முடைய வயிற்றிலே தள்ளுவதற்கு அவர் கை தாராளமாக வரும். ஒரு கைக்கு ஐந்து கை படைத்திருக் கிறார். அதில் ஒரு கை மிக நீண்ட கை. அந்தக் கணபதி யினிடத்திலே நான் என்ன நன்மையைப் பெற முடியும்?

கணபதியேல் வயிறு உதாரி.

அடுத்தபடி ஒரு பிள்ளை; அவனுக்குக் குமரன் என்று பெயர். அவன் பக்கத்திலே போக முடியாது. எப்போதும் கையில் வேலை வைத்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே போனால் அந்த வேலைப் பதம் பார்த்து விட்டால் என்ன செய்வது? அருகிலே போய் எனக்கு இது வேண்டும் என்று கேட்ட பிற்பாடல்லவா நன்மை கிடைக்கும்? கண்டவர் களெல்லாம் அஞ்சும்படியான கோலத்தில் அவன் இருக் கிறானே. ஆகவே அவனாலும் நன்மை கிடையாது.

அங்கை வேலோன் குமரன் பிள்ளை.

இவ்வளவு இருக்கட்டும்; வீட்டிலே உள்ள பிள்ளைகள் பராமுகமாக இருந்தாலும் மற்றவர்கள் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். முக்கியமான தலைவி, அந்த வீட்டுக்குச் சொந்தக்காரி, கவனிப்பதாக இருந்தால் அவர்கள் எப்படி இருந்தாலும் இந்த அம்மாளுடைய தயவினாலே உய்யலாம் என்று நினைக்கலாம். ஆனால் இங்கே, அந்தத் தேவி என்ன செய்கிறாள் தெரியுமா? வேலை வாங்கிக் கொள்வதிலே கெட்டிக்காரி. ஆனால் சம்பளம் கேட்டால் கொடுப்பதில்லை.

வேலைக்குத் தக்க கூலி கொடுக்கவேண்டாமோ? கூலிக்குக் கொற்று என்று பழங்காலத்திலே பெயர். கொற்றன் என்ற பெயரே அன்றன்று கூலிவாங்குகிறவனுக்குப் பெயர். கொற்று என்ற சொல்லிலிருந்து அந்தப் பெயர் வந்தது. அந்தக்

கொற்றுக் கொடுத்தால் வேலை நடக்கும். இந்தத் தேவியோ வேலை வாங்கிக் கொள்கிறாள்; கொற்றுத் தருவதில்லை.

கொற்றளந்த நாயகி என்று ஒரு தலத்திலே அம்மைக்குப் பெயர் உண்டு. அன்றன்றைக் கூலியை எம்பெருமாட்டி அளிக்கிறாள் என்ற நினைவோடு பெரியவர்கள் அந்த நாமத்தை வைத்திருக்கிறார்கள், அவனவன் செய்கிற நல்ல தொண்டுக்கு ஏற்றபடி எம் பெருமாட்டியாகிய அருட்சக்தி வேண்டிய போகங்களைப் படியளக்கிறாள் என்பதையே கொற்றளந்த நாயகி என்ற திருநாமம் புலப்படுத்துகிறது.

ஓணகாந்தன் தளியிலே இருக்கிற எம்பெருமாட்டி, கொற்று அட்டி ஆள்வதில்லை. வேலை கொடுப்பாளே தவிரக் கூலி கொடுத்து நம்மை ஆட்கொள்ள மாட்டாள். வேலையை வாங்கிக்கொண்டு கூலிகொடுக்காமல் இருந்தால் வேலைக்காரன் வயிறு காய்வதா?

தேவியார் கொற்று அட்டி ஆளார்.

இப்படி, வாய் திறக்காத பெண்டாட்டி ஒருத்தி, வருகிற பொருளையெல்லாம் தன்னுடைய வயிற்றுக் குள்ளே அள்ளிப் போடுகிற பிள்ளை ஒருவன், எப்பொழுதும் கையிலே வேலை வைத்துக்கொண்டு பயமுறுத்தும் பிள்ளை ஒருவன், இவர்களுக்கு மேலாக எவ்வளவு வேலை வாங்கினாலும் கூலி கொடுக்காமல் ஏமாற்றுகிற பெருமாட்டி-இவர்களெல்லாம் இருக்கிற குடும்பத்திலே வேலைக்காரன் ஒருவன் அகப்பட்டுக் கொண்டால் அவன் என்ன ஆவான்? அவன் உடம்பு என்ன கல்லா? அவன் மனசு இரும்பா? அங்கே வேலை செய்யத் தோன்றுமா? ''உமக்கு வேலை செய்ய நம்மாலே முடியாது'' என்று வேலைக்காரன் சொல்வதுபோல் சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகிறார்.

திங்கள் தங்கு சடையின் மேல்ஓர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு உதாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கொற்று அட்டி ஆளார்

உங்க ளுக்கு ஆட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளிஉ ளீரே!

(ஓணகாந்தன் தளியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! சந்திரன் தங்கியிருக்கும் சடையின்மேல் அலைகள் வந்து புரளும்படியாக வீசுகின்ற ஒப்பற்ற கங்கையென்னும் பெண்மணி வாயைத் திறக்கமாட்டாள். கணபதி தன் வயிற்றைப் பொறுத்த மட்டில் உதாரமாக இருக்கிறவன். குமரனாகிய பிள்ளை அழகிய கையிலே வேலைப் பிடித்திருக்கிறான். தேவியார் கூலியைக் கொடுத்து ஆட்கொள்ள மாட்டார். இந்தக் குடும்பத்தில் உங்களுக்கு ஆளாக இருந்து தொண்டு செய்யமாட்டோம்.

ஓர் கங்கையாள் என்று கூட்டவேண்டும். கங்கையாளேல்-கங்கையாளாயின். உதாரி-எல்லையின்றி அளிப்பவன். வேலோன்-வேலைப் பிடித்திருப்பவன்; குமரனாகிய பிள்ளை. கொற்று-கூலி. அட்டி-தந்து. ஆளார்-ஆளாகக் கொள்ளார்.)

★

பாடுதல் ஒழியேன்

இறைவனுடன் தோழமை பூண்ட சுந்தரமூர்த்தி நாயனார் சில சமயங்களில் அவர்பால் சினம் உடையவரைப் போலப் பாடுவதும் உண்டு. திருநாட்டியத்தான் குடி என்ற தலத்திற்கு அவர் சென்றார். அது சோழ நாட்டில் உள்ளது. அங்கே எம்பெருமான் இரத்தினகிரி நாதன் என்ற திருநாமத்தோடு எழுந் தருளி யிருக்கிறான். தேவியாருடைய திருநாமம் மலர் மங்கை யம்மை என்பது. அங்கே போய்ச் சற்றுச் சினங் கொண்டவர் போலப் பாட ஆரம்பிக்கிறார். ''நான் தேவரீரை அடிக்கடி நினைந்து கொண்டும் அணுகிக்கொண்டும் பணிந்து கொண்டும் இருக்கிறேன். ஆனால் தேவரீர்தாம் என்னைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறீர்'' என்ற கருத்திலே அவர் பாடலானார்.

★

இறைவனே, கண்டாலே அஞ்சி அகன்று போவதற்குரிய பொருள்கள் உன்னிடம் இருக்கின்றன. அவற்றைக் கண்டு அஞ்சி நான் உன்னை விட்டுச் செல்லமாட்டேன். உன்னுடைய உண்மையான பெருமையை உணர்ந்தவன் நான். புறத் தோற்றத்தைக் கண்டு அஞ்சுபவன் அல்ல.

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பார்கள். உன்னுடைய திருமேனியில் பாம்பையே ஆபரணமாக அணிந்து கொண்டிருக் கிறாய். இடையிலே கட்டிய நாணும் பாம்புதான். உன்னுடைய பூணும் நாணும் பாம்பாக இருப்பதைக் கண்டால், ''ஐயோ, பாம்புகள் நிரம்ப இருக்கின்றனவே!'' என்று உன்னை அணுகுவதற்கே மற்றவர்கள் அஞ்சுவார்கள். அவர்கள் அஞ்சிச் செல்லச் செல்ல நீ அரிய பொருளாக விளங்குகிறாய். மற்றவர்களெல்லாம் அஞ்சும்படியும் அணுக இயலாதபடியும் உன் இயல்புகள் இருக்கின்றன. நான் உன்னுடைய உண்மைப் பெருமையை நன்கு உணர்ந்தவனாகையினால் இவற்றை யெல்லாம் கண்டு அஞ்சுவதில்லை.

பூண் நாண் ஆவதோர் அரவம்கண்டு அஞ்சேன்.

நீ சுடுகாட்டில் நடமாடுகிறாய். சுடுகாட்டுக்குச் சென்றால் வீட்டுக்குள்ளே நுழையும் வழக்கமில்லை; நீராடி விட்டுத்தான் வர வேண்டும். அது தவிர, சுடுகாடு என்று சொன்னாலே மக்களுக்கு அச்சம் உண்டாகிறது. அங்கே பிணம், பேய், பூதம் ஆகியவை இருப்பதாக நினைக்கிறார்கள். நீ அங்கே ஆடல் செய்கின்றாய் என்பதை நன்கு தெரிந்துகொண்டுங்கூட உன்னிடத்தில் எனக்கு இகழ்ச்சியான எண்ணம் உண்டாக வில்லை.

புறங்காட்டு ஆடல்கண்டு இகழேன்.

பாம்பைக் கண்டு அஞ்சாமல் உன்னைக் குறுகினாலும், புறங்காட்டிலே எல்லாரும் இகழும்படியாக ஆடல் செய் கின்றாய் என்பதை நினையாமல் உன்னை அணுகினாலும் நீ என்னிடத்திலே அன்போடு இருப்பதில்லை. 'மற்றவர்கள் இவற்றைக் கண்டு இகழ்ந்து போய்விடுகிறார்கள். இவன் நம்மிடம் அன்போடு அணுகுகிறானே!' என்று எனக்குச் சற்றே கருணை செய்கிறாயா? இல்லை. பராமுகமாக இருக்கிறாய். அப்படிப் பேணாமல் இருந்தாலும்கூட மறுபடியும் நான் உன்னை விடாமல் அணுகுகிறேன். உன்னுடைய உண்மையான பெருமையை நான் உணர்வேன். நான் உன்னை விட்டுவிட்டால் அதனாலே உனக்கு யாதொரு குறையும் இல்லை; எனக்குத்தான் நஷ்டம். உன் பெருமையையும் என் சிறுமையையும் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். அது காரணமாகவே உன்னை எப்போதும் நினைக்கிறேன். நீ என்னைப் பேணாமல் புறக்கணித்தாலும் நின் பெருமையை நினைக்கிறேன்; நின்னைக் குறை கூறுவது இல்லை. தமக்கு ஒருவர் நன்மை செய்தால் அவரைப் பெருமையை உடையவராக நினைப்பதும், தம்மைக் கவனிக்காமல் பராமுகமாக இருந்தால் அவர் பெருமையை மறந்து இழிவாக நினைப்பதும் உலகில் சிலருடைய இயல்புகள். உன் பெருமையை, அவ்வாறு இன்றி நீ என்னைக் கவனிக்காவிட்டாலும், நான் மறக்க மாட்டேன்; அதை நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

பேணீர் ஆகிலும் பெருமையை உணர்வேன்.

★

பக்தர்கள் தாம் மீட்டும் இந்த உலகில் பிறக்கும் பிறவி வராமல் இருப்பதற்காக உன்னைப் பணிகிறார்கள்; தியானிக் கிறார்கள். பிறவாமையாகிய பயனை அடைய அவர்களுடைய தியானம் பயன்படுகிறது. நான் உன் அருளால் பிறக்க மாட்டேன். இந்த உறுதி எனக்கு இருக்கிறது.* பிறவாமைக்கு உரிய துணையாக இருப்பது உன் தியானம். 'அது கிடைத்த பிறகு இந்தத் துணை எதற்கு?' என்று நான் எண்ணவில்லை. நான் இனிப் பிறக்க மாட்டேன் என்று தெரிந்தும் உன்னை மறக்கமாட்டேன். ஒரு பயனைக் கருதி நினைக்கும் நினைப்பு அல்ல இது.

பிறவேன் ஆகிலும் மறவேன்.

நான் எந்த எந்தத் தலங்களுக்கோ வந்து உன்னைக் காண்கிறேன்; எங்கே எங்கே எப்படிக் காணவேண்டுமோ அப்படிக் காண முந்துகிறேன். ஆனால் நீயோ என்னைக் கண் எடுத்தும் பார்க்கவில்லை. நீ பார்க்கவில்லை என்பதனால் நான் உன்னைக் காணாமல் இருப்பதில்லை. மீண்டும் மீண்டும் உன் தரிசனத்தை அவாவிச் செல்கிறேன்.

காணீ ராகிலும் காண்பன்.

என்னுடைய மனத்தில் பிற பொருள்களிலே பற்று உண்டானால் உன்னை நினைக்க முடியாது. நானோ மற்றப் பற்று ஒன்றும் இல்லாமல் உன்னையே நினைத்துக்கொண்டிருக் கிறேன்.** இப்படி நான் இருப்பினும் உன்னுடைய திருவுள்ளத்திலே எளியேனுடைய நினைவு இருப்பதாகத் தோன்றவில்லை. அப்படி அதனை உணர்ந்தும் நான் உன்னை மறப்பதில்லை; என் மனத்தால் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். பிறிதொன்றை நினைப்பதில்லை; நினைத்தாலும் அது உன்னோடு தொடர் புடையதாகவே இருக்கும்.

---

* *"பெற்றலும்பிறந் தேன் இனிப்பிற வாத நன்மைவந் தெய்தினேன்" என்று வேறிடத்திலும் சொல்கிறார்.*

** *"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்" என்பது சுந்தரர் வாக்கு.*

என் மனத்தால், கருதீராகிலும் கருதி.

(கருதீராகிலும் என் மனத்தால் கருதி என்று கூட்ட வேண்டும்.)

நீ என்னைக் காண்பதில்லை; என்னை நினைப்பதில்லை; நான் காணும்படியான அழகான கோலத்தில் இருப்பதில்லை. ஆனாலும் நான் உன்னைக் காணுகிறேன்; கருதுகிறேன். அது மாத்திரமா? உன்னை நினைப்பதனாலும் காண்பதனாலும் என்பால் உண்டாகும் உணர்ச்சியை வடித்துப் பாட்டாகப் பாடிக்கொண்டே இருக்கிறேன். உன்னைக் கண்டால் உன்னுடைய கோலத்தைப்பற்றிப் பாடுகிறேன். உன்னை நினைத்தால் உன்னுடைய பெருமையைப்பற்றிப் பாடுகிறேன். பாடுவதே என்னுடைய வேலையாக இருக்கிறது. அந்த வேலையைத்தானே செய்யச் சொன்னாய்? நீ அப்படிக் கட்டளையிட்டமையினாலே, அந்தக் கட்டளைக்கு இணங்கி, உன்னுடைய அடியைப் பாடுதலை நான் ஒருநாளும் ஒழியவில்லை.

நானேல் உன்அடி பாடுதல் ஒழியேன்.

★

உலகத்தில் உள்ள பொருள்கள் நம்முடைய பொறிகளை ஈர்க்கின்றன. அழகிய பொருள்கள் பல நம் கண்களைக் கவர்கின்றன. உலகத்துப் பொருள்களின் அழகிலே மயங்கின நமக்கு இறைவன் அழகனாக வந்தாலே கவர்ச்சி தோன்றாது. பாம்பை அணிந்துகொண்டு வந்தால் நாம் எங்கே காணப் போகிறோம்? அவனுடைய உண்மையான பெருமையை நன்கு உணர்ந்தவர்கள் அவனிடம் அன்பு கொள்வார்கள். அந்த அன்பினால், அவன் எப்படி இருந்தாலும் அவனைச் சார வேண்டும் என்று நினைப்பார்கள். இதுதான் உண்மையான பக்தர்களுடைய இயல்பு. அழகான பொருளைக் கண்டு அதனிடம் செல்வது குழந்தைகளின் இயல்பு. உலகிலுள்ள எல்லோரும் கண்ணுக்கு அழகான பொருளைக் காதலிப்பார்கள்.

இறைவன் நல்ல பக்குவம் உடையவர்களுக்கு அருள் செய்யவேண்டும் என்ற நினைப்பினால் மக்களுடைய மனத்தைக் கவராத வகையில் கோலம் கொள்கிறான். தன்

திருமேனியிலே பாம்பை அணிந்திருக்கிறான். அதைக் கண்டு ஏமாந்து போகிறவர்க்ள் பலர். பாம்பு பூண்ட திருமேனியை நத்திச் செல்பவர் யார்?

எல்லாருக்கும் வாழ அழகான இடங்களைக் கொடுத்துத் தான் மாத்திரம் எல்லாரும் பயப்படுகின்ற இடத்திலே குடி இருக்கிறான், இறைவன். யாவருக்கும் அழகான அணிகளை யெல்லாம் கொடுத்துவிட்டுத் தான் மட்டும் நஞ்சுடைய நாகத்தைப் புனைந்திருக்கிறான். மிகப் பெரியவர்கள் பலருக்குப் பயன்படுகிற பொருள்களைத் தாம் பயன்படுத்திக் கொள்ளாமல் பிறருக்கே பயன் படும்படியாகச் செய்வார்கள்; மற்றவர்கள் பயன்படுத்தியது போக எஞ்சியதை உபயோகப்படுத்துவார்கள். ஒரு வீட்டிலே இருக்கிற தாய் தன்னுடைய கணவனுக்கும் குழந்தைகளுக்கும் நல்ல உணவுப் பொருளைக் கொடுத்து விட்டு எஞ்சியிருப்பது வண்டலாக இருந்தாலும் கருகலாக இருந்தாலும் உண்ணுவது இயல்பு. அது அவளுடைய உண்மை அன்பினால் விளையும் செயல். அவ்வாறே எல்லாப் பொருள்களையும் உலகத்தில் உள்ள ஆருயிர்கள் நுகரும்படி படைத்தான் இறைவன். அழகான பொருள்களை அந்த மக்களும் தேவர்களும் அணிந்து கொள்ளச் செய்தான். தான் மாத்திரம் நஞ்சுடைய நாகத்தை அணிகிறான். பெரிய பெரிய இடங்களை, அழகான இடங்களை, அவர்களுக்குக் கொடுத்து விட்டுத் தான் மாத்திரம் சுடுகாட்டில் இருக்கிறான்; அங்கே ஆடுகிறான்.

சுடுகாட்டிலே ஏன் ஆடவேண்டும் இறைவன்? அங்கேதான் மக்களுக்கு நிலையாமை புலப்படும். எங்கே அவர்கள் நிலையாமையை உணருகிறார்களோ அந்த இடத்திலே ஆண்டவனுடைய அருள் தோன்றும். அதனால்தான் புறங் காடாகிய சுடுகாடு இறைவனுக்கு ஏற்ற கோயிலாகிறது. எத்தனையோ வகையான நிலையில் இருக்கிற மக்கள் நன்றாக வாழும்போது இறைவனை நினைக்கமாட்டார்கள்; தம்முடைய வாழ்வு நிலையாதது என்றும் நினைப்பதில்லை. ஆனால் யாரேனும் ஒருவர் இறக்கும்போது பிணத்தோடு சுடுகாட்டுக்குப் போனால், ''நாளைக்கு நாமும் இப்படித்தான் இறப்போம்''

என்ற நினைப்பு வருகிறது. யாராக இருந்தாலும் புறங்காட்டில் உலகம் நிலையாது, உடம்பு நிலையாது என்று தெரிந்து கொள்கிறார்கள். அது ஒருவகை ஞானந்தானே?

புறங்காட்டில் முதலில் உடம்பின் நிலையாமை தோன்றுகின்றது; இந்த உயிர் உடம்பிலிருந்து போய்விடும் என்ற பயம் உண்டாகிறது. அதன் பின்பு நமக்குத் துணையாக இருப்பவன் ஆண்டவன் என்ற பக்தி எழுகிறது. பயத்துக்குப் பின் உண்டாகும் பக்திதான் சிறப்பாக நிற்கும். பயபக்தி சுடுகாட்டில் எழுகிறது. எங்கே இறைவனிடம் பக்தி உண்டாகிறதோ அந்த இடம் கோயிலுக்குச் சமமானது.

இறைவனிடம் எவை இகழ்ச்சிக்கு உரியனவாக மற்றவர்களுக்குத் தோன்றுகின்றனவோ, அவை உண்மையை உணர்ந்து அன்பு செய்கிறவர்களுக்கு வேறு விதமாகத் தோன்றும்; இறைவனுடைய உண்மை இயல்புகளை அவை உணர்த்துகின்றன என்று தெரியும். அப்படித் தெரிந்து கொண்டவர் சுந்தரர்.

பூண்நாண் ஆவதோர் அரவம்கண்டு அஞ்சேன்;
புறங்காட்டு ஆடல்கண்டு இகழேன்;
பேணீர் ஆகிலும் பெருமையை உணர்வேன்;
பிறவேன் ஆகிலும் மறவேன்;
காணீர் ஆகிலும் காண்பன்; என் மனத்தால்
கருதீர் ஆகிலும் கருதி,
நானேல் உம்அடி பாடுதல் ஒழியேன்;
நாட்டியத் தான்குடி நம்பீ!

(திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! தேவரீருக்கு மேலே அணியும் அணிகளும் இடையில் அணியும் அரைநாணும் ஆக உள்ளவையாகிய பாம்பைக் கண்டு அஞ்சமாட்டேன்; சுடுகாட்டில் நீர் ஆடுவதைக் கண்டு இகழ மாட்டேன்; அடியேனைப் பாதுகாவாவிட்டாலும் உம்முடைய பெருமையை நன்கு உணர்வேன்; இனிப் பிறக்கமாட்டேனாயினும் உம்மை மறக்கமாட்டேன்; அடியேனைக் கண்ணெடுத்துப் பாராவிட்டாலும் அடியேன் உம்மைத் தரிசனம் செய்து கொண்டிருப்பேன்; தேவரீர் அடியேனைத்

திருவுள்ளத்தில் கொள்ளீரானாலும் என் மனத்தில் தேவரீரை நினைத்து உம்முடைய திருவடியைப் பாடுதலை என்றும் ஒழிந்திருக்க மாட்டேன்.

பூண்-அணி, நாண்-அரை நாண். பாம்புகள் பலவானாலும் எல்லாவற்றையும் தொகுதியாக்கி, ஆவது என்று ஒருமையால் சொன்னார்; தொகுதி யொருமை. புறங்காடு-சுடுகாடு. என் மனத்தாற் கருதிப் பாடுதல் ஒழியேன் என்று கூட்டுக. நானேல்-நானோ. நானேல் உணர்வேன், மறவேன், காண்பன், பாடுதல் ஒழியேன் என்று கூட்டுக. நம்பி; விளி; நம்பி;தலைவன்; ஆணிற் சிறந்தான்.)

மாரன் அழிவும் குமாரன் அவதாரமும்

இறைவனைப்பற்றிய வரலாறுகள் பல புராணங்களில் காணப்படுகின்றன. அவற்றைப் படிக்கும்பொழுது கதைச் சுவை ஓரளவு இருந்தாலும் சில இடங்களில் உள்ளவை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகத் தோன்றும். புராணங்களை வெறுங் கதைகளாக மாத்திரம் படித்தால் அதில் நமக்குச் சுவை இராது. அவற்றின் ஊடே உள்ள தத்துவங்களைத் தெரிந்து கொண்டால் அப்பொழுதுதான் அவற்றின் பெருமை நன்கு விளங்கும்.

ஒரு தத்துவத்தை அப்படியே எடுத்துச் சொன்னால் அதில் சுவை தோன்றாது. அதைக் காவியமாகவோ கதையாகவோ புனைந்து சொன்னால் அதில் மனம் செல்லும்; ஆர்வம் உண்டாகும். புராணங்கள் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளைப் போன்ற அமைப்பை உடையன; அதனால் அவற்றைச் சிசு சம்ஹிதை என்று வடமொழியில் சொல் வார்கள். ''சத்தியம் பேசு' என்று மாத்திரம் சொன்னால் அது கேட்கப் பிடிப்பதில்லை. அதை ஒரு கதையில் வைத்துச் சொன்னால் சுவை பிறக்கிறது. சத்தியத்துக்காகவே ஒருவன் வாழ்ந்து, எத்தனை தடை வந்தும் சத்தியத்தையே பேசினான் என்று அரிச்சந்திரன் கதையைச் சொன்னால் காது கொடுத்துக் கேட்போம். சத்தியம் பேசு என்பது சாத்திரம். வேதமும் அப்படியே சொல்கிறது. அதையே அரிச்சந்திரன் கதையாகப் புராணம் சொல்கிறது. முதலிலே சொன்னது வெறும் தத்துவம்; பின்னாலே சொன்னது அந்தத் தத்துவத்தை உள்ளடக்கிய கதை. குழந்தைகளுக்குக் கதை சொல்லுவது போலப் புராணங்களை நம்முடைய பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; திரு வருளைத் துணையாகக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள்.

இறைவன் செய்தருளிய திருவிளையாடல்களைப் புராணங்கள் சொல்லுகின்றன. சில இடங்களில் முரண்பாடு இருப்பது போலத் தோன்றும். சிவபெருமானைப் பற்றிய கதைகள் பல. அவற்றுள் சிவபெருமான் காம சங்காரம் பண்ணினான் என்று ஒரு கதை வருகிறது. இறைவனுடைய மனத்தைக் கலைப்பதற்காகத் தன்னுடைய மலர் அம்பு களுடனும் கரும்பு வில்லுடனும் காமன் வந்தான். வந்தவுடன் தன்னுடைய நெற்றிக் கண்ணைத் திறந்து சிவ பெருமான் பார்த்தான். அதனால் காமன் எரிந்தான் என்பது கந்த புராணத் தில் வரும் கதை. அதற்குப் பின்பு இறைவன் தன்னுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக்க, அந்த ஆறு பொறிகளும் சேர்ந்து சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகள் ஆயின. அந்த ஆறு குழந்தைகளும் ஒன்றாகச் சேர்ந்து முருகன் என்ற ஒரு மூர்த்தியாக ஆயின. இதுவும் கந்த புராணத்தில் உள்ள வரலாறே.

காமனை எரித்தான் சிவபெருமான் என்பதும், அவன் ஒரு குழந்தையைப் பெற்றான் என்ற செய்தியும் ஒன்றுக்கொன்று முரண்பாடுபோலத் தோன்றுகின்றன. முருகன் சிவபெருமா னுக்குக் குழந்தை. உலகில் ஆணும் பெண்ணும் கலந்து இல்வாழ்க்கை நடத்தும்பொழுது அவர்களுக்குக் குழந்தை பிறக்கிறது. குழந்தை பிறப்பதற்கு முன்னாலே ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் உண்டாகிறது; காம நுகர்சியை அடைகிறார்கள். அதன் பயனாகக் குழந்தை பிறக்கிறது. ஆனால் இறைவனோ காமத்தைக் கடந்தவன். காம நுகர்ச்சியினாலே அவனுக்குப் பிள்ளை பிறந்தது என்று சொல்வது பொருந்தாது. அதைத்தான் புராணம் நுட்பமாகத் தெரிவிக்கிறது.

மற்றவர்கள் மாரனுடைய ஏவலினாலே காம நுகர்ச்சி பெற்றுக் குமாரர்களை அடைவார்கள். சிவபெருமானோ மாரனுடைய ஏவல் பலிக்காமல் அவனை அழித்தான்; அதற்கு அப்பால் குமாரன் பிறந்தான். குமாரனுடைய ஜனனம் மாரனுடைய முயற்சியினாலே வந்த ஜனனம் அன்று; ஞானத்தின் விளைவாக வந்த ஜனனம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு திருப்பதிகத்தில் இந்த இரண்டு செய்திகளையும் ஒரு சேர வைக்கிறார்.

சோழ நாட்டில் உள்ள கலயநல்லூர் என்ற ஊருக்கு அவர் போனார். வழக்கம்போல அங்கே இருக்கின்ற இறைவனைத் தரிசித்தார்; தரிசித்துப் பதிகம் பாடினார். அதில் ஒரு பாட்டில் இந்த இரண்டு செய்திகளையும் ஒருங்கே வைத்திருக்கிறார். முருகனை இறைவன் அவதரிக்கச் செய்தான். அப்பெருமான் அவதாரம் செய்வதற்குக் காரணம் என்ன? தேவர்களுக்குரிய பொருள்களையெல்லாம் அசுரர்கள் வவ்விக் கொண்டு அவர்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். இந்திரன் கற்பகத்தோடும் காமதேனுவோடும் வாழ்ந்திருந்த வளவாழ்வை இழந்தான். அவன் எங்கோ போய் மறைந்துகொண்டான். அவனுடைய பிள்ளையாகிய சயந்தனை அசுரர்கள் சிறை வைத்துவிட்டார்கள். இந்திராணியும் எங்கோ ஒடுங்கிக் கிடந்தாள். தேவர்களின் வாழ்வு குலைந்து போயிற்று.

இந்த நிலையில் தேவர்கள் யாவரும் சென்று இறை வனிடம் முறையிட்டுக்கொண்டார்கள். இறைவன் பார்த்தான். 'நாம் எத்தனையோ திருவிளையாடல்களைச் செய்திருக்கிறோம். இப்பொழுது நாமே முருகனாக அவதாரம் செய்வோம்' என்று நினைத்தான். தன்னுடைய ஐந்து முகத்தோடு அதோ முகமாகிய ஒன்றையும் சேர்த்து ஆறுமுக நாதனாக எழுந்தருளினான்.

தானே தந்தையாகவும் தானே பிள்ளையாகவும் இருக்கும் நிலை இறைவனுக்கு உண்டு. நம் இயல்புக்கும் இறைவ னுடைய இயல்புக்கும் வேறுபாடு உண்டு. தந்தை, பிள்ளை, மனைவி என்று இறைவனோடு சார்த்திச் சொல்லு கின்ற உறவு முறை உலகிலுள்ள மக்களின் உறவு முறையைப் போன்றது அல்ல. அது தத்துவத்தோடு சார்ந்த கருத்தை யுடையது.

தானே தந்தையாகவும் தானே குழந்தையாகவும் இறைவன் தோன்றினான். குழந்தையாகத் தோன்றினபோது முருகன் ஆனான். எதற்காக அவ்வாறு தோன்றினான்? தேவர்கள் அனைவரும் பிரார்த்தனை செய்துகொள்ள, அவர்களுடைய இடுக்கண்களைத் தீர்த்து அசுரர்களைக் கொன்று மீண்டும் அவர்களுக்குரிய பதவியைத் தருவதற்காகத்தான் முருகன் திரு அவதாரம் செய்தான். அந்த அசுரர்களில் தாருகன் என்பவன்

ஒருவன். அவன் ஆனைமுகம் உடையவன். அவனை முருகன் திரு அவதாரஞ்செய்து கொன்ற செய்தியைச் சுந்தரமூர்த்தி நாயனார் முதலிலே நினைக்கிறார். பல வகையான பலத்தை உடைய அசுரன் அவன். அவனைப் பொருது கொன்று உலகத்துக்கு இன்பத்தைத் தந்த பெருமான் முருகன். அந்த முருகனைத் திரு அவதாரஞ் செய்யும்படி செய்தவன் சிவபெருமான்.

> பொரும்பலம துடை அசுரன் தாருகனைப் பொருது
> பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துஉகந்த புனிதன்.

முருகனைப் படைத்து உகந்த புனிதன் இறைவன். முருகனுடைய திருவவதாரத்தால் யாவருக்கும் இன்பம் உண்டாவதனால், திரு உள்ளங்களித்தான் ஆண்டவன்.

இறைவன் குழந்தையைப் பெற்றது காம உணர்ச்சி யினாலே விளைந்த செயலா? அவன் காமனையே வென்ற பெருமான் அல்லவா?

> கரும்புவிலின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
> கனல்விழித்த கண்ணுதலோன்.

கரும்பை வில்லாகவும் ஐந்து மலர்களை வாளியாகவும் கொண்டு, தன்னுடைய ஆணையை உலகத்தில் எங்கும் செலுத்தி வெற்றி பெறுகின்ற காமனுடைய உடலம் வெந்து பொடியாகும்படியாக, தன்னுடைய கனல் விழியைத் திறந்தவன்; நெற்றிக் கண்ணை உடையவன் ஆண்டவன்; காமனை எரித்தவன். அவனுக்குக் குமாரன் பிறந்தான்; அது காமத்தின் விளைவினாலே வந்தது அல்ல. மாரன் அழிந்த பிறகு குமாரன் தோன்றினான். மாரனுடைய மரணமும் குமாரனுடைய ஜனனமும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. காமத்தை அழித்து வீழ்த்து கின்ற ஞானமே திரு உருவாக முருகன் எழுந்தருளினான்.

அசுரர் என்றும் சுரர் என்றும் வேறு பிரித்துச் சொல்கின்ற இரண்டு சாதிகளும் இரண்டு வகையான குணங்களைக் காட்டுகின்றன. மனிதர்களுடைய உள்ளத்தில் தேவ சம்பத்து, அசுரசம்பத்து என்ற இரண்டு வகையான குணங்கள்

இருக்கின்றன. அந்த இரண்டு குணங்களுக்கும் எப்பொழுதும் போர் நடந்துகொண்டே இருக்கிறது.

எப்பொழுது தீய சக்திகளுக்கும் நல்ல சக்திகளுக்கும் போர் உண்டாகிறதோ அப்பொழுதெல்லாம் தேவாசுரயுத்தம் நடப்பதாகத்தான் கொள்ளவேண்டும். ஒவ்வொருவனுடைய மனமும் போர்க்களமாக இருக்கிறது. அந்த மனத்தில் தோன்று கிற தீய எண்ணங்கள் நல்ல எண்ணங்களை அழிப்பதற்கு முயலுகின்றன. இறைவனுடைய திருவருள் இருந்தால் நல்ல எண்ணங்கள் வெல்லுகின்றன. இல்லாவிட்டால் தீய எண்ணங்கள் மேல் ஓங்கி நிற்கின்றன. புராணத்தில் வரும் போர்கள் இதைத்தான் நமக்கு நினைவூட்டுகின்றன.

ஞானமே உருவானவனாகிய முருகன் அவதாரம் செய்தான். அஞ்ஞானத்தின் மயமாயிருந்த தாருகன், சூரன் முதலிய அசுரர்கள் இறந்து ஒழிந்தார்கள். முருகன் ஞான வடிவினன் என்பதை,

"நீயான ஞான விநோதந் தனைஎன்று நீயருள்வாய்"

என்று அருணகிரிநாதர் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ள லாம். சிவகுமாரனுடைய ஜனனம் மனித குமாரர்களுடைய ஜனனத்தைப் போன்றது அன்று. ஞானத்தின் விளைவாக வந்த திரு அவதாரம் அது. ஞானத்துக்குத் தடையாக இருக்கிற காமன் அழிந்த பிறகே குமாரன் எழுந்தருளினான்; அவதாரம் செய்தான். அவதாரம் செய்து அஞ்ஞானத்தின் உருவங்களாக இருந்த தாருகன் முதலியவர்களைப் பொருதான். மார தகனமும் குமார ஜனனமும் ஆருயிர்க்ளுக்கு அஞ்ஞானம், காமம் முதலிய்வற்றைப் போக்கும் ஞானத்தையும், இன்பத்தையும் தருகிறவன் இறைவன் என்ற கருத்தையே புலப்படுத்துகின்றன.

பொரும்பலம துடை அசுரன் தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்.
கம்புவிலின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன்.

(போரிடுகின்ற வலிமையை உடைய அசுரனாகிய தாருகனை எதிர்த்து அவனை அழியச் செய்த மகனாகிய முருகனை முன்பு

தோற்றுவித்து மகிழ்ந்த தூய பெருமான்; கரும்பு வில்லையும் மலரம்புகளையும் உடைய காமனது உடம்பு வேகும்படியாகத் தீயாக விழித்த நெற்றிக் கண்ணை உடையவன்.

பொரும்-போரிடும். பொன்றுவித்த-இறக்கச் செய்த. பொருள்-பிள்ளை. புனிதன்-தூயவன். விலின்-வில்லின்; விகாரம். வாளி-அம்பு. கனல் விழித்த-நெருப்புத் தோன்ற விழித்த. கண் நுதலோன்-கண்ணை நெற்றியில் உடையவன்.)

★

தலத்தைப் பற்றிய வருணனை பின்பு வருகிறது.

எம்பெருமான் உலகிலுள்ள மக்களையெல்லாம் பாது காக்க வேண்டும் என்று கருதி, சர்வாந்தர்யாமியாக இருந்தாலும் மூர்த்தியாகப் பல தலங்களிலே எழுந்தருளியிருக்கிறான். உலகிலுள்ள ஆருயிர்களைக் காக்கவேண்டும் என்று தானே திருவுள்ளத்தில் கொண்டு விரும்பி எழுந்தருளியிருக்கிறான். அவ்வாறு எழுந்தருளியுள்ள ஊர்கள் பல. 'அவற்றில் இப்போது கூறப்புகும் ஊர் யாது?' என்று கேட்டால் சுந்தரர் விடை கூறுகிறார்.

கண்ணுதலோன் கருதும்ஊர் வினவில்

என்று ஆரம்பிக்கிறார்.

கலயநல்லூர் சோற்று வளம் நிரம்பிய சோழ நாட்டில் இருப்பது. நீர் வளமும் நில வளமும் நிறைந்தது சோழ நாடு; எங்கே பார்த்தாலும் காவிரியின் நீர் பரவி வளம்படுத்தும் நாடு. காவிரியிலிருந்து பிரிந்த பல ஆறுகள் அங்கங்கே பாய்ந்து வயல்களை ஊட்டுகின்றன. அத்தகைய ஆறுகளில் அரிசில் ஆறு என்பது ஒன்று. அந்த ஆற்றின் தென்கரயில் கலயநல்லூர் இருக்கிறது. அவ்வாற்றின் நீர்வளம் எத்தகையது? வெண்மை யான அலைகளை வீசிக் கரைகளை மோதிக்கொண்டு வருகிறது ஆறு. குடகு மலையிலிருந்து வருகிற காவிரியின் கிளை அது. மலைகளையும் காடுகளையும் கடந்து வரும்பொழுது இடையிலே விளையும் பொருள்களைத் தன்னுடைய திரைக் கைகளாலே ஏந்திக் கொண்டு வருகிறது, காவிரி நதி; ஏலம் இலவங்கம் முதலியவற்றைத் தாங்கி வருகிறது. அவை

அரிசிலாற்றிலும் நீரோடு வருகின்றன. இரண்டு கரைகளிலும் அவற்றை வீசுகின்றது.

இரும்புனல்வெண் திரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருது அலைக்கும் அரிசில்

(மிக்க வெள்ளத்தின் வெண்மையான அலைகள் பெருகி, ஏலத்தையும் இலவங்கத்தையும் இரண்டு கரைகளிலும் மோதி அலையச் செய்யும் அரிசிலாறு.)

அரிசிலின் நீராலே வளம் பெறுகின்ற ஊரின் இயல்பு எப்படி இருக்கிறது?

அவ்வூரில் எங்கே பார்த்தாலும் பொழில்கள் நிரம்பி இருக்கின்றன. பொழில்களில் பலவகை மரங்கள் வானளவும் உயர்ந்து வளர்ந்து நிற்கின்றன. வேறு நிலங்களில் வளரும் மரங்களும் இங்கே வளர்கின்றன. நெய்தல் நிலத்தில் வளரும் புன்னை மரங்களையும் இங்கே காணலாம். அந்தப் புன்னையின் அடி மரம் கன்னங்கரேலென்று இருக்கிறது. அதன் பூவில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களும் உள்ளன. அதன் இதழ்களெல்லாம் வெள்ளையாக இருக்கும். கேசரங்கள் பொன்னிறம் பெற்றிருக்கும். அந்தக் கேசரங்களுக்கு நடுவில் முட்டை வடிவம் போன்ற ஓர் உறுப்புச் சிவப்பாக இருக்கும். இதழ்களெல்லாம் மூடிக்கொண்டு அரும்பாக இருக்கும்பொழுது பார்த்தால் புன்னையின் மொட்டு முகத்தைப் போலத் தோன்றும். கரும் புன்னை வெண்முத்து அரும்புகிறது. பின்பு மலர்கிறது. அப்போது அதனுடைய கேசரங்களெல்லாம் தோன்றுகின்றன.; அவை பொன்னிறம் பெற்றிருக்கின்றன.

முத்தாக அரும்பிப் பொன்னாக மலர்கிறது கரும்புன்னை.

கேசரங்களுக்கு நடுவிலே உருண்டையாகவும் சிவப் பாகவும் ஓர் உறுப்பு இருக்கிறது. பொன்னுக்கு நடுவில் பவளத்தைப் பதித்தது போன்ற காட்சியைத் தருகிறது அது. கரும்புன்னை வெண் முத்தை அரும்பிப் பொன்னை மலர்ந்து பவளத்தின் அழகைக் காட்டுகிறது. புன்னையின் மலர் நல்ல மணத்தை உடையது. வேறு மண மலர்களும் பொழிலில்

இருக்கின்றன. எல்லாம் சேர்ந்து கம்மென்று மணக்கும் கடி பொழில்கள் கலயநல்லூரில் மிகுதியாக உள்ளன.

கரும்புனைவெண் முத்து அரும்பிப்
பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில்சூழ்
கலயநல்லூர் காணே.

(கரிய புன்னை மரம் வெண்முத்தைப்போல அரும்புகளை விட்டுப் பொன்னைப்போல மலர்ந்து பவளத்தின் அழகைக் காட்டும் மணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த கலயநல்லூர்.

புனை-புன்னை. கவின்- அழகு. கடி-நறுமணம். காண்-ஏ; அசை. வினவில், காணே என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.)

காமத்தைப் போக்குகின்ற பெருமான், அஞ்ஞான உருவமாகிய தாருகனை அழிக்க ஞான உருவாகிய முருகனைத் தோற்றுவித்த புனிதன், நீர்வளமும் நிலவளமும் பொருந்திய திருக்கலயநல்லூரில் எழுந்தருளியிருக்கிறான்.

பொரும்பலம துடைஅசுரன் தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும்ஊர் வினவில்,
இரும்புனல்வெண் திரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருது அலைக்கும் அரிசிலின்தென்
கரைமேல்
கரும்புனைவெண் முத்து அரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின் காட்டும் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.

கலயநல்லூர் என்பது கும்பகோணத்துக்கு அருகில் இருக்கிறது. இப்போது சாக்கோட்டை என்று வழங்குகிறது.

வேறாக வந்து அருள்பவன்

எம்பெருமான் நமக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அளித்திருக்கிறான்; உடலையும் உறுப்புக்களையும் வழங்கி யிருக்கிறான். அவனுடைய கருணையை என்ன வென்று சொல்வது! ஆனால் நாம் அந்தக் கருணையைப் பல சமயங்களில் நினைப்பதில்லை. இறைவனை நாம் நினைக்காமல் இருக்கிறோமே என்ற கவலைகூட நம்மிடம் தோன்றுவதில்லை.

சுந்தரமூர்த்தி நாயனார் எப்போதும் இறைவனை நினைத்துக்கொண்டிருக்கிறவர். ஆனாலும் அவருக்குத் தாம் ஒவ்வொருகால் சரியாக இறைவனைச் சிந்திப்பதில்லை என்ற குறையே இருக்கிறது. அன்புடையவர்கள் இவ்வாறு எண்ணுவது இயல்பு. செல்வ வாழ்வில் உள்ள தாய் தன் குழந்தைக்கு எத்தனை வகையான ஆடை அணிகள் அணிந்தாலும் மன நிறைவு பெறமாட்டாள். சிறந்த அன்புடைய நண்பன் ம்ற்றொருவனுக்கு எத்தனை உதவி புரிந்தாலும், ''நான் இன்னும் செய்ய முடியவில்லையே!'' என்று வருந்துவான். தம் கடமையில் குறை இருப்பதாக் எண்ணுவது அன்பின் விசித்திரப் போக்குகளில் ஒன்று. சுந்தரர் இறைவனிடத்தில் முறுகிய அன்புடையவர். அவருக்குத் தம்முடைய அன்பு குறை யுடையதாகத் தோன்றுகிறது. அவர் இறைவனிடம் தம் குறையையும், அதை அவன் சிறிதும் பொருட்படுத்தாமல் அருள்புரிவதையும் எண்ணிப் பாடுகிறார்.

★

இறைவனே! நான் எப்பொழுதும் உன்னை நினைக்க வேண்டியவன். உன்னுடைய திருவருளினாலே எல்லா இன்பங்களையும் பெறுகின்ற நான் உன்னை நினையாமல் இருப்பது மிகவும் தவறு. எனக்குச் சில சமயங்களில்

அகங்காரத்தினாலே மயக்கம் உண்டாகின்றது. தருக்கினால் தலை நிமிர்ந்து போகிறது. அப்படி மோறாந்து ஒவ்வொரு சமயத்தில் உன்னை நினையாமல் இருக்கிறேன். 'இவன் இப்படி நம்மை நினைக்கவில்லையே' என்று நீ என்னை மறந்திருக்கவில்லை. எப்படியாவது என்னை ஆட்கொள்ள வேண்டும் என்பதே உன்னுடைய நினைவு. 'இவன் மறந்து விட்டாலும் நாம் இவனை நினைத்து வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்' என்ற பேரருள் உடையவன் நீ.

அவரவர்கள் செயல்களுக்கு ஏற்றபடி பலன்களைக் கொடுத்துக்கொண்டு வருகின்ற உனக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. தேவர்களும் முனிவர்களும் பக்தர்களும் உன்னிடம் வந்து வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு வேண்டியவற்றை அருளும் செயலிலே நீ ஈடுபட்டிருக்கிறாய். அவரவர்களுடைய விருப்பங்களைக் கூட்டுவிக்கின்ற பெரிய வேலை உனக்கு உண்டு. அந்த வேலைகளுக்கிடையிலே என்னை நீ தனியாக நினைக்கிறாய். வீட்டிலே பல குழந்தைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு வேண்டியவற்றைக் கவனிக்கிறாள் தாய். திடீரென்று மூலையில் கிடக்கின்ற முடக் குழந்தையை நினைத்துக்கொண்டு ஓடி வருகிறாள். மற்றவர்களை விட்டுத் தனியே வந்து எடுத்து உச்சி மோந்து பாலூட்டிச் சீராட்டுகிறாள். அவ்வாறே நீ தனியாக என்னிடத்திலே வருகிறாய். நான் உன்னை நினைப்பதில்லை; உன்னை அழைப்பதில்லை; உன்னைப் பாடுவதில்லை. இருப்பினும், அத்தனை கூட்டத்திலும் நான் இல்லையே என்று நினைந்து தனியாக என்னை நாடி ஓடி வருகிறாய். வந்து என்னுடைய உள்ளத்துக்குள்ளே புகுகின்றாய். உன்னை நினைக்காத உள்ளம் மாசு படிந்திருக்குமே என்று நீ எண்ண வில்லை. எப்படியாவது அந்த உள்ளத்துக்குள்ளே புகுந்து அங்கே உட்கார்ந்துகொண்டு விடுகிறாய். என் உள்ளத்திலே நீ புகுந்த பிறகு நான் உன்னை நினைக்காமல் இருக்க முடியுமா?

மோறாந்து ஒரோருகால் நினையாது இருந்தாலும்
வேறாவந் தென் உள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே!

(மோறாந்து-தருக்கினால் தலையெடுத்து.)

நீதான் உண்மையான பொருள். மற்றவர்களெல்லாம் அவ்வப்பொழுது என்னிடத்தில் அன்புடையவர்களாகக் காட்டுகிறார்களே ஒழிய அந்த அன்பு மெய்யான அன்பு அல்ல. அவர்கள் பொய்யர்கள். அவர்களுடைய வாழ்க்கை பொய்; அவர்களுடைய செயல்களெல்லாம் பொய், உலகத்திலுள்ள எல்லாருடைய செய்திகளும் அத்தகையனவே. நீ செய்கிற காரியந்தான் உண்மையானது. நீதான் உண்மையான பொருள். உண்மையான பொருளாகிய நீ வந்து, நான் நினைக்கா விட்டாலும் என் உள்ளத்திலே புகுகின்றாய். அதற்குரிய கருணை உனக்குத்தான் இருக்கிறதேயன்றி வேறு யாருக்கும் இல்லை. உனக்கு உள்ள வலிமையே அந்தக் கருணை தானே?

★

காஞ்சீபுரத்தில் பல கோயில்கள் உண்டு. அவற்றுள் திருமேற்றளி என்பது ஒன்று; பிள்ளையார் பாளையம் என்ற பகுதியில் இருப்பது. அந்தத் தலத்திலேதான் இந்தக் கருத்துக்களையெல்லாம் சுந்தரமூர்த்தி நாயனார் எண்ணுகிறார்.

சுற்றிலும் வயல்கள் நிரம்பிய இடம் அது. தொண்டை நாட்டார் வயல்களைக் கழனி என்று சொல்வார்கள். திருமேற்றளியில் சேறு நிரம்பிய குளிர்ந்த கழனிகள் சுற்றிலும் இருக்கின்றன.

சேறார் தண்கழனித் திருமேற்றளி.

கழனிகளில் சேறு மணக்கிறது. சேற்று வளந்தானே சோற்று வளத்துக்குக் காரணம்?

திருமேற்றளியில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். எப்படி எழுந்தருளியிருக்கிறான்? தனக்குச் சமானமாக வேறு யாரும் இல்லாமல் ஒரு சிங்கத்தைப் போல இருக்கிறான். சிங்கத்துக்குத் தன் காடு பிறன் காடு என்பது இல்லை. அது எந்த இடத்தில் இருந்தாலும் அதனுடைய முழக்கமே சிறப்பாக இருக்கும். ஆண்டவன் எந்த இடத்தில் திருக்கோயில் கொண்டிருந்தாலும் அவன் தலைமை பெற்று வீற்றிருப்பான். இங்கே எம்பெருமான் சிங்கத்தைப்போல வீற்றிருக்கின்றானாம்.

திருமேற் றளி உறையும் ஏறே!

நான் மறந்திருந்தாலும் என்னை மறவாமல் தான் வந்து என்னுடைய உள்ளத்திலே புகவல்ல கருணைப் பெருமானாகிய ஆண்டவன்தான் உண்மையான பொருள். எது உண்மையான பொருளோ அதைத்தான் நாம் நினைக்க வேண்டும். பொய்யான பொருளையெல்லாம் நினைத்துப் போற்றினால் அதனாலே நமக்கு யாதொரு பயனும் உண்டாவதில்லை. ஏதேனும் உண்டானாலும் நிலைப்பதில்லை. இவற்றையெல்லாம் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். நீ என்னிடத்திலே மிக்க கருணை உடையான் என்பதையும் தெரிந்துகொண்டேன். அப்படி இருக்க, நான் அடுத்தடுத்து நச்சினாலுங்கூட இன்பந்தராத மக்களிடம் சென்று முயன்று ஒன்றைப் பெறுவதற்காகப் பாடுபடுவது எதற்கு? நான் நினையாமல் இருக்கும்பொழுது என்னை நினைந்து வந்து அருள் செய்யவல்ல பிரானாகிய உன்னைத்தான் நான் நினைக்க வேண்டும். உன்னையன்றி மற்ற யாரையும் நினைக்கமாட்டேன்; புகழமாட்டேன்.

ஏறே! உன்னை அல்லால் இனிஏத்த மாட்டேனே.

இதுவரைக்கும் யார் யாரையோ ஏத்தியிருக்கலாம். அது என்னுடைய அறியாமை. மெய்ப்பொருள் இன்னதென்று அறிகிற வரைக்கும் பொய்ப்பொருளை ஏத்திக் கொண்டிருந் தேன். ஆனால் இப்பொழுது மெய்ப்பொருள் இன்னது என்று அறிந்து கொண்டேன். அந்த மெய்ப் பொருளாகிய நீ என்னிடத்திலே மிக்க கருணை உடையாய் என்பதையும் அறிந்துகொண்டேன். என்னுடைய உள்ளம் முழுவதும் நீ இடமாகப் பெற்றுக்கொண்ட பிறகு நான் வேறு யாரை நினைக்க முடியும்? நீயே உன்னை நினைக்கும்படியாகச் செய்துவிட்டாய். ஆகையினால் இனி வேறு யாரையும் புகழமாட்டேன்.

மோறாந்து ஒரொருகால் நினையாது இருந்தாலும்
வேறாவந்து என்உள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே!
சேறு ஆர் தண்கழனித்திருமேற் றளிஉறையும்
ஏறே! உன்னை அல்லால் இனிஏத்தமாட்டேனே.

(தலையெடுப்பினால் ஒவ்வொரு சமயம் அடியேன் உன்னை நினைக்காமல் இருந்தாலும், எனக்கு அருள் செய்யத்திருவுள்ளம் கொண்டு தனியே என்பால் வந்து என் உள்ளத்தில் புகுவதற்கு வல்ல

மெய்யான பொருளே! சேறு நிரம்பிய குளிர்ந்த வயல்களைப் பெற்ற திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கும் சிங்கம் போன்றவனே! இனிமேல் உன்னை அல்லாமல் வேறு யாரையும் நினைந்து புகழமாட்டேன்.

மோறாந்து-தருக்கினால் தலையெடுத்து, வேறா-வேறாக; தனியாக, ஏறு-சிங்கம். இனி-இப்போது.)

காஞ்சீபுரத்தின் மேற்குப் பகுதியில் இருப்பதால் இதற்கு மேற்றளி என்ற பெயர் வந்தது; மேல்பால் உள்ள தளி என்று கொள்ள வேண்டும்; தளி-கோயில். திருமால் சிவ சொரூபம் பெற்ற தலம் என்பது தல வரலாறு. திருமேற்றளியீசர் சந்நிதி ஒன்றும், திருமால் சிவலிங்க உருவான சந்நிதி ஒன்றும் இங்கே இருக்கின்றன. திருஞானசம்பந்தப் பெருமான் பாடலைக் கேட்டுத் திருமால் உருகிச் சிவலிங்க உருவடைந்தார் என்று தல வரலாறு கூறுகிறது.

அருளின் விளைவு

சோழ நாட்டில் கஞ்சனூர் என்பது ஒரு தலம். அங்கே அரதத்தசிவாசாரியார் என்ற ஒரு பெரிய பக்தர் வாழ்ந்திருந்தார். அவர் பல நூல்களை எழுதியிருக்கிறார்; சிவபெருமானிடத்தில் ஆராத காதல் உடையவர். அவர் அங்குள்ள அக்கினிபுரீசுவர சுவாமி கோயிலுக்குத் தினந்தோறும் சென்று வருவார். ஒருநாள் தம்முடைய மாணாக்கர்களுடன் கோயிலுக்குப் போனார். அப்பொழுது தர்மகர்த்தா கோயில் தாசியை மரத்தோடு வைத்துக் கட்டி அடித்துகொண்டிருந்தார். அதைக் கண்ட அப் பெரியார், ''ஏன் இவளை அடிக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

''இவள் தினந்தோறும் இறைவனுக்குச் சேவகம் செய்ய வேண்டியவள். மூன்று நாளாகச் சொல்லிக்கொள்ளாமல் வெளியூருக்குப் போய்விட்டாள். தன்னுடைய கடமை யினின்றும் பிறழ்ந்ததனால் அடிக்கிறார்கள்'' என்று ஒருவர் கூறினார்.

அதைக் கேட்டவுடனே அரதத்த சிவாசரியாருடைய கண்ணிலே நீர் மல்கியது; விம்மி விம்மி அழத்தொடங்கினார். அது கண்டு மற்றவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவருடைய மாணாக்கர்களுக்கும் அந்தக் காட்சி வியப்பாக இருந்தது. தாசி அடிபட்டதைக் கண்டு இரங்குவதற்கு என்ன காரணம் என்று அவர்கள் யோசித்தார்க்ள. தங்கள் குருவி னுடைய பெருமையை நன்கு உணர்ந்தவர்களாகையினால் அவர்கள் தவறாக ஒன்றும் நினைக்கவில்லை. ஆனாலும் எதற்காக இப்படி அழுகிறார் என்று, அவர்களுக்குத் தெளிவாகத் தோன்றவில்லை.

பிறகு சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார் சிவாசாரியார். அப்பொழுது மாணாக்கர்கள் மெதுவாக அவரைக் கேட்டார்கள்; ''எதற்காகச் சுவாமி இப்படி அழுதீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் பதில் சொல்லலானார். ''மூன்று நாள் இறைவனுடைய திருத் தொண்டைச் செய்யவில்லை என்று தர்மகர்த்தா அவளை ஒறுத்தார். இப்படி என்னை இளமையிலிருந்து இறைவனுடைய தொண்டு செய்யாததற்காக யாரேனும் ஒறுத்திருந்தால் நான் எப்போதோ உய்ந்திருப்பேனே!'' என்று சொல்லி மீட்டும் அழுதாராம். அப்பொழுதுதான் அவருடைய உள்ளக் கிடக்கை மாணாக்கர்களுக்குத் தெரிந்தது; மற்றவர்களுக்கும் தெரிந்து எல்லோரும் வியந்தார்கள்.

★

இறைவனுக்குத் தொண்டு செய்யும் தாசியைத் தர்மகர்த்தா ஒறுத்ததற்குக் காரணம், அந்தத் தாசியினிடத்திலே உள்ள கோபம்; அதற்கு ஏது இறைவனுடைய தொண்டு முட்டுப்பட்டதே என்பதுதான். செய்ய வேண்டிய கடமையைச் செய்யாததற்காக ஒறுத்தார். அது அன்பினாலே பிறந்தது. அரதத்த சிவாசாரியார் அந்த ஒறுத்தலைத் தாமும் வேண்டினார். ஒரு தாய் தன்னுடைய குழந்தை ஏதோ தவறு செய்துவிட்டது என்று தெரிந்து அடிக்கிறாள். தாய்க்குக் குழந்தையினிடத்திலே அன்பு இல்லை என்று சொல்லலாமா? ''அணைப்பதும் ஒரு கை, அடிப்பதும் ஒரு கை'' என்பது பழமொழி. இரண்டுக்கும் அன்பே காரணம். குழந்தை தவறு செய்யாமல் நல்லபிள்ளை என்று பெயர் வாங்க வேண்டுமே என்பதற்காக அடிக்கிறாள்.

தழுவி, முத்தமிட்டு, வேண்டிய தின்பண்டங்களைக் கொடுப்பதும் அன்புதான். தவறு செய்தால் அடிப்பதும் அன்புதான். இரண்டு வகையும் அன்பாக இருந்தாலும் தோற்றத்தில் அவை வெவ்வேறாகத் தோன்றுகின்றன. ஒன்று கடுமையாகத் தோன்றுகிறது; மற்றொன்று நயமாகத் தோன்று கிறது. இந்த இரண்டு வகையான அன்பையும் மறக்கருணை, அறக்கருணை என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்.

இறைவன் உலகிலுள்ள உயிர்களுக்குத் துன்பத்தைத் தருகிறான்; ஆகையினால் அவன் கடுமையானவன் என்று சொல்லலாமா? இறைவனைக் காட்டிலும் ஆருயிர்களிடத்திலே அன்புடையவர் வேறு யாரும் இல்லை. தாய் நமக்கு ஒரு பிறவியிலேதான் தாயாக இருக்கிறாள். ஒரு பிறவியிலுங்கூட, சின்னஞ்சிறு குழந்தைப் பருவத்திலே தாய்க்கு எத்தனை அன்பு இருக்கிறதோ, அத்தனை அன்பு அந்தக் குழந்தை பெரியவன் ஆன பிறகு இருப்பதில்லை; அன்பு மாறுபடுகிறது. தாய் எப்பொழுதும் நம்மோடு வர முடியாது. எல்லாப் பிறவியிலும் அவள் தாயாக இருப்பதில்லை. இறைவன் ஒருவன்தான் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் எல்லா உயிர்களுக்கும் தாயாக இருக்கிறான். அவனுடைய அன்பு வேறு யாருக்கும் வராது.

அத்தகைய அன்புடைய பெருமான் ஆருயிர்களுக்குத் துன்பத்தைத் தருகிறான்; அதற்கு ஏது அவனுடைய அருள். எப்படித் தவறு செய்த குழந்தையைத் தாய் அடிக்கிறாளோ, அப்படிப் பாவங்கள் செய்த ஆருயிர்களுக்கு அந்தப் பாவத்தின் பயனாகத் தண்டனையைத் தருகிறான் இறைவன்; துன்பத்தைத் தருகிறான். அழுக்காக இருங்கிற துணியைத் கல்லிலே மோதித் துவைத்து அதைச் சுத்தப்படுத்துவதுபோல, ஆருயிர்களுடைய மாசுகளைத் துன்பத்தினாலே போக்கிவிடுகிறான்.

"சுடச்சுடப் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்பது திருக்குறள்.

துன்பத்திலே புடமிட்ட உயிர்கள் பொன் புடமிட்டால் மேலும் மேலும் மெருகு அடைந்து ஒளிவிடுவது போல ஒளியை விடுகின்றன. வாழ்க்கையில் வரும் துன்பங்க ளெல்லாம் ஆருயிர்களுடைய மாசுகளைப் போக்குவதற்குரிய தண்டனை என்று கொள்ளவேண்டும். பக்தர்களுக்கு இறைவன் பல வகையான தண்டனைகளைத் தருகிறான். மற்றவர்களை அடுத்தடுத்து ஒறுக்காமல் இருந்தாலும் பக்தர்களைத்தான் அவன்

நிச்சயமாக ஒறுப்பான். தன்னுடைய சொந்தக் குழந்தை தவறு செய்யும்போதுதான் தாய் அடிப்பாள். பக்கத்து வீட்டுக் குழந்தை தவறு செய்தால் அதைப்பற்றி அந்தக் குழந்தையின் தாயினிடம் சொல்வாள்; தான் அடிக்கமாட்டாள். தானாக அடிக்க வேண்டுமானால் தன்னுடைய சொந்தக் குழந்தை என்கிற உரிமை இருக்கவேண்டும். அப்படியே இறைவனுடைய அடியார் களுக்குத்தான் அதிகத் துன்பங்கள் உண்டாகும். உடனுக்குடன் அவர்களுடைய மாசுகளையெல்லாம் போக்கித் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற அருளினாலே இறைவன் அப்படிச் செய்கிறான். இல்லாவிட்டால் அந்த அழுக்கை யெல்லாம் ஒருசேரச் சேர்த்து வைத்து, உரிய தண்டனையை மறுமையிலே அவன் கொடுத்துவிடுவான்.

★

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுடைய அருளினால் விளைகின்ற விளைவுகளை நினைத்துப் பார்க்கிறார். அடியார்கள் துன்பப்படுவது எதனாலே என்று யோசிக்கிறார். இறைவன் அடியார்களை ஒறுக்கிறான். அப்படி ஒறுப்பதற்குக் காரணம் அடியார்களிடத்திலே உள்ள கோபம் அன்று; அவர்களிடத்திலே உள்ள மாசைப் போக்குவதற்காகத்தான் ஒறுக்கிறான். அதற்கு ஏதுவாயிருப்பது அவனுடைய திருவருள்தான்.

ஒறுத்தாய் நின்அருளில்.

★

அரசியலில் இன்ன குற்றத்துக்கு இன்ன தண்டனை என்று சட்டம் இருக்கிறது. ஆனால் நாம் செய்கிற குற்றங்களுக்குத் தண்டனை இன்னது என்று எல்லை கிடையாது. காரணம் நாம் செய்யும் குற்றங்களுக்கே எல்லை இல்லை. ஏதோ ஓர் அளவாகக் குற்றம் செய்திருந்தால் அதற்குரிய தண்டனையையும் அளவாகக் கொடுக்கலாம். நாம் செய்கிற குற்றங்களோ மேலும் மேலும் எல்லையற்று வளர்கின்றன. அப்படி வளர்கின்ற குற்றத்துக் கெல்லாம்

தண்டனை அளிக்கவேண்டுமானால் நம்முடைய வாழ்வு முழுவதுமே துன்பப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இறைவன் மக்களுடைய வாழ்வு முழுமையும் துன்ப மயமாக வைப்பதில்லை. துன்பமும் இன்பமும் கலந்ததுதான் வாழ்வு. அடியார்களுக்குத் துன்பத்தையும் தருகிறான்; இன்பத்தையும் தருகிறான். அவர்கள் இன்பம் வந்தாலும் ஆண்டவனுடைய அருள் என்று நினைக்கிறார்கள்; துன்பம் வந்தாலும் அருள் என்றே நினைக்கிறார்கள்.

மக்கள் செய்த அளவு கடந்த குற்றத்துக்காக அளவு கடந்து இறைவன் ஒறுக்கிறதில்லை. குற்றம் செய்ததற்காக ஓரளவு ஒறுக்கிறான்; அவ்வளவுதான். அவன் ஒறுக்கும் அளவைவிட ஒறுக்காது விட்ட அளவே அதிகம். ஒறுப்பதைவிடப் பொறுப்பதே மிகுதி. பல குற்றங்களை அவன் கவனிப்ப தில்லை. அதனால் நாம் உய்கிறோம். நாம் செய்கிற குற்றங் களுக்கெல்லாம் சரியானபடி அளவிட்டு, இன்ன குற்றத்திற்கு இன்ன தண்டனை என்று இறைவன் கொடுத்துக் கொண்டிருந் தால் அதற்கு எல்லையே இராது. நாம் அத்தனை குற்றம் செய்துகொண்டிருக்கிறோம். ஆனாலும் குற்றம் செய்து கொண்டே போனால் அதற்கு ஒரு விளைவும் இல்லாமல் இருக்குமாயின் நமக்கு அறிவு வராது. அதனால் ஓரளவு ஒறுத்து அறிவூட்டுகிறான். பெரும்பாலும் நம் குற்றங்களை அவன் மறந்து மன்னித்துவிடுகிறான்.

அடியேன் பிழைத்தனகள் பொறுத்தாய்.

நமக்கு இறைவன் கொடுக்கிற துன்பம் ஓரளவுக் குள்ளேதான் இருக்கிறது. நம்மிடத்திலே காட்டுகின்ற கருணைக்கு அளவே இல்லை. அவனாலே பொறுக்கப்பெற்ற குற்றங்களுக்கும் அளவில்லை. அவை எத்தனையோ உண்டு; அனைத்தையும் பொறுத்தருள்கிறான்.

பிழைத்தனகள் பொறுத்தாய் எத்தனையும்.

துன்பங்கள் அடுத்தடுத்து வருகின்றன. அவற்றை அநுபவிக்கையில் அப்பொழுதப்பொழுது இறைவன் நம்மைச் சீறுகிறான் என்று தோன்றுகிறது. நம்மிடத்தில் இத்தனை சிரத்தை கொண்டு அவ்வப்பொழுது திருத்துகிறானே என்று நினைப்பது தான் முறை. அன்பர்கள் அப்படித்தான் எண்ணுவார்கள்.

ஒரு பெண் தன்னுடைய கணவனாலே புறக்கணிக்கப் பட்டிருக்கிறாள். மாமனார் மாமியார் முதலியவர்களோடு அவள் இருக்கிறாள். அவன் வருகிறான்; சாப்பிடுகிறான்; போய் விடுகிறான். அந்தப் பெண்ணோடு பேசுவது இல்லை. இப்படி இருக்கும்பொழுது ஒருநாள் ஏதோ ஒருசிறு குற்றம் செய்ததற் காக அவனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. அவளை அடித்துவிடுகிறான்; அடித்துவிட்டுப் போய்விடுகிறான். மற்ற நாளெல்லம் வாட்டத்துடன் இருக்கிற அந்தப் பெண்மணி அன்று முக மலர்ச்சியோடு இருக்கிறாள். பக்கத்து வீட்டில் உள்ள தோழி மாலை வேளையில் வந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது அவளுடைய முக மலர்ச்சியைக் காண்கிறாள். ''இது என்ன! என்றும் இல்லாத காட்சியாக இருக்கிறதே!'' என்று கேட்கிறாள். ''இன்றைக்கு அவருடைய திருவருள் எனக்கும் கிடைத்து'' என்று மகிழ்ச்சியோடு சொல்கிறாள். ''என்ன செய்தார்?'' என்று தோழி கேட்கிறாள். ''அவருடைய திருக்கரம் என்மேல் பட்டது'' என்று சொல்லி உவகை அடைகிறாள். ''அது என்ன?'' என்று தோழி விவரத்தை விசாரிக்கிறாள், ''இன்றைக்கு என்னைத் தொட்டு அடித்தார். என்னையும் ஒரு பொருளாக எண்ணி என்னைத் தம் திருக்கரத்தால் தீண்டினார்'' என்று உவகை கொண்டாள். அவளுடைய அன்பின் உயர்வு அது.

அப்படியே அன்பர்களும் தமக்கு ஏதேனும் துன்பம் உண்டானால் இறைவனுடைய திருவருளினால் வந்தது என்று நினைக்கிறார்கள்; ''இறைவன் நம்மையும் பொருட் படுத்தி அவ்வப்போது திருத்துகிறான்'' என்று நினைத்து மகிழ் கிறார்கள்.

தங்களை அவர்கள் மிகவும் இழிவாகச் சொல்லிக் கொள்வது வழக்கம். செருக்கு உடையவர்கள் சிறிய காரியம் செய்தாலும்கூட, ''நான் அது செய்தேன்; இது செய்தேன்'' என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால் இறைவனுடைய அருளைப் பெற்ற வர்களோ எப்பொழுதும் தம்மைக் குறைத்துக்கொண்டே பேசுவார்கள்; நாயென்றும் பேயென்றும் சொல்லிக்கொள்வார்கள். ''நாயேன் நாயேன்'' என்று சொல்வது அவர்கள வழக்கம். அதன் கருத்தைச் சிறிது பார்க்கலாம்.

இழிந்தவர்களை நாய் என்று சொல்வது தமிழர் வழக்கம். நம்முடைய வசவுத் தமிழிலே சேர்ந்தவை 'நாயே, பேயே' என்ப. நாயை இழிவாகச் சொல்வதற்குக் காரணம் மற்றவர்கள் கழித்த பொருளை அது உண்ணுகின்றமையே என்று சொல்லலாம். ஆனால் மற்றவர்கள் கழித்த பொருளை உண்ணுகின்ற மற்றொரு விலங்கும் இருக்கிறது. அது பன்றி. பன்றி என்று சொல்லாமல் நாயைச் சொல்வதிலே ஒரு சிறப்பு இருக்கிறது. நாய் மலத்தை உண்ணுவது இழிவுதான். ஆனால் அதைக் காட்டிலும் இழிந்த செயலை அது செய்கிறது. எந்தப் பிராணியும் தான் ஒரு முறை உண்டு வாந்தி எடுத்தால் மீட்டும் அதை உண்ணாது. நாயோ ஒரு முறை உண்டதை வாந்தி எடுத்துவிட்டால் மீட்டும் அதை உண்ணும். அது எவ்வளவு இழிவான இயல்பு! மக்கள் பிறவிதோறும் எத்தனையோ துன்பங்களை அநுபவித்தாலுங்கூட அவற்றை மறந்து அந்தத் துன்பங்களுக்குக் காரணமான செயல்களிலே மீட்டும் ஈடுபடுகிறார்கள். ஒரு பிறவியிலேயே அநுபவத்தில் இது தவறு என்று அறிந்ததை, மீட்டும் செய்கிறார்கள். இது வாந்தியெடுத்த பொருளை மீட்டும் உண்ணும் நாயின் செயலைப் போன்ற தல்லவா? ''நான் எத்தனையோ துன்பத்தை அடைந்திருக் கிறேன். அதற்குக் காரணமாக நான் செய்த தவறு தெரிகிறது. ஆனாலும் மீட்டும் மீட்டும் அந்தத் தவறுகளைச் செய்கிறேன்'' என்று சொல்வதற்குப் பதிலாக, நான் நாய் போன்றவன் என்று சொல்வது பெரியவர்களுடைய வழக்கம்.

சுந்தரமூர்த்தி நாயனார் அப்படிச் சொல்கிறார். ''ஆண்டவனே, என்னை ஒறுத்தாய்; பொறுத்தாய். அவ்வப்போது நான்

செய்கிற தீங்குகளையெல்லாம் மறந்து என்னைத் திருத்த வேண்டும் என்று துன்பங்களைத் தந்தாய். நாய் போன்ற என்னையும் பொருட்படுத்தினாய். கண்டால் அணுகாமல் விலகுவதற்குரியது நாய். நாயைப் போல இருக்கிற என்னைக் கண்டு நீ விலக வேண்டி இருக்க, என்னையும் உன் அருளுக்கு உரிய பொருளாக நினைத்து என்னைத் திருத்தவேண்டும் என்று எண்ணினாய். அதனால் அவ்வப்பொழுது என்னைச் செறுத்தாய்; என்னிடத்திலே கோபங் கொண்டாய். உன்னுடைய கோபம் என்னுடைய லாபம்.''

... ... நாயினேனைப் பொருட்படுத்திச்
செறுத்தாய்.

★

நல்ல பொருளிடத்திலே உறவாடுவது மக்களுக்கு இயல்பு. நல்லது அல்லாததானால் அதனிடத்தில் உள்ள தீங்கும் தம்மிடத்தில் ஒட்டிக்கொள்ளுமே என்று அஞ்சுவார்கள். இறைவனோ எந்த விதமான தீங்கினாலும் துன்புறாதவன்; மிக மிக இழிந்த அழுக்குகளையும் மாற்றுகின்ற தூய உருவமாக இருக்கிறவன். பெரு நெருப்புக்கு ஈரம் இல்லை. ஆதலினால் அவன் குற்றம் உள்ள ஆருயிர்களைத் திருத்துவதற்காக அவற்றை அணுகுகிறான். எவை எவை மற்றவர்கள் அஞ்சி விலகுவதற் குரியன என்று நினைக்கிறார்களோ அவைக ளெல்லாம் இறைவனுக்கு அணுகுவதற்குரிய பொருள்களா கின்றன.

தேவர்கள் தங்களுடைய வாழ்வு நீடிக்க வேண்டும் என்று கருதியும், மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வேண்டுமென்று கருதியும் அமுதத்தை உண்டார்கள். அவர்கள் வேண்டி உண்ட உணவு அது. ஆனால் இறைவனோ நஞ்சை உண்டான். அந்த நஞ்சினாலே தனக்குத் துன்பம் வரும் என்ற நினைப்பே அவனுக்கு இல்லை.

ஆலகால விடத்தின் காற்றுத் தம்மேல் பட்டாலும் இறந்துபடக் கூடியவர்கள் தேவர்கள். பாற் கடலில் விடம் தோன்றியபொழுது அவர்கள் ஆண்டவனிடத்திலே வந்து

முறையிட்டுக்கொண்டார்கள். உடனே அதைக் கையிலே எடுத்துக்கொண்டு, ''இதை நாம் உண்ணுகிறோம்; இதனால் நமக்குத் துன்பம் இருக்குமா, இராதா?'' என்றெல்லாம் யோசிக்காமலே உண்டுவிட்டான். நல்ல பொருளை மாத்திரம் கொள்ளுவது பிறருடைய இயல்பு. அல்லாத பொருளானாலும் அது அல்லாதது என்ற நினைவுகூட இல்லாமல் ஆண்டவன் ஏற்றுக்கொள்ளவான்.

பாற் கடலிலே தோன்றிய ஆலகால விடத்தை, அது தனக்குத் துன்பம் தரும் என்பதைச் சிறிதேனும் அறியாமல் இறைவன் நுகர்ந்தான் என்பதை இன்றைக்கும் காட்டிக்கொண்டு நிற்கிறது இறைவனுடைய நீல கண்டம்.

... ... வேலைவிடம் அறியாமல் உண்டுகண்டம்
கறுத்தாய்.

இறைவனுடைய கருணையை என்னவென்று சொல்வது! எல்லாரும் அஞ்சக்கூடிய ஆலகால விடத்தையே எடுத்து உண்டான் என்றால், குற்றங்கள் செய்கின்ற ஆருயிர்களை அணுகி அவர்களைக் காப்பாற்றுவது பெரிய காரியமா? 'என்னைப் போன்ற குற்றம் உடையவர்களைக் காப்பாற்று வதற்காக முன்பே நீ நஞ்சை உண்டு பயிற்சி பண்ணிக் கொண்டாய் போலத் தோன்றுகிறது' என்ற கருத்தும் இங்கே புலப்படுகிறது. தன் கண்டம் கறுத்தாலும் நஞ்சை அங்கே வைத்திருக்கிறான் இறைவன். அவனைச் சார்ந்தவர்கள் முன்னை நிலை எப்படி இருப்பினும் உயர்வை அடைவார்கள் என்பதைக் காட்டுவது அது.*

''பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி, வஞ்சனுக்கிளைய என்னை வாஎன அருள்செய் தானோ, தஞ்செனக் கருதினானோ தாழ்சடைக்கடவுள் உண்ட, நஞ்செனத் தகையன் அன்றோ நாயகன் அருளில் நாயேன்'' (வீடணன் அடைக்கலப் படலம்) என்ற கம்பர் பாடல் இங்கே நினைப்பதற்குரியது.

இந்த எண்ணங்களெல்லாம் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருக்கழிப்பாலை என்ற தலத்திலே தோன்றின. திருக்கழிப் பாலை வளப்பமான வயல்கள் நிரம்பிய தலம்; தண்ணீர் சூழ்ந்த வயல்கள் பரவியிருக்கின்ற இடம்.

தண்கழனிக் கழிப்பாலை மேயானே!

கழிப்பாலை மேயானைத் தரிசித்து அவனுடைய அருளின் விளைவைச் சொல்லுகிறார். ஒறுப்பதும், பல குற்றங்களை நினையாது அவற்றையெல்லாம் பொறுப்பதும், தம்மையும் பொருட்படுத்தி அவ்வப்பொழுது திருத்திக்கொள்வதும் ஆகிய காரியங்கள் யாவும் அந்த அருளின் விளைவே என்று நினைந்து பாடி இன்புறுகிறார்.

ஒறுத்தாய் நின் அருளில்; அடியேன் பிழைத்தனகள்
பொறுத்தாய் எத்தனையும்; நாயேனைப் பொருட்படுத்திச்
செறுத்தாய்; வேலைவிடம் அறியாமல் உண்டுகண்டம்
கறுத்தாய்; தண்கழனிக் கழிப்பாலை மேயானே!

(குளிர்ந்த வயல்கள் நிறைந்த திருக்கழிப்பாலை என்னும் திருத்தலத்தில் விரும்பி எழுந்தருளி யிருக்கும் இறைவனே! நின்னுடைய திருவருளினால் என்னை ஒறுத்தாய். அடியேன் பிழைத்தவை எவ்வளவானாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டாய்; கடலில் தோன்றிய நஞ்சை அதன் தீமை நன்மையை அறியாமல் உண்டு திருக்கழுத்தில் கறுப்பு நிறத்தைக் கொண்டாய்.

நின் அருளில் என்பதை எல்லாவற்றோடும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். நின் அருளில் ஒறுத்தாய், நின் அருளில் பொறுத்தாய், நின் அருளில் செறுத்தாய் என்று பொருத்துவது சிறப்பு. பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் என்று இயைக்கவேண்டும். செறுத்தாய்- கோபித்தாய். வேலை-கடல். கண்டம்-கழுத்து. மேயான்-விரும்பி வாழ்பவன்.)

எல்லாம் இனிமை

இயற்கை அழகைக் காணும்பொழுது மனத்தில் உண்டாகும் இன்பம் அளப்பரியது. கவியுள்ளம் படைத்தவர்களுக்கு அந்த அழகு பலபல கற்பனைகளை உண்டாக்குகின்றது. கலைஞருடைய கண்களுக்குத்தான் இயற்கையின் எழில் மிகமிக இனிதாகத் தோற்றும். சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பெரிய கலைஞர். தம்முடைய உள்ளத்தில் தோன்றுகின்ற உணர்ச்சி களை யெல்லாம் அழகிய சொற்களாலே கோலம் செய்து கவியாகப் பாடும் ஆற்றல் உடையவர்.

இறைவன் படைத்த பொருள்கள் எல்லாவற்றிலுமே அழகு நிரம்பி இருக்கிறது. ஆனால் அதைக் காணும் ஆற்றல் பெற்ற கண்தான் எல்லாருக்கும் இருப்பதில்லை. கண் இருந்தும் காணாத குருடர்களாக மற்ற மனிதர்கள் இருக்கிறார்கள். கலைஞனோ இயற்கையின் எழில் நலங்களையெல்லாம் காணும் கண் படைத்தவனாக இருக்கிறான். அவனுடைய காட்சியில் எல்லாம் அழகாகவே தோற்றுகின்றன. நல்ல நிலாவிலே கருவேல மரத்துக்குக்கூட ஒரு சோபை உண்டாகும். கவிஞனுடைய காட்சியிலே இப்படித்தான், உலகம் முழுவதும் அழகே உருவாகத் தோன்றும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கருப்பறியலூருக்குச் சென்றார். சோழ நாட்டில் வளம் பொருந்திய ஊர் அது; வாழையும் நெல்லும் கரும்பும் சிறந்து வளரும் ஊர். நடந்து போகும்பொழுதே ஒரு பக்கத்தில் வாழைகள் நெருங்கி அடர்ந்து வளர்ந்திருப்பதைக் கண்டார். வேலிக்காலிலே வாழைகளை நட்டிருக்கிறார்கள். வேலிதோறும் வாழைகள் நன்றாக வளர்ந்து குலையீன்று நிற் கின்றன. குலைகளில்

இயற்கையாகவே கனிகள் குலுங்குகின்றன. வாழையின் அடிமரத்தில் கொஞ்சம் கருமை படர்ந்திருக்கிறது. மேலே செக்கச்செவேலென்று குலைகள் தள்ளியிருக்கின்றன. நன்றாகக் கனிந்திருப்பதனாலே கனிகளெல்லாம் சிவந்திருக் கின்றன. அந்தப் பழங்களிலிருந்து தேன் சொரிகிறது. இவற்றைக் கண்ணாலே கண்டால் கற்பனை நெஞ்சம் படைத்தவர்களுக்கு எத்தனை அழகாகத் தோன்றும்! வேறு யாராக இருந்தாலும் அந்தச் செங்கனிகள் சொரிகின்ற தேனைக் கண்டால் அவர்கள் நாவிலிருந்து நீர் சொரியுமே. சுந்தரமூர்த்தி நாயனார் அவற்றையெல்லாம் கண்ணாலே கண்டார். கண்ட மாத்திரத்தில் இறைவனுடைய நினைவுதான் வந்தது. ''என்ன அழகு! இவற்றையெல்லாம் படைத்த ஆண்டவன் பேரழகனல்லவா?'' என்று அவருடைய உள்ளத்திலே இனிமை பொங்கியது.

பின்பு அந்த ஊர்த் திருக்கோயிலுக்குச் சென்றார். அந்தக் கோயிலில் முல்லைக் கொடி படர்ந்திருக்கிறது. முல்லையில் பல சாதிகள் உண்டு. கொகுடி முல்லை என்பது ஒரு சாதி. அதுதான் அந்தத் தலத்துக்குரிய விருட்சம், அதனால் அந்தக் கோயிலுக்குக் கொகுடிக் கோயில் என்று ஒரு பெயர்.

வெளியிலே வாழையின் வளத்தைக் கண்டு, அந்த வாழையில் உள்ள செங்கனிகளின் அழகையும் கண்டு, அந்தக் கனிகளிலிருந்து சொரிந்து வழியும் தேனையும் கண்டு கோயிலுக்கு உள்ளே புகுந்தவர், அங்கும் ஓர் அழகான காட்சியைக் கண்டார். மணம் பரப்பும் முல்லைக் கொடி படர்ந்த பந்தல் அந்தக் கொகுடிக் கோயிலில் இருப்பதைப் பார்த்தார். ''என்ன அழகு! இறைவனுடைய படைப்பிலே உள்ள அழகுதான் என்னே!''- அவருடைய உள்ளம் துள்ளிக் குதித்தது.

பின்பு கோயிலுக்குள்ளே சென்றார். இறைவனைத் தரிசித்தார். அவனைப் பார்ப்பதற்கு முன்னாலே எம்பெரு மாட்டியினுடைய நினைப்பு வந்தது. எம்பெருமாட்டிக்கு அங்கே கோல் வளையாள் என்று பெயர். அம்பிகையினுடைய

அழகிய திருவுருவத்திலே உள்ளத்தைப் பறிகொடுத்தார். அம்மையின் புன்முறுவல் பூத்த திருக்கோலம் அவருக்குத் தோற்றியது.

பெண்களின் அழகைச் சிறப்பிக்கும்போது அவர்களுடைய பற்களின் கூர்மையையும் செறிவையும் ஒளியையும் எடுத்துச் சொல்வது புலவர்களின் மரபு. உடம்பு முழுவதும் அழகு பரவியிருந்தாலும் முகம் ஒளியுடனும் எழிலுடனும் விளங்கினால்தான் அழகியென்று சொல்லுவார்கள். முகத்திற்கு ஒளி தருவது புன்னகை. பற்கள் அழகாக இருந்தாலன்றிப் புன்னகையில் எவ்வாறு அழகு அமையும்?

இங்கே அம்பிகையின் முறுவல் பூத்த முகத்தின் அழகை அப்பெருமாட்டியின் பற்கள் மிகுதியாக்குகின்றன. வெளுப்பாகவும் சிறியனவாகவும் அவை இருக்கின்றன; கூர்மையாகவும் உள்ளன. மயிலிறகின் அடிக் குருத்தைப் போன்ற வடிவமும் வெண்மையும் பெற்றவை அவை.

குருந்து (குருத்து) ஆய முள் எயிற்றுக் கோல் வளையாளைத் தரிசித்தார் சுந்தரர். கையில் திரண்ட வளையை அணிந்திருக்கிறாள் பிராட்டி.

அழகான காட்சிகள் உள்ள ஊரில் அழகிய முல்லைக் கொடி படர்ந்த கோயிலில் கோல் வளையாள் வீற்றிருந்தாள். அந்தப் பெருமாட்டியோடு எம்பெருமான் வீற்றிருந்தான்.

வேலி தோறும்
கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியும்
கருப்ப றியலூர்க்
குருந்தாய முள் எயிற்றுக் கோல்வளையா ளவளோடும்
கொகுடிக் கோயில்
இருந்தானை.

(குருந்தாள-கரிய அடி மரத்தையுடைய. குருந்து-மயிலிறகின் அடிக்குருத்து. முள்-முள்ளைப் போன்ற கூர்மை. கோல்வளை-திரட்சி பெற்ற வளை. கொகுடி-ஒரு வகை முல்லை.)

கொகுடிக் கோயிலில் இருந்த பெருமானைத் தரிசித்தால் வினைகளெல்லாம் போய்விடுகின்றன. எம்பெருமானுடைய தரிசனம் அன்பர்களுடைய உள்ளத்து மாசையெல்லாம் கழுவிவிடும். சுந்தரர் வினை போக எம்பெருமானைத் தரிசித்தார்.

மூன்று கரணங்களையும் எம்பெருமானுடைய திருத்தொண்டிலே ஈடுபடுத்தியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இறைவனாலே படைக்கப் பெற்ற இயற்கை எழிலையெல்லாம் கண்டார். அந்த ஊருக்குள்ளே புகுந்தது முதற்கொண்டே அந்த அழகு அவர் கண்ணைக் கவர்ந்தது; கருத்தையும் கவர்ந்தது. உள்ளத்தில் இனிமை நிறைந்தது. வாழைப் பழத்திலே ஒழுகுகின்ற தேனைச் சுவைத்தால் நமக்கு எத்தனை இனிமை இருக்குமோ அதற்கு மேற்பட்ட இனிமை சுந்தரமூர்த்தி நாயனாருடைய உள்ளத்தில் நிரம்பிக் கிடந்தது.

அந்த அழகுக் காட்சிகளைக் கண்டு பின் அம்பிகையோடுள்ள இறைவனைப் பார்த்தார். அவர் கையெடுத்துக் கும்பிட்டார்; கீழே விழுந்து வணங்கினார். அவர் உள்ளத்தில் இனிய உணர்ச்சி அப்பொழுது பொங்கியது. அழகான, பாமாலை பாட ஆரம்பித்தார். நாமும் பாமாலை பாடுவோம்; வேறு யாரேனும் புலவர் பாடிவைத்ததைப் பாடுவோம். சுந்தரர் அப்படிக் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லையே! இறைவனுடைய ஆணையினால் பாமாலை பாடுவதற்காகவே தம்முடைய வாழ்வை ஈடுபடுத்தியவர் அவர்; சொன்மாலை பாடுக என்று இறைவனே விரும்பிப் பணித்த பெருமையை உடையவர்.

அவர் பாடுகிறார். பாடும்பொழுது புதிய புதிய மாலைகளைப் பாடுகிறார். வேறு ஒரு தலத்திலே பாடிய பாடலை இங்கே பாடித் தலத்தின் பேரை மாத்திரம் மாற்றுகிறாரா? இல்லை. அவருக்குப் புதிய புதிய கற்பனைகள் தோன்றுகின்றன. புதிய புதிய சிந்தனைகள் எழுகின்றன. புதிய புதிய பாடல்கள் மலர்கின்றன. எம்பெருமானுடைய பெருமையைப் புதிய புதிய முறையிலே அமைத்துப் பாடுகிறார்.

வெறும் சொற்களின் கூட்டமே கவிதை ஆக இருந்தால் புதுமை இராது. எல்லாச் சொற்களும் முன்புள்ள புலவர்களால் ஆளப் பெற்றவையே. வெறும் சொல்லிலே மாத்திரம் கவிதை இல்லை. சொற் கூட்டத்தினூடே உள்ள உயிராகிய உணர்ச்சியிலேதான் கவிப் பண்பு இருக்கிறது. வெறும் சொற் கூட்டத்திலே கவி இருக்குமானால் அகராதி ஒன்றே போதுமே! சொற்களையெல்லாம் கோவைப்படுத்தி உணர்ச்சி துள்ளும் படியாக ஆக்குவது கவிதை. ஒவ்வொரு முறையும் அது புதிதாக இருக்கும்.

தொழிலாளி ஒரு பொருளை இயற்றினால் மீட்டும் மீட்டும் ஒரே மாதிரி செய்வான். குயவன் ஒருவன் மண்பாண்டத்தை வனைகிறான். அவன் வனைகிற பாண்டம் ஒரே மாதிரி இருக்கும். லட்சக்கணக்கான பாண்டங்களை அவன் படைத்தாலுங்கூட எல்லாப் பாண்டங்களும் ஒரு மாதிரியே இருக்கும். ஆனால் கலைஞனுடைய படைப்பே வேறு. அவன் ஒரு கணம் செய்த படைப்பை மீட்டும் செய்யமாட்டான். ஒவ்வொரு கணமும் அவன் படைப்பில் புதுமை தோன்றும். நான்முகன் ஒரு பெரும் கலைஞன். எவ்வளவோ காலமாக மனிதர்களைச் சிருஷ்டித்து வருகிறான். பல இடங்களிலே மக்கள் வாழ்கிறார்கள். இருந்தாலும் ஒருவருடைய முகத்தைப்போல வேறு ஒருவருடைய முகம் இருப்பதில்லை. ஒவ்வொன்றிலும் ஒரு புதுமை. கலைஞ னிடத்தில்தான் இந்தப் புதுமையைக் காணமுடியும். கவிதை யிலுள்ள சொற்கள் முன்னாலே பல கவிஞர்கள் எடுத்தாண்ட சொற்களாக இருந்தாலும் அவற்றின் கோவையில், புதிதாகப் புகுத்திய உணர்ச்சியில் புதுமை தோன்றுகிறது. அதனால் அப்பொழுது பாடுகிற பாட்டு அன்றலர்ந்த நாண் மலர்போல விளங்குகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகிற ஒவ்வொரு பாட்டும் புதுமைச் சுவையோடு இருக்கிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் அழகான வாழைக் கனிகள் தேன் சொரியும் கருப்பறியலூரில் கொகுடிக் கோயிலில் கோல் வளையாளோடும் இருப்பானாகிய எம்பெருமானைத் தரிசித்துப் பாட ஆரம்பிக்கிறார். பாட்டைப் பாடுபவர் பழைய

சுந்தரமூர்த்தி நாயனார்; பழைய பரமசிவனையே பாடுகிறார். ஆனால் பாட்டுப் புதியதாக வருகிறது; விருந்தாக வருகிறது (விருந்து - புதுமை). சொற்களாகிய மலர்களைத் தொடுத்த புதிய மாலை அது.

அதைப் பாடும்பொழுது அவருக்கு அலுப்பு உண்டாக வில்லை. எத்தனையோ தலங்களுக்குச் சென்று எவ்வளவோ காலமாகப் பாடி வருகிறவர் அவர். ஆயினும் இப்போது பாடும் அந்தப் பாட்டில் ஒரு புதுமைச் சுவை இருக்கிறது. பாடுகிற வருக்கும் சுவை பிறக்கிறது; பாட்டைக் கேட்கிறவருக்கும் சுவை பிறக்கிறது; கேட்கின்ற சிவபெருமானுக்கு மாத்திரமல்ல; இன்றளவும் அந்தப் பாட்டை எத்தனையோ மக்கள் கேட்டு அறிந்து உணர்ந்து இன்புற்றிருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் அது புதியதாக இருக்கிறது. ஒரு பாட்டு மற்றொரு பாட்டிலும் புதியது என்பது மாத்திரமல்ல; ஒரு பாட்டையே பல முறை படித்தாலும் புதுமை தோற்றிக் கொண்டே இருக்கிறது. அதை ஒருமுறை படிப்பதோடு நிறுத்திவிடுவது கூடாது. சிறந்த கவி எத்தனை முறை படித்தாலும் புது விருந்தாகவே தோற்றும்.

''ஆயுந் தொறுந்தொறும் இன்பம் தருந்தமிழ்''.

என்று ஒரு புலவர் சொல்கிறார்.

கவிதையைப் படிப்பவனுக்கே புதிய புதிய இன்பம் சுரக்குமானால் படைப்பவனுக்கு எத்தனை இன்பம் இருக்கும்! மேலும் மேலும் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு உண்டாகிறது. ''இத்தனை காலம் நாம் படைத்து விட்டோமே; இத்தனை காலம் ஓவியம் எழுதி விட்டோமே; இனி எதற்கு?'' என்ற சலிப்புக் கலைஞனுக்கு வருவது இல்லை. தொழிலாளிக்குத்தான் அத்தகைய சலிப்பு உண்டாகும். வேலை செய்யும் காலத்தையும் கிடைக்கிற ஊதியத்தையும் நினைத்துக் கொண்டிருப்பவன் தொழிலாளி. அவற்றை மறந்து தன் கலைப் படைப்பிலே ஈடுபட்டுக் கிடக்கிறவன் கலைஞன். புதியது ஒன்றைப் படைக்கும்போது அவன் உள்ளத்திலே முகிழ்க்கும் இன்பந்தான் அந்த நிலைக்குக் காரணம்.

கலைஞன் படைக்கப் படைக்கப் புதுமை ஊறும். அந்தப் படைப்பைக் கலையார்வத்தோடு காணும் இயல்புடைய வர்களுக்குப் பார்க்கப் பார்க்க இன்பம் ஊறும். கலைஞனுடைய படைப்பு யாவும் புதிய புதிய பொருள்களே. கலைஞர்களுக்குள் சிறந்தவன் கவி. அவன் படைத்த கலைப்பொருளாகிய கவி படிக்குந்தோறும் இன்பத்தைத் தருவது.

சுந்தரமூர்த்தி நாயனார் கொகுடிக் கோயிலுக்கு வந்து பாடிய பாட்டு முதற்பாட்டு அல்ல. அவர் பித்தா என்று ஆரம்பித்தது முதற்பாட்டு. அதற்குப் பின் பல பதிகங்களைப் பாடினார். ஆயினும் அவருக்குப் புதுமை மணம் மாறவில்லை. பாட்டைப் பாடும்போதெல்லாம் புதுமை மணம் நெஞ்சத்திலே ஊறுகிறது. அவர் பாடும் பாமாலை விருந்தாக இருக்கிறது.

விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி.

★

இறைவனைத் தம்முடைய கண்ணாலே கண்டு சரணாதி அவயவங்களினாலே பணிந்தார். அது உடம்பால் ஆகிய செயல். அடுத்து கரணமாகிய வாக்கினால் செய்யும் செயல், சொல் மாலை சூடுவது. 'விருந்தாய சொன் மாலை' கொண்டு ஏத்தினார். இவ்வளவு பணிகள் செய்தும், இத்தனை விருந்தாகிய சொல் மாலைகளைச் சூட்டியும் அவருக்கு மனநிறைவு உண்டாகவில்லை. தம்முடைய உள்ளத்தில் இறைவனை நினைத்துப் பார்க்கிறார். அப்பொழுதுதான் இனிமை பரிபூரணத்தை அடைகிறது. பாட்டைக் காதிலே கேட்கும்போது ஓரளவு இனிக்கும். அதன் கருத்து உள்ளத்துக்குள்ளே புகும்பொழுதுதான் மிக மிக இனிக்கும்.

இறைவனைக் கண்டு பணிந்து ஏத்திய சுந்தரர் அவனை நெஞ்சிலே நினைக்கிறார். உணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கே சேர்த்து அவனுடைய அருளை நினைக்கிறார். அவ்வாறு நினைக்கும்பொழுது எத்தனை இன்பமாக இருக்கிறது!

நினைத்தபோது அவர் நமக்கு இனியவாறே!

அந்த இனிமை இப்படியிருந்தது என்று அளவிட்டுச் சொல்ல முடியவில்லை. ''அவர் நமக்கு இனியவராக இருக்கும் திறம் என்னே!'' என்று அநுபவாதிசயப் பெருக்கிலே பாடுகிறார்.

கண்ணினாலே கண்ட இயற்கை அழகிலே இனிமை, தரிசித்த மூர்த்தியினுடைய காட்சியில் இனிமை, அவனைப் பாடிய தேவாரப் பாட்டில் இனிமை. அவனைப்பற்றிய நினைப்பில் இனிமை, ஆக எல்லாவற்றிலும் இனிமையைக் கண்டார் சுந்தரர். எல்லாம் இனிமை மயமாக இருக்கின்றன.

விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி வினைபோக
வேலி தோறும்
கருத்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியும்
கருப்ப றியலூர்க்
குருந்தாய முள்எயிற்றுக் கோல்வளையா ளவளோடும்
கொகுடிக் கோயில்
இருந்தானை மனத்தினால் நினைந்தபோது அவர்நமக்கு
இனிய வாறே!

(கரிய அடிமரத்தையுடைய வாழையின்மேல் கனிந்த சிவந்த பழங்கள் முதிர்ந்து தேனைச் சொரிகின்ற திருக்கருப்பறியலூரில், மயிலிறகின் அடிக் குருத்தைப் போன்ற கூர்மையான பற்களை உடைய கோல்வளையம்மையுடன் கொகுடிக் கோயிலில் எழுந்தருளி யிருந்தவனை, புதுமையையுடைய சொல்மாலைகளைக் கொண்டு துதித்து, பாவங்கள் எல்லாம் போகாநிற்க, மனத்தினால் இப் பெருமானை நினைந்தபோது அவர் நமக்கு இனித்த இனிமை இருந்தவாறு என்னே!

விருந்து - புதுமை. ஏத்தி - துதித்து. வினை - தீவினை. வேலி தோட்ட வேலி. இருந்தானை - வீற்றிருந்தவனை. இனியவாறே - இனியவாறு என்னே! இனிமையை நினைக்கையில் மதிப்பு உயர்ந்து அவர் என்று பன்மையில் சொல்கிறார்.)

★

இம்மை மறுமைப் பயன்

சுந்தரமூர்த்தி நாயனார் தமக்கு ஏதாவது பொருள் வேண்டுமானால் உலகத்திலுள்ள மக்களிடத்திலே போய் இரக்கும் வழக்கம் இல்லை. அவருக்கு இறைவன் மிகவும் உரியவனாகி விட்டான்; தோழனானான். இடுக்கண் வரும் போதெல்லாம் உதவுவதுதானே தோழனுடைய இயல்பு? மனிதத் தோழனாக இருந்தால், தனக்கே குறைபாடு இருப்பதனால் வேண்டியதைக் கொடுக்க முடியாது. ஒன்றாலும் குறைவிலா நிறைவையுடைய ஆண்டவன் எல்லாவற்றையும் கொடுக்கும் ஆற்றல் உள்ளவன். அவனைத் தோழனாகப் பெற்ற தம்பிரான் தோழருக்கு எந்தப் பொருளால் குறைவரப் போகின்றது?

அவர் குறையை முன்னாலே குறிப்பாக அறிந்து கொடுப்பதில்லை, ஆண்டவன். குறை நேர்ந்தால் அந்தக் குறையை நீக்கிக்கொள்ளச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடுவார். அந்தப் பாட்டை எம்பெருமான் கேட்க ஆசைப்பட்டான். அது மாத்திரமா? உலகமெல்லாம் கேட்க வேண்டுமல்லவா? உலகம் அந்தப் பாடல்களை ஓதிப் பயன்பெற வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம்.

அவர் பாடவேண்டும் அல்லவா? அதன் பொருட்டு அவருடைய குறையை வாய்விட்டுச் சொல்லுமளவும் வாளா இருப்பான் ஆண்டவன்.

ஒருமுறை திருப்புகலூருக்கு வந்து சேர்ந்தார் சுந்தர மூர்த்தி நாயனார். அவருக்குப் பொன் வேண்டியிருந்தது. இறை வனிடத்திலே வந்து, ''ஆண்டவனே, எனக்கு இப்பொழுது செலவாக இருக்கிறது; பணம் வேண்டும்'' என்று கேட்டார். கிடைக்கவில்லை. சிறிது கோபம் உண்டாயிற்று. சண்டித்தனம் பண்ணும் பிள்ளை வீதியிலே படுத்துக்கொள்வது போல அந்த

இடத்திலே படுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தார். அப்பொழுது கோயிலில் திருப்பணி நடந்துகொண்டிருந்தது. செங்கற்களைக் கொண்டுவந்து அடுக்கியிருந்தார்கள். இரண்டு செங்கல்லை எடுத்தார்; தலைக்கு அணையாக வைத்துக் கொண்டார்; துண்டை விரித்துப் போட்டார்; அப்படியே படுத்தார். அயர்ச்சியினாலே தூங்கிவிட்டார்.

தூக்கத்தினின்று விழித்தார். எழுந்து துண்டை உதறினார். தலை மாட்டில் வைத்திருந்த செங்கல்லைப் பார்த்தால் அது பொன்னாக இருந்தது. அப்பொழுது அவர் உள்ளத்திலே உண்டான உவகைக்கு அளவு உண்டா? உடம்பெல்லாம் புல்லரித்தது. 'நாம் நம்முடைய ஆண்டவனை கோபித்துக் கொண்டோமே. கல்லைப் பொன்னாக்குகின்ற பெருமான் அல்லவா? நம்முடைய குறிப்பறிந்து வேண்டியதைத் தந்துவிட்டானே!' என்று அவர் துள்ளிக் குதித்தார். உடனே, ''என்னுடைய பெருமை இது. எனக்காக ஆண்டவன் தந்தான்'' என்று சொல்லிக்கொள்ளத் தோன்றவில்லை. ''அடடா! உலகில் குறையுடைய மக்களைப் போய், எனக்கு அது வேண்டும், இதுவேண்டும் என்று புலவர்கள் பாடுகிறார்களே; இப்படி ஒரு கற்பகம், காமதேனு, குறிப்பறிந்து தருகின்ற பெருவள்ளல் இருக்கும்போது அவனைப் பாடாமல் யார் யாரையோ பாடு கிறார்களே!'' என்று புலவர்களை நினைந்து இரக்கம் உண்டா யிற்று. உடனே ஒரு புலவர் மகாசபைக்கு முன்னாலே பேசுவது போலக் கற்பனை செய்து கொண்டார். பாட ஆரம்பித்தார்.

''பைத்தியக்காரப் புலவர்களே! யார் யாரையோ போய்ப் பாடுகிறீர்களே! எங்களுடைய ஆண்டவனைப் பாடுங்கள்; எல்லாம் கிடைக்கும்'' என்று பாடலானார்.

★

ஒரு புலவன் செல்வர் ஒருவரிடம் சென்றான். கற்பகமே, காமதேனுவே என்று புகழ்ந்தான். ''உங்களுடைய குடும்பமே உயர்ந்த குடும்பம்; உங்களுடைய தந்தையார் முதலியவர் களெல்லாம் உங்களுக்கு ஆசி கூற, அவர்களுடைய முயற்சி யினாலும் உங்கள் முயற்சியினாலும் சிறந்த நிலைக்கு வந்தீர்கள்'' என்று புகழ்ந்தான். சட்டென்று அந்தச் செல்வர் அவன் பேச்சை நிறுத்தினார்.

''ஓய்! நீர் என்னுடைய தகப்பனாரைக் கண்டீரா? அவர் பரம ஏழையல்லவா? என்னுடைய சொந்த முயற்சியினால் அல்லவா நான் முன்னுக்கு வந்தேன்? எதற்கு மற்றவர்களை யெல்லாம் சொல்கிறீர்?'' என்று கோபத்தோடு கேட்டார். அப்பொழுதுதான் புலவனுக்கு உண்மை விளங்கியது. தாமாகவே எல்லாவற்றையும் ஈட்டியதாகச் சொல்லவேண்டும் என்பது அவர் நினைப்பு என்று தெரியவந்தது. புலவன் பாடும் புகழில், இம்மியும் பிறரைச் சாரக்கூடாதாம்! அத்தனை புகழுக்கும் தனியுரிமை படைத்தவராக வேண்டும் என்று அந்தச் செல்வர் நினைத்தார். அதனைத் தெரிந்துகொண்டு மறுபடியும் இச்சகம் பேசி, ''அடடா! நீங்கள் அசகாய சூரர் அல்லவா? நீங்களாகச் சம்பாதித்துக்கொண்ட செல்வம், நீங்களாகப் பெற்றுக்கொண்ட புகழ்'' என்று பாடினான் புலவன். கடைசியில், ''பாட்டு நன்றாயிருக்கிறது; போய்விட்டு வாரும்'' என்று அந்தச் செல்வர் சொல்லி அனுப்பிவிட்டார்.

இது புலவர்களுடைய வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சி. செல்வர்களைக் கண்டு வேறு யாரையும் புகழாமல் அவர் களையே புகழ்ந்து, எல்லாப் புகழையும் அவர்களுக்கே உரியது ஆக்கிவிட்டு இச்சகம் பேசினாலும்கூட ஏழைத் தொண்டர் களுக்குத் தரமாட்டார்கள் அவர்கள். அவர்களைப் போய் எதற்காகப் பாடவேண்டும்?

தம்மை யேபுகழ்ந்து இச்சை பேசினும்
சார்வி னும்தொண்டர்த் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே.

(வேறு யாரையும் புகழாமல் தம்மையே புகழ்ந்து தமக்கு விருப்பமான படியெல்லாம் சொன்னாலும், அண்டி நின்றாலும் தொண்டர்களுக்கு எதையும் வழங்காத பொய்யர்களைப் பாடாமல்.)

இச்சை பேசினாலும் எப்போதும் அடுத்தடுத்துப் பயின்றாலும் கொடுக்காதவர்கள் பொய்யர்கள். இறைவ னுடைய திருவருளினாலே தமக்குக் கிடைத்த பொருளைப் பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நினைவே இல்லாமல், 'இது நமக்கே உரியது' என்று நினைக்கிறவர்கள் அவர்கள். அந்தப் பணமும் நிலையாதது; அவர்களும் நிலையாதவர்கள். அவர்கள் பொய்ம்மையாளர். அவர்களைப் புகழலாமா?

உண்மையாக ஒரு காரியத்தைச் செய்கிறவர்களைப் புகழ்கின்ற புகழ்தான் உண்மையானது; பொருளுடையது. புகழுக்கு உரியவன் யார்? உண்மையான வேலை செய்கிறவன் எவனோ அவன்தான் புகழுக்கு உரியவன். யாரோ ஒருவன் வெளியூரிலிருந்து நமக்கு உதவி செய்யவேண்டும் என்ற நினைவினால் பணம் அனுப்புகிறான். அதைக் கொண்டு வந்து தபால்காரன் தருகிறான். தரும்பொழுது, ''என்னுடைய குறையைப் போக்குவதற்குப் பெருவள்ளலாக நீ வந்து உதவுகிறாய்'' என்று அந்தத் தபால்காரன் காலையா பிடித்துக் கொள்வது? யார் நமக்குப் பணம் அனுப்புகிறானே அவனையல்லவா நினைக்கவேண்டும்? உலகிலுள்ள மக்கள் பிறருக்கு உபகாரஞ் செய்தால், தம்முடைய முயற்சியினாலே ஈட்டிய பொருளைக் கொடுப்பதாகத் தருகிறார்கள். உண்மை அதுவா? அவர்களா கொடை தருகிறார்கள்? இறைவன் அவர்களிடத்திலே கொடுத்து, ''இதைக் கொடு அப்பா'' என்று சொல்லியிருக்கிறான். பாங்கிலே பணத்தைக் கொடுக்கின்ற 'காஷியரைப்' போலத்தான் அவர்கள் இருக்கிறார்கள். அதை உணராமல் தாம் தருவதாகத் தருக்கிக் கொள்கிறார்கள். அது வெறும் பொய். உண்மையாகக் கொடுக்கிறவன் ஆண்டவன்; அவர்களைக் கருவியாகக் கொர்ண்டு கொடுக்கிறான். நமக்கு உதவி செய்கிறவர்களை நன்றியறிவினாலே பாராட்ட வேண்டும். அதோடு நில்லாமல் அவர்கள் மூலமாகக் கொடுக்கின்ற ஆண்டவனை நிரம்பப் பாராட்டுவதுதான் முறை.

கொடை மாத்திரமல்ல. எல்லாவிதமான செயல்களும் இறைவனுடைய திருவருளினாலே நிகழ்கின்றன. அவனன்றி ஓரணுவும் அசையாது. நல்ல செயலைச் செய்தான் என்று ஒருவனைப் பாராட்டுகிறோம். அந்தச் செயலுக்கு மூல காரணனாயிருக்கிற ஆண்டவனையும் பாராட்டுவதுதானே முறை? இவனை ஓர் அளவு பாராட்டிவிட்டு, அதற்கு மேலே பல அளவு இறைவனைப் பாராட்ட வேண்டும். இவன் செய்பவனைப் போலத் தோற்றுகிறான்; இவன் பொம்மை; இறைவன்தான் பின்னாலே இருக்கின்ற சூத்திரதாரி.

பிறருக்குக் கொடுக்கும் செல்வர்களைப் புகழ்வதற்கே அளவு உண்டு என்றால், கொடுக்காமல் இருக்கிற செல்வர் களைப்பற்றி என்ன சொல்வது? அவர்களைக் காட்டிலும்

பொய்ம்மையாளர் வேறு இல்லை. மெய்ம்மையாளனாகிய ஆண்டவனைப் பாடவேண்டும்.

''செல்வரைப் பாடினால் எனக்கு வேண்டிய பொரு ளெல்லாம் கிடைக்குமே'' என்று கேட்டால், ''எம்பெருமானும் வேண்டியதைக் கொடுப்பான்'' என்று சுந்தரர் சொல்கிறார்.

எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்.

''என் தகப்பன், எனக்கு வேண்டிய செல்வத்தையெல்லாம் தான் சம்பாதித்து எனக்கு அளிக்கின்ற பேரருளாளன், புகலூரில் இருக்கிறான். அந்தப் புகலூருக்குச் சென்று பாடுங்கள்.''

''நான் இப்பொழுது ஒரு செல்வனைப் பாடிக் கொண்டிருக்கிறேன். அவன் எனக்கு எல்லாவற்றையும் தருகிறான். இறைவனைப் போய்ப் பாடினால் என்ன கிடைக்கும்?'' என்ற கேள்வி எழுகிறது.

''இந்த உலகில் நமக்கு வேண்டுவன சோறும் கூறையும்; சாப்பாடும் உடையும். ஆண்டவன் நல்ல உணவும் நல்ல உடையும் கொடுப்பான்.''

ஆண்டவனை நினைந்தால் மறுமையிலேதான் சொர்க்கம் என்றும், இம்மையிலே சோற்றுக்குத் தாளம் போட வேண்டும் என்றும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இறை வனிடத்தில் உண்மையான நம்பிக்கை உடையவனுக்கு மனம் தூயதாக இருக்கும். அவனுடைய செயல்களும் உரைகளும் எண்ணங்களும் அன்பின் விளைவாக இருக்கும். அன்புடைய வர்களை எல்லாரும் தமக்கு அன்பராகப் பாவிப்பார்கள். பகைஞன்கூட அவனைச் சார்வான். அதனால் பல நன்மைகள் உண்டாகும். ஆகையினால் இறைவனிடத்தில் அன்புடையவனுக்கு இந்த உலகத்திலேயே வேண்டிய வசதிகளெல்லாம் கிடைக்கும்.

இம்மை யேதரும் சோறும் கூறையும்.

''நான் பாடுகிற செல்வனிடத்திலிருந்தே அவை கிடைக்கின்றனவே. அதை ஏன் மாற்றவேண்டும்? இருக்கிற படியே இருந்து நான் அவனையே பாடுகிறேன்.''

''இந்த உலகத்தில் நல்ல வசதிகள் கிடைக்கும்; வருகிற துன்பங்கள் விலகும். அடுத்த உலகத்திலே யாரும் கொடுக்க முடியாத ஓர் இன்பத்தை இறைவன் தருவான்.''

இடர் கெடலும்ஆம்;
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

இப் பிறவிக்குப் பின் இறைவனுடைய அணுக்கத் தொண்டராக இருந்து பேரின்பத்தை அடையலாம். இறைவனை வணங்குவதனாலே இம்மைப் பயனும் மறுமைப் பயனும் வரும்.

''அது எப்படி வரும்? ஆண்டவனை நம்பினால் குடும்பம் முதலியவற்றைக் கவனிக்க முடியுமா?'' என்ற ஐயப்பாடு எழலாம். ஆண்டவனை நம்பினவர்களெல்லாம் குடும்பம் இல்லாமலா இருக்கிறார்கள்? சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வரலாற்றையே பார்க்கலாமே. அவர் ஒரு மனைவிக்கு இரண்டு மனைவிகளை மணம் செய்துகொண்டார். அடியார்களுக் கெல்லாம் விருந்து அருத்தி இன்பத்தை அடைந்தார். அவர் துறவியாகப் போகவில்லை. அவருடைய வாழ்க்கையிலே மிக்க இன்பம் உண்டாயிற்று. மனம் தூய்மையாக இருந்தால் எல்லாரிடத்திலும் அன்பாகப் பழகத் தோன்றும். அதனால் உலகமே நமக்குப் பலமாக இருக்கும். இறைவனுடைய நினைவு, பக்தி அந்தத் தூய்மையை உள்ளத்தில் உண்டாக்கும்.

வருகின்ற துன்பங்களையெல்லாம் அடியோடு நீக்கிப் பாதுகாக்கின்ற ஆற்றல் இறைவன் ஒருவனுக்குத்தான் உண்டு. மற்ற யாரை நம்பினாலும் அவரவர்கள் தங்களிடத்திலே உள்ள குறைகளைச் சொல்லிக் கொள்வார்கள். அவர்களுடைய வாழ்விலே இடர்கள் உண்டு. அவற்றையே போக்கமாட்டாத வர்கள் தம்மை அண்டுவாருடைய இடரை எப்படிப் போக்கு வார்கள்? இடரிலாப் பெருமானாகிய ஆண்டவன் ஒருவன்தான் எல்லாவிதமான குறையையும் இடர்களையும் போக்க வல்லவன். அவனை ஏத்திக் கொண்டே இருந்தால் நமக்கு உள்ள இடர் களெல்லாம் கெடும். இந்தப் பிறவி மாறினால் இறைவனுடைய அணுக்கத் தொண்டராகிச் சிவலோக வாழ்வைப் பெறலாம்.

ஒருகால் இம்மையே தரும் சோறும் கூறையும் என்பதில் ஐயப்பாடு இருந்தாலும் இருக்கலாம்; அம்மையில் சிவலோகப் பதவி கிடைக்கும், இறைவனோடு ஒன்றுபட்டு வாழும் இன்பம் கிடைக்கும் என்பதில் சற்றும் ஐயம் இல்லை.

அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே!

இவ்வாறு புலவர்களை நோக்கிச் சுந்தரமூர்த்தி நாயனார் கூறுகிறார். அவர் பெரிய புலவர்; இறைவனையன்றி வேறு ஒன்றையும் எண்ணாத புலவர்; இறைவனைக் காட்டிலும் பெருவள்ளல் இல்லை என்ற நிச்சயத்தோடு வாழ்ந்த புலவர்.

தம்மை யேபுகழ்ந்து இச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர்த் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்கள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்;
ஏத்த லாம்;இடர் கெடலும்ஆம்;
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

(தம்மையே புகழ்ந்து தமக்கு விருப்பமான சொற்களைச் சொன்னாலும் சார்வு இருந்தாலும் தொண்டர்களுக்குத் தராத பொய்யான செல்வர்களைப் பாடாமல், எம் தந்தையாகிய இறைவனது புகலூரைப் பாடுங்கள், புலவர்களே! இப்பிறவியிலேயே உணவையும் உடையையும் இறைவன் தருவான்; அவனை மேலும் மேலும் துதித்துக் கொண்டிருக்கலாம்; நமக்கு வரும் துன்பங்கள் அழிந்து போகும்; மறு பிறவியிலே சிவலோக வாழ்வு பெறுவதற்குச் சிறிதும் சந்தேகமே இல்லை.

இச்சை - விருப்பமானவை. சார்வு - அண்டி நிற்றல். சார்வினும் - அண்டி நிற்றலாலும். தொண்டர் - அன்பர்களுக்கு. பாடாதே - பாடாமல். புகலூர் - சோழ நாட்டில் உள்ள தலம். இத்தலத்தில் பூதேசுவரம், வர்த்தமானேசுவரம், பவிஷ்யேசுவரம் என்ற மூன்று சந்நிதிகள் இருக்கின்றன. கூறை - ஆடை. அம்மை - இப் பிறவிக்கு அடுத்த பிறவி. யாதும் - சிறிதும். ஐயுறவு - சந்தேகம்.)

★

